# கவலையை விடுங்கள்

வித்வான்

**ல.சண்முகசுந்தரம்**

**சண்முகம் பதிப்பகம்**

பிளாட் எண்.52 , 2-வது குறுக்கத் தெரு,

N.G.O. காலனி குரோம்பேட்டை,

சென்னை-44

முதற்பதிப்பு: டிசம்பர் 1996

© : ஆசிரியர்க்கு

**விலை: 100/-**

---

**Laser by : Skilltec Graphics, Madras-17. PH: 4346151**

**Printed at:** Rohini Offset Printers, Madras - 14.

# முகவுரை

*கவலையை விடுங்கள் என்னும் இந்நூலில் பதினெட்டுக் கட்டுரைகள் உள்ளன.*

*இவற்றில் கவலையை விடுங்கள், சமுதாயப் பண்பு, பஞ்சரத்னமாலை, நாடகமே உலகம், நாடகக் காட்சிகள் என்னும் ஐந்தும் 1982ம் வருடம் ராஜாபாளையம் நகரில் நிகழ்த்திய என்னுடைய சொற்பொழிவு.*

*ரசிகமணி, டி.கே.சியின் செயலாளராக இருந்து, பிறகு தம் சீரிய முயற்சியால் இன்று பெரும் தொழிலதிபராக விளங்கும் திரு.பி.சி.பலராமராஜா அவர்கள் சிறந்த ரசிகர்.*

*தமிழிலும் பண்பாட்டிலும் பாடல்களிலும், கலைப்பண்பிலும் திளைத்து ஆனந்தம் அடைபவர் திரு.ராஜா.*

*''ராஜபாளையத்தில் ஒரு வாரம் தொடர்ந்து சொற்பொழிவாற்ற வேண்டும். தமிழ்ப் பாடல்கள் மூலம் தமிழின் நலத்தையும் கலைநலங்களையும் விளக்க வேண்டும்'' என்று சொன்னார்கள் திரு.ராஜா.*

*அவர்களின் வேண்டுகோளை ஏற்று ஆற்றிய தொடர் சொற்பொழிவின் திருத்திய வடிவந்தான் மேலே குறிப்பிட்ட ஐந்து கட்டுரைகளும். இனி, 1971ம் வருடம் ஸ்ரீவில்லிபுத்தூர் பென்னிங்டன் நூலகம் சார்பில் நடந்த இலக்கிய விழாவில் பேசிய பேச்சுத்தான் ஏகம்பவாணன் என்னும் கட்டுரையும், தாவர உலகம் என்னும் கட்டுரையும். 1972ம் ஆண்டு விருதுநகர் செந்தில்குமார் நாடார் கல்லூரி இலக்கிய மன்றத்தில் பேசியதே நாடக வழக்கு என்னும் கட்டுரை.*

அழகின் அதிகாரமும் தோரணையும், சிங்கியா சிங்காரியா?, கவியின் தனிச்சிறப்பு என்னும் மூன்று கட்டுரைகளும் அருட்செல்வர், திரு.என்.மகாலிங்கம் அவர்களும், கலைமாமணி திரு.பகீரதன் அவர்களும் கேட்டதற்கு இணங்க ஓம்சக்தி பத்திரிகைக்கு எழுதி அதில் வெளிவந்தவை.

இனி என்னுடைய வாழ்நாளில் தென்காசியை விட்டு அடிக்கடி வந்து பல நாட்கள் இன்னொரு ஊரில் தங்கி இருக்கிறேன் என்றால் அது சென்னை மாநகரந்தான்.

கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக சென்னைக்கும் எனக்கும் நெருங்கிய உறவு.

காலம் சென்ற ஜஸ்டிஸ் என்.சோமசுந்தரம் அவர்களின் விருந்தினனாக 1953-1954ல் தங்கி இருக்கிறேன்.

அருமை நண்பர் நீதிபதி எஸ்.மகாராஜன் வீட்டில் செல்லப்பிள்ளை போல பல தடவை தங்கியிருக்கிறேன்.

இனி வாழ்க்கையில் சகல நீக்குப் போக்குகளையும் உணர்ந்து அனுபவித்துக் கொண்டே ஒரு ஞானியாகவும் துறவியாகவும் வாழ்ந்தவர் அருமை நண்பர் டி.டி.திருமலை அவர்கள்.

சுத்தமான காந்தீயவாதி. வேற்றுமை உணர்வே இல்லாத பரிசுத்த ஆத்மா திரு.திருமலை.

லாபம் என்றால் மயங்கவும் மாட்டார். நஷ்டம் என்றால் கலங்கவும் மாட்டார்.

ஒருபொழுதும் அவர் கையில் பணம் இருப்பில் இருந்ததும் இல்லை. ஆனாலும் யாதொரு குறைவும்

இல்லாமல் வாழ்ந்தார். நண்பர்களையும் பழகியவர்களையும் மிக்க நிறைவோடு உபசரித்தார்.

பணம் வந்து கொண்டே இருக்கும். வர வரச் செலவு ஆகிக் கொண்டே இருக்கும். எப்பொழுதும் திருமலையிடம் நிறைந்தே இருந்தன.

1970 முதல் திரு.திருமலை அவர்களின் உபசரிப்பில் அவர்களுடன் பல தடவை தங்கி இருக்கிறேன்.

மயிலாப்பூரில் லஸ் என்னும் பகுதியில் கிருஷ்ணசாமி ஐயர் அவென்யூ என்று ஒரு இடம். அதில் திரு.கிருஷ்ணசாமி ஐயரின் குடும்பத்தாருக்கு சொந்தமான கட்டிடத்தில் காந்தி அமைதி நிலையம்.

காந்தி அமைதி நிலையத்தின் செயலர் திரு.திருமலை அவர்கள். திருமலை அவர்களின் உற்ற தோழர் திரு.குழந்தைசாமி பி.இ.

இருவரும் காந்தி அமைதி நிலையத்திலேயே தங்கி இருந்தனர். நானும் அவர்கள் விருந்தினராய் அங்கேயே தங்குவேன்.

காந்தி அமைதிநிலையம் சார்பில் மாணவர்கள், அதிகாரிகள் தங்க உணவு வசதியோடு கூடிய இருப்பிடம் ஒன்று இயங்கியது.

பேராசிரியர், மாணவர், எழுத்தர், கண்காணிப்பாளர் என்று பலதிறப்பட்டவர்கள் அங்கு தங்கி இருந்தனர்.

அதனால் காந்தி அமைதி நிலையம் கலகலப்பாகவே இருக்கும். மேலும் திரு.திருமலை அவர்கள் இதய ஒலி என்று உயர்தரமான மாத இதழ் ஒன்றை நடத்தி வந்தார்கள். அதுவும்

அல்லாமல் சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள கல்லூரிகள் மேல்நிலைப்பள்ளிகள் பலவற்றோடு தொடர்பு கொண்டு அங்கெல்லாம் காந்தீய தத்துவங்களை மாணவ, மாணவியரிடம் போதித்து வந்தார்கள்.

மகாத்மாவின் சத்திய சோதனை பற்றி வருடந்தோறும் மாணவ, மாணவியர்கள் பங்கு பெறத் தேர்வும் நடத்தி வந்தார்கள்.

அதனால் திரு.திருமலையை தேடி எப்பொழுதும் பலர் வருவார்கள். அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், பேரா சிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள், தொழிலதிபர்கள் வருவார்கள்.

திரு.திருமலை அவர்களுடன் பேசிக் கொண்டிருப் பார்கள்.

எந்த நேரமும் உண்மையான உயர்ந்த விஷயங்கள் காந்தி அமைதி நிலையத்தில் கலகலவென்று ஒலித்த வண்ணமாக இருக்கும்.

நண்பர்கள் கூடி இருக்கும்போதும் சரி, அப்படிக் கூடாது இருக்கும்போதும் சரி திரு.திருமலை அவர்கள் தமிழ்ப் பாடல்களைச் சொல்லும்படி கேட்பார். கம்பர், முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பாடல்கள், குறவஞ்சி, திருமூலர், குற்றாலக் குறவஞ்சி, தனிப்பாடல்கள் என்று சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். சொல்லச் சொல்ல பாடல்களையும் அவற்றில் கலைப்பண்பையும் அனுபவித்தும் மகிழ்வார். புஷ்பத்தில் விழுந்த வண்டு அதன் தேனை உண்டு மலரை சுற்றிச் சுற்றி வட்டமிடும். ரீங்காரம் பண்ணி முரலும். தமிழ்ப் பாடல்களை அனுபவிக்கும் திருமலை அவர்களும்

அப்படித்தான்.

சில சமயம் இரண்டு மணி மூன்று மணி வரை பாடல்களும் விளக்கமும் நடக்கும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தூங்கவிட மாட்டார் சிவபெருமான். பாடு பாடு என்று தொந்தரவுபடுத்திக் கொண்டே இருப்பார். அப்படித்தான் திருமலை அவர்களும். அதிலிருந்து சொல்லுங்கள், இதிலிருந்து சொல்லுங்கள் என்று கேட்ட வண்ணமாக இருப்பார்.

திருமலை மறந்தாலும் குழந்தைசாமி விடமாட்டார்.

கேட்டு அனுபவிப்பதோடு தாம் கற்றுணர்ந்த பல அனுபவங்களையும் சுவையோடு என்னிடம் விளக்கிச் சொல்வார் திருமலை.

ஒருநாள் மருத்துவம் சம்பந்தமான தனிப்பாடல் ஒன்றை சொல்ல நேர்ந்தது. அதை அனுபவித்த திருமலை அவர்கள் லின்யுடஸ் என்னும் சீன அறிஞர் மருத்துவ சம்பந்தமாக எழுதி இருப்பதை என்னிடம் வாசித்துக் காட்டி விளக்கினார்கள்.

அது காரணமாக மருத்துவ சம்பந்தமான பல பாடல்களையும் எனக்கு தெரிந்த பல விஷயங்களையும் தொடர்ந்து ஒரு வார காலம் நான் சொல்ல நேர்ந்தது.

அப்படி நான் சொல்லியதுதான் ''மக்கள் கையில் மருத்துவம், நோயாவதும் மருத்துவமாவது, எளிமையில் இருக்கிறது இன்பம், தமிழும் மருத்துவமும்'' என்னும் நான்கு கட்டுரைகளும்.

இந்த நான்கு கட்டுரைகளில் விஷயங்களை நான் சொல்லச் சொல்ல திருமலை அவர்களும் தம் அனுபவங்களை

எடுத்துச் சொன்னார்கள். ஆனால் சொல்லியவை, கேட்ட கேள்விகளை இங்கே நான் கொடுக்கவில்லை.

நான் சொல்லிய என்னுடைய கருத்துக்களை மட்டுமே தொகுத்து நான்கு கட்டுரைகளாக கொடுத்துள்ளேன்.

இனி வாரக்கணக்கில், மாதக்கணக்கில், இரவு, பகல் எந்த நேரமும் பாடலும் விளக்கமுமாக இருக்கும். தமிழிலுள்ள பழம் பாடல்கள் புதுப்பாடல்கள் எல்லாமே வந்து போகும். அவ்வளவையும் எழுதினால் பல தொகுதிகள் வரும். ஆனாலும் இந்த புத்தகத்தில் அமைதி நிலைய அன்பர்களிடம் பேசியவற்றிலிருந்து இரண்டே இரண்டு கட்டுரைகளை மட்டும் கொடுத்திருக்கிக்கிறேன். ஒன்று, மதுரை வீர கஞ்சுகன், மற்றொன்று வள்ளல் சீதக்காதி.

இந்த இடத்தில் ஒன்றை குறிப்பிட வேண்டும். காந்தி அமைதி நிலையத்துக்கு வந்து போகிற பிரமுகர்கள் பலர். திருமலை அவர்களுடன் இருந்து பாடல்களைக் கேட்டார்கள். அனுபவித்தார்கள். அதேபோல சாந்திவிகார் ஓட்டல் சிப்பந்திகள் பலரும் பாடல் கேட்க இரவு ஒன்பது மணிக்கு வந்துவிடுவார்கள். அப்படியே இரண்டொரு தையல் கடைக்காரர், வெற்றிலைப் பாக்குக் கடை ஊழியர்களும் வந்து கேட்பார்கள்.

இவர்களில் பாடல்கள் மூலம் கவிப்பண்பும், கலைப்பண்பும், தமிழ்ப்பண்பும் பிரமுகர்களுக்கு எப்படி விளங்கியது, ஊழியர்களுக்கு எப்படி விளங்கியது என்று கேட்டால் ஓட்டல், தையல் கடை, பெட்டிக்கடை சிப்பந்திகளுக்குத்தான் தெளிவாய் விளங்கியது என்று சொல்வேன்.

காரணம் இவர்கள் திறந்த மனதோடு வந்து கேட்பார்கள். மற்றவர்கள் ஏ்தை எதையோ படித்திருக்கிறார்கள். படித்தவற்றில் பல விஷயங்கள் ஜீரணமாகவில்லை. மூட்டை மூட்டையாய் உள்ளே கிடக்கின்றன. பிறகு இதயக் கதவை எப்படித் திறந்து கவியும் கலையும் உள்ளே போகும்?

அப்படியானால் படிப்பே வேண்டாமா என்று கேட்கலாம். யார் சொன்னது வேண்டாம் என்று? படித்தவர்கள் உணர்ந்து படிக்க வேண்டும். ஜீரணமாகாதவற்றை உடனுக்குடன் எடுத்து வெளியில் வீசிவிட வேண்டும். முனிசிபல் குப்பைத் தொட்டியிலேயே வீசி எறிந்து விடவேண்டும்.

அப்படியானால் அவர்களுடைய இதயமும் திறந்த இதயந்தான். தாராளமாக உண்மையும் உணர்ச்சியும் உள்ளே போய் விளையாடும்.

திரு.திருமலை போன்றவர்களின் உள்ளம் அப்படிப்ப ட்டவையே.

இது சம்பந்தமாக ஒன்று.

இதய ஒலி அலுவலகத்தில் ராணி என்று ஒரு பெண் வேலை பார்த்தாள். வந்த கட்டுரைகளை ஒழுங்கு படுத்துவதிலிருந்து அச்சுக் கோர்ப்பது வரை அப்பெண்ணுக்கு வேலை.

ராணி மிக்க ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள். அப்பாவுக்கு பழைய பேப்பர் வாங்கி விற்பதுதான் தொழில். அம்மாவோ மனநோயாளி. பள்ளி இறுதி வகுப்பு வரைதான் அப்பெண்ணால் படிக்க முடிந்தது. அதற்கு மேல் படிக்க வசதி இல்லை.

*எல்லோரும் பாடல்களை கேட்டு அனுபவிப்பது போல ராணியும் கேட்டு அனுபவித்திருக்கிறாள். கம்பர் பாடல்களையோ தன்னை மறந்து அனுபவித்து ஆனந்தம் அடைந்திருக்கிறாள்.*

*இந்த விபரம் எனக்கு பல நாட்களாகத் தெரியாது. ஒருநாள் உங்கள் பேச்சும் விளக்கமும் ராணியை கவி பாட வைத்துவிட்டது. இதோ அப்பெண்ணின் பாடல்கள் என்று மூன்று வெண்பாக்களை திருமலை என்னிடம் கொடுத்தார்கள்.*

*அதை அப்படியே உங்களிடம் தருகிறேன்.*

## வெண்பா

1. ஊனை மறந்து உறக்கம் தனைமறந்து
கான மழைபொழியும் கார்முகலே - ஞானம்
கனிந்துருகும் கம்பர் கவியை எலாம் நாங்கள்
நினைந்துருக வைத்தனையே நீ.

2. கற்றாரும் கல்லாரும் கண்டுணப் பாடல்களைக்
குற்றால மாமுனிவன் கொள்கையால் - நற்றாய்போல்
சண்முக சுந்தரம் (தான்) சொன்ன பல பாடல்களை
உண்மையாய் நெஞ்சே உணர்

*ராணி என்கிற பெண் இலக்கணம் படிக்கவில்லை. இலக்கியமும் படிக்கவில்லை. பாடல் இயற்ற வேண்டும் என்று ஆசைப்பட்டதும் இல்லை. பிறகு எப்படி இந்த வெண்பாக்கள் அப்பெண்ணிடமிருந்து உதித்தன.*

*மனதில் அவளிடம் பாரம் ஒன்றும் இல்லை. ''மடியில் கனம் இருந்தால் வழி எல்லாம் பயம்'' என்று பழமொழி ஒன்று. மனதில் கனம் இருந்தாலோ ஒன்றும் உருப்படாது.*

எல்லாம் தாறுமாறாகவே நடக்கும்.

அதனால் படித்தவர்களானாலும் சரி, படியாதவர் களானாலும் சரி மனம் கலகல என்றிருக்க வேண்டும்.

வேண்டாத விஷயங்களை - வெறும் புள்ளி விபரங்களை மண்டைக்குள் திணித்து தொல்லைப்படக் கூடாது.

தொல்லை இல்லையேல் எல்லாம் விளங்கும். தமிழ் கொஞ்சிக்குலாவும். பிறகு தானாக வரும்.

நாம் உத்தரவு போட்டா பசி வருகிறது? தானாகத்தானே வருகிறது. கவியும் அப்படித்தான். சரி இந்த புத்தகத்துக்கென்று ஒரு கட்டுரையும் இப்பொழுது எழுதவில்லையா? எல்லாம் பழைய சரக்குத்தானா என்று கேட்கலாம்.

''வல்லவர்கள் மட்டுமல்ல நல்லவர்களும் கூட'' என்னும் கட்டுரையை புதிதாக இதற்கென்றே எழுதிச் சேர்த்திருக்கிறேன்.

நூலில் உள்ள பதினெட்டுக் கட்டுரைகளுக்கும் நோக்கம் ஒன்றுதான். ஒன்றே ஒன்றுதான்.

தமிழ்ப் பாடல்களின் மூலம் கவிப்பண்பையும் கலைப்பண்பையும் வெளிப்படுத்துவதுடன் அனுபவிக்க வைப்பதுதான்.

மற்றவர்களுக்குத் தெரியாத நுட்பங்களையும், நுணுக்கங்களையும் எடுத்துக் காட்ட வேண்டும் என்கிற எண்ணம் கடுகளவு கூட கிடையாது.

தொழிலதிபர் என்.வி.எஸ்.மணியன் அவர்கள் என்னுடைய கட்டுரைகளை, புத்தகங்களை படித்ததும் எனக்கு கடிதம் எழுதுவார்கள்.

அவர்கள் எழுதிய கடிதங்கள் ஒன்றிலிருந்து ஒரு பகுதியை இங்கு அட்டையில் பிரசுரித்திருக்கிறோம்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு பருக்கை போதாதா பதம் பார்க்க?

நண்பர்கள் தான் அடேயப்பா! என்.வி.எஸ்.மணியனா? அவர் லட்சாதிபதி ஆயிற்றே! கோடீஸ்வரர் ஆயிற்றே! வணிகத்துறையில் மன்னன் அல்லவா அவர்! என்று சொல்கிறார்கள்.

ஆனால் என் பார்வையில் அப்படி ஒன்றும் எனக்கு தெரியவில்லை.

பதினைந்து வருடங்களுக்கும் மேலாக மணியனுடன் பழக்கம் உண்டு.

இவ்வளவு நாளும் அவரிடம் நான் பார்க்கிறது குருபக்தி ஒன்றுதான்.

ரசிகமணி,டி.கே.சியின் கடிதங்கள், கட்டுரைகள் பற்றி பேசச் சென்றால் போதும் அப்படியே பக்தி பரவசம் வந்து அனுபவிக்கிறார்.

அது பெரிதல்ல. காரணம் ரசிகமணியை இவர் பார்த்தது கூட இல்லை. இனம் தெரியாதவர்களின் பெருமையை அங்கீகரிப்பது எளிது. இயல்பானதும் கூட.

ஆனால் பழகி உறவாடியவர்கள் பெருமையை உணர்வதும் அனுபவிப்பதும் கஷ்டம். அதுவும் அவர்கள் காலமான பின்பும் மாற்றம் இல்லாமல் அனுபவிப்பதும் ஆனந்திப்பதும் மிக மிக கஷ்டம்.

என்.வி.எஸ்.மணியனுக்கோ கஷ்டமே இல்லாமல் எளிதில் கை கூடிவிட்டது அந்த பாக்கியமும். வாகீச கலாநிதி. கி.வா.ஜகந்நாதன் அவர்களும், நீதிபதி எஸ்.மகாராஜன் அவர்களும் நண்பர் மணியனுடன் நெருங்கி உறவாடியவர்கள். இருவரும் குருமார்களாய் இருந்து போதித்தவர்கள்.

அந்த இருவரையும் என்றென்றும் ஒன்று போல் மதிக்கிறார் நண்பர் மணியன்.

அவருடைய இந்த குருபக்திதான் என் கண்ணில் படுகிறது.

**- ல.சண்முகசுந்தரம்**

# பொருளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1) | கவலையை விடுங்கள் | 15 |
| 2) | வல்லவர்கள் மட்டுமல்ல நல்லவர்களும் இவர்கள் | 39 |
| 3) | சமுதாயப்பண்பு - மக்கள் பாட்டு | 83 |
| 4) | நாடகக் காட்சிகள் | 114 |
| 5) | நாடகமே உலகம் | 126 |
| 6) | நாடக வழக்கு | 157 |
| 7) | அழகின் அதிகாரமும் தோரணையும் | 174 |
| 8) | சிங்கியா சிங்காரியா | 200 |
| 9) | திருப்பைஞ்ஞீலி - பஞ்சரத்னமாலை | 215 |
| 10) | கவியின் தனிச்சிறப்பு | 234 |
| 11) | வள்ளல் சீதக்காதி | 244 |
| 12) | மதுரை வீரகஞ்சுகன் | 262 |
| 13) | ஏகம்பவாணன் | 278 |
| 14) | மக்கள் கையில் மருத்துவம் | 306 |
| 15) | நோயாவது மருந்துவமாவது | 342 |
| 16) | எளிமையில் இருக்கிறது இன்பம் | 369 |
| 17) | தமிழும் மருத்துவம் | 381 |
| 18) | தாவர உலகம் | 408 |

இங்கே புகழேந்திப் புலவரையும், ஒட்டக்கூத்தரையும் ஒரு கட்டத்தில் கொண்டு வந்து ஆட்டம் போடவைக்கிறது நாடகம். எப்படி என்று பார்ப்போம்.

விக்கிரம சோழ மன்னனுக்குப் பாண்டிய மன்னன் தன் மகளைத் திருமணம் செய்து வைத்தான். மணமகளோடு வண்டி வண்டியாக வெள்ளிப் பாத்திரங்களையும் பொன்னாபரணங் களையும் சீதனமாக அனுப்பினான் பாண்டியன்.

ஒட்டக்கூத்தருக்கு நிகராக பாண்டிய மன்னனின் அவைப் புலவராகத் திகழ்கிறார் புகழேந்தி. ஆபரணம், பாத்திரம், பட்டாடை இவைகளோடு ஆஸ்தானப் புலவர் புகழேந்தி யையும் சீதனமாக சோழ நாட்டுக்கு அனுப்பி வைக்கிறான் பாண்டியன்.

பகல் கனவு அப்படியாக நாடகத்துக்கு கொடிபிடிக்கிறது.

பாண்டிய நாட்டிலிருந்து சோழ நாட்டுக்கு வந்தார் புகழேந்திப்புலவர். சாதுவான புலவர்தான் புகழேந்தி. ஆனாலும், ஒட்டக்கூத்தருக்கு அவரைப்பிடிக்கவில்லை. இல்லாத பொல்லாத பழிகளை அவர் தலைமேல் போட்டு சிறையில் தள்ளிவிட்டார் ஒட்டக்கூத்தர்.

சிறைக்குள் சும்மா இருக்கவில்லை புகழேந்திப் புலவர். கைதிகளுக்கு இலக்கண இலக்கிய பாடங்களை நடத்தினார். தமிழின் நயம், வேகம், இவைகளைப் பாடல்கள் மூலம் விளக் கினார்.

பாடம் கேட்டவர்களில் பலர் சுயமாகக் கவிபாடும் அளவுக்குத்திறமை பெற்றுவிட்டார்கள்.

இந்த நிலையில் விக்கிரம சோழமன்னனின் பிறந்தநாள் வந்தது. நாடு முழுவதும் திருவிழாவாக அமைந்தது.

மன்னர்களின் பிறந்தநாளில் கைதிகளுக்கு மன்னிப்புக் கொடுத்துவிடுதலை செய்வது வழக்கம்.

சோழ மன்னனின் பிறந்தநாளில் பல கைதிகளுக்கு விடுதலை கிடைத்தது. அவர்களில் புகழேந்திப் புலவரிடம் பாடம் கேட்ட கைதிகளும் உண்டு. சிறையிலிருந்து வெளிவந்ததும் தம்மைப் பார்த்து விட்டுத்தான் அந்தக் கைதிகள் மட்டும் வீடு செல்ல வேண்டும் என்று உத்தரவு போட்டு விட்டார் ஒட்டக்கூத்தர்.

அப்படி வந்தவர்களில் முதலில் வந்தவன் ஒரு குயவன் (குசப்பையன்) சட்டிபானை வனைகிறவன். அழகாக வனைகிறவன். அதனால், அங்குசப்பைய(ல்) என்று சொல்வதில் தப்பில்லை.

எதிரில் வந்து நின்றவன் இளைஞன். ஒட்டக்கூத்தர் பார்வைக்கு சின்னப் (சாதாரணப்) பயலாகவே தெரிகிறது. அதனால் திமிரோடும் கொழுப்போடும் கேட்கிறார்.

கவிமழை பொழியும், மதயானை முன்வந்து நிற்கிற பயல் யாரடா? என்று மூர்க்கமாகவே கேட்கிறார்.

''மோனை முத்தமிழ்
மும்மத மும்பொழி
யானை முன் வந்(து)
எதிர்ந்தவன் யாரடா!

அதட்டலும் உருட்டலுமாகத்தான் இருந்தது கேள்வி. ஆனாலும் பயப்படவில்லை. அங்குசப்பையல். குயவர் தொழில் பெயரையே சிலேடையில் வைத்து அதையே கொக்கியாகப் போட்டு ஒட்டக்கூத்தர் குடுமியைப் பிடித்து ஆட்டு ஆட்டென்று ஆட்டுகிறான் பையன். சட்டிபானை செய்யும் (அங்)குசப்பையன்!

*அடடே மதயானையா நீங்கள்! அதை மடக்கி வசக்கும் அங்குசம்(பையல்)தான் நான்! என்று ஒரு போடு போட்டுவிட்டான் பயல்.*

**கூனை யும், குட**
**மும், குண்டு சட்டியும்**
**பானை யும்செயும்**
**அங்குசப் பையல்யான்!**

*பொருத்தில் அடித்த அடிபோல விழுந்தது. பதில் திகைத்து விட்டார் ஒட்டக்கூத்தர். துண்டை உதறித் தோளில் போட்டார். வீட்டுக்கே புறப்பட்டு விட்டார் ஒட்டக்கூத்தர். இப்படிஒரு தலைக்குனிவு இதற்கு முன் அவருக்கு முன் எப்போதும் வந்ததில்லை. அதனால், அவருக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆனாலும், சோழமன்னன் ஆறுதல் கூறி ஒட்டக்கூத்தரை உட்கார வைத்தான்.*

*அரசனுடைய புன் முறுவலைப் பெற்று மிடுக்கோடு வீடுபோய்ச் சேர்ந்தான் குசப்பையன். அப்படியே புகழேந்தி யிடம் பாடம் கேட்ட புதிய கவிராயர்கள் ஒருவர் பின் ஒருவராக மளமளவென்று விடுதலை பெற்றுப்போய் விட்டார்கள்.*

*கடைசியாக விடுதலை பெறவேண்டியவர் ஒரு புலவர். பரம்பரைக் கவிராயர், அவரும் ஒட்டக்கூத்தர் கோபத்துக்கு ஆளாகிச் சிறைப்பட்டவர்தான்.*

*அவரை விடுவித்து இங்கு அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டான் சோழவேந்தன். விடுதலை பெற்ற கவிஞர் அரசன் முன் வர சிறிது நேரம் ஆகிவிட்டது.*

*ஏன், தாமதம்? ஒட்டக்கூத்தரின் முன் வந்து நிற்கப்பயமாக இருக்கிறதா? என்று நையாண்டி பண்ணினான்*

அரசன். பாவம் ஒட்டக்கூத்தரின் அசதிபோகட்டுமே என்னும் நல்லெண்ணத்தில்தான் சொன்னான் அரசன்.

ஆனாலும், புலவருக்கு சுருக்கென்று தைத்துவிட்டது மன்னனின் இடக்கு.

ஒட்டக்கூத்தரிடம் தீராத மயக்கம் அல்லவா வைத்திருக்கிறார் அரசர்? மன்னருக்குத் தெளிவுண்டாக வேண்டும். அதைச் செய்வதுதான் நமது கடமை என்று தீர்மானித்து விட்டார் புலவர்.

அதனால், கொஞ்சம் காரசாரமாகவே இருந்தது புலவரின் வாக்குமூலம்.

''வார்த்தைகளை ஒன்றுக்குமேல் ஒன்றாய் அடுக்கிவைத்து எதுகையிலும், மோனையிலும் தாளவித்தை காட்டுகிற புலவர் ஒட்டக்கூத்தர். நானும் என்னை ஒத்த கவிஞர்களும் உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுத்துக் கண் குளிரப்பார்க்க வைக்கும் கவிஞர்கள், கவிபாடும் கவிஞர்கள். வெறும் அடுக்குமொழிப் புலவருக்கு உண்மைக் கவிஞர் (யார்) பயப்படுவார்கள்? இப்படிப்படபடவென்று

---- ஒட்டக் கூத்தன் தன்
கட்டுரை யாம்.
பாக்கண்(டு) ஒளிப்பர்
கொலோ/கவி பாடிடும்
பாவல ரே?

என்று சொல்லிவிட்டார் புலவர்.

அடக்க ஒடுக்கம் இல்லாமல் மன்னர் மன்னனிடம் இப்படிக் கொட்டி விட்டோமே என்னும் ஓர்மை அப்புறம்தான் வந்தது கவிஞருக்கு.

அரசனைச் சாந்தப்படுத்த இளக்கமான பாவனையில் 'ஒரு குடைக்கீழ் ஏழுலகையும், ஆளும் மன்னர் மன்னவா'' என்று அழைக்கிறார்.

பூ முழுதும் காக்கின்ற மன்னர் மன்னா, என்று அழைத்து விட்டு மேலும் விஷயத்துக்குப் பதம் ஊட்ட நயப்படுத்த வின்யாசமாகச் சொல்கிறார்.

மன்னர் மன்னவா, தாங்கள் சக்கரவர்த்தியாக இருப்ப தால், சிற்றரசர்கள் கடலில் விழுந்து ஒளிந்து கொண்டார்களா என்ன? தடாகத்தில் தாமரைப் பூ மலர்வதைப் பார்த்து கொடியானது பூக்காமலா போய்விட்டது?

அப்படியிருக்க சொல்சிலம்பம் ஆடும் ஒட்டக்கூத்தர் இருக்கிறாரே என்று அருட்கவிஞர்கள் எப்படிப்பயப் படுவார்கள்.

இப்படி வைத்தார் முத்தாய்ப்பைப் புலவர் பெருமான். இனிப்பாடல் கட்டளைக் கலித்துறை.

**கோக்கண்டு மன்னர்**
**குரை கடல் புக்கிலர்**
**கோகனகப்**
**பூக்கண்டு கொட்டியும்**
**பூவா(து) ஒழிந்தில**
**பூமுழுதும்**
**காக்கின்ற வேந்தர்வேந்**
**தே! ஒட்டக் கூத்தன் தன்**
**கட்டுரையாம்**
**பாக்கண்(டு) ஒளிப்பர்கொ**
**லோ/கவி பாடிடும்**
**பாவலரே!**

(கோ-அரசன். கோக்கண்டு - சக்கரவர்த்தியாகிய உன்னைப் பார்த்து; மன்னர் குரைகடல் புக்கிலர் - சாதாரண சிற்றரசர்கள் கடலில் விழுந்தாழுழுகினார்கள் இல்லையே? கோகனகம் - தாமரை; கொட்டி-ஒரு வகை நீர்ப்பூ; அழகோ மணமோ இல்லாத சாதாரணப்பூ; பூமுழுதும் - பூ உலகம் முழுவதையும்; எல்லா தேசங்களையும். கட்டுரையாம் - உணர்ச்சியின் வடிவம் அமையாதவெறும் சொல்லடுக்கு.)

அற்புதமான பாடல். பாடப்பாட வாய்க்கு மணம். நாவுக்கு ருசி, வார்த்தைக்கு உண்மை, மனசுக்கு ஒளி, புத்திக்கு தெளிவு, வாழ்க்கைக்கு பண்பட்ட நலம் அவ்வளவும் உண்டாகும்.

விஷயம், உணர்ச்சி, தாளம், இசை அவ்வளவையும் வைத்துக் கொண்டு தாண்டவம் ஆடுகிறது தமிழ். பாடலில் மட்டும் அல்ல. நம் உணர்ச்சிக்குள்ளும் நின்று தாண்டவம் ஆடுகிறது தமிழ்.

ஒட்டக்கூத்தருடைய அதிகார தோரணை சட்டிபானை செய்யும் இளைஞன் இடக்கோடு கூடிய மடக்கு, கவிஞர் பெருமானின் பெருந்தன்மைமிக்க தன்னம்பிக்கை, இத்தனையும் தனித்தனி வர்ணத்தோடும் தனித்தனி மெட்டோடும் காட்சி கொடுக்கின்றன.

அனுபவமும் உண்மையும், உணர்ச்சி பொங்கப் பொங்க அப்படி நவமாய்க்காட்சி கொடுப்பதுதானே நாடகம்.

நாடகம், இசை, பாடல், உணர்ச்சி, சிருஷ்டி இவைகளை அனுபவிக்க வேண்டும். சுவைத்துச் சுவைத்து அனுபவிக்க வேண்டும். ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவர் பற்றிய நாடகம் அப்படி இருக்கிறது.

கலைப்பண்பையும், கவிநலத்தையும் அனுபவிப்ப தோடு இரண்டு உண்மைகளை இந்த நாடகத்தின் மூலம் பார்க்க வேண்டும். அந்த இரண்டுக்காகவே இந்தநாடகம் உண்டானதோ என்று சொல்லத் தோன்றுகிறது. அவற்றுள் ஒன்று, கலை, பண்பாடு, சிருஷ்டி எல்லாமே சாதாரண மக்களை, ஏழை, எளிய விவசாயத் தொழிலாளர்களைச் சேர்ந்தவைதாம். இரண்டு, பொருள் பலமும் செல்வாக்குப் பலமும் உடையவர்கள் இவற்றுக்கு ஏகபோக உரிமை கொண்டாடுவார்கள். செல்வ பலம் முதலியன இல்லாத தந்திரம் மிக்க புத்திசாலிகள் அரசியல் மூலம் அதிகார பலம் பெற்று கலை உலகை வளைத்து மடக்குவார்கள்.

வானளாவிய கோபுரங்களோடு கூடிய மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலிருந்து சாதாரணப் பிள்ளையார் கோவில் வரை அத்தனை கட்டிடங்களும் எங்கிருந்து வந்தன? கொத்தனார், தச்சர் என்னும் ஏழை, எளியவர்களின் கைகளிலிருந்தே உருவாகி வந்தன.

மாடமாளிகைகள், கூட கோபுரங்கள், அரண்மனைகள், அணைக்கட்டுகள், கோட்டைச் சுவர்கள், படைக்கலக் கொட்டில்கள், பிரமாண்டமான தேர்கள், படித்துறைகள், சிலைகள், ஓவியங்கள், அத்தனைக்கும் பிறப்பிடம் தச்சர்களுடைய குடிசைகளும், கொத்தனார்களின் குடிசைகளுந்தான்.

ஊர்மந்தையில் ஓலையால் கூரைபோட்டு அதன்கீழ் சிறுகுழிதோண்டி அதில் கரியைக் கொட்டி நெருப்பை வைப்பான் கொல்லன். துருத்தி கொண்டு ஊத ஊத தீ மதமதவென்று எரியும். இரும்பை அதில் வைத்து பழுக்கக் காய்ச்சுவான். அனல் துண்டாய் வெந்து கனியும் இரும்பு. உடனே அதை எடுத்து அடிகல்லில் வைப்பான். இன்னொரு

வாலிபன் சம்மட்டியால் ஓங்கி ஓங்கி அதில் அடிப்பான். தீப்பொறி சிதறும். பிறகு தண்ணீர் விட்டு ஆற்றுவான். இப்படி மாறிமாறிச் செய்தால் இரும்புக்கு முறுக்கு (டெம்பர்) ஏறும்.

முறுக்கேறிய இரும்புதான் கொழு முதல் பட்டை வண்டிப் பட்டைவரை, ஆணியிலிருந்து பெரிய பெரிய உத்தரக்கட்டைகள் வரை, போரில் வெற்றி வாகை சூடுவதற்குரிய அம்புகள், வேல்கள், வாள்கள், சக்கரங்கள் வரை அவ்வளவுக்கும் பிறப்பிடம். அந்தக் கொலுப்பட்டறை தான்.

தேவகானம், நாதப்பிரம்மம் என்றெல்லாம் பெயர்சூட்டி ஆகா ஓகோ என்று ஆர்ப்பரிக்கிறோமே. இசை பண்ணோடும் பாட்டோடும் கூடிய இசை அது பிறப்பது எங்கே? வளர்ந்தது எங்கே?

காட்டிலும், மேட்டிலும் வேலை பார்க்கும் உழவர் முதலிய ஏழை எளிய மக்களிடந்தான். பாணர், பாடினியர், முதலியவர்களிடமிருந்துதான். வீடு வாசல்கூட இல்லாமல் வள்ளல்களையும் மன்னர்களையும் நாடி நாடோடிகளாக அலைந்த கூட்டந்தான் மேலே குறிப்பிட்ட பாணரும் பாடினியரும்.

அதேபோலத்தான் கொட்டடிக்கிற பறையர்கள், துடியர்களிடமிருந்தே தாளக் கலை பிறந்தது. பரதநாட்டியம் என்று உச்சிமேல் வைத்தப் போற்றுகிற அபிநயக் கலைக்கு தாயும், தந்தையும் யார்? விறலியரும் கூத்தருமே.

அபிநயக் கலைக்குச் சின்னமேளம் என்று பெயர். நாதஸ்வர இசைக்குப் பெரியமேளம் என்று பெயர். இசைக்கடவுளின் சகல மூர்த்தங்(மூர்த்தங்)களையும் அன்றுதொட்டு இன்றுவரை பாதுகாப்பது நாதசுரந்தான். அந்த

நாதசுரத்துக்கு நாயகர்கள் யார்? மேளகாரர்கள் என்று நம்மால் துச்சமாக எண்ணப்படுகின்ற இசை மேதைகளே! பாடல்களும், அப்படியே. ஏழை எளியவர்கள் சொன்ன பழமொழிகளும் விடுகதைகளும், தெம்மாங்கும், சிந்தும், கண்ணியும், கும்மி போன்றவையுமே கவிகளுக்கெல்லாம் மூலமந்திரம். வெண்பா, விருத்தம், தாழிசை , துறை அத்தனையும் அங்கிருந்து வந்தவையே!

தாயுமானவர் பாடலிலிருந்து தேவாரம், திருவாசகம் வரை காவடிச் சிந்திலிருந்து கலிங்கத்துப்பரணி கம்ப ராமாயணம் வரை அத்தனைக்கும் அடிநாதம் சாதாரண மக்களின் இலக்கியந்தான்.

ஏன் இவ்வளவு தூரம் சுற்றி அலைய வேண்டும்? மன்னர்கள், பிரபுக்கள், மேதாவிகள், தோரணைமிக்க அதிகாரிகள் எல்லோருமே உண்ணுகிற உணவும், உடுக்கிற உடையும் எங்கிருந்து வருகின்றன. அப்பாவிகள் என்று ஒதுக்கி வைத்திருக்கிற ஏழை, எளிய உழவர்களிடமிருந்தல்லவா?

ஒரு சமுதாயத்தின் கலை, பண்பாடு, வாழ்வு, வாழ்க்கை, பேச்சு, மூச்சு, அத்தனைக்கும் மூலம் ஏழை எளிய மக்கள்தான். இந்த உண்மையைக் காட்டுவதுதான் புகேழந்திப் புலவரும், அவருடைய சிறை மாணவர்களும் பற்றிய அனுபவம் - அதாவது பகல் கனவு, நாடகம்.

அப்பாவி மக்களின் உடைமைகளைச் சுருட்டி அதிகாரம் பண்ணுவது பித்தலாட்டம். பித்தலாட்டக்காரர்களுக்கு உலகில் பல துணைகள் உள்ளன. அவற்றில் துடிப்பான துணை அசைக்கமுடியாத வலுவான துணை அரசியல் வேடம்.

அப்பட்டமான இந்த அலங்கோலத்தைத்தான் ஒட்டக்கூத்தர் பற்றிய அனுபவம் விளக்குகிறது.

இந்தக் கொடுமையான கயமை சாகாவரம் பெற்றது. இன்றளவும் அதன் அட்டகாசத்தையும் ஆர்ப்பரிப்பையும் பார்த்து அனுபவிக்கத்தானே செய்கிறோம்.

சுமார் தொண்ணூறு வருடங்களுக்கு முன் லியோடால்ஷ்டாய் ரஷ்யாவைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர்களை வரவேற்று விருந்து கொடுத்தார்.

விருந்து முடிந்தபின் ஆண்டன் செக்காவ், மாக்ஷிம் கார்க்கி போன்றவர்களிடம் ஒரு சிரங்கை கோதுமையை எடுத்துக் காட்டினார்'' இந்தத் தானியத்தைப் பார்த்தீர்களா? இதுபோல எத்தனை எத்தனை தானிய வகைகள் இருக்கின்றன? இவற்றில் ஒன்றையாவது நாம் உற்பத்தி செய்தோமா? இல்லை உண்டாக்கிவிட அதாவது கோதுமை, பார்லி போல புதிய ஒரு தானியத்தை உண்டாக்கிவிட முடியுமா?

அவ்வளவும் இறைவனுடைய கருணையில் விளைந்தவை. அவன்தான் கலைஞன். அவன் ஒருவனே கலைஞன்'' என்றார்.

அப்படியே அசந்து போனார்கள். எழுத்தாளர்கள். மேலும் சொன்னார் டால்ஷ்டாய், ''பத்து மூட்டை கோதுமை விளைகிற இடத்தில் பதினைந்து மூட்டை கோதுமையை நம்மால் விளைவிக்க முடியுமா? முடியாது.

கதை, எழுதத் தெரியாத, நாம் எழுதுகிற கதைகளைப் படித்து அனுபவிக்கக் கூடத் தெரியாத ஏழை எளிய குடியானவர்கள் தாம் உண்டாக்க முடியும்.

அவர்கள் தாம் உண்டாக்குகிறார்கள். அவர்கள்தாம் நம்மைக் காப்பாற்றுகிறார்கள். இறைவனை ஒத்த கலைஞர்கள் யாரென்றால் அந்த ஏழை, எளிய குடியானவர்கள்தாம்!''

டால்ஷ்டாயின் மதுரமான அமுத மொழிகளைக் கேட்டு அப்படியே சொக்கிப் போனார்கள் எழுத்தாளர்கள். தம்மை மறந்து அந்த அருள்வாக்கை அனுபவித்தார்கள்.

ஆண்டன் செகாவின் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் துளித்துளியாக வெளிப்பட்டன. விடைபெற்றுச் செல்லும்போது மாக்ஷிம் கார்க்கி, டால்ஷ்டாயின் கையை இறுகப்பற்றினார். பற்றியபடியே டால்ஷ்டாயின் திருமுகத்தைப் மயங்கிப் பார்த்தார். பார்த்தபடியே ஐயா!'' கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. என்னைப் பொறுத்தவரை எனக்கு கண்கண்ட தெய்வம் லியோடால்ஷ்டாயாகிய நீங்கள்தான். ''கடவுள்! என்று ஒருவரை நினைக்க வேண்டுமென்றால் உங்களைத்தான் நினைக்க முடியும் நான்''

மனதில் உள்ளதை அப்படியே வார்த்தைகளாகக் காட்டிவிட்டார் கார்க்கி! குடியானவர்கள், தொழிலாளர்கள் ஆகிய எளியவர்களிடமிருந்தே கலைகள் உதிக்கின்றன. பிறகு பெருந்தனக்காரர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகளின் ஆடம்பரத்தில் சிக்கிவிடுகின்றன.

வசதி உள்ளவர்களும் அதிகாரம் உடையவர்களும் கலையை அனுபவிக்கக் கூடாது என்று நாம் தடுக்கவில்லை. ஆதரிக்கக் கூடாது அவர்கள் என்றும் நாம் சொல்லவில்லை.

காற்று, வெளிச்சம், வானம், பூமிபோல கலையும், எல்லோருக்கும் சொந்தம்தான்.

ஆனால், எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், நாவலர்கள் எல்லாம் ஒட்டக்கூத்தர் போல அரசியல் அதிகாரத்தை மட்டும் நம்பி கலை உலகை உலுக்கக் கூடாது. 'எதைப் பேசினாலும் எப்படிப் பேசினாலும், அதை ஆகா,

ஓகோ என்று பாராட்டக் கூட்டம் இருக்கிறது; எதை எழுதினாலும் அதை அரியாசனம் ஏற்ற வழி இருக்கிறது என்று செயல்படுவது அப்பட்டமான கயமை.

கயமையின் கொடுமைக்கு ஆளாக நேர்கிறபொழுதும், உண்மையான அறிஞர்கள் நிலை குலய மாட்டார்கள். வீறுகொண்டு எழும் ஆண்சிங்கம் போல் சிலிர்த்து நிமிர்வார்கள்.

சோழ மன்னனின் கிண்டலுக்கு ஆளான உண்மைக் கவிஞர் அப்படிச் சிலிர்த்து நிமிர்ந்தார். ஒட்டக்கூத்தர் புகழேந்தியின் நாடகத்துள் அதுவும் காட்சி கொடுக்கவே செய்கிறது.

ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவர்களின் கதை நாடகந்தான்.

ஒட்டக்கூத்தர் என்று ஒரு கவிஞர் இருந்தார். அவர் சோழ சமஸ்தானப் புலவர்.அவர் காலம் ஆயிரம் வருடங்களுக்கு முன்.

புகழேந்திப் புலவர் என்றும் ஒரு கவிஞர் இருந்தார். அவர் காலம் நானூறு வருடங்களுக்கு முன். இது உண்மை. நாடகமில்லை.

ஒட்டக்கூத்தர் ஆடம்பரப்பிரியர். அதிகாரப்பிரியர். செருக்கு மிக்க வருணனைகளும், தடபுடலான கற்பனைகளும், காய்ந்து பழுத்த சொற்களும் ஒட்டக்கூத்தர் பாடல்களில் அளவுக்கு மீறி முழங்கும். அதனால் சிருஷ்டி தத்துவமும் கலைப்பண்பும் கொஞ்சம் வெட்கப்பட்டு நாணி ஒதுங்கும்.

புகழேந்திப் புலவரோ நிறைகுடம். எந்தச் சலசலப்பும் அவரிடம் தலை நீட்டாது. அமைதியானவர். உறுதிமிக்க

வர்.அவருடைய கவியில் உண்மையானது உணர்ச்சிமயமாகப் பொங்கும். பொங்கிப் பூரித்து நவநவமாக விளையும். இதுவும் உண்மைதான்.

இந்த உண்மை(களை) அனுபவித்து அனுபவித்து சொக்கி மயங்கி இருக்கிறார்கள் முன்னோர்கள். தெளிவுமிக்க அந்த மயக்கத்திலிருந்து பிறந்ததுதான் ஒட்டக்கூத்தரையும், புகழேந்தியை ஒரே காலத்தில் ஒரே இடத்தில் வைத்து உண்டான நாடகம்.

இந்த நாடகத்திலிருந்து இன்னொரு காட்சி.

சோழ மன்னனுக்குப் பாண்டிய நாட்டு அரசகுமாரியல்லவா மனைவி. அதை நாம் மறந்துவிடக்கூடாது.

பாண்டிய மன்னன் பலவகைச் சீதனப்பொருட்களுடன் புகழேந்திப் புலவரையும், சீதனமாக அனுப்பிவைத்தான். அதையும் மறந்துவிடக்கூடாது. நாடகந்தான் என்றாலும் ஞாபகம் பிசகிவிடக்கூடாது!

அரசாங்க வேலைகளை முடித்துவிட்டு இரவு பத்து மணிக்கு அந்தப்புரத்துக்கு ஒரு ஆள் மூலம் சொல்லி அனுப்புவான் அரசன். இன்னும் சிறிதுநேரத்தில் மன்னர் பெருமான் அங்கு வருகிறார் என்பதுதான் செய்தி.

ஒருநாள் அரசன் மேல் ராணிக்கு ஏதோ மனவருத்தம். அதனால் வந்த ஆளிடம் ''அரசர் இங்கு வரவேண்டாம், அங்கேயே இருக்கட்டும்'' என்று சொல்லிக் கதவை அடைத்து தாழ்ப்பாளும் போட்டுவிட்டாள்.

செய்தி சொல்லப் போன ஆள் நடந்ததை அப்படியே அரசனிடம் சொன்னான். அரசனுக்கு ஒன்றும் ஓடவில்லை.

இத்தனை கோபத்துக்கு என்ன காரணம் என்று திகைத்தான் மன்னன்.

ஒட்டக்கூத்தரை அழைத்து ராணியைச் சமாதானம் பண்ணிவரும்படி அனுப்பினான் அரசன். ஒட்டக்கூத்தர் பற்றித்தான் நமக்குத் தெரியுமே? ''மன்னர் மன்னவா' பெண்களிடம் ஊடல்வரும். வந்தபடியே போய்விடும். நிலைத்து நிற்காது. இதோ நான்போய் மகாராணியின் ஊடல் உணர்வை கூடல் உணர்வாக மாற்றி வருகிறேன்'' என்று புறப்பட்டார்.

ஒட்டக்கூத்தர் வந்திருக்கிறார் என்று தெரிந்தும் அடைத்த கதவைத் திறக்கவில்லை ராணி. சிறிது நேரம் நின்றார். பிறகு கனைத்துப் பார்த்தார். பிறகு செருமிப் பார்த்தார். ஒன்றுக்கும் மசியவில்லை கதவு. அப்பாவிப்புலவர் என்ன செய்வார்? பூட்டிய கதவின் புறத்தில் நின்றே பாடலை எடுத்துவிட்டார். பாட்டுத் தடபுடலாகத்தான் வந்தது'' வானில் ஏறி தகதக என்று சூரியன் வரும்போது தாமரை மலரத்தானே செய்யும்? தாமரையில் ஊறும் தேன்போன்ற லட்சுமி (அரசமா) தேவியே! நம் மன்னர் மன்னனும் சூரிய குலதீபன்தானே!

சூர்ய குல தீபமாகிய மன்னர்மன்னன் வந்தவுடன் மகாராணியின் கைத்தலமாகிய தாமரை மலர் விரியும். விரிந்து தாழ்ப்பாளைத்திறக்கும். மன்னர்வருவதன் மூலம் திறந்து வரவேற்கலாம் அல்லவா?

நான் சொல்ல என்ன இருக்கிறது? இப்படியாக சொல்நயம், பொருள் நயம் தொனிக்கப் பாடினார் ஒட்டக் கூத்தர் - சமஸ்தானப் புலவர். இனிப் பாடல்

நானே இனி உனை
வேண்டுவ தில்லை;
நளினம லர்த்

தேனே கபாடம்
திறந்திடு வாய்; திற
வாவிடி லோ

வானே(று) அனைய
இரவி குலாதிபன்
வாயில்வந் தால்

தானே திறக்கும் நின்
கைத்தல மாகிய
தாமரை யே

*கபாடம் - கதவு; வான் ஏறு அனைய - வானத்தில் ஏறி வரும் சிம்மம் போன்ற; ஏறு - சிம்மம், இரவிகுலாதிபன் - சூரியவம்சம் ஜொலிக்க அவதரித்த விக்கிரம சோழன். வாயில் வந்தால் - இங்கு வந்தவுடன், வாயில் - வாசல்; நின்கைத்தலம் ஆகிய தாமரை - உன்கையாகிய தாமரைப் புஷ்பம்; தானே திறக்கும் - தானாக மலரும்; அதாவது கதவைத்திறந்து விடும். நானே இன உனை வேண்டுவது இல்லை - அப்படி இருக்க நான் என்ன அரசமாதேவியிடம் விண்ணப்பம் செய்வது? தேவை இல்லைதான்.*

ஒட்டக்கூத்தர் கவிஞர்தான், சந்தேகம் இல்லை. இப்படி ஒரு கற்பனை வளமும், யாப்பு நெறியும் சொல்வீச்சும், சேர்ந்து பாடலில் வரவேண்டும் என்றால் அது கவிஞர்களிடம் மட்டுமே வரும்.

ஆனால், இங்கே **நாம்** பார்க்கவேண்டியது கவியா இல்லையா என்பதல்ல. **ஓர பெண்ணின்** இதயத்தில் வருத்தம் என்ன, கோபம் **என்ன**வென்று அவைபற்றி யோசித் திருக்கிறாரா **ஒட்டக்கூத்தர்?** அனுதாபப்பட்டிருக்கிறாரா ஒட்டக்கூத்தர்? அந்தக் **கோப**மும் வருத்தமும் கரையும்படி ஒரு அருள்நோக்கை **அன்பின்** ஊற்றைப் பார்க்கிறாரா ஒட்டக் கூத்தர். இல்லை! இல்லவே இல்லை.

மாறாக தன்னையே பார்க்கிறார். தன்னுடைய கற்பனைத்திறனை - கவிபுனையும் உத்தியையே பார்க்கிறார் சமஸ்தானப் புலவர்.

ஒட்டக்கூத்தர் பாடியதைக் கேட்டால், எந்த பெண்ணுக்கும் கோபம் வரத்தானே செய்யும். ராணிக்கும் கோபம் வந்தது. கோபத்தில் தடாரென்று தாழ்ப்பாளுக்கு மேல் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டாள் மகாராணி.

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் ஒன்று விழுந்துவிட்டது தாழ்ப்பாள்.

ஒட்டக்கூத்தர் வெறுங்கையோடு வந்து நின்றார். மன்னனுக்கு ஒன்றும் ஓடவில்லை. பிறகுதான் தெளிவுவந்தது. சரி சரி புகழேந்திப் புலவர் போனால்தான் நிலைமை சீர்பெறும் என்று அவரை வேண்டினான்.

''மகாராஜா! தாங்களும் வாருங்கள் என்று அரசனையும் அழைத்துக் கொண்டு போனார். புகழேந்திப் புலவர் வந்திருக் கிறார் என்ற மாத்திரத்தில் கதவைத் திறக்கக் கட்டளையிட்டார் மகாராணி.

புலவர் உள்ளே போனார். அரசர் வாயிலில் நின்றார்.

*ராணியைப் பார்த்ததும் திடுக்கிட்டுவிட்டார் புலவர். அத்தனை கோபத்துக்கும் வருத்தத்துக்கும் ஆளாயிருந்தார் ராணி. நாணேற்றிய வில்போல் நிமிர்ந்து வளைந்து நிற்கிறது புருவம். கண்களோ இரத்தம் தோய்ந்த அம்புபோல் கனன்று கொதிக்கின்றன. தலையோ எய்யும்போது வில்வளைவது போல் பின்சாய்ந்து நிமிர்ந்து நிற்கிறது. யாரையும் துச்சமாக எண்ணும் நிலையில் நிமிர்ந்து சாய்ந்து நிற்கிறது.*

*ராணியின் மனதைப் புண்படுத்தி இருக்கிறது. ஏதோ ஒரு காரியம் என்று தெரிந்துவிட்டது கவிஞருக்கு. அதை மனதில் வைத்துக் சொல்கிறார் கவிஞர்.*

*அம்மா மகாராணியே ஏதோ தவறு நடந்துவிட்டது. அது நடந்திருக்கக் கூடாதுதான். ஆனால், தவறுகளை மன்னித்து அருள்பாலிக்கும் குடும்பம் அல்லவா நம் (பாண்டியர்) குடும்பம்.*

*சோழர் குலதீபமாகிய மன்னர் பெருமானே வாயில் வந்து நிற்கிறார். அவர் நம்மவரல்லவா? அவரை வரவேற்று உபசரிப்பதல்லவா நம் பண்பாடு. அதுவல்லவா பாண்டியர் குல மரபு?*

*இனி பாடல்.*

**தூபம் கமழும் பைங்**
**கோதாய்/நம் விக்ரம**
**சோழன், மன் னர்**

**தீபம் புறங்கடை**
**வந்துநின் றான்/நின்**
**திருப்புரு வச்**

சாபம் குனிய
விழிசிவப் பத்,தலை
சாய்ந்துநின் ற

கோபம் தணிஅன்ன
மே/எளி தோ நம்
குடிப்பிறப் பே!

*(புறங்கடை - வாசல்; சாபம் - வில், தூபம் - அகிற்புகை; மன்னர் தீபம் - அரசாக்கு அரசன்)*

*புலவர் வாக்கு ராணியின் உள்ளத்தை உருக்கிவிட்டது. மன்னனை வரவேற்று உபசாரம் செய்ய ஆரம்பித்து விட்டாள் மகாராணி!*

*விக்ரமசோழன், அரசமாதேவி, ஒட்டக்கூத்தர், புகழேந்தி எல்லோரும் இங்கே நாடக பாத்திரங்கள்தாம். அதேபோல ஒட்டக்கூத்தர் பாட்டு, புகழேந்திப் புலவர் பாட்டு, இரண்டுமே நாடகப் பாடல்கள்தாம். அதாவது ஒட்டக்கூத்தர் புகழேந்தி நாடகத்தில் நடித்தவர் சுயமாகப் பாடி இருக்கலாம். இல்லை நடிகர் பாடுவதற்கு - பாடி நடிப்பதற்குத் தோதாக வேறொருவர் இயற்றி வழங்கி இருக்கலாம். மற்றப்படி ஒட்டக்கூத்தரோ புகழேந்தியோ இந்தப் பாடல்களைப் பாடவில்லை.*

*இரண்டு பாடல்களும் இரண்டு பாத்திரங்களின் இயல்பை அப்படியே கையில் எடுத்துக் காட்டுவது போல் காட்டுகின்றன.*

*ஒட்டக்கூத்தரைப் பற்றி ஆயிரம் பக்கம் வசனத்தில் எழுதிய புத்தகத்தைப் படித்தாலும் மனம் நிறையாது. இன்னும் ஏதோ ஒன்று பாக்கி இருப்பதாகவே தோன்றும், ஆனால் நானே இனி உனை வேண்டுவதில்லை'' எனத்தொடங்கும் நான்கு*

வரிக் கட்டளைக் கலித்துறையைப் படித்துவிட்டால் போதும், மனம் நிறைந்துவிடும். ஒட்டக்கூத்தரைப் பற்றிய அவ்வளவு விபரமும் மிச்சம் சொச்சம் இல்லாமல் பாட்டில் நிறைந்து கிடக்கிறது. அப்படியேதான் புகழேந்திப் புலவரைப் பற்றியவிபரம் முழுவதும் 'தூபம் கமழும் பைங்கோதாய்'' எனத் தொடங்கும் பாடலில் நிறைந்து கிடக்கிறது.

இனி, இந்த இரண்டு பாடல்களின் மூலமாக நாம் தெரியவேண்டியது ஒன்று அது என்ன?

மெய்யுணர்வு என்று ஒன்று. அது உள்ளவர்கள் படித்தாலும் சரிதான். படிக்காவிட்டாலும் சரிதான். அவர்கள் வாக்கு அருள் வாக்குத்தான். அவர்கள் பாட்டுத்தான் உண்மையான பாட்டு.

மெய்யுணர்வு இல்லை என்றால், வாக்கு வக்கற்றவாக்குத்தான். அதில் உயிர் இருக்காது. ஒளி இருக்காது. உணர்ச்சி இருக்கவே இருக்காது.

வெறும் சொல்லடுக்கும் அலங்கார ஜோடிப்புந்தான் அவர்கள் பாட்டு.

மெய்யுணர்வில்லாதவர் படிப்பில் சூரப்புலியாக இருக்கலாம். அவர்கள் யாப்பிலக்கணம் மஞ்சாடி கூடப் பிசக்காமல் இருக்கலாம். எதுகை, மோனை, சந்தம், வண்ணம், வனப்பு, அத்தனையும் கனகச்சிதமாக கணக்குப்படி இருக்கலாம். ஆனால், இதயபாவம் அதில் இருக்காது.

நானே இனி உனை வேண்டுவதில்லை என்னும் பாடலில் செய்யுளமைப்பில் என்ன குறை? செய்யுளுக்குரிய உறுப்புகளும் செய்யுள் வடிவமும் பூர்ணமாக அமைந்துள்ளன. விஷயம் இருக்கிறது. கற்பனை இருக்கிறது. உணர்ச்சிகூட

இருக்கிறது. ஆனால், இதயத்தோடு இதயத்தை வைத்துப்பார்க்கும் அன்போ பண்போ இல்லை.

ஆனாலும், ஒட்டக்கூத்தருக்குத்தான் பேரும் **புகழும்.** அதிகாரம் கொடி கட்டிப் பறந்தது அவரிடம்.

இது இயற்கையில் ஒரு விபரீதம்தான். இந்த விபரீதம் அன்று தொட்டு இன்று வரை இருக்கிறது.

பக்திப் பெருங்கடல் என்று போற்றப்படும் ஸ்ரீமத் ராமானுஜர் தம் சிஷ்யனிடம் சொன்னார். ''நீ நன்கு கற்றுவிட்டாய், கற்றதை மற்றவர்களுக்கு எடுத்து விளக்குவதிலும், நிபுணனாகிவிட்டாய். ஆனாலும், பகவத் பிரசாதம் (மெய்யுணர்வு) உன்னிடம் இன்மையால் உண்மையை உன்னால் தரிசிக்க முடியவில்லை. அதுபெற இறைவனிடம் முறையிடு''

இப்படிச் சொன்னார் ராமானுஜர். ராமானுஜர் காலம் தொள்ளாயிரம் வருடங்களுக்கு உள்ளேதான். நாலடியார் காலமோ அதற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன். அதில் ''ஓதியும், ஓதார் உணர்விலார்'' அதாவது மெய்யுணர் வில்லாதவர்கள் படித்த முட்டாள்கள், என்று சொல்லி இருக்கிறது.

''ஓதாதும், ஓதி அனையர் உணர்வுடையார்'' மெய் யுணர்வு பெற்றவர்கள், படித்துப் பட்டம் பெறாவிட்டாலும் அவர்கள்தாம் அறிஞர். கற்றவர் என்றால் அவர்கள்தாம் என்றும் அடித்துச் சொல்லி இருக்கிறது. இனி, தெய்வப் புலமைத் திருவள்ளுவரோ நாலடியாருக்கும் முந்தியவர். அவர் சொல்கிறார்.

"இருவே(று) உலகத்(து)
இயற்கை; திருவேறு,
தெள்ளியர் ஆதலும்
வேறு"

திரு என்பது படிப்பு. படிப்பில் வரும் அறிவு, தெள்ளியர் என்பது மெய்யுணர்வு. இரண்டும் தனித்தனி. இரண்டையும் ஒன்றாய்ப் போட்டுக் குழப்பக் கூடாது என்றார் வள்ளுவப் பெருமான்.

இன்று நேற்று உண்டானதில்லை உண்மையும் பொய் யும் அப்படியேதான். அசலும் போலியும் அன்றுதொட்டு இன்றுவரை உள்ளன. என்றும் இருக்கும்.

பொய்யை - அதாவது போலியை கயமை என்கிறார் குறளாசிரியர். பித்தலாட்டத்தையே பிழைப்பாக வைத்து நடத்தும் பேர்வழிகளைக் கயவர் என்று பல்லை நெறுநெறு வென்று கடித்துக் கொண்டு சொல்கிறார் குறளாசிரியர்.

எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், கலைஞர்கள் மொத்தத்தில் அறிஞர்கள் யாரும் பித்தலாட்டத் துக்கு இடம் கொடுத்துவிடக்கூடாது.

உப்புக்கல்பெறாத டப்பாப் பாட்டுப்காரனுக்கு பீதாம் பரமும் பொன்முடிச்சுகளும் குவிகின்றனவே. செல்வாக்கு மேலே மேலே ஏறுகிறதே; நமக்கேன் இந்தக் கதி என்று ஏங்கக் கூடாது.

அரசியல் தலைவர்கள் தங்களை மதிக்கும் படியாக நடந்துகொள்ள வேண்டும் கலைஞர்கள். அதாவது மன்னாதி மன்னனாக இருந்தாலும் தவறு செய்தால் அதைக் கண்டித்துத் திருத்த வேண்டும் புலவர்கள்.

அதிகார வெறியர்கள் செய்கிற தவறுகளுக்கெல்லாம் சப்பைக் கட்டுக்கட்டி புதுப்புது வியாக்யானம் பண்ணி பரிசில் பெறுவது போக்கிரித்தனம். அதாவது கயமை.

சங்க காலத்திலிருந்து சமீப காலம் வரை தமிழறிஞர்கள் மனிதர்களாகவே வாழ்ந்து வழிகாட்டி இருக்கிறார்கள். கயவர்களிடம் தங்களை விலைபேசி விற்றவர்கள் ஒருவரும் இல்லை.

அதிகாரிகளுடனும் அரசியல் தலைவர்களுடனும் பழக்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. உறவாடலாம் திளைக்கலாம். உறவும் திளைப்பும் மானுடப்பண்பை உயர்த்த வேண்டும். தாழ்ந்துபோக இடம் கொடுத்துவிடக்கூடாது.

தன்னலத்தை விட்டுக் கொடுக்க வேண்டும். அப்படி விட்டுக் கொடுத்து உறவை வளர்த்தால் அது ஒரு வேள்விதான். தவ வாழ்வேதான்.

தவ வாழ்வு வாழும் அறிஞர்கள் ஒட்டக்கூத்தராக இருக்கமாட்டார்கள். கோவூர் கிழாராக, கம்பராக, மாக்ஸிம் கார்க்கியாக, பாரதியாராக, திரு.வி.கல்யாணசுந்தரனாராகத் திகழ்வார்கள். நாடகத்தில் விளையும், இந்த உண்மையை நாம் மறக்கவே கூடாது.

# 2

# வல்லவர்கள் மட்டுமல்ல, நல்லவர்களும் இவர்கள்

உழைப்பின் உயர்வு, உழைப்பில் உயர்ந்த உத்தமர், விடாமுயற்சி, முயற்சி திருவிளையாக்கும், முயன்றால் முடியாதது இல்லை. நம்பிக்கை நட்சத்திரம், உன்னை நம்பு என்றெல்லாம் தலைப்பிட்டு எழுதுகிறார்கள் பலர்.

தலைப்புகள்தான் தமிழ். தலைப்புகளில் வந்து விழுகிற ஆசாமிகள் அநேகமாக எல்லோரும் ஐரோப்பிய, அமெரிக்கர் களாகவே இருப்பார்கள். சமீபகாலமாக ஜப்பானிய, சிங்கப்பூர் ஆசாமிகளும் வந்து எட்டிப்பார்க்கிறார்கள்!

ஐரோப்பிய அமெரிக்கர்களோ ஜப்பானியர்களோ சிங்கப்பூரிகளோ உழைக்காமல் உயர்ந்தவர்கள் என்று நாம் சொல்லவில்லை. அவர்கள் நன்கு உழைத்தவர்கள்தாம். விடாமுயற்சியோடு பாடுபட்டவர்கள்தாம். சோதனைகளை யும் வேதனைகளையும் சாதனைகளாக ஆக்கியவர்கள்தாம். இல்லை என்று சொல்லவில்லை.

ஆனால் அதே உழைப்பு, அதைவிடக் கடின உழைப்பை மேற்கொண்டு வாழ்க்கையில் வளம் பெற்றவர்கள் இந்தியாவில் பலர் இருக்கிறார்கள். தமிழகத்திலும் பலர் இருக்கிறார்கள்.

அரசியலில் மட்டுமல்ல, தொழில், வணிகம், விவசாயம், மருத்துவம், விஞ்ஞானம், பொருளாதாரம் முதலிய எல்லாத் துறைகளிலும் சாதனை படைத்தவர்கள் பலர் இருக்கிறார்கள். ஐரோப்பிய அமெரிக்கர்களுக்கோ ஜப்பானிய சிங்கப்பூரிகளுக்கோ இவர்கள் சளைத்தவர்கள் அல்லர்.

பலதுறைகளில் மற்றவர்களை விட நம்மவர்கள் உயர்ந்தவர்கள்தாம்.

அறுபது, எழுபது வருடங்களுக்கு முன்பு கோயம்புத்தூர், ராஜபாளையம், சிவகாசி முதலிய இடங்கள் வறண்ட விவசாயப்பிரதேசங்களாக இருந்தன. நாயுடுமார், கவுண்டர், நாடார், ராஜுக்கள் எல்லோரும் விவசாயந்தான் செய்துவந்தனர். இன்றைக்கோ இந்தப் பகுதிகள் தொழிலிலும் வணிகத்திலும் கொடிகட்டிப் பறக்கின்றன. அதற்குக் காரணம் என்ன? அந்தந்த வட்டாரத்தில் தோன்றிய வல்லவர்கள், நல்லவர்கள், தீர்க்கதரிகள்தாம். இவர்கள் ஏதாவது ஒரு துறையில் இறங்கி, குறுக்கீடுகளையும், தடங்கல்களையும் சமாளித்து, விடா முயற்சியில் முன்னேறினார்கள். சுற்றி இருக்கும் மக்களைச் சோம்பலை உதறி எறியும்படி செய்தார்கள். சுறுசுறுப்பையும் வேலையில் ஆர்வத்தையும் அவர்களுக்கு ஊட்டினார்கள். மின்சாரத்தைப் பாய்ச்சி நிறைப்பது போல் மக்களின் உள்ளத்தில் முயற்சியையும் விழிப்புணர்வையும் பாய்ச்சி நிறைத்தார்கள்.

அதனால் அந்த வட்டாரம் முழுவதும் பெரிய பெரிய தொழிற்சாலைகள் தோன்றி வளர்ந்தன. ஆயிரம் ஆயிரம் குடும்பங்கள் வாழ்க்கையில் வளம் கண்டன. சிறு துளி பெருவெள்ளம் என்பது போல் ஆங்காங்கு தொழிற் கூடங்கள் எழுந்து நாட்டையே தலை நிமிர வைத்தன. உலக நாடுகளுடன் போட்டிபோடுகிற அளவுக்கு விவசாயம், தொழில்,

விஞ்ஞானம், வணிகம் எல்லாவற்றிலும் நம்நாட்டை வளப்படுத்திவிட்டன. அந்த ஒரு சில வல்லவர்களின் விடாமுயற்சி, அதாவது தளராத ஊக்கம்.

திருவாளர்கள் டி.வி.சுந்தரம் ஐயங்கார், கோவை குப்புசாமி நாயுடு, பத்திரிகை மன்னன், சி.பா.ஆதித்தனார், அருட்செல்வர் என்.மகாலிங்கம், ராஜபாளையம் பி.ஏ.சி.ராம சாமி ராஜா இவர்களுடைய வரலாற்றைக் கொஞ்சம் பார்த்தாலே போதும். நாட்டையும், செல்வ வளத்தையும், புதிய புதிய தொழில் உத்திகளையும் மேன்மைப்படுத்த என்னென்ன சிரமப்பட்டிருக்கிறார்கள்? எப்படி எப்படிப் பாடுபட்டிருக்கிறார்கள் என்பது தெரியும்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல ஒரு சிலர் பெயரையே மேலே குறிப்பிட்டுருக்கிறோம். இவர்களைப் போல் இன்னும் நூற்றுக்கணக்கில் இருக்கிறார் கள். இவர்களுடைய முயற்சியாலும், ஊக்கத்தாலும் பட்ட சிரமங்களாலும் இன்று பாலைவனம் எல்லாம் சோலை வனங்களாகத் திகழ்கின்றன. வறுமையும் அறியாமையும் ஓடுகின்றன. செல்வமும் செழிப்பும் தாண்டவமாடுகின்றன. மொத்தத்தில் நாடு இப்பொழுதுதான் நாடாக-முட்டுப் பாடில்லாத நாடாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது.

லட்சோப லட்சம் மக்களில் நூறு இருநூறு என்கிற கணக்கில்தான் இத்தகைய உழைப்பில் உயர்ந்த உத்தமர்கள் இருப்பார்கள். உழைப்பால் நாட்டையே உயர்த்திய உத்தமர்கள் இவர்கள்.

இவர்களுடைய வரலாற்றைக் கூர்ந்து பார்த்தால் விடாமுயற்சி, சுறுசுறுப்பு, கஷ்டநஷ்டங்களைத் தாங்கும் பொறுமை, தீர்க்தரிசனம் முதலிய பண்புகள் இவர்களிடம் நிறைந்திருப்பது தெரியும். அவை மட்டும் அல்லாது, இந்த

மேதைகள் ஒவ்வொருவரிடமும் ஏதாவது ஒரு அசாதாரணமான குணப்பண்பும் சேர்ந்து மிளிர்வதையும் பார்க்கலாம்.

மற்றவர்களிடம் இந்த அசாதாரணமான குணப்பண்பு இருக்காது. இவர்களிடமே அது உண்டு. உதாரணமாக ராஜபாளையம் திரு.பி.ஏ.சி.ராமசாமி ராஜா அவர்களின் லட்சிய வாழ்க்கையைப் பார்ப்போம்.

அறுபது வருடங்களுக்கு முன்பு ராஜபாளையம் ஒரு பட்டிக்காடு. விவசாயம் ஒன்றுதான் பிழைப்புக்கே வழி. ராஜபாளையம் மட்டுமல்ல-அந்த வட்டாரம் மட்டுமல்ல, ராஜபாளையம் அமைந்திருந்த ராமநாதபுரம் மாவட்டமே அப்படித்தான். வறுமையும், அறியாமையும் மிக்க ஏழை விவசாயிகள் நிறைந்த பிரதேசமாக இருந்தது அது.

இன்றோ செல்வமகள் (லட்சுமிதேவி) கொலு வீற்றிருக்கும் அத்தாணி மண்டபமாகத் திகழ்கிறது ராஜபாளையம். தொழில், வணிகம், விவசாயம், கல்வி, பண்பாடு, கலை எல்லாவற்றிலும் கொடிகட்டிப் பறக்கிறது ராஜபாளையம்.

ஜப்பான் நாட்டிலோ, ஜெர்மன் தேசத்திலோ உள்ள பிரதான தொழில் நகரம் ஒன்றுக்குள் போய் வருவது போல இருக்கும் ராஜபாளையம். அப்படி எங்கு பார்த்தாலும்-சுற்று வட்டாரம் முழுவதுமே நூற்பாலைகள், நெசவாலைகள் இன்னும் பல தொழிற்சாலைகள். நவீனமுறையில் விவசாயமும் செழித்து மிளிர்கிறது.

பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு தடவை சொன்னார். ''இந்தியாவில் மாதந்தோறும் வாரந்தோறும் புதிய புதிய கோவில்கள் எழுந்து வருகின்றன. அணைக்கட்டுகள், மின்சார நிலையங்கள், தொழிற்சாலைகள், ரசாயன கூடங்கள்,

ஆராய்ச்சி நிலையங்கள் என்று எழுந்து வருகின்றன ஆலயங்கள். மக்கள் கூட்டம் கூட்டமாய் யாத்திரை சென்று எதிர்காலத்தில் இந்தக் கோவில்களைக் கண்டு மகிழ்வார்கள்'' என்று. நேரு சொல்லியபடி ஒவ்வொரு தொழிற்சாலையும், ஒவ்வொரு பண்ணையும், வியாபார நிலையமும் கோவில் கோவிலாய் எழுந்துள்ளன. ராஜபாளையத்தில். இவ்வளவு முன்னேற்றத்துக்கும் மூலநாயகன் உயர்திரு. பி.ஏ.சி.ராம சாமிராஜாதான் காரணம்.

திரு.ராமசாமிராஜா அறுபது ஆண்டுகளுக்கு முன் ஆர்.வி.மில் ஏஜண்ட். ஆனால் நிகரற்ற நிர்வாகத்திறமையோடு விளங்கும் பல நூற்பாலைகள், நெசவாலைகள், மருத்துவத்துணி, பஞ்சு, பொடி உற்பத்தி செய்யும் தொழிலகங்கள், சிமெண்ட் தொழிற்சாலைகள், கல்நார்தகட்டுத் தொழிற்சாலை இப்படி எண்ணிறந்த தொழில் நிலையங்களைக் கொண்ட 'ராம்கோ குரூப்பை' நாட்டுக்கு நலன் பல புரிய உண்டாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

ராஜபாளையத்தில் மட்டுமல்ல-தமிழகத்தில் மட்டுமல்ல- ஆந்திரம், கர்நாடகம், மத்தியப்பிரதேசம், ஓரிசா இங்கெல்லாம் படர்ந்து வளர்ந்துள்ளது ராம்கோ குரூப்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பே நூற்பாலை நிறுவ முடிவு செய்துவிட்டார் திரு.ராமசாமி ராஜா. முடிவெடுப்பது பெரிதல்ல, அதைத் திறம்பட நடத்த வேண்டுமே? அதற்கு நூற்பாலைத் தொழில் நுட்பங்களைத் தெரிந்துவர 1935ம் ஆண்டே ஐரோப்பியப் பயணத்தை மேற்கொண்டு வெற்றிகரமாகத் திரும்பினார்.

விஷயம் தெரிந்தது இப்படி. இனி நூற்பாலை நிறுவ நிறையப் பணம் வேண்டுமே? அந்தக் காலத்தில் தொழிலில் முதலீடு செய்ய, பங்குகள் வாங்க யாரும் முன்வர மாட்டார்கள்.

இதற்காக திரு.ராஜாபட்டி தொட்டிகள் எல்லாம் சென்று பொது மக்களிடம் பங்குகளைத் திரட்டிப் பணம் பெற்றார். பண்ணையார்கள், நிலப்பிரபுக்கள் மட்டுமல்ல, பல மடாதிபதிகளே ராஜாவின் தொழில் நிறுவனங்களுக்குப் பணம் கொடுத்து பங்குதாரர்கள் ஆகி இருக்கிறார்கள். இது எல்லோராலும் எளிதில் சாதிக்கக் கூடிய காரியம் அல்ல. நாணயமும், நேர்மையும், உறுதியும், தெளிவும் நிறைந்த ஒருவரால்தான் பெரிய பெரிய மடாதிபதிகளைத் தொழிலில் ஈடுபட வைக்க முடியும். திரு.ராஜாவிடம் அத்தனை குணங்களும் நிரம்பி இருந்தன.

1938ல் ராஜபாளையம் நூற்பாலை தோன்றி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. அதன் வளர்ச்சியில் ஜெயராம் மில், சுதர்சனம் மில், சர்ச்சிக்கல் காட்டன் மில் என்று பல நிலையங்கள் தோன்றின. துலுக்க பட்டியில் சிமிண்ட் ஆலையும் தோன்றி வளர்ந்தது.

வளர்ச்சியைக் கண்டு மக்கள் அதிசயப்பட்டார்கள். ராம்கோ குரூப்பில் பணம் போட்டுப் பங்குதாரர்கள் ஆகப் போட்டி போட்டார்கள்.

இனி வீட்டுக்கும் பெரிய பெரிய கட்டிடங்களுக்கும் உபயோகப்படும் திருகாணி போன்ற பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று ராஜா திட்டமிட்டார்கள். அதற்காக அந்தத் தொழில் நுணுக்கத்தை தெரிந்து வர 1952ம் ஆண்டு ஜப்பான் சென்று வந்தார்கள். கௌரி மெட்டல் ஒர்க்ஸ் என்னும் தொழில் நிலையம் உண்டாகி மக்களுக்கு நாலாவகையிலும் பயன்தருகிறது அந்த இரும்புத் தொழில்.

திரு.ராமசாமி ராஜா தொடங்கிய ஒவ்வொரு தொழிலும் ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரோடி வளர்ந்தன.

நாட்டுக்கும் வீட்டுக்கும் செழிப்பையும் களிப்பையும் கொடுத்துப் பெருமைப்படுத்துகின்றன.

அதுசரி, இவ்வளவு காரியங்களும் ராமசாமி என்கிற தனி மனிதரால் எப்படி உண்டாகியது என்று யாரும் திகைப்படைவார்கள். அவர்களோடு பழகியவர்களுக்கும் கூட இந்தத் திகைப்பு உண்டு. ஆனால் திரு.ராமசாமி ராஜாவின் உறுதியான உண்மையான தெய்வபக்தியையும், அறிஞர்களையும் சான்றோர்களையும் மதித்து உபசரித்த சீலத்தையும் பார்த்தவர்களுக்கு இந்தத் திகைப்பு வராது.

மேலும், தன்னை நம்பி தன் தொழிலில் பணம் போட்டவர்கள் பலர். அவர்கள் போட்ட ஒவ்வொரு தம்பிடியையும் தன் பணத்தைப் பாதுகாத்துப் பேணுவது போலவே பாதுகாத்து அளிக்கும் நிகரற்ற பெருந்தன்மை ராஜா அவர்களிடத்தில் லட்சியமாக நின்று ஜொலித்தது.

தனக்குப்பின் தன் நிறுவனங்கள் அத்தனைக்கும் பொறுப்'பேற்க இருந்த தன் அருமைப் புதல்வர் திரு.ராமசுப்பிரமனிய ராஜாவிடம் ராமசாமி ராஜா சொன்னது இதுதான். ''நம்மை நம்பி பலர் பணம் போட்டிருக்கிறார்கள். அவர்கள் பணம் வேறு, நம் பணம் வேறு என்று பார்க்கக் கூடாது. எல்லாம் ஒன்று என்று பார்க்க வேண்டும். நாணயமும் நம்பிக்கையுந்தான் நம் சொத்து. அதைப் பாதுகாப்பதுதான் தர்மம்.''

தந்தையின் உபதேசத்தை செவிவழி வாங்கி விட்டுவிடவில்லை தனையன். மனசில் நிறுத்தி தர்மம் தவறாமல் அத்தனை காரியங்களையும் தெய்கைங்கர்யமாகச் செய்து வருகிறார். திரு.ராமசுப்பிரமண்யராஜா. அது மட்டுமல்ல, பக்தியையும், தர்ம உணர்வையும் தந்தையைவிட மேலே ஒருபடி உணர்ந்து செயல்பட்டு வருகிறார் தனையன்.

டி.டி.திருமலை என்னும் காந்தீய நெறியாளர் ஒரு சமயம் தம் நூல் ஒன்றை வெளியிட ராமசுப்பிரமண்ய ராஜாவிடம் பணஉதவி வேண்டினார்.

இரண்டு மூன்று தடவை திரு.திருமலையை அலைய வைத்த பின்பே ராஜா உதவினார். அப்படி உதவும் போது, ''கட்சிக்காரர்களும் அரசியல்வாதிகளும் கேட்டால் ஆயிரம் ஆயிரமாக அள்ளிக் கொடுக்க வைக்கிறது. உங்களைப் போன்ற அறிஞர்களுக்கு, அதுவும் உத்தமமான செயலுக்கு உதவ முடியவில்லை. அலையவைத்தே உதவ வேண்டி இருக்கிறது. என்ன பிழைப்பு இது'' என்று வேதனைப்பட்டிருக்கிறார் உத்தம புத்திரனாகிய திரு.பி.ஆர்.ராமசுப்பிரமண்யராஜா.

அவருடைய வேதனையிலிருந்து நேர்மையும், நாணய உணர்வும், உண்மையான பக்தியும், தர்மத்தைப் பற்றிய தெளிவும் தகதக எனறு ஜொலிக்கின்றன.

**தம்மில்தம் மக்கள்**
**அறிவுடைமை - மாநிலத்து**
**மன்னுயிர்க்(கு) எல்லாம்**
**இனிது**

என்ற வள்ளுவர் வாக்குக்கு எடுத்துக் காட்டாய் விளங்குகிறார்கள் தந்தையும் தனையனும்.

உத்தமன் ஒருவன் உழைத்துச் சம்பாதித்தால் போதும். அந்த ஒருவனுடைய செல்வத்தில் பல்லாயிரக்கணக்கான குடும்பம், பசி ஆறும். வீடுகளில் விளக்கேறும். அவர்கள் வாழ்க்கையில் வளமும் மகிழ்ச்சியும் பொங்கும். இந்த உண்மையை சின்னஞ்சிறிய ஆலம் வித்தை வைத்து விளக்குகிறார் அதிவீரநாம பாண்டியர் என்னும் கவிஞர் பெருமான்

"தெள்ளிய ஆலின்
சிறுபழத்(து) ஒருவிதை
தெண்ணீர்க் கயத்துச்
சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும்-;
அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி
ஆட்பெரும் படையொடு
மன்னர்க்(கு) இருக்க
நிழல் ஆ கும்மே"

*தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை-தெளித்தெடுத்த சின்னஞ்சிறிய ஒரு ஆலம்வித்து. தெண்நீர் கயத்து சீறுமீன் சின்னயினும் நுண்ணிது ஆயினும்-நீர்நிறைந்த குளம் ஏரியில் உள்ள சிறிய அயிரை மீன் முட்டையை விடச் சிறியதுதான். ஆனாலும், அண்ணல் யானை-பட்டத்து யானை என்ன, போர் யானைகள் என்ன. புரவி-குதிரைப்படை. ஆள்படை-காலாட் படை. இவ்வளவோடும் அரசர்க்காசனே தங்க நிழல் கொடுக்கும் அந்த வித்திலிருந்து வந்த ஆலம் நிழல்.*

*திரு.பி.ஏ.சி.ராமசாமி ராஜாவும் அவர்கள் நிறுவிய ராம்கோ குரூப்பும் பல்லாயிரம் குடும்பங்களுக்கு வாழ்வளிக்கும் கற்பக விருட்சந்தான்.*

*திரு.ராஜாவின் வரலாற்றையும், ராஜாவை ஒத்த வல்லவர் நல்லவர் வரலாற்றையும் நம்குழந்தைகள் படிக்க வேண்டாமா? படித்தால் விஷயம், உணர்ச்சி எல்லாம் மனசோடு ஒட்டும். ரத்தத்தோடு ரத்தமாய்க் கலங்கும்.*

*(2) இனி, நெல்லை மாவட்டத்தில் கடையநல்லூர் என்று ஒரு பேரூர். தென்காசிக்கும் புளியங்குடிக்கும் இடையில் உள்ள பேரூர் அது.*

அதில் கிருஷ்ணாபுரம் என்று ஒரு பகுதி. அதில் மிட்டா வேம்பையர் என்று ஒருவர். பெயரில் தான் வேம்பு, குணத்தில் அமிர்த்தம் தேவாமிர்தமேதான்.

அடுத்தவன் முதலுக்கு ஆசைப்படாத தெளிவும் உறுதியும் சில தனவந்தர்களிடம் இருக்கும். ஆனால் அதில் ஒரு கண்டிப்போ, விடாப்பிடியோ அவர்களில் பலரிடம் இருக்காது. வந்தால் வரட்டுமே, வலியவருகிற தேவியை ஏன் உதற வேண்டும்? என்று சொகுசா சேர்த்துக் கொள்வார்கள். ஆனால் திரு.வேம்பையரிடம் கடுகளவு கூட அந்த ஈனப்புத்தி கிடையாது.

உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தைப் பார்ப்போம். அறுபது எழுபது வருடங்களுக்கு முன் நெல்லை, ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ளவர்களும், நாஞ்சில் நாட்டில் உள்ளவர்களும் ஏதாவது தொழில் தொடங்கவேண்டும் என்றால் மிட்டா வேம்பையரிடந்தான் கடன் வாங்குவார்கள்.

திருவேம்பையர் கைராசிக்காரர் என்பது ஒரு சம்பிரதாயம். அதோடு நினைத்தவுடன் முப்பதனாயிரம் ரூபாய் நாற்பதாயிரம் ரூபாய் கேட்டவுடன் கிடைக்கக் கூடிய இடம் மிட்டாவேம்பையர்தான்.

திரு.வேம்பையரிடம் எப்பொழுதும் இரண்டு லட்சம் மூன்று லட்சம் என்று இருப்பில் இருக்கும் பணம். ஆனால் வேம்பையரிடம் ஒரு கண்டிப்பு உண்டு. ஆடம்பரச் செலவு செய்து சொத்தைக் கரைக்கும் படாடோபப் பேர் வழிகளுக்குக் கடன் கொடுக்க மாட்டார்கள். அதேபோல நல்லவர்களுக்கு முன்னேறுகிறவர்களுக்குக் கடனாகக் கொடுக்கும் பணத்துக்கு நூற்றுக்கு மாதம் ஒன்றுக்கு பத்தணா (அரையே அரைக்கால் ரூபாய்)தான் வட்டி வாங்குவார்

இதில் ஒரு தம்பிடி கூட விட்டுக்கொடுக்கவும் மாட்டார். கூடுதலாக எடுக்கவும் மாட்டார்.

''அவசரம் பணம் தேவை. வட்டி கூடுதலாகத் தருகிறேன் என்று யாராவது கடன் கேட்டால் வேம்பையருக்குக் கோபம் வந்துவிடும். ''உனக்குக் கொடுக்கிற பணம் உனக்கும் பயன்படாது. எனக்கும் வந்து சேராது'' என்று சொல்லி கடன் கொடுக்க மறுத்துவிடுவார்.

திரு.வேம்பையரிடம் இருபதினாயிரம் ரூபாய் கடன் வாங்கி இருந்தார் ஒருவர். கடன் வாங்கி இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன. அந்த நிலையில் வட்டியும் முதலும் சேர்ந்த தொகையைக் கட்டிக் கொண்டு ஐயரிடம் கொடுக்க வந்தார் அவர்.

அவர் வந்தது பிற்பகல் ஐந்துமணி, அவர் ஊர் கிருஷ்ணாபுரத்திலிருந்து முப்பது மைல் தூரத்தில் இருக்கிறது.

வந்தவரை, ஐயர் வரவேற்று உபசரித்தார். வந்தவர் கொடுப்பதற்காகப் பணத்தை எண்ணினார். ஐயர் அவரிடம் சொன்னார். ''ஏன் வீணாகப் பணத்தை எண்ணுகிறீர். இன்று வெள்ளிக்கிழமை. யாரும் யாரிடமும் பணத்தைக் கொடுக்கக் கூடாது. அதனால் இன்று போய் நாளை வாரும், பணத்தைப் பெற்றுக் கொள்கிறேன்.''

நேரம் கெட்ட நேரத்தில் பெருந்தொகையோடு ஊருக்குப் போக, வந்தவர் விரும்பவில்லை. ஆனாலும் அவசரமாக ஊர் போக வேண்டி இருக்கிறது. அதனால் ''இந்தப் பணத்தை பையோடு தனியாக வைத்திருங்கள். ஊர் போய் நாளை வருகிறேன். கணக்கை நாளை முடித்துக் கொள்வோம்'' என்றார்.

"முடியவே முடியாது, நோட்டை உம்மிடம் கொடுக்காமல் பணத்தை வாங்கி வைக்க மாட்டேன். மனித வாழ்வு நிச்சயம் இல்லை. அதைவிட நிச்சயம் இல்லாதது மனிதமனம். அதனால் முன் கூட்டி உம்மிடம் பணத்தை நான் வாங்குவது உசிதம் ஆகாது" என்று சொல்லி விட்டார் வேம்பையர்.

வந்தவருக்கு ஒன்றும் ஓடவில்லை. ஊருக்கு நாளைத் தான் போக வேண்டும் என்று தீர்மானித்துவிட்டார்.

"நான் இன்று இங்கு தங்குகிறேன். இரவுப் பொழுதுக்குப் பணத்தை வாங்கி வைத்திருங்கள். காலையில் பார்த்துக் கொள்வோம் கணக்கை" என்றார் வந்தவர்.

ஐயரவர்கள் சொல்லிய பதில் என்ன?

"ஓய்! உமக்கு வசதியா ரூம் கொடுக்கிறேன். பாதுகாப்பான பெட்டியும் சாவியும் கொடுக்கிறேன். உம்முடைய பணத்தை நீரே அதனுள் வைத்துப் பூட்டிவையும். நம் வீட்டில் சாப்பிடும். நன்றாக உறங்கும். காலையில் நோட்டைப் பெற்றுக் கொண்டு பணத்தைக் கொடும். அதுவரை உம்முடைய பணம், உம்முடைய கையில்தான்."

அப்படியே நடந்தது.

ஸ்ரீமான் வேம்பையருடைய வாழ்க்கையில் இப்படி எத்தனையோ அதிசயங்களைப் பார்க்கலாம்.

வயிரவன் குளம் மிட்டா சம்பந்தமாக கலைக்டர் ஆபீஸில் ஒரு விசாரணை. கலைக்டருடைய டபேதார். வயிரவன் குளம் மிட்டாவேம்பையர்.... என்று உரக்க ஒரு தடவை கூப்பிட்டான். மூன்றாவது தடவையும் கூப்பிட்டான்.

மிட்டாதார் வரவில்லையே என்று கலைக்டருக்கு எரிச்சல், ஏன் அவர் வரவில்லை என்று அதிகாரிகளை அதட்டினார் கலைக்டர்.

கலைக்டரின் பக்கத்தில் பவ்யமாக நின்று கொண்டிருந்த ஒருவர், ''நான்தான் மிட்டாவேம்பையர்'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னார். டபேதார் கூப்பிடும் பொழுதெல்லாம் அங்குதான் நின்று கொண்டு இருந்திருக்கிறார் ஐயர்.

வியப்புத்தாங்க முடியவில்லை கலைக்டருக்கு! வயிரவன் குளம் மிட்டா வேம்பையர் திருநெல்வேலி பக்கம் ஒரு சிறு கிராமத்தில் ஏழ்மைமிக்க குடும்பத்தில் பிறந்தவர்தான். பதனான்கு வயதிலேயே பிழைப்புக்காக திருவனந்தபுரம் போய்விட்டார்.

அந்தக் காலத்தில் ஊட்டுப்புரை என்று திருவனந்தபுரத்தில் அன்னசத்திரங்கள் பல இருந்தன. வேலை கிடைக்கிற வரை ஏன் வேலை கிடைத்த பிறகும் கூட ஊட்டுப்புரையில் இரண்டு வேளை இனாமாகச் சாப்பிடலாம்.

அதை நம்பி பல பேர் திருவனந்தபுரம் போவார்கள். வேம்பையர் அவர்களும் அப்படிப்போனவர்கள்தாம்.

வடநாட்டு மார்வாரி (சேட்) ஒருவர் திருவனந்தபுரத்தில் ஜவுளிக்கடை வைத்திருந்தார். அந்தக் கடையில் இளைஞர் வேம்புக்கு வேலை கிடைத்தது.

கொஞ்ச வயதுப் பையாகவும், மழலை ததும்பும் அழகனாகவும், கலகலப்பான நளினமான பேச்சாளனாகவும் வேம்பு இருந்ததால் ஜவுளிப் பொட்டணத்தோடு அடிக்கடி அரண்மனை அந்தப்புரத்துக்குப் போவார். பணப்பொட்டணத் தோடு கடைக்குத் திரும்பிவருவார். அப்படி விற்பனை ஆகிவிடும் பட்டுப்புடவைகள்.

வேம்பின் திறமையைப் பாராட்டி சேட் சம்பளம் நிறையவே கொடுத்தார் வேம்புக்கு. அதுமட்டுமல்ல வேலையில் மளமளவென்று உயர்வு கொடுத்து தனக்கு அடுத்த நிலையில் கொண்டு வந்துவிட்டார் கடை முதலாளி வேம்புவை.

ஊட்டுப்புரையில் சாப்பாடு. வாங்குகிற பணம் எல்லாம் மிச்சம்.

ஆண்டுகள் சில கழிந்தன. மார்வாரி சொந்த ஊர்போக விரும்பினார். அதனால் ஜவுளிக் கடைக்கு ஒருவிலை வைத்து வேம்பையருக்கே அந்த ஜவுளிக்கடையை விற்று விட்டார் சேட்.

சேட்டுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தில் பாதி அளவுதான் வேம்பையரிடம் அப்பொழுது இருந்தது. அதைப் பெற்றுக்கொண்டு மீதப் பணத்தை ஒருவருடத்தில் தவணை முறையில் அனுப்பச் சொல்லிவிட்டு ஊர்போய்விட்டார் மார்வாரி சேட்.

கடையில் நிறைய துணிக்கட்டுகள் (பேல்கள்) இருந்தன. பாப்ளின், லாங்கிளாத் போன்ற ரகங்கள் ஏராளமாக இருந்தன.

சில வாரங்கள் கூட ஆகவில்லை. முதல் உலக மகாயுத்தம் வந்துவிட்டது. பத்துமடங்கு, பதினைந்து மடங்கு என்று துணிவிலை ஏறிவிட்டது.

அதனால் பணமாய்க் காய்த்து உலுப்பிவிட்டது துணிக்கடை. இந்த நிலையில் ஒரு பெருந்தொகையை எடுத்துக் கொண்டு முதலாளியைப் பார்க்கப் போனார் வேம்பையர்.

அந்தத் தொகையை முதலாளி (சேட்டிடம்)யிடம் கொடுத்தர் வேம்பையர். ஆனால் சேட்டோ, ''எனக்கு நீ தரவேண்டியது இவ்வளவுதானே, அதைவிட நான்கு மடங்கு பணம் அதிகமாகக் கொடுக்கிறாயே ஏன்?'' என்று கேட்டார்.

ஐயர் சொன்னார். ''தாங்கள் வைத்துவிட்டுப் போன துணிகள் அதிக விலைக்குப் போயின. அந்த அதிக லாபம் தங்களைச் சேர்ந்தது. அதனால் மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று'' சேட்டோ ''நான் ஏற்கனவே உன்னிடம் ஒப்படைத்த சரக்கில் லாபம் வந்தாலும் நஷ்டம் வந்தாலும் அது உன்னைச் சேர்ந்ததுதான். எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை'' என்று சொல்லிவிடார்.

''அதிகமாகக் கிடைத்த லாபத்தில் பாதியையாவது நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்'' என்று ஐயர் மன்றாடினார். நடக்கவே நடக்காது என்று மறுத்துவிட்டார் சேட்.

அவருக்கு ஐயர் தரவேண்டிய பாக்கியை மட்டும் பெற்றுக் கொண்டார் மார்வாரி. மிச்சப் பணத்தோடு வந்தார் வேம்பு.

திருமகளின் அருட்பார்வை நிறைய இருந்ததால் வியாபாரத்தில் லட்சக்கணக்கில் பணம் வந்து சேர்ந்தது. திருவனந்தபுரத்திலேயே சொத்துகள் வாங்கினார். கடைய நல்லூர் கிருஷ்ணாபுரத்தில் இருந்த வயிரவன்குளமிட்டா என்னும் பெருஞ்சொத்தையும் விலைக்கு வாங்கினார்.

ஏராளமாக நன்செய், தோப்பு, வட்டிக் கொடை வாங்கல் எல்லாம் சேர்ந்து பெருஞ் செல்வத்துக்கு அதிபதியாகிவிட்டார் வேம்பையர்.

ஆனாலும் கடைசி வரை ஆடம்பரமே இல்லாத எளிய வாழ்க்கையே வாழ்ந்தார் வேம்பையர். வேம்பையரிடம் கடன் வாங்கியவர்கள் பலர் படகு போன்ற பெரிய உல்லாசக் கார்களை வாங்கி அதில் பவனி வருவார்கள். ஆனால் வேம்பை யரோ பஸ்ஸில் தான் பிரயாணம் செய்வார். கடன் வாங்கிய வர்கள் பெரிய பெரிய பங்களாக்கட்டி தடபுடலாய் வாழ்ந்தார்

கள். வேம்பையரோ அந்தப் பழைய வீட்டில்தான் கடைசிவரை வாழ்ந்தார்.

வேம்பையரிடம் சிக்கனம் அதிகம். ஆனால் அது குற்றமற்ற எளிமையிலிருந்து பிறந்த சிக்கனம். கருமித்தனம் என்பது அதில் எள்ளளவு கூட இல்லை.

கோவில் கட்டுகிறேன், கும்பாபிஷேகம் நடத்துகிறேன். பள்ளிக் கூடம் திறக்கப் போகிறேன் என்று நன்கொடை கேட்டால் தம்பிடிகூடத் தரமாட்டார் வேம்பையர்.

''என்னுடைய பணியாளர்களை எல்லாம் பணக்கஷ்டம் இல்லாதபடி செழிப்பாக வைத்திருக்கிறேன். குத்தகைக்காரர் களும் நன்றாக இருக்கவேண்டும். மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று தாராளமாய் விட்டுக் கொடுக்கிறேன்''

இதைவிட வேறு என்ன தர்மம் வேண்டும்'' என்பார் வேம்பையர்.

ஒரு அதிசயமான-மர்மமான தனவந்தர்தான் வேம்பையர்.

வேம்பையரைவிட அதிசயமானவர் அவருடைய கணக்கர்.

கணக்கருக்கு ஒரு பையன். கடையநல்லூர் உயர்நிலைப் பள்ளியில் படித்தான். எல்லாப் பாடங்களிலும் நூற்றுக்கு நூறு என்று மதிப்பெண் பெற்ற கெட்டிக்காரன் அவன் படிப்படியாக எட்டாம் வகுப்பு ஒன்பதாம் வகுப்பு எல்லாவற்றையும் படித்து முடித்து பத்தாம் (பள்ளி இறுதி) வகுப்பில் வந்து படித்தான் பையன்.

பொதுத் தேர்வுக்கு இரண்டு மாதங்களே உள்ளன. இந்த நிலையில் பையன் பள்ளிக் கூடம் வரவில்லை. அவன்

படிப்பை நிறுத்திவிட்டார் அவன் தந்தை-அதாவது மிட்டாக்கணக்கு.

தலைமை ஆசிரியர் உள்பட எல்லோருக்கும் கவலை வந்துவிட்டது. பள்ளி இறுதி வகுப்பில் தமிழகத்திலேயே முதல் மாணவனாக வருவான். பலபரிசுகள் அவனுக்குக் கிடைக்கும். அரசின் உபகாரச் சம்பளமும் கிடைக்கும். கல்லூரியில் இரண்டு வருடம் படித்து முடித்த பின் பொறியியல் கல்லூரியிலோ மருத்துவக் கல்லூரியிலோ அவனுக்கு இடம் கிடைக்கும். படிப்பு முடியும் வரை அரசு உபகாரச் சம்பளமே அவனுக்குப் போதும்.

**தலை சிறந்த** இஞ்சினீயராகவோ, டாக்டராகவோ **அவன் வருவான்.** அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த நமக்கும் நம்பள்ளிக்கும் மிக்க புகழ் கிடைக்கும் என்று ஆசிரியர்களும் தலைமை ஆசிரியரும் மனக்கோட்டை கட்டி வந்தனர்.

எல்லாம் தவிடு பொடியாய் நொறுங்கிப்போய்விட்டது.

ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் எல்லோரும் பையனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பும்படி அவன் தந்தையிடம் சொன்னார்கள்.'' அவன் படிப்புச் செலவு பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். அது எங்கள் பொறுப்பு'' என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள்.

அவர்களிடம் என்ன சொன்னார் கணக்கு ஐயர். ஐயா, நீங்கள் சொல்வது உண்மை. உங்கள் பள்ளியில் இவன் படிக்கும் போதே இவன் என்னிடம் வேதம், உபநிஷத் சாஷ்திரம் எல்லாம் பயின்று வருகிறான். ஆசாரமாகவும் இருக்கிறான்.

இனி நீங்கள் சொல்கிறபடி பெரிய படிப்புப் படித்து மாதாமாதம் இரண்டாயிரம், மூவாயிரம் என்று சம்பளம்

கிடைத்தபின் வேதம் படிப்பானா? ஆசாரமாய் இருப்பானா? வேண்டாத கெட்டப்பழக்கங்களுக்கெல்லாம் ஆளாகி விடுவான். அதில் என்ன பலன்?

டாக்டர், இஞ்சினீயருக்கு இவன் இல்லை என்றால் எத்தனையோ பேர் வருவார்கள். ஆனால் நம் சாஷ்திரத்துக்கும், ஆசாரத்துக்கும் அப்படி வருகிறார்களா ஜனங்கள்?

இவனுக்கு இப்பவே மிட்டாவின் கோவில் அர்ச்சகர் வேலை இருக்கிறது. அதை இவன் பார்க்கட்டும்'' என்று சொல்லிவிட்டார். மிட்டாவேம்பையரை விட அவர் கணக்கர் அதிசயம் மிக்கவர்தானே!

(3) இனி திருஞானசம்பந்தப் பெருமான் அவதரித்த திருப்பதி சீர்காழி. அந்தச் சீர்காழியில் தென் பாதிமங்கலம் திருவேங்கடம் பிள்ளை என்று ஒரு கனவான் இருந்தார்.

பெரிய செல்வந்தர். அதைவிடப் பெரிய மனதுக்காரர். உடம்பும் வளமான பெரிய உடம்புதான் அவருக்கு.

வருடாவருடம் சாரல் காலத்தில் குற்றாலத்தில் வந்து தங்குவார். அருவிக்கு அவர் குளிக்க வரும்பொழுது முன்னும் பின்னும் பணியாளர்கள் பதினைந்து இரு பதுபேர் வருவார்கள்.

அருவிக்கரையில் பிள்ளை அவர்கள் வந்து நிற்பார். உடனே பணியாளர்களின் ஒருவர் பிள்ளையின் பட்டுத் தலைப்பாகையை எடுப்பார். இன்னொருவர் கோட்டைக் கழற்றுவார். மற்றொருவர் சட்டை பனியனை அவிழ்ப்பார். ஒருவர் வெள்ளிப் பூண்கட்டியடாணா' கம்பை வாங்குவார். ஒருவர் நாலு முழவேட்டியைக் கட்டிவிட்டு எட்டு முழ வேட்டியை அவிழ்த்து உருவுவார்.

நான்கு ஐந்து பேர் தைலாதிகளை விட்டு பிள்ளை வாளின்மேனி முழுவதையும் தேய்த்துவிடுவார்கள். ஏழு

எட்டுப்பேர் அருவிவிழும் இடத்துக்கு அழைத்துப் போய் குளுப்பாட்டி விடுவார்கள். பிறகு சிலர் துவட்டுவார்கள். பழையபடி ஆடை அணி அலங்காரம். அப்படியே பணியாட்கள் புடை சூழ ஜாகைக்கு எழுந்தருளுவார் பண்ணையார்.

ஜாகைக்கு வந்தவுடன் பெரிய உறாலில் போட்டிருக்கும் சாய்வு நாற்காலியில் பிள்ளைவாள் அமர்வார். பணியாட்கள் சிலர் ரோட்டுக்கு வருவார்கள். குளித்துவிட்டு ஈர வேட்டியோடு போகிறவர்களை மறித்து ஜாகைக்குத் திரட்டி வருவார்கள் பணியாட்கள். ஐம்பது அறுபது பேர் சேர்ந்தவுடன் அவர்களுக்குப் பலகாரப்பந்தி நடக்கும்

இட்லி, தோசை, வடை, உப்புமா, பொங்கல், இப்படிப் பலவித பதார்த்தங்கள் இருக்கும். சட்னி, சாம்பார், மிளகுபொடி, எண்ணை, நெய் எல்லாம் வரும். சாப்பிடச் சாப்பிடப் போட்டுக் கொண்டே இருப்பார்கள் பரிசாரர்கள்.

வயிறு புடைக்கச் சாப்பிட்டவர்கள் பிள்ளைவாளிடம் விடைபெறுவார்கள். சாய்வு நாற்காலியில் அமர்ந்து சாப்பிட்டவர்களைக் கவனித்த பிள்ளைவாள் அவர்களில் ஒன்றிரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து வைத்திருப்பார்கள். மற்றவர்களுக்கு விடை கொடுக்கும்போது வெறும் வெற்றிலை பாக்குத்தான். ஆனால் தேர்ந்தெடுத்த நபர்களுக்கு விடை கொடுக்கும் போது மட்டும் வெற்றிலை பாக்கோடு ஐந்து ரூபாய் நோட்டும் சுருளாகச் சேர்ந்திருக்கும். அந்த ஆள் திகைப்பான், அப்பொழுது பிள்ளைவாள் ''நீதான் யோக்கியன். வஞ்சகம் இல்லாமல் சாப்பிட்டாய். வயிற்றுக்கு வஞ்சகம் பண்ணாமல் திருப்தியாய்ச் சாப்பிடுகிறவன் தான் நல்ல மனிதன்'' என்னும் பாராட்டுரையோடு சுருள் கொடுத்து அனுப்புவார் திருவாளர், திருவேங்கடம்பிள்ளை.

அதேபோல மத்தியானச் சாப்பாட்டுக்கும் ஐம்பது அறுபது பேர் வந்து சேர்வார்கள். சாப்பாடு ஆடம்பரமாக இருக்கும். நிறையச் சாப்பிட்ட நபரை அழைத்து, ''உன்னைப்போன்ற ஆசாமிகள்தான் நாட்டுக்குத் தேவை'' என்று வாழ்த்தி பத்து ரூபாய் நோட்டை வெற்றிலை பாக்கோடு வைத்துக்கொடுத்து அனுப்புவார் தென்பாதி.

பிள்ளை அவர்கள் வருடந்தோறும் சாரல் காலத்தில் ஒருமாதம் குற்றாலத்தில் தங்குவார்கள்.

அந்த ஒருமாத காலத்தில் திருச்செந்தூர், சங்கரன் கோவில், திருநெல்வேலி, பாவநாசம், கன்னியாகுமரி முதலிய தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்து வருவார்கள்.

பிள்ளைவாள் வருகிறார்கள் என்றால் அந்தந்தப் பகுதியிலுள்ள பக்த கோடிகளுக்கெல்லாம் ஒரு ஆனந்தக் கொண்டாட்டம். காரணம் இதுதான்.

நந்தவனத்தைத் திருத்த, பசுமடத்தை வளர்க்க, சிறப்பு வழிபாடும், பூஜையும் நடத்த, அன்னதானம் பண்ண, பக்த கோடிகளுக்குப் பிரசாதம் வழங்க என்று பலகைங்கர்யங் களுக்கும் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுப்பார்கள் பிள்ளைவான்.

அப்படியானால் ஆனந்தம் பொங்கத்தானே செய்யும். குடும்பத்தோடும் பரிவாரத்தோடும் தங்கி இருக்கும் குற்றாலம் பங்களாவும் ஒரு பண்ணையாருடையதுதான். வேறு யார் வந்து ஒரு மாதம் தங்கினாலும் வாடைகை இருநாற்று ஐம்பதிலிருந்து முந்நூறு ரூபாய்க்குள்தான் கொடுப்பார்கள். ஆனால் பிள்ளை அவர்களோ ஆண்டுதோறும் வாட்கையாக ரூபாய் ஐந்நூறு கொடுத்து வந்தார்கள்.

இந்த நிலையில் ஸ்ரீ மான்தென்பாதிமங்கலம் திரு வேங்கடம்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார்கள். செய்தி தெரிந்த பங்களாப் பண்ணையார் சொன்னார்.

''திருவேங்கடம் பிள்ளை வருடா வருடம் ஐந்நூறு ரூபாய் கொடுத்தார். இனியார் கொடுப்பார்கள்? நம்மை ஏமாற்றி விட்டார் பிள்ளை. ஏமாற்றிப் பிழைப்பது பங்களாவுக்கு உரிய பண்ணையார்தானா? இல்லை அதில் வாடகைக்கு இருந்த தென்பாதி மங்கலம் திருவேங்கடம் பிள்ளையா என்று பகுத்துணர முடியவில்லை அவரால்!

பங்களாக்காரர் கதை அப்படி இருக்கட்டும். கலியுகம் கலியுகம் என்று கத்தப்படுகிற இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்பாதி மங்கலம் திருவேங்கடம்பிள்ளை ஒரு அதிசயமான மனிதர்தானே!

(4) இனி, முப்பத்து ஐந்து வருடம் அரசுப் பணியில் அமர்ந்து சிறப்பாக நிர்வாகம் பண்ணிய ஒருவர் அதுவும் வருவாய்த்துறையில் வட்டாட்சியர், வட்டார வருவாய்த்துறை அதிகாரி, மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி என்றெல்லம் பதவி வகித்த ஒருவர், கடைசியில் மாவட்ட ஆட்சித் தலைவர் (கலைக்டர்) ஆக இருந்து சீரும் சிறப்புமாகப் பணியாற்றிய ஒருவர்; அவர் வாழ்நாள் முழுவதும் கள்ளம் கபடம் இல்லாத குழந்தைபோல சிரித்து மகிழ்ந்து கொண்டே இருந்தார் என்றால் அது அதிசயம் இல்லையா?

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அவர் பணியாற்றினார். போகிற இடம் எல்லாம் தமிழன்பர்களைத் தேடிக் கண்டுபிடிப்பார்கள். தமிழலக்கியம், கலை, பண்பாடு பற்றி ஆனந்தமாய் எடுத்து அவர்களிடம் விளங்குவார். பிறகு அன்பர்களின் ஒத்துழைப்போடு தமிழ்மன்றம் நிறுவுவார். ஆண்டு விழா என்ன, பட்டிமன்றம் என்ன, கருத்தரங்கம் என்ன,

கம்பர் விழா என்ன, வள்ளுவர் விழா என்ன, இசைவிழா என்ன ஒவ்வொன்றையும் ஜாம்ஜாம் என்று நடத்துவார். அதற்காக தமிழகத்திலுள்ள பேராசிரியர்கள், பண்டித மணிகள், மகாமகா உபாத்யாயர்கள், சித்தாந்த வித்வான்கள், இலக்கணப் புலவர்கள் எல்லோரையும் வரவழைப்பார், உபசரிப்பார், மேடை ஏற்றி சொற்சிலம்பம் ஆடவைப்பார். மேளதாள முழக்கத்தோடு திருவிழா மாதிரி தமிழ் விழாவை நடத்துவார். அந்தந்த வட்டாரம் முழுவதும் ஆனந்தத்தில் திளைக்கும்.

யாரைப் பற்றி இவ்வளவும் சொல்கிறோம் என்பது நேயர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஒன்றிரண்டு பேர் இவ்வளவும் யாரைப் பற்றியோ என்று திகைக்கவும் செய்யலாம். அவர்களுக்கு இன்னரைப் பற்றித்தான் சொல்கிறோம் என்று தெரிவித்தால் கடகட என்று சிரிப்பார்கள். சிரித்துக்கொண்டே நம்ம தமிழய்யா பாஸ்கரத் தொண்டைமானைப் பற்றியா சொல்கிறீர்கள். அவர்களை நன்றாகத் தெரியுமே எங்களுக்கு, என்று விளக்கம் கொடுப்பார்கள். அவர்கள் எங்கள் ஊரில் கம்பன் கழகம் நிறுவினார்கள். மூன்று நாள் நான்கு நாள் என்று விழாக் கொண்டாடினார்கள். எல்லோருக்கும் இலக்கிய தாகத்தை உண்டாக்கினார்கள். அவர்கள் எங்கள் ஊரைவிட்டு மாறுதலாகிப்போன பின்பும் கம்பன் கழகத்தை முறைப்படி நடத்திவருகிறோம்.

தமிழ் விழாவை ஐயா நடத்தின மாதிரியே நடத்தி வருகிறோம் என்று தெளிவுபடுத்துவார்கள்.

ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்பு தமிழகத்தில் தமிழ் மக்களிடம் தமிழ்ச் சுவையை ஊட்டுவது என்பது எளிதான செயல் இல்லை. இந்தக் கடினமான திருப்பணியை தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் உல்லாசமாகச் செய்து வந்தார்கள் திரு.தொண்டமான்.

கம்பர், முத்தொள்ளாயிரம், குற்றாலக்குறவஞ்சி, மாணிக்கவாசகர், ஆண்டாள், கலிங்கத்துப்பரணி, நந்திக்கலம்பகம், திருக்குறள் முதலிய நூல்களில் உள்ள அற்புதப்பாடல்களையும், அவற்றை ரசிகமணி டி.கே.சி அவர்கள் எப்படிச் சுவைத்துச் சுவைத்து அன்பர்களிடம் விளக்குவார்கள் என்பதையும் தொண்டைமான் ஒவ்வொரு கூட்டத்திலும் எடுத்துச் சொல்வார்கள்.

ரசிகமணியின் கலை ஞானத்தையும், பண்பாட்டையும், அருமையையும், எளிமையையும் தமிழகம் முழுவதும் முதல் முதல் எடுத்துச் சொல்லி விளக்கியவர்கள் தொண்டமான்தான்.

ஒரு ஊரில் இலக்கிய மன்றம் ஏற்படுத்தி விழா நடத்துகிறார்கள் என்று தமிழ்ப்பாடல்களின் அற்புதத்தை காட்ட மற்றொன்று டி.கே.சி.யின் தமிழ் பணியை ஞானவேள்வியை எடுத்து விளக்க.

இந்த இரண்டும் சமநிலையில் இருக்கும். ஒன்றை ஒன்று மிஞ்சாது.

புராணங்களிலும், இதிகாசங்களிலும் குருபக்தி சம்பந்தமாக வரும் கதைகள் பற்றி நம்மவர்கள் பலர் ஐயப்படுவார்கள். இப்படி இருக்க முடியுமா என்று ஐயப்படுவார்கள். ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியாரிடத்து திரு.தொண்டைமான் வைத்திருந்த குருபக்தியைப் பார்த்தவர்களுக்கோ அப்படி ஒரு ஐயப்பாடு வரவே வராது.

டி.கே.சியைப் பற்றி ''ரசிகமணி டி.கே.சி'' என்று ஐம்பது வருடங்களுக்கு முன்பு தொண்டமான் ஒரு புத்தகம் இயற்றினார்கள். முதல் முதல் டி.கே.சியைப் பற்றி வந்த புத்தகம் அதுதான். தொண்டைமானின் அந்த நூலுக்கு நிகரான

நயமான, தெளிவான நூல் ஒன்றை டி.கே.சி பற்றி இதுவரை யாராலும் எழுத முடியவில்லை.

ரசிகமணி டி.கே.சி பல அன்பர்களுக்கு இலக்கியம், கலை சம்பந்தமாகத் தொடர்ந்து கடிதங்கள் எழுதிவந்தார்கள். ஒவ்வொரு கடிதமும் வயிரம், வைடூர்யம் என்று சொல்லும்படி ஜொலிக்கும்.

பல அன்பர்களிடமிருந்து அந்தக் கடிதங்களை திரு.பாஸ்கரன் திரட்டினார்கள். பிறகு அக்கடிதங்களை ஒழுங்குமுறைப்படி வகுத்தும் தொகுத்தும் ஒரு சிறந்த இலக்கியமாக வெளிவர அச்சிட்டார்கள்.

ரசிகமணியின் கடிதங்களை முதல் முதல் புத்தகமாகத் தொகுத்து அச்சிட்டது திரு.தொண்டைமான்தான். தமிழில் கடித இலக்கியம் என்று ஒரு பிரிவைத் தொடங்கி வைத்த பெருமை திரு.தொண்டைமானையே சேரும்.

ஆனால் டி.கே.சி.யின் கடிதங்கள் அச்சாகி கட்டட அமைப்போடு (பைண்ட்பண்ணி) வெளிவரும் நேரத்தில் தடங்கல் ஏற்பட்டுவிட்டது. புத்தகம் வெளிவரவே இல்லை. காரணம் என்னவென்று பல அன்பர்களிடம் விசாரித்தேன். விடைகிடைக்கவே இல்லை. கடைசியில் ராஜாஜியுடன் நெருங்கி உறவாடும் நண்பர்களில் ஒருவர் சொன்னார். புத்தகத்தை வெளியிடக் கூடாதென்று கவர்னர் ஜெனரல் ராஜாஜி அன்பர்களுக்குக் கட்டளை இட்டுவிட்டார் என்று. எனக்கு அது ஆச்சர்யமாக இருந்தது. காரணம் என்னவென்று விசாரித்தேன். நண்பர் சொன்னார்.

ராஜாஜி முதல் பலருக்கும் எழுதிய கடிதங்கள் இதில் உள்ளன. ராஜாஜி முதலியவர்களுக்கும், டி.கே.சிக்கும் உள்ள இலக்கிய உறவு பற்றி திரு தொண்டைமான் முன்னுரையாக

அங்கங்கே குறிப்புக் கொடுத்துள்ளார். அது ராஜாஜிக்குப் பிடிக்கவில்லை என்றார் அன்பர்.

ஏன் என்றேன் நான்.

அன்பர் சொன்னார். இந்தியா முழுவதும் ராஜாஜியிடம் அடக்கம். ராஜாஜியோ டி.கே.சியிடம் அடக்கம். டி.கே.சியோ தொண்டைமானிடம் அடக்கம்!! இந்த முறையில் இருக்கிறது அந்த குறிப்புகள் என்று ராஜாஜி நினைக்கிறார் என்று!அப்படி ராஜாஜி நினைத்துத் தடுத்திருந்தால் அது அபத்தம். அபத்தத்திலும் அபத்தம். ஒரு இடத்தில் கூட தொண்டைமான் அப்படி ஒரு குறிப்பு கொடுக்கவில்லை நூலில்.

யாருக்கும் பிடிபடாத ஒரு சந்தேகம் ராஜாஜிக்கு வரும். இதற்கு அவருடைய அரசியல் வாழ்வு காரணமாக இருக்கலாம். ராஜாஜியே அடிக்கடி சொல்வார்.

''நான் யாரையும் எளிதில் நம்பமாட்டேன். சோதித்துச் சோதித்து பார்ப்பேன். சோதனையில் தேறியவரிடம் தான் பழகுவேன். அப்படி உஷாராக இருந்தும் என்னை ஏமாற்றி விடுவார்கள் பலர். டி.கே.சி. அப்படி இல்லை. எல்லோரையும் நம்புவார். வித்தியாசம் பார்க்க மாட்டார். சோதனை பண்ண மாட்டார். ஒவ்வொருவரிடமும் அன்போடு உறவாடுவார். ஆனால் யாரும் அவரை ஏமாற்றியதில்லை!! என்று!!

ராஜாஜியின் இந்த வேண்டாத சந்தேகந்தான் ஒரு அற்புதமான கடித இலக்கியத்தை வெளிவரவிடாமல் தடுத்துவிட்டது.

ஆனால் தொண்டமானோ இதுபற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை. விசாரித்தால் சிரித்துக் கொண்டே சொல்வார். ''போட்ட விதை எல்லாம் முளைக்கவா

செய்கின்றன? ஒன்றிரண்டு முளைக்காமல் போவதில்லையா? அப்படித்தான் டி.கே.சியின் கடித இலக்கிய நூல் பதிப்பும்'' என்பார்.

அரும்பாடுபட்டுச் சேகரித்து அச்சிட்ட நூல் ஒன்று வெளிவரும் நேரத்தில் அதை வெளிவரவிடாமல் முடக்கப்பட்டால் யாருக்கும் மனம் வேதனைப்படவே செய்யும். ஆனால் தொண்டைமானை அந்த ஏமாற்றம் பாதிக்கவே இல்லை.

காரணம் உண்மையான பக்திமான் திரு.தொண்டை மான். பக்தி என்றால் குருட்டு நம்பிக்கை இல்லை. அறியாமையோ இருட்டடிப்போ இல்லை. எல்லை இல்லா அழகையும் அன்பையும் பிணைத்து வைக்கும் கலைகளை அனுபவிக்கும் ஆனந்தமயமானது தொண்டைமானின் பக்தி. இது சம்பந்தமாக ஒரு விவரம்.

மகாத்மாகாந்தியிடம் அவருடைய நெருங்கிய நண்பர் ஒரு சமயம் ''பாபு, நீங்கள் உண்மையான பக்தர்;- சந்தேகமே இல்லை. ஆனால் இசை, நடனம் முதலிய கலைகளை நீங்கள் அனுபவிப்பதாகத் தெரியவில்லையே'' என்று கேட்டுவிட்டார்.

சாந்தமூர்த்தியாகிய காந்திமகானுக்கே இந்தக் கேள்வி எரிச்சலை உண்டாக்கிவிட்டது. நானா? கலைகளை அனுபவிக்க வில்லையா? ஒவ்வொரு இலை அசையும் போதும் தெய்வ கானத்தை உணர்ந்து அனுபவிக்கிறேன். ஆனந்த நடனத்தையும் பார்த்துப் பார்த்துப் பரவசப்படு கிறேன்.'' என்று கோபமாக சொல்லிவிட்டார் காந்தி. பிறகு தனக்குக் கோபம் வந்துவிட்டதே என்று வெட்கப்பட்டவராய் நண்பரின் தோளில் தம் கையைப் போட்டபடியே'' கலை உணர்வு இல்லை என்றால் பக்தி எப்படி இருக்கும்? சரி சரி இது

சம்பந்தமாக இன்னொரு நாள் விரிவாகப் பேசலாம்'' என்று சொன்னார் காந்திமகான்.

உடனே நண்பர் சொன்னார். இதற்குமேல் விரிவாகப் பேச என்ன இருக்கிறது. கலை உணர்வும் பக்தியும் வேறு வேறல்ல. ஒன்றுதான் என்று என் கண்களைத் திறந்து விட்டீர்களே! ஒளிகொடுத்துவிட்டீர்களே! அதற்கும் மேலே என்ன விளக்கம் வேண்டி இருக்கிறது'' என்று.

இதை மனதில் வைத்துக் கொண்டு தொண்டைமானைப் பார்க்கவேண்டும்.தமிழ் பாடல்களை எப்படி ஆனந்தமாக தொண்டமான் அனுபவிப்பாரோ - பக்தி பரவசத்தோடு அனுபவிப்பாரோ அப்படியே கோவில் தேர்த் திருவிழா, மூர்த்தி, வழிபாடு, ஓவியம், சிற்பம், இசை, நடனம், கல்வெட்டு வரலாறு ஒவ்வொன்றையும் பக்தியோடு பார்த்து ஆனந்தம் அடைவார்.

தமிழகத்தின் கோவில்கள் பற்றி வேங்கடம் முதல் குமரிவரை என்னும் தலைப்பில் பல தொகுதியாய் நூல் எழுதி வெளியிட்டுள்ளார்கள் திரு தொண்டைமான்.

திருக்கோவில்கள் பற்றிய தொண்டைமான் எழுதிய நூல்களுக்கு நிகரான நூல் இதற்கு முன்னும் தோன்றவில்லை. பின்னும் தோன்றவில்லை.

ஒவ்வொரு கோவிலைப் பற்றியும் தலபுராணம் என்று நூல்கள் உண்டு. கோயில், கோபுரம், பக்தர்கள், வழிபாடு, ஆனந்தம், மூர்த்தி, தீர்த்தம், திருவிழா எல்லாம் நம் கண் முன் இருக்கத்தானே செய்கின்றன. ஆனால், தல புராணங்களில் இவைபற்றி ஒன்றுமே இருக்காது. இந்திரலோகம், சந்திர லோகம், சாபம் விமோசனம் இப்படித்தான் இருக்கும் தலபுரா ணம். இதுமுன் கதை. பின்னால் வந்தவர்களோ, கலை அனு

பவமோ அதில் ஈடுபாடோ இல்லாமல் வெறும் வார்த்தை களைப் போட்டு நெய்வேத்யம் பண்ணினார்களே தவிர திருக் கோயில்களையே காட்டமாட்டோம் என்று சாதித்து விட்டார்கள்.

கோவில்கள் பற்றி எழுத அதிகாரி தொண்டைமான் ஒருவர்தான் என்பது நிலைத்துவிட்டது.

ஜஸ்டிஸ் மகாராஜன் சொல்லுவார், திருக்கோவில்கள் பற்றி எழுதுவதற்கென்றே அவதாரம் எடுத்தவர் திரு. பாஸ்கரத் தொண்டைமான் என்று. தீர்ப்பென்றால் அதுவல்லவா தீர்ப்பு.

கலை அனுபவம் இருந்தால் பக்தி இருக்கும். பக்தி இருந்தால் வேண்டியன எல்லாம் நிறைந்திருக்கும். தொண்டை மானிடம் கலை அனுபவம் பொங்கித்ததும்பியது. அவர்கள் தஞ்சாவூரில் உதவிக் கலெக்டராக இருந்தபொழுது கலைப் பொருட்களைச் சேகரித்து அரண்மனையில் கலைக்களஞ்சி யமாக நிறுவி உள்ளார்கள். ஒவ்வொரு ஓவியத்துக்கும் குறிப்பும் விளக்கமும் எழுதி இருகிறார்கள். அந்த ஓவியங்களையும், விளக்கங்களையும் பார்த்தால், அற்புதமான கவிகளைப் பார்ப்பதுபோல இருக்கும்.

இனி தொண்டைமான் மட்டுமல்ல, அவர் பரம் பரையே- தந்தையார், பாட்டனார் எல்லோருமே பக்தர்க ளாகவும் கவிஞர்களாகவும் தமிழறிஞர்களாகவும் விளங்கி இருக்கிறார்கள். முன்னோர்கள் இருக்கட்டும். இன்றும் நாம் காண தொண்டைமான் குடும்பத்தில் அவருடைய தம்பி, புதல்வியர், பேரன்மார், பேத்திமார் எல்லோருமே தமிழன்பர் களாகவும், எழுத்தாளர்களாகவும் பேச்சாளர்களாகவும் இருக்கிறார்கள்.

அப்படியொரு கலைப் பரம்பரை தொண்டைமான் பரம்பரை.

*தொண்டைமானின் நெருங்கிய உறவினர்களில் ஒருவர் ஸ்ரீரங்கம் பற்றி ஒரு விருத்தம்பாடி இருக்கிறார். தேவாதி தேவனாகிய (அண்டர் நாயகன்) ரங்கநாதர் கோவில் கொண்டு எழுந்தருளியிருப்பது காவிரிக்கரையில் உள்ள திருவரங்கத்தில். காவிரி ஆற்றின் மூலம் பல பண்டங்கள் வந்து இறங்குகின்றன. அது மட்டுமா அன்னை காவிரிவளமான வண்டல் மண்ணை இருகரைகளிலும் கொண்டு வந்து கொட்டியவணமாகவே இருக்கிறாள். அந்த வண்டலில் செழிப்பாக வளர்ந்த தென்னை மரங்களோ ரங்கநாதருக்கு குளிர் நிழல் தந்து களைப்பை போக்குகின்றன. அதனால், ஸ்ரீரங்கம் பெருமானுக்கு வைகுந்தமே ஆகி விட்டதாம்.*

**தான தன்ன**
**தன்னை தன்னை**

**"பண்டம் கொண்டு**
**பரந்திழி காவிரி**
**வண்டல் நின்று**
**வளர்ந்திடு தெங்கடர்ந்(து)**
**அண்டர் கோனுக்(கு)**
**அமர்நிழல் ஆக,வை**
**குண்டம் என்று**
**குலாவிட ரங்கமே!**

*(குலாவிடு அரங்கம் - வளமும் செழிப்பும் கைகோர்ந்து குலாவும் திருவரங்கம்)*

*இனி, வாழ்நாள் முழுவதும் குழந்தைபோல சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தார் திரு.தொண்டைமான். அரசுப் பணியிலும், நிர்வாகத் திறமையிலும் இளமையும், துடிப்பும் நேர்மையும் மிக்க இளைஞ (வாலிப)ராகவே இருந்தார். கலை*

அனுபவத்திலும் கவிகளை விளக்கும் முறையிலும் அவர் குழந்தையும் இல்லை. வாலிபரும் இல்லை. பழுத்த பழம்.

இனி, வாழ்க்கை என்றால் மேடும் இருக்கும். பள்ளமும் இருக்கும். மேடாக இருந்தாலும் சரி, பள்ளமாக இருந்தாலும் சரி எங்கெங்கு காலை எப்படி எப்படிப் பதனமாக வைத்து நடக்க வேண்டுமோ அப்படிப்பதனமாக வைத்து நடப்பார் தொண்டைமான். இது மேடே இதுபள்ளமே என்று திகைத்துப் பின்வாங்க மாட்டார் தொண்டைமான்.

அன்பர்கள் சேர்ந்து தொண்டைமானுக்கு அறுபதாம் ஆண்டுவிழா நெல்லையில் வைத்துக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள்.

தொண்டைமான் பற்றி அப்பொழுது அழகிய விழா மலர் ஒன்று வெளியிட்டார்கள்.

தொண்டைமான் பற்றி அன்பர்கள் கட்டுரைகள் சேகரித்தனர். தொண்டைமானும் தனக்கு வேண்டியவர்களிடம் கட்டுரை எழுதித்தர வேண்டினார்.

மதுரையில் ஒரு கனவான். அரசியல் செல்வாக்கு மிக்கவர். மிக்க வசதியானவர். ஒரு கலாத்தில் அவரே அமைச்சராக இருந்தவரும்கூட.

அந்தப் பெரியவரிடம் நேரில் கட்டுரை வேண்டி இருக்கிறார் தொண்டைமான். ஒருவாரத்தில் எழுதி அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டார் கனவான். இரண்டு வாரம் ஆகியும் கட்டுரை வரவில்லை.

தொண்டைமான் கூடவே அவர் உறவினர் ஒருவர் மெய்க்காப்பாளர்போல இருப்பார். அவரைத் தொண்டைமான்

மாமா என்று முறை சொல்லிக் கூப்பிடுவார்.

அவரை மதுரைக்கு அனுப்பி பிரமுகரிடமிருந்து கட்டுரை வாங்கி வரச் சொன்னார். அவரும் அப்படியே வந்தார். பிரமுகரோ இன்னும் எழுதவில்லை. அடுத்தவாரம் தருகிறேன் என்று சொல்லி வந்தவரிடம் செலவுக்கு வைத்துக் கொள் ளுங்கள் என்று பத்து ரூபாய் கொடுத்தார்.

இப்படி ஒரு தடவை இல்லை. பதினைந்து தடவைக்கு மேல். அடுத்தவாரம், அடுத்தவாரம் என்று ஏமாற்றினார் பிரமுகர். ஆனால், ஒவ்வொரு தடவையும் பத்துப்பத்து ரூபாய் செலவுக்குக் கொடுத்து விடுவார்.

கடைசியில் விழாவுக்கே ஐந்து நாள்தான் இருந்தது. பழியோ பழி என்று கட்டுரைக்காக வந்துவிட்டார் தொண்டைமானின் உறவினர். பார்த்தார் பிரமுகர். இனியும் காரணம் சொல்லி அனுப்ப முடியாது என்று பட்டுவிட்டது. தன் உதவியாளரைக் கூப்பிட்டார். தொண்டைமான் பற்றி பிறந்ததேதி, வளர்ந்த தேதி முதலிய குறிப்புகளைக் கொடுத்து இதை வைத்து விழா மலருக்கு ஒரு கட்டுரை எழுதி இந்த ஓல்டுமேனிடம் கொடுத்துவிடு. பத்துரூபாயும் கொடுத்துவிடு என்று சொல்லிவிட்டு அந்தப்புரம் போய்விட்டார், பிரமுகர்.

கட்டுரையை வாங்கி வந்து இரவு பகலாக அச்சடித்து வெளிவந்தது விழாமலர்.

இத்தனை தடவை அலைக்கழிக்கிறாரே மனுசன் என்று யாருக்கும் எரிச்சல் வரும். அவராவது அவர் கட்டுரையாவது என்று வீம்பே வந்துவிடும்.

ஆனால், தொண்டைமானுக்கு அவை ஒன்றுமே வரவில்லை. பிரமுகரை நினைத்து நினைத்து சிரிப்பார். ‘பிரமுகரிடம் கட்டுரை கேட்டதால் அது தாமதமானதால்

நமக்கொன்றும் நஷ்டமில்லை. ஆனால், லாபம் மாமாவுக்குத்தான். பதினைந்து தடவைக்கு மேல் பிரமுகர் கொடுத்த பணத்தை வைத்துக் கொண்டு மதுரையின் ஒவ்வொரு பகுதியையும் சுற்றிப்பார்த்து விட்டார்கள் மாமா' என்று சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்.

'நாட்டில் முக்காலே மூன்று வீதம் பேர் மதுரைப் பிரமுகர் போலத்தான் இருக்கிறார்கள், அதற்காக ஓடிப்போக முடியுமா? இருந்து சமாளிக்க வேண்டியதுதான்' என்று முத்தாய்ப்பு வைப்பார் தொண்டைமான்.

அரசுப் பணியாளர் ஒருவர் இப்படி ஒரு கலைஞனாகவும், பேச்சாளராகவும் இருப்பது அதிசயம் இல்லையா? எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்க்கையைச் சுவைத்துச் சுவைத்து அனுபவிக்கும் பரம ரசிகனாக சான்றோனாக இருப்பது அதிசயத்திலும் அதிசயம்.

அப்படி ஒரு அதிசயத்திலும் அதிசயமாக வாழ்ந்தவர் திரு. பாஷ்கரத் தொண்டைமான்.

(5) இனி ஒரு அதிசய புருஷர். அவர் அரசு அதிகாரியும் இல்லை. பண்ணையாரும் இல்லை. தொழிலதிபரும் இல்லை. உயர் நிலைப்பள்ளியிலோ கல்லூரியிலோ அது இது என்று பாடம் படித்த படிப்பாளியும் இல்லை.

நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி என்னும் நகரில் பஸ்நிலையத்துக்கு எதிரே சிறிய வெற்றிலை பாக்குக் கடை வைத்திருந்தார் அவர். அவருடைய பெயர் க.வ.கந்தசாமி செட்டியார் என்பது. ஆனால், அவரை எல்லோரும் அண்ணாச்சி, அண்ணாச்சி என்றுதான் கூப்பிடுவார்கள். அண்ணாச்சி என்றுதான் அவரைப் பற்றிப் பேசுவார்கள். இதில் ஒரு வியப்பு என்னவென்றால் கந்தசாமி செட்டியாரை விட

பத்து வயது இருபது வயது கூடினவர்கள் கூட அவரை அண்ணாச்சி என்றுதான் சொல்வார்கள்.

அண்ணாச்சிக்கு உடை என்பது நான்கு முழக் கதர்வேட்டியும், மூன்று முழக் கதர் துண்டுந்தான். சட்டை போடுவதில்லை. துண்டுகூட வெளியில் எங்கங்காவது போய் வருகிறநேரந்தான்.

வெற்றிலை பாக்குக் கடை வியாபாரத்தில் கிடைக்கிற தொகைதான் அண்ணாச்சிக்கு வருமானம். மற்றப்படி தம்பிடி கூட வருமானத்துக்கு வழியில்லை.

ஆனாலும், அந்தக் குறைந்த வருமானத்தில் குடும்பத்தை கஷ்டமில்லாமல் நடத்தி வந்தார்கள். கவலையே இல்லாமல் எப்பொழுதும் கலகலப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தார் கள்.

அண்ணாச்சி ஒரு உண்மையான காந்தி பக்தர். இலக்கிய அன்பர். ஆனால், அவர்கள் இலக்கியங்களையோ காந்தி சம்பத்தமான புத்தகங்களையோ படித்ததும் இல்லை. மேடை ஏறி அவைபற்றிய பிரசங்கம் பண்ணுவதும் இல்லை. கட்டுரைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு விடுவதும் இல்லை.

ஆனால், உயர்ந்த விஷயத்தையோ, பாடலையோ, பண்பாடு பற்றிய உண்மையையோ ஒருவர் எடுத்துச் சொன்னால், அப்படியே உள்ளம் உருகிக் கேட்டு அனுபவிப்பார்கள். பேசுகிறவர் பேச்சில் சாரம் இல்லை. சக்கைதான் அதிகம் என்றால் அந்த வார்த்தைகள் அண்ணாச்சியின் செவிகளிலேயே ஏறா.

அண்ணாச்சியைச் சுற்றி எப்பொழுதும் ஒரு சிறு கூட்டம் இருக்கும். இலக்கிய அன்பர்கள், இசை அன்பர்கள்,

எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், ஆசிரியப் பெருமக்கள், காங்கிரஸ் தொண்டர்கள், தலைவர்கள் என்று எப்பொழுதும் அந்தக்கூட்டம் அண்ணாச்சியைச் சுற்றிவரும்.

அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களை அண்ணாச்சியிடம் உடனுக்குடன் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லாமல் விட்டுப்போனால் அன்றைக்கு அவர்களுக்குத் தூக்கம் வராது.

பிரபல எழுத்தாளர்கள் கு.அழகிரிசாமி, கி.ராஜநாராய ணன், வில்லிசை வேந்தர் ச.பிச்சைக்குட்டி, இசை மேதை விளாத்திகுளம் நல்லப்பசுவாமிகள் எல்லோருமே அண்ணாச்சி அண்ணாச்சி என்று சுற்றிச்சுற்றி வருவார்கள்.

அண்ணாச்சி புத்தகங்களைப் படிக்கமாட்டார்களே தவிர, பல துறைகளிலும் உயர்ந்த நூல்கள் வெளிவர வெளிவர விலைக்குவாங்குவார்கள். வாங்கிய நூல்களில் சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம் முதலிய இலக்கிய நூல்களை, இலக்கிய அன்பர்களிடம் கொடுப்பார்கள். இசை சம்பந்தமான நூல் என் றால் இசைவாணர்களுக்கு. வைத்திய சம்பந்தமான புத்தகம் என்றால் வைத்தியருக்கு, காந்தீய நூல் என்றால் காங்கிரஸ்கார ருக்கு, இப்படி முறை வைத்து அன்புடன் கொடுப்பார்கள்.

அண்ணாச்சி தினமணி பேப்பர்தான் படிப்பார்கள். எந்தத் துறை பற்றி அதில் முக்கியமான கட்டுரைகள், விபரங்கள் வந்தாலும் சரி, அதை வெட்டிப் பத்திரமாக வைத்திருப்பார்கள். அந்தந்தத்துறை நண்பர்களைப் பார்த்தவுடன் அதை எடுத்து அவர்களிடம் கொடுப்பார்கள்.

அண்ணாச்சியிடம் பணமும் இல்லை. சொத்தும் இல்லை. அதேபோல பணத்தின் மேலோ சொத்தின் மேலோ ஆசையும் அவர்களிடம் இல்லை.

காங்கிரஸ் கட்சியில் மாநில அளவில் பெரும் பொறுப்பும் அதிகாரமும் நிறைந்த தலைவர் ஒருவர். அவர் அண்ணாச்சியிடம் மிக்க அன்பும் பரிவும் உடையவர். அவர் அண்ணாச்சியிடம் ''நீ ஒரு விண்ணப்பம் எழுதிக் கொடு, தியாகிகளுக்குக் கொடுக்கிற பத்து ஏக்கர் நிலத்தை உனக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்'' என்றார். நான் ஜெயிலுக்குப் போய் தியாகம் செய்யவில்லையே எனக்கு எப்படி கொடுப்பார்கள் என்றார் அண்ணாச்சி.

அந்தக் கவலை உனக்கு எதுக்கு? ஜெயிலுக்குப் போனால்தான் தியாகமா? ஜெயிலுக்குப் போனவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்ததும், காங்கிரசுக்கும், தொண்டர்களுக்கும் உதவியதும் தியாகம் இல்லையா? விண்ணப்பத்தை மட்டும் எழுதிக் கொடு மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார் அந்தப் பிரமுகர்.

அண்ணாச்சியோ அது என்னால் முடியவே முடியாது என்று சாதித்துவிட்டார்கள்.

இதைவிட அதிசயம், இந்த கலிகாலத்தில் வேறு என்னவேண்டிக் கிடக்கிறது.

இனி, இன்னொரு அதிசயம். கோவில்பட்டியில் ஒருநாள் புயலும் மழையும் மிகமிக அதிகம். சாலைகளில் எல்லாம் வெள்ளக்காடு. அண்ணாச்சியின் கடை முன் ஒரு மின்சாரக் கம்பி அறுந்து விழுந்துவிட்டது. அதில் ஒருவர் தெரியாமல் கால் வைத்துவிட்டார். மின்சாரம் தாக்கி உயிருக்குப் போராடினார் அவர்.

அவரைக் காப்பாற்ற அண்ணாச்சி பாய்ந்து ஓடினார்கள். நண்பர்கள் தடுத்தார்கள். வேறொரு முரட்டு ஆள் அண்ணாச்சியின் கையைப் பிடித்தபடியே உனக்கென்ன கிறுக்கா? மின்சாரம் விழுந்து கிடக்கு. காப்பாற்றப் போறேன் என்கிறாயா?

அதில் காலை வைத்தால் உனக்கும் கைலாசந்தான்'' என்று தடுத்தார்.

அண்ணாச்சியோ 'மிக சினத்துடன் மின்சாரக் கம்பி அறுந்து விழுந்து கரண்ட் தண்ணீரில் பரவி இருப்பதுதான் தெரிகிறதே. அதுக்காக ஒருத்தர் உயிருக்குத் துடிக்கும்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? என்று சொல்லி அவர் பிடியை ஒரு உதறு உதறி ஓடிப்போய் அந்த நபரை எடுக்க அவர் மேல் கை வைத்தார்கள்.

என்ன பரிதாபம் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பிடித்தபடியே உயிர்நீத்தார்கள்.

உண்மையான காந்தி பக்தர் அண்ணாச்சி. இலக்கிய அன்பர் அண்ணாச்சி. அவர்கள் வீர மரணம் இந்த உண்மையைக் கையில் எடுத்துக் காட்டுகிறது.

(6) அண்ணாச்சி கந்தசாமி செட்டியாரிடமாவது உடமை என்ற பெயரில் ஒரு வெற்றிலை பாக்குக் கடையாவது இருந்தது. இனிச் சொல்லப் போகிற அற்புத மனிதனிடம் அந்த அளவு உடைமை கூட இல்லை.

மனைவி இல்லை. மக்களில்லை. நன்செய் இல்லை. புன்செய் இல்லை. தொழில் இல்லை. உத்யோகம் இல்லை. வெற்றுக்கட்டை என்பார்களே. அப்படி ஒரு தன்னலப் பற்றே இல்லாத சுத்தமான பரிசுத்தமான ஆத்மா அந்த உத்தமர்.

மக்களும் மக்களுடைய வாழ்க்கையுந்தான் அவருக்குச் சொத்து. நாடுவிடுதலை பெறவேண்டும். உடனே மக்களிட மிருந்து மக்கள் விடுதலை பெறவேண்டும். அவர்களுடைய வாழ்க்கையில் ஒளி பிறக்கவேண்டும். எல்லோரும் மகிழ்ச்சி யாகவும், பயமில்லாமலும் சுதந்திரமாக வும் வாழவேண்டும் என்கிற நினைவுதான் அவருடைய ஒரே சொத்து.

நினைவு என்றால் ஏதோ பொழுது போவதற்காக நினைக்கிற கற்பனை நினைப்பல்ல. செயலோடு கூடிய நினைப்பு. அதுஒன்றையே குறியாக வைத்து அதை வசப்படுத்தவே வாழும் வாழ்க்கை.

இப்படிச் செயலோடு கூடிய நினைப்புக்கத்தான் தவம் என்று பெயர். உண்மையான யோக சாதனம் என்றால் அதுதான்.

மக்கள் நலனே குறிஎன்று எண்ணிச் செயல்பட்ட கர்ம வீரன், தியாகச் செம்மல், நிர்வாகத் திறமைமிக்க அப்பழுக்கற்ற அரசியல் தலைவர் யார் என்பது நேயர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். நன்றாகத் தெரிந்திருந்தாலும் நேயர்களிடம் அவர் பெயர் இன்னது என்று சொல்ல வேண்டியது நமது கடமை.

பெருந்தலைவர் காமராஜ் என்பதுதான் அவருடைய பெயர்.

காமராஜ் என்றால் மகாத்மா காந்தியின் கொள்கை என்று பொருள்.

மக்களும், மக்களின் விடுதலையுமே மகாத்மாவின் கொள்கை. மக்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காகத்தான் நாடு விடுதலை பெறவேண்டும் என்று வற்புறுத்தினார் காந்தி மகான். மக்களை மக்களாக உருவாக்க எடுத்துக் கொண்ட குறிக்கோளுக்கு சத்தியமும், அகிம்சையும் சாதனமாக அமைந்தன காந்திஜிக்கு.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் முதல் தலைவர்கள் வரை எல்லோருமே காந்திஜியின் கொள்கையை நன்கு படித்தவர்கள்தாம். அதன் குணநலன்களை ஆராய்ச்சி பண்ணினவர்கள்தாம். அவைபற்றி சொற்பொழிவாற்றவும், நூல் எழுதவும் வல்லர்கள்தாம். இனி காமராஜோ அப்படி

யெல்லாம் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், காந்திஜியின் கொள்கையையே கடைப்பிடித்தார். வாழ்க்கையாகவே கடைப்பிடித்து ஒழுகினார்.

மகாத்மா காந்தியின் கொள்கையின் அவதாரமாகவே திகழ்ந்தார் பெருந்தலைவர் காமராஜ்.

அவர் தமிழ்நாடு முதல்மந்திரியாக இருந்தபொழுது நடந்த ஒவ்வொரு சம்பவமும் மேலே சொல்லிய உண்மைக்கு விளக்கம் தரும். ஆனால், அத்தனை சம்பவங்களையும் இங்கு எடுத்துச் சொல்லமுடியாது. அதனால், ஒருசில சம்பவங்களை மட்டும் பார்ப்போம்.

தமிழக முதலமைச்சராகப் பெருந்தலைவர் இருந்த பொழுது பொதுத் தேர்தல் நடந்தது. சாத்தூர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டார் காமராஜர். காங்கிரஸ் தொண்டர்கள் பலர் கட்டுப்பாடு மிக்கவர்களாய் சுறுசுறுப்போடு பணிபுரிந்தனர். அத்தனை பேருக்கும் தலைவர் திருவாளர் (சாத்தூர்) சுப்பிரமண்ய பிள்ளை.

பிள்ளை அவர்களுக்கும் காமராஜருக்கும் இளைமை முதல் தொடர்ந்து வளர்ந்த நட்பு. அத்துடன் இளமைப் பருவத்திலிருந்தே தொடர்ந்து விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டுவந்தனர் இருவரும்.

தேர்தல் பணியைப் பார்த்துவர காமராஜர் தொகுதிச் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டார். அன்று சுப்ரமண்ய பிள்ளை வீட்டில் இரவுச் சாப்பாடு காமராஜருக்கு என்று ஏற்பாடு.

தொண்டர்கள் கூட்டம் எப்பொழுதும் சுப்பிரமண்ய பிள்ளை வீட்டில் இருக்கும். அன்று மாலை நான்கு மணிக்கு

காமராஜும், சுப்பிரமண்ய பிள்ளையும் இரண்டு கிராமங்களுக்குப் போய் வாக்குச் சேகரிக்கத் திட்டமிட்டிருந்தனர். அதற்கு அன்று மாலை நான்கு மணிக்கு சுப்பிரமண்ய பிள்ளை வீட்டுக்கும் காமராஜ் வந்தார். தொண்டர்களை உற்சாகப்படுத்தினார். தொண்டர்களுக்கு மத்தியில் ஒரு வேற்றாள். அந்த ஆளைப் பார்த்ததும் காமராஜருக்குப் பகீரென்றது. மின்சாரத்தில் கைவைத்தால் எப்படி இருக்கும் அப்படி அதிர்ந்தார், காரணம் அந்த ஆசாமி மதுரை மாவட்ட நீதிபதி.

நீதிபதி வந்து காமராஜருக்கு வணக்கம் தெரிவித்தார். பல்லைக் காட்டினார். அந்தப்பகுதியில் எனக்கு அவரைத் தெரியும். இவரைத் தெரியும் என்று கூறினார். ஒன்றையும் கண்டு கொள்ளவில்லை காமராஜ்.

சுப்பிரமண்ய பிள்ளையுடன் காரில் அமர்ந்து பக்கத்து சிற்றூர்களுக்குப் போகும்போது ''அந்த நீதிபதி இங்கு ஏன் வந்தார்'' என்று சுப்பிரமண்ய பிள்ளையிடம் கேட்டார் காமராஜ்.

''எல்லாம் தேர்தல் பணிக்காகத்தான். அந்த நீதிபதிக்கு இந்த வட்டாரத்தில் நல்ல செல்வாக்கு. பல பிரமுகர்களிடம் அவர் சொன்னால்போதும்'' என்றார் பிள்ளைவாள்.

காமராஜருக்கு முகம் சிவந்துவிட்டது. ''நீதிபதியே அரசியல்வாதியாய் தேர்தல் பணிக்கு வந்து உழைத்தால் நாடு உருப்படுமாய்யா? இன்று இரவே அந்த ஆசாமி மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு ஊர்போய்விடவேண்டும். அவருக்குரிய (நீதிமன்றம்) பணியை அவர் பார்க்கக்கூடும். நமக்குரிய பணியை நாம் பார்த்துக் கொள்ளலாம்.

''இதை நீங்கள் செய்த பின்தான் உங்கள் வீட்டுக்குச் சாப்பிட வருவேன். அதற்கு மேலும் அந்த ஆசாமி நகரவில்லை

என்றால், உயர்நீதிமன்றத்துக்கு அவரைப் பற்றித் தெரிவிப்பேன்'' என்று சொல்லிவிட்டார்.

பக்கத்து ஊர்களில் தேர்தல் பணியை முடித்துவிட்டு இரவு 8.30க்கு திரும்பினார். சுப்பிரமண்ய பிள்ளையை அவர் வீட்டில் இறக்கிவிட்டு ஜாகைக்கு புறப்பட்டார் காமராஜ்.

''சாப்பாடு என்று இழுத்தார் பிள்ளைவாள்! முதல்ல அந்த ஆளை இந்த இடத்தை விட்டுப் போக வையுங்கள். அவர் போன தகவல் கிடைத்தவுடன் சாப்பிட வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார் காமராஜ்.

நீதிபதியை அங்கிருந்து கிளம்பிவிடும்படி பக்குவமாகச் சொல்லி காரியத்தை முடித்துவிட்டார் சுப்பிரமண்ய பிள்ளை. அது தெரிந்தபிறகே - இரவு பத்து மணிக்கு மேலேதான் சாப்பாட்டுக்கு வந்தார் காமராஜ்.

காமராஜருக்குப் பின் எத்தனை முதலமைச்சர்கள் தமிழகத்தில் வந்திருக்கிறார்கள். ஒருவராவது காமராஜ் போல் இப்படி நேர்மையாக நடந்து கொண்டதுண்டா?

காமராஜரைப் படிக்காத மேதை என்று சிலர் சொல்வார்கள். அப்படிச் சொல்வது கெட்டிகாரத்தனம். பிறவி ஞானி காமராஜ் என்பதுதான் உண்மை. அதுதான் நேர்மை.

இனி, காமராஜர் முதல்வராக இருந்தபொழுது தமிழகத்தில் தொழில்கள் பல தொடங்கப்பட்டன. ஒரு தொழிற்சாலை நிறுவத்திட்டமிட்டு அதற்குரிய இயந்திரங்களை ஜப்பான் நாட்டில் வாங்கிவர நிபுணர் குழு ஒன்றை அனுப்பிவைத்தார் காமராஜ்.

ஜப்பான் சென்ற நிபுணர் குழு இயந்திரங்களைத் தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனத்தோடு பேசினர்.

நிறுவனக்காரர்களோ இயந்திரங்களுக்கு விலை இவ்வளவு. அதில் உங்களுக்கு கமிஷன் இவ்வளவு என்றனர்.

கமிஷன் எங்களுக்கு வேண்டாம். அதற்குப்பதில் விலையைக் குறைத்து இயந்திரங்களை வழங்குங்கள் என்றனர் நிபுணர் குழுவினர்.

அது எங்கள் பழக்கமில்லை என்று சொல்லிவிட்டனர் ஜப்பானியர்.

தொலைபேசி மூலம் முதல்வர் காமராஜுக்கு விபரம் தெரிவித்தனர். உடனே காமராஜர் 'கமிஷன்' கொடுக்கிறேன் என்று சொன்னால் சரி என்று சம்மதிக்க வேண்டியதுதானய்யா? என்றார். நிபுணர் குழு திகைத்தது. பிறகு அந்தத் தொகையை என்ன செய்ய என்று கேட்டது.

என்ன செய்யவா? அதற்கு இரண்டு மிஷனை வாங்கிக் கொண்டுவர வேணடியதுதானே என்றார் முதல்வர்.

நமக்குத் தேவையான இயந்திரங்கள் போகக் கூடுதலாக உள்ளவற்றை என்ன செய்ய என்றது தூதுக்குழு.

கூடுதல் இயந்திரங்களையும் சேர்த்து தொழில்சாலையில் ஓட்டவேண்டியதுதானே. அதிகமாக ஐம்பது, நூறு பேருக்கு வேலை கிடைத்தால் நல்லதுதானே என்று விளக்கம் கொடுத்தார் காமராஜ்.

அதன்பிறகுதான் தூதுக்குழுவுக்கு கண் திறந்தது. பார்வை கிடைத்தது. காமராஜர் சொன்னபடியே செய்தது தூதுக்குழு.

இனி மற்றொரு சமயம் முதலமைச்சர் காமராஜர் தமது தலைமைச் செயலகப் பணிகளை முடித்துவிட்டு வீட்டுக்குப்

போகக் கீழ்த்தளம் வருகிறார். லிப்ட் இயக்குகிறபையன் அன்று மிகவும் சோர்ந்து கலங்கி இருந்தான்.

என்னவென்று விசாரித்தார் காமராஜ். நாளையிலிருந்து என்னை வேலைக்கு வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் என்றான் பையன்.

என்ன தப்பு பண்ணினாய் என்றார் முதல்வர். ஒரு தவறும் செய்யவில்லை என்றான் பையன்.

பிறகு ஏன் உன்னை நீக்குகிறார்கள் என்றார் முதல்வர். நான் ஒன்பது வரை படித்திருக்கிறேன். பத்து படிக்கவில்லையாம் என்றான், பையன்.

அப்படியா என்று கேட்டபடியே கீழ்த்தளம் வந்த காமராஜர் பழையபடி மேல்தளம் வந்தார். அலுவலக அறைக்குள் நுழைந்தார். உதவியாளரைக் கூப்பிட்டு இந்த லிப்ட் துறையை நிர்வகிக்கும் அதிகாரியை வரச்சொல் என்றார். தலைமைச் செயலகம் பரபரப்பாகியது.

லிப்ட் துறை அதிகாரி வந்தார். என்னய்யா! இந்தப் பையனை வேலையை விட்டுப் போகச் சொல்லி விட்டீர்களாமே! என்ன தப்புப் பண்ணினான்? என்று விசாரித்தார் முதல்வர்.

'தப்பு ஒன்றும் செய்யவில்லை. புதிதாகப் போட்ட ஜி.ஓ. படி பத்தாம்வகுப்பு படித்திருக்கவேண்டும்' என்றார் அதிகாரி.

உடனே முதல்வர் காமராஜர், 'என்னைய்யா இது அநியாயமாக இருக்கிறது. நாலாம் வகுப்பு படித்தநான் முதலமைச்சராக இருக்கலாம். லிப்டை இயக்க பத்தாம் வகுப்புக்குக் குறையக்கூடாதோ? அந்த ஜி.ஓ.வை மாத்துங்கையா என்று சொல்லிவிட்டார்.

அப்படியே நடந்தது.

இனி, என் சம்பந்தப்பட்ட ஒரு அனுபவம்.

எனக்கும் காமராஜருக்கும் பழக்கம் ஒன்றும் இல்லை. இரண்டு தடவை ரசிகமணி, டி.கே.சி. வீட்டில் காமராஜரைப் பார்த்திருக்கிறேன். ஒரு தடவை அவர் பேசிய பொது நிகழ்ச்சி ஒன்றில் நானும் பேசி இருக்கிறேன் அவ்வளவுதான்.

ஆனாலும், தென்காசி திருவள்ளுவர் கழக ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பிக்க வேண்டும் என்று 1955-56ல் அவரை அழைக்கப் போனேன்.

நான் போன நேரம் பிற்பகல் 1 மணி. கொடிய வெயில். காமராஜ் வீட்டில் போலீஸ் கெடுபிடியில்லை. சோதனை இல்லை. மளமளவென்று உள்ளே போனேன். வீட்டினுள் இரண்டு கட்டுகள் கடந்து போனபிறகும் ஆள் அரவம் இல்லை. ஒரு செருமு செருமினேன் நான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த முதல்வர் அதுயாரப்பா? பார் என்று சமையல்காரரிடம் சொன்னார். அவர் வந்து விசாரித்தார். தென்காசி, சண்முகசுந்தரம் என்று விபரம் சொல்லிவிட்டேன்.

பதினைந்து நிமிடம் கழிந்தன. சாப்பாடு முடிந்து ஒய்யாரமாக வந்தார் பெருந்தலைவர். வணக்கம் என்றேன். அடையாளம் தெரியவில்லை அவருக்கு.

டி.கே.சியை ஞாபகப்படுத்தினேன். ‘அடடே,புலவரா, வாங்க, வாங்க!! என்ன இப்படி வெயிலோட’ என்று சொல்லி விட்டு உட்காரச் சொன்னார். பழைய பிரம்பு நாற்காலி ஒன்றுஅதில் உட்கார்ந்தேன். அவரும் அதேபோன்ற நாற்காலியில் அமர்ந்தார்.

விபரம் சொல்லப் பேச்செடுத்தேன். பொறுங்கள் என்று கைச்சாடை காட்டினார். சமையல்காரரைக் கூப்பிட்டார். இவர் பெரிய வித்வானப்பா! தென்காசியிலிருந்து வந்திருக்கிறார். ஒரு செம்புல மோர் கொண்டுவா என்றார். அப்படியே மோர் வந்தது.

மறுபடியும் விபரம் சொல்ல ஆரம்பித்தேன். உடனே முதல்வர் 'நான் என்ன ஓடியாபோறேன், முதல்ல மோரைக்குடிங்கள். பிறகு சொல்லுங்கள் என்றார்.

அந்த வேளையில் மோர் அமிர்தமாகவே இருந்தது..

அதன்பின் சொன்னேன். உடனே கடகடவென்று சிரித்தார். என்னய்யா! கிண்டலா பண்ணுகிறீர்கள். குறளைப் பற்றி எனக்கென்னய்யா தெரியும். உங்க மாதிரி வித்வான்கள் பேசணும். எங்க மாதிரி ஆட்கள் கேட்கணும். நான் குறள் பற்றிப் பேச நீங்கள் கேட்கவாக்கும்' என்று சிரிப்போடு சிரிப்பாய்ச் சொன்னார். இப்படி ஒரு முதல்வரை இனிபார்க்க முடியுமா? அவர் முதல்வர், தலைவர் என்பது மட்டும் இல்லை. மனிதர் - மாமனிதர்.

# 3

# சமுதாயப் பண்பு - மக்கள் பாட்டு

**பா**ட்டு என்றால் நிச்சயம் அதில் ஒரு மந்திர சக்தி இருக்கும். யாராக இருந்தாலும் தன்வயப்படுத்திவிடும் பாட்டு.

உலகில் உள்ள எல்லா இனத்தார்களும் பாட்டென்றால் மனதை அதனிடம் பறிகொடுத்துவிடுகிறார்கள். அன்று தொட்டு இன்று வரை அந்த மந்திரசக்தி பாட்டை விட்டு விலகவே இல்லை.

இனி தமிழ் மக்களின் நிலையோ தனி. பாட்டுத்தான் தமிழர்களுக்கு உயிர். தங்களுடைய உணர்ச்சிகளும் அனுபவங்களும் இசையோடு சேர்ந்து குழைவோடும் நெளிவோடும் அபிநயம் பிடிப்பதை பாட்டின் மூலம் நேருக்கு நேராகப் பார்க்கிறார்கள் தமிழ் மக்கள்.

அப்படிப் பார்ப்பதற்கு வசதியான முறையில் இடம் பண்ணிக் கொடுக்கிறது தமிழ்ப்பாட்டின் அமைப்பு - அதாவது தமிழ்ப் பண்பு. எதுகை, மோனை, அசை, சீர், அடி, தொடை முதலிய அங்கங்கள் ஒவ்வொன்றும் இசையின் உயிராகவும் அபிநயத்தின் உருவமாகவும் தமிழோடு தமிழாய்க் காட்சி கொடுக்கின்றன பாட்டில்.

இப்படி ஒருமுறை - செய்யுள் நெறி நமக்குத் தெரிய இதர மொழிகளில் இல்லை. அதனால் தமிழ்ப்பாட்டு ஆடு, மாடு, பாம்பு, யானை, குழந்தை, பயிர் பச்சை முதலியவற்றை

மட்டுமல்ல இறைவனையே தன்வசப்படுத்தி சொன்ன சொன்னபடி எல்லாம் ஆடவைக்கிறது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசி எல்லையில் கூட நாடகம் என்றால் திரைப்படம் என்றால் அதன் உயிர் பாடலாகத்தானே இருக்கிறது தமிழில். பாட்டு இல்லை என்றால் எடுபடமாட்டேன் என்கிறதே கூத்து?

வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, தாழிசை என்றெல்லாம் தமிழில் பாடல்கள் வகைவகையாக இருக்கின்றன. இந்த வகைகள் எல்லாம் 'திடுதிப்' என்று உண்டாகிவிடவில்லை. உணர்ச்சி பாவமானது இசையோடு உருண்டும் புரண்டும் நாடகப் பாங்கில் நிமிர்ந்தும் படிப் படியாக வளர்ந்து வந்துள்ளன.

உணர்ச்சியானது செய்யுளாக எடுத்து வைத்த முதல் (எட்டு) அடிதான் நாட்டுப்புறப் பாடல். நாட்டுப்புற பாடலை நாடோடிப் பாடல் என்று கொஞ்சம் இளக்காரமாகவும் சொல்வார்கள். நாட்டுப் பாடல் என்று சுருக்கியும் சொல்வார்கள்.

தமிழில் மட்டுமல்ல எல்லா மொழிகளிலும் நாடோடிப் பாடல்கள் உண்டு. எந்த மொழியானாலும் அந்த மொழியின் முதல் (ஆதி) கவிதை நாடோடிப் பாடல்தான். மற்றைய மொழிகளில் எப்படியோ நமக்குத் தெரியாது. தெரிந்தாலும் விளங்காது. ஆனால் தமிழில் துல்லியமாக விளங்குவது ஒன்றுண்டு. அது என்னவென்றால் இன்று வரை வளர்ந்து வந்துள்ள கவிப்பண்புகள், அம்சங்கள் இவற்றை நாடோடிப் பாடல்களில் பார்க்கலாம்.

பூர்வமான கவிமரபுகளை மட்டுமல்ல பூர்வமான இசைப் பண்புகளையும் நாட்டுப்புறப் பாடல்களில்

பார்க்கலாம். தோடி, சக்கரவாகம், வராளி, ஆனந்த பைரவி, நாத நாமக்கிரியை முதலிய ராகங்களை அப்படியே பார்க்க முடியாவிட்டாலும் இந்த ராகங்களுக்குரிய பண்களின் பூர்வமான சாயல்கள் நாடோடிப் பாடல்களில் பொங்கி வழிகிறதை நிச்சயம் பார்க்க முடியும்.

அப்படியே நாடக இயலின் உத்திகளை அவற்றின் எடுப்பு, மடக்கு, நொடிப்பு, சொடுக்கு எல்லாவற்றையும் நாடோடிப் பாடல்களில் பார்க்கலாம்.

இப்படியாக தமிழை - முத்தமிழை ஒவ்வொரு நாடோடிப் பாடலும் தன்னுள் பொதிந்து வைத்துள்ளன. ஆனால் ஒன்று! நாடோடிப் பாடல்களில் உள்ள நயமும் வேகமும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இது ஆதிகாலம் முதல் இன்றளவும் உள்ள நிலை. அதனால் நாடோடிப் பாடல்களில் போலிப் பாடல்கள் அதிகம். உண்மையான நாடோடிப் பாடல்கள் போலவே ஒப்பாரி என்றும் தாலாட்டு என்றும் களை பறிப்பு, நாற்று நடுகை, ஏற்றம் இறைப்பு, காதல், தவிப்பு என்றெல்லாம் தலைப்பிட்டு யார் யாரோ பாடிய வசன கவிதைகளை நாடோடிப் பாடல்கள் என்று பலர் அரங்கேற்றுகிறார்கள்.

காரணம் நாடோடிப் பாடல்களுக்கு இப்பொழுது நல்ல கிராக்கி. இந்த நேரத்தில் அடித்தால்தான் அடித்தபடி என்று நாடோடிப் பாடல்களில் கள்ள மார்க்கெட் வியாபாரம் நடக்கிறது.

இது முதல் வகையான போலி. இரண்டாவது வகைப் போலி விசித்திரமானது. பாட்டுக்குரிய விஷயம் இருந்தது. உணர்ச்சியும் இருந்தது. நாட்டுப் பாடலுக்குரிய சந்தமும் தாளத் தோடு மெட்டும் வாய்த்தது. ஆனாலும் களை கட்டவில்லை. அவசரப்பட்டுப் பாடிய பாடலாப் போய் விட்டது.

உணர்ச்சி இருந்தால் மட்டும் போதாது. அது நன்றாக விளைந்து பழுக்கவேண்டும். தேன் சொட்டும் அளவுக்குக் கனிந்து பழுக்கவேண்டும். அப்பொழுதுதான் தமிழோடும் இசையோடும் மருவிக் கலக்கும் போது ஒரு உருவம் கிடைக்கும். அப்படி ஒரு பக்குவம் வாய்க்கவில்லை என்றால் அரைவேக்காடு கால் வேக்காடுதான்.

பார்ப்பதற்கு நாட்டுப்புறப்பாடல் மாதிரி தோன்றும். பாடிப் பார்த்தால் ஒத்துவராது. விஷயம் ஒரு பக்கம் உணர்ச்சி ஒரு பக்கம் என்று பிய்த்துக் கொண்டு ஓடும். தாளமும் ஓசையும் வெறும் கூப்பாடாய்ப் போய்விடும்.

இப்படி அவசரப்பட்டு வந்த குறைப்பிரசவமான நாட்டுப் பாடல்களும் உண்டு. இதுவும் உண்மையான நாட்டுப் பாடல்களுக்கு ஒரு வகையில் போலியேதான்.

இனி நன்றாக முற்றி விளைந்த நாட்டுப்புறப் பாடல் என்றால் அதில் உணர்ச்சியானது சுடர்விட்டுப் பிரகாசிக்கும் ஏக்கம், பரிவு, உல்லாசம், கோபம், தவிப்பு, ஊடல், கூடல் முதலிய ஒவ்வொரு அம்சமும் கணகணவென்று பேசும்.

வெண்பா, விருத்தம் முதலிய பண்பட்ட நயமான பாடல்கள் எப்படிப் பாடலோடு பாடலாக நம்மைச் சமரசப் படுத்தி ஒரு முகம் ஆக்குகிறதோ அப்படியே உண்மையான நாட்டுப்பாடல் ஒவ்வொன்றும் நம்மைத் தன்வயம் ஆக்கிவிடும்.

ஒவ்வொரு நாட்டுப் பாடலிலும் மண்வாசனையும், பயிர்வாசனையும் மட்டுமல்ல, தமிழ் வாசனையையும் பூரணமாக அனுபவிக்கலாம்.

கட்டி வயிரமாகவும், ஜாதி முததுக்களாகவும் முற்றி விளைந்த நாட்டுப் பாடல்கள் தமிழில் ஏராளம்.

கவனிப்பாரற்று மறைந்து போன நாட்டுப் பாடல்கள் பல மடங்கு. இருப்பவை ஒரு மடங்கு தான். ஆனாலும் இருக்கிற பாடல்களை அனுபவிக்க நம் ஆயுள் நாள் காணாது.

உதாரணத்துக்கு சில நாட்டுப் பாடல்களை இனிப் பார்ப்போம்.

ஒரு இளம் பெண். பருவமங்கை பெண் அழகான பெண்தான். அத்துடன் கொஞ்சம் வசதியான குடும்பம். பெண்ணின் இளம் வயதிலேயே பெண்ணின் பெற்றோர்கள் காலமாகிவிட்டார்கள். பெண்ணின் தமையன் பெண்ணைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தான்.

எப்பொழுது பார்த்தாலும் தங்கையின் ஞாபகந்தான் அண்ணனுக்கு. அதனால் செல்லமாக வளர்ந்தாள் பெண். புதுமோஷ்தரில் நாகரீக பாணியில் கொஞ்சம் தடபுடலாகவும் வளர்ந்தாள் பெண்.

பெண்ணின் ஊருக்கு வடபுறமாக ஒரு சிறிய ஆறு ஓடுகிறது. ஆற்றின் அக்கரையில் ஒரு சிறுபட்டி அதில்தான் பெண்ணின் அத்தை வீடு. அத்தையின் மகன் ஒரு இளைஞன். பெண்ணும் இளைஞனும் பழக நேர்ந்தது. பையன் கொஞ்சம் பட்டிக்காட்டுப் பாங்கு.

இந்த நிலையில் பெண்ணுக்குக் கல்யாணப் பேச்சு வந்தது. ''என்ன ஆனாலும் சரி அத்தை மகனுக்கு என் தங்கையைக் கொடுக்கமாட்டேன்'' என்று உறுதிபட நின்றான் அண்ணன்.

பெண்ணுக்கு தன் அத்தை மகன் மேல் பிரியந்தான். ஆனாலும் உயிருக்கு உயிராகத் தன்னை வளர்ந்த - தென்னம் பிள்ளையை வளர்ப்பது போலல்லவாதன்னை வளர்த்தான்!

அந்த அண்ணனை உதறி எறிய முடியவில்லை பெண்ணால். தத்தளித்துத் தடுமாறும் பெண்ணின் உணர்வு தமிழோடு எப்படிக் கைகோர்த்து விளையாடுகிறது என்று பாருங்கள்.

ஆத்துக்கு அந்தப்புறம்
அத்தைமகனே! - நான்
அண்ணன் வச்ச
தென்னம் பிள்ளை
அத்தைமக னே!

ஆத்தைத்தான் தாண்டுவேனோ
அத்தைமக னே! - நான்
அண்ண னைத்தான்
தாண்டு வேனோ
அத்தைமக னே!

பாடிக் கொண்டே இருக்கலாம். பாடப் பாட உள்ளமும் உணர்வும் குழையும். குழைந்து தேனாகக் கொட்டும்.

இனி இன்னொரு பாட்டு.

ஒரு பெண் திருமணமான பெண். இரண்டு குழந்தைகளுக்குத் தாயும் ஆகிவிட்டாள். கல்யாணம் ஆன புதிதில் யோக்கியன் போல இருந்தான் கணவன்.

வரவரத்தான் அவன் பித்தலாட்டம் தெரிந்தது. குடிகாரன் மானங்கெட்ட குடிகாரன். நஞ்சை, புன்செயை விற்றுக்கூடக் குடிக்கிறான். அதுமட்டுமா குடிக்காகப் பசுவையும் கன்றையுங்கூட விற்றுத் தொலைக்கிறான்.

குடித்துவிட்டு வந்து கன்னா பின்னா என்று திட்டுகிறான், அடிக்கிறான், மிதிக்கிறான். தன்னை அடித்து மிதிப்பதைக்

*கூடத் தாங்கிக் கொள்ளலாம். தன் கண் எதிரிலேயே அப்பாவி மதலைகளை - தன் வயிற்றில் வளர்ந்த பச்சிளந் தளிர்களை மிதிமிதி என்று மிதித்தால் எப்படித் தாங்க முடியும் தாயின் குலை? ஈரக் குலை எப்படித் தாங்கும்.*

*உற்றார், உறவினர் வந்து புத்திமதி சொன்னால் அப்படி ஒன்றும் இல்லையே என்று மழுப்புகிறான். நெருங்கியவர்கள் கண்டித்தால் ''இனிமேல்'' அப்படிச் செய்யமாட்டேன் என்று சத்தியம் பண்ணுகிறான்.*

*எல்லாம் நீர் மேல் எழுத்துத்தான்.*

*இரண்டு கைகளாலும் தாலிக் கயிற்றைக் கையில் எடுத்து கையால் ஏந்திப் பார்க்கிறாள். கண்ணீர் விடுகிறாள். முருகப்பெருமானே தன் எதிரில் நின்று கவனிப்பதாக ஒரு தோற்றம். ''பெருமானே! இவர் திருந்திக் கரை ஏறுவதற்கு வழியே இல்லையா'' என்று விம்முகிறாள்.*

*பொருமலும் விம்மலும் எப்படி வருகிறது என்று பாருங்கள்.*

**எருக்கலைக்குத் தண்ணிகட்டி,**
**எத்தனை பூ பூத்தாலும்—**
**மருக்கொழுந்து வாசம் உண்டோ**
**வடபழனி வேலவரே!**

*பெண்ணின் மனக் குமுறலையும் ஆற்றாமையையும் எருக்கலையிலும் மருக்கொழுந்திலும் வைத்துக் காட்டுகிறது தமிழ்.*

தமிழுக்கும், தாவரத்துக்கும் அப்படி ஒரு அந்தரங்கமான உறவு. நெடுநாள் பட்ட உறவு அது.

இன்னொரு பாட்டு.

மருமகளைக் கொடுமைப்படுத்துவதில் மாமியாருக்கு ஒரே கொண்டாட்டம். கணவன் கூடப் பிறந்த அக்கா, தங்கைகளும் (நாத்தனார்களும்) மாமியாருடன் சேர்ந்து கொண்டால் ரணகளம்.

போதாக் குறைக்கு மைத்துனர்கள், கொழுந்தன்மார், ஏன், மாமனார் கூட தம்மால் இயன்ற கைங்கர்யத்தைப் பெண்ணுக்குச் செய்வார்கள்.

அப்படியானால் சிறையில் அகப்பட்ட மான் போலத் தத்தளிக்கும அபலைப் பெண்ணின் இதயம் இடிந்து நொறுங்கத்தானே செய்யும்.

கணவன் உயிரோடு இருக்கும் போதே இப்படிக் கொடுமைப்படுத்தும் மாமியார் வர்க்கம், கணவனைப் பறிகொடுத்த பெண்ணை எப்படி எல்லாம் தொல்லைப் படுத்தும்? தேள் கொட்டுவது போலக் கொட்டுவார்கள். நெருஞ்சி முள்குத்துவது போலிருக்கும் அவர்கள் பார்வை.

ஆனாலும் மற்றவர்கள் பார்வையில் அன்புள்ளவர்கள் போல நடந்து கொள்வார்கள். ஆதரித்து உபசரிப்பது போலப் பாசாங்கு பண்ணுவார்கள். குத்திக் குதறும் முள்ளோடு கூடிய நெருஞ்சியில் புன்முறுவல் பூக்கும் மலர் பூக்கத்தானே செய்கின்றன?

இனி பெண்ணின் இடித்த இதயம் எப்படி ஏங்கித் தவிக்கிறது என்பதைப் பாட்டில் பார்க்கலாம். கணவனை நினைத்து கண்ணீர் வடிக்கிறது பெண்ணின் இதயம்.

சில்லென்று பூத்த
சிறுநெருஞ்சிக் காட்டூடே
நில்லென்று சொல்லி,
நிலைநிறுத்திப் போனீரே

*அத்தை அம்மாளும் அவளைச் சேர்ந்தவர்களும் பேசுகிற பசப்பு மொழியே சில்லென்று பூத்த புது மலர்கள். அவர்களின் கொடுமையோ குத்திக் குதறும் நெருஞ்சிமுள்.*

*இனி இன்னொரு பாடல் - நாட்டுப்புறப் பாடல்தான்.*

*ஓங்குதாங்கான காத்திரமான மனிதன். அவனுடைய தோளும் மார்பும், உயரமும், உயரத்துக்கு ஏற்ற கனமும், நடையும் பார்ப்பவர்களைச் சொக்க வைக்கும். அவன் மனைவியும் அவனுக்கு ஏற்று வாய்ப்பான ஜோடிதான்.*

*இரண்டு பேரும் அன்போடும் ஆதரவோடும் குடும்பம் நடத்தி வந்தார்கள். ஒரு நாள் தாயாரைப் பார்த்து வர என்று பக்கத்து ஊருக்குப் போனாள். நாளைக் காலையில் வந்து விடுவேன் என்று சொல்லிப் போனாள். ஆனால் தாயின் பிடிவாதத்தால் மூன்று நாட்கள் அங்கு தங்கிவிட்டாள்.*

*நான்காவது நாள் அவசரம் அவசரமாக ஊரை நோக்கி வந்தாள். ஊர் நெருங்க நெருங்க நடையில் வேகம் கூடியது. அதைவிட மனசு வேகமாக படபடத்து அடித்தது.*

*என்ன அநியாயம்! வீட்டை நெருங்கிப் பார்க்கும் போது ஒரே கூட்டம். ஐந்து நிமிட நேரம் கூட இருக்காது. நெஞ்சுவலி என்று இறந்துபோனான் கணவன்.*

*பேச்சு மூச்சு இல்லாமல் சார்த்தி வைத்திருக்கும் கணவனைப் பார்த்துக் கதறுகிறாள் பெண். எப்படி*

வீதிவழி வந்தக்கால்
　　வெள்ளிரதம் போலிருக்கும்;
வெள்ளி ரதத்தில் ஒரு
　　வேல்வந்தால் போலிருக்கும்;
சாலை வழி வந்தக்கால்
　　தங்கரதம் போலிருக்கும்;
தங்க ரதத்தில் ஒரு
　　சாமிவந்தால் போலிருக்கும்;
வாரிக் கொடுப்பதற்கோ
　　வண்டாய்ப் பறந்துவந்தேன்?
தூக்கிக் கொடுப்பதற்கோ
　　தும்பியாய் ஓடிவந்தேன்!

*வாய்விட்டு அரற்றும் பெண்ணின் கூப்பாடு வீட்டோடும் முற்றத்தோடும் நிற்கவில்லை. விண்ணுக்கும் மண்ணுக்குமாக முட்டி மோதுகிறது.*

*இனி நாட்டுப்புற பாடல்களில் சில நாடகக் காட்சிகள்.*

*பனிக்காலம் வந்துவிட்டால் தாவரங்களின் மேல் - இலைகளின் மேல் பனித்துளிகள் இறங்கி முத்து முத்தாக உட்கார்ந்திருக்கும். காலைக் கதிரவனின் வெயில் ஏற ஏற அந்நீர்த்துளிகள் ஆவியாக மறைந்துவிடும்.*

*மூங்கில் இலையிலும் அப்படித்தான். காட்டு வழியாக ஏதோ ஒரு ஊருக்கு நடந்து போகிறார் கம்பர். காலை நேரம் மாடு மேய்கிற பையன்களில் ஒருவன் கம்பரைப் பேச்சுக் கொடுத்து நிறுத்தினான். பிறகு கேட்டான் ''மூங்கிலின் இலைகளில் ஒட்டி இருந்த நீர் துளிகள் எப்படி மறைந்தன'' என்று! பையன் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை*

கம்பரால். திருதிருவென்று விழித்தார். பையனும் சேக்காளிகளும் 'பூ இவ்வளவுதானா' என்று சிரிததார்கள்.

முக்கால் வாசி வெட்கம், கால்வாசிச் சிரிப்பு இவற்றோடு நடந்து போகிறார் கம்பர். காட்டு வழியே காலை வேளையில் கம்பர் நடந்து போகிற பொழுது தோட்டத்துக்கு ஏற்றம் வைத்து நீர் இறைக்கிறவர்கள்.

**மூங்கில் இலை மேலே**
**தூங்கும்பனி நீரே!**
**தூங்கும்பனி நீரை**
**வாங்குகதி ரோனே!**

என்று பாடிக் கொண்டே இறைக்கிறார்கள். பாட்டைக் கேட்ட கம்பர் அப்படியே அதிசயித்து நின்றுவிட்டார். அடடா! இது தெரியாமல் போய்விட்டதே என்று திகைத்தார். பிறகு வாய்விட்டுச் சிரித்தார். வெட்கம் எல்லாம் சிரப்பாய் பொங்க தொடர்ந்து நடந்தார். அறிவுக்கு ஏது எல்லை என்று சிந்தித்த வண்ணமாகவே நடந்தார்.

இடம் - காட்டுவழி. நேரம் - அதிகாலை, பாத்திரம் - கம்பர், மாடு மேய்க்கிற பையன்கள்(கள்), ஏற்றம் இறைப்பவர் - என்ற வைத்துக் கொண்டால் நாட்டுப்புறப்பாடலில் நாடகக் காட்சி நன்றாகத் தெரியும்.

இனி இன்னொரு நாடகம்.

அசல் பட்டிக்காடுதான் ஊர். போக்குவரத்து வசதியோ வெளிப்பழக்க வழக்கமோ இல்லாத சிறு கிராமம். மக்கள் எல்லோரும் விவசாயம் முதலிய கிராமத் தொழில் பார்ப்பவர்கள். பகல் முழுவதும் காட்டில் வேலை செய்வார் கள். இரவு எட்டு மணி அளவில்தான் சமையல் முடியும்.

குளிப்பும் அப்பொழுதுதான். சாப்பாடும் அப்பொழுதுதான். சாப்பிட்டு முடிந்த பின் வெற்றிலை பாக்குப் போடுவார்கள். உற்றார், உறவினர், நண்பர், கணவன், மனைவி எல்லோரும் கூடி இருந்து பேசுவார்கள். பேச்சு உல்லாசமாக இருக்கும் எங்கெங்கோ போகும். எப்படி எப்படியோ வரும்.

அந்த ஊரைச் சேர்ந்த காதலன் ஒருவன் தன் காதலியிடம் ஜாலியாகச் சொகிறான். எப்படி

ஆக்குப் புரைக்குப்
போகலா மா?
ஆர அமர
உண்ணலா மா?
பாக்கு வெற்றிலை
போடலா மா?
பாங்காய்க் கம்பி
நீட்டலா மா?

(ஆக்குப்புரை - சமையல் கட்டு. கம்பி நீட்டல் - ஓடிப்போதல்)

எப்படியாவது அணைத்துத் தள்ளிக் கொண்டு போய் விடவேண்டும் பெண்ணை என்பதுதான் பயலுக்கு நினைப்பு. அதற்காக எதை எதையோ சொல்லி பெண்ணை இளக வைக்கிறான். பிறகு முத்தாய்ப்பாய் கம்பியை நீட்டிவிடுவோம். (ஊரை விட்டுப் போய்விடுவோம்) என்கிறான்.

அருமையான நாடகம்

இனி வேறொரு நாடகம்.

கற்பு கற்பு என்று உலகம் முழுவதும் மண்டையை உடைத்துக் கொள்கிறது. ஆனால் இன்றைக்கும் ஒரு சில இனத்தார் பழக்க வழக்கம் புதிராய் இருக்கிறது. இந்த இனத்துப் பெண்கள் கணவன், குழந்தைகள், குடும்பம், வீடு இவற்றின் மேல் அளவு கடந்த பாசம் வைத்திருக்கிறார்கள். துளிக்கூட விட்டுக் கொடுக்கமாட்டார்கள். ஆனால் மற்றொரு ஆடவனுடன் பழகுவதையோ உறவாடுவதையோ தப்பாக எடுத்துக் கொள்வதில்லை.

கணவனும் அதைத் தப்பாக நினைப்பதில்லை. உற்றார் உறவினர், சமூகம் யாருமே அதை வெறுப்பதில்லை. ஒவ்வொரு வரும் கண்டும் காணாதது போல் நடந்து கொள்வார்கள்.

அந்த உறவின் மூலம் பெண் பெற்றுவரும் பரிசுப் பொருள்களைக்கூட இவர்கள் அங்கீகரிப்பார்கள். உலகம் முழுவதும் இந்தப் பழக்க வழக்கம் இன்னமும் அப்படியேதான் இருக்கிறது.

இதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும் ஆடவன் ஒருவன். தன் மனைவியை மிரட்டுவதற்காகத் தடபுடலான வேஷம் போட்டு வந்தான். அன்று மாலையில் பக்கத்து ஊர் போய்விட்டு நாளைக் காலையில் வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனான். ஆனால் அயலூர் போகவில்லை.

இரவு ஒன்பது மணிக்கு பட்டு வேட்டி, பட்டுச் சொக்காய், அங்கவஸ்திரம், ஜரிகைத் தலைப்பாகை சகிதம் குட்டிஜமீன்தார் மாதிரி வந்தான். பெரிய கடா மீசை வேறு.

கதவைத் தட்டினான். கதவைத் திறந்தாள் பெண். நம்ப முடியவில்லை பெண்ணுக்கு. நம்மைத் தேடி இவ்வளவு

பெரிய ஆள் வந்திருக்கிறதே என்று திகைத்தாள், கூச்சப்பட்டாள், பயந்தாள்.

பயல் ஒரு வழியாக தேற்றி பேரம் பேசி அவளைச் சரிகட்டிவிட்டான்.

சம்மதித்த பெண்ணின் தோளில் கைபோட்டு கழுத்தை வளைத்தபடியே தன் வேஷத்தை களைந்தான். களைந்து கொண்டே

மூக்குத்தி· போட்டவ ளே!
மூணுபணம் கேட்டவ ளே!
நாக்குச் சிவந்தவ ளே!
நான்தாண்டி உன்புரு சன்!!

(மூணுபணம் - முக்கால் ரூபாய், நாக்கு சிவந்தவள் - வெற்றிலை பாக்கு போட்டவள்)

என்று பாடிப் பாடித் துள்ளினான். அவளுக்கும் வெட்கம் வந்துவிட்டது, நாணத்தால் முகம் சிவந்தாள்.

நாடகக் காட்சிகள் அப்படி இருக்கட்டும். இனி தாராள மனமும், மனிதப் பண்பும் மிக்க பண்ணையார் (நிலச்சுவான்) ஒருவரின் பெருந்தன்மையை அனுபவித்த குடியானவர்கள் எப்படி கற்பனையை வளமாகப் பெருக்கி மனங்கசிந்து பாராட்டுகிறார்கள் என்று பாருங்கள்.

பூவரசன் கட்டைவெட் டி,
புது மரக்கால் உண்டுபண் ணி,
மாதாமாதம் படிஅளக் கும்
வல்லத்தையா மகரா ஜன்!

தென்காசிக்கு பக்கம் உள்ள கிராமம் வல்லம். நன்செயும், தோப்பும், நிறைந்த செழிப்பான கிராமம். அந்த கிராமத்துக்குரிய பண்ணையார் குடியானவர்களின் பசிமுகம் காணப் பொறுக்கமாட்டார். கூலியை மாதாமாதம் கொடுத்து விடுவார். அவர் கொடுக்கும் நெல்லில் மஞ்சாடி கூட அளவு குறையாது. அளந்து அளந்து மரக்கால்தேயும். அதற்காக புதிது புதிதாக மரக்காலை அடிக்கடி செய்வாராம் பண்ணையார்.

வயலில் இறங்கி வேலை பார்க்கும் தொழிலாளர்களை உழவர், உழத்தியர் என்று சொல்வார்கள். இவர்கள் வேலை பார்க்கும் நேரத்துக்கு அளவு உண்டு. பொதுவாக காலை எட்டு மணிக்கு பணியை ஆரம்பித்தால் பிற்பகல் நான்கு மணி வரை இவர்களுக்கு வேலை நேரம் ஆகும். கால்மணிநேரம் அரை மணிநேரம் முன்பின் ஆகலாம், கூடலாம், குறையலாம், அது சாதாரணம்.

ஆனால் பருவம் தவறக்கூடாது. பட்டம் விடுவிடக் கூடாது என்பதற்காக சில நாட்கள் நீண்ட நேரம் இவர்கள் வேலை பார்க்க வேண்டிவரும். காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி அளவு கூட வேலை பார்ப்பார்கள்.

இப்படி மூன்று மணிநேரம் நான்கு மணிநேரம் அதிகப்படியாக வேலை பார்ப்பதற்கு சம்பளம் போக கூடுதல் தொகை கிடைக்கும். அது பணமாகவும் இருக்கும். நெல்லாகவும் இருக்கும்.

வல்லத்துப் பண்ணையார் நல்ல பண்பாளர். தன்னை நினைப்பதுபோல மற்றவர்களையும் நினைக்கிறவர். அதனால் அதிகப்படி வேலை பார்த்தவர்களுக்கு இரண்டு மூன்று நாள் கழித்துக் கூடுதல் தொகை கொடுப்பதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது என்று யோசித்தார்.

*பசியோடு வேலை பார்ப்பவர்களுக்கு பசியாற உணவல்லவா தரவேண்டும் என்று தீர்மானித்தார். அப்படியே அத்தனை தொழிலாளர்களுக்கும் ஒவ்வொரு நாளும் பொங்கிப் போட்டார்.*

*இதை மறக்க முடியுமா தொழிலாளிகளால்? நன்றி உணர்வு எப்படி வருகிறது நாடோடிப் பாடலில் என்று பாருங்கள்.*

காசாய்ப் படிஅளந்தால்
கனத்தநேரம் ஆகும்என்றும்,
நெல்லாய்ப் படிஅளந்தால்
நீண்டநேரம் ஆகும் என்றும்
அரிசியாய் படி அளந்தா
அதிக நேரம் ஆகும் என
சோறாய்ப் படி அளக்கும்
சொகுசான வல்லத்தையா!

*காசு (பணம்) பசியை ஆற்றுமா? அதற்கு அரிசி வாங்கிப் பொங்கிச் சாப்பிட நேரம் வேண்டாமா? நெல் உடனே சோறாகுமா? அவித்து காயப்போட்டு, குத்தி, புடைத்து இவ்வளவும் ஆனபின் அல்லவா சமைக்க வேண்டும்.*

*வேலை செய்கிறவனுக்குத் தேவை சாப்பாடு. அதைச் செய்தார் வல்லத்து முதலாளி. அவர் சொகுசான முதலாளியேதான்!*

*காலம் சென்ற ரசிகமணி, டி.கே.சிதம்பரநாத முதலியார் (டி.கே.சி) அவர்கள் ஒரு கல்விக்கடல், கலைக்களஞ்சியம். தமிழும் தமிழ்ப் பண்பாடும் சேர்ந்தெடுத்த திரு அவதாரம்.*

*தம்மை முதல் முதலில் சந்தித்து (இலக்கிய) உறவாடும் அன்பர்களிடம் அவர்கள் எடுத்த எடுப்பில் கம்பரையோ,*

முத்தொள்ளாயிரத்தையோ, நந்திக்கலம்பகத்தையோ காட்ட மாட்டார்கள்.

எளிய, இனிய இரண்டொரு நாட்டுப் பாடல்களைத் தான் வளைத்து வளைத்துப் பாடிக் காட்டுவார்கள்.

நாட்டுப் பாடல்களில் உள்ள கருத்தையும் உணர்ச்சியையும் முதலில் எடுத்துச் சொல்லுவார்கள். பிறகு பாடலைப் பாடுவார்கள்.

இவர்கள் பேராசிரியர்களாயிற்றே, நிபுணர்களாயிற்றே, மேதாவிகளாயிற்றே என்று யோசிக்கமாட்டார்கள்.

ஏன் இப்படி நாட்டுப்புறப் பாடலை பிள்ளையார் சுழியாகப் போடுகிறீர்கள் என்று கேட்டால், நாட்டுப்புறப் பாடல்களை ஒருவர் எப்படி அனுபவிக்கிறார் என்பதுதான் ரசனைக்கு அளவுகோல். இதை அனுபவிக்க முடியாதவர் கம்பரையோ, மாணிக்கவாசகரையோ, குறளாசிரியரையோ எப்படி அனுபவிப்பார் என்று திருப்பிக் கேட்பார்கள்.

டி.கே.சியின் அன்பர்கள் பலரும், வட்டத்தொட்டி நண்பர்கள் பலரும் நாட்டுப் பாடலிலிருந்து படிப்படியாக மளமளவென்று ரஸக்ஞானம் பெற்று முன்னேறியவர்கள்தாம்.

ராஜாஜி, கல்கி, கவிமணி, தேசிகவிநாயகம்பிள்ளை, ஜஸ்டிஸ் மகாராஜன் போன்றவர்கள் எல்லோரும் கம்பரையும் முத்தொள்ளாயிரத்தையும் கேட்டு அனுபவிப்பதுபோல ரசிமணியிடமிருந்து நாட்டுப்புறப் பாடல்களை ஆவலோடு கேட்டு அனுபவிப்பார்கள்.

ரசிகமணி அவர்கள் அன்பர்களிடம் முதல் முதல் தமிழை அறிமுகப்படுத்தும்போது நாட்டுப்புறப் பாடல்களை பாடிக் காட்டியே விளக்குவார்கள் என்று குறிப்பிட்டோம்.

*நாட்டுப்புறப் பாடல்களிலும் மிக மிக எளிமையான பாடல்களையே எடுத்துக் காட்டுவார்கள்.*

*உதாரணமாக*

"தாய்ப்பூ தாமரைப்பூ
தங்கத்து வீட்டு
செண்பகப் பூ"

"பூவே பூவே
புளியம் பூ!
பொன்னிறக் கொண்டைக்குத்
தாழம் பூ!"

*என்றும்,*

"பொழுதெப்போ விடியும்?
பூ எப்போ மலரும்?
சிவனெப்போ வருவார்?
வரம் எப்போ தருவார்?"
"பொழுதிப்போ விடியும்,
பூ இப்போ மலரும்,
சிவன் இப்போ வருவார்!
வரம் இப்போ தருவார்!!"

*என்றும் லகுவான பாடல்களாகவே இருக்கும். ஆனால் பாடலுக்குள் இருக்கும் நோக்கத்தையும் ஆவலையும் முதலில் எடுத்து விளக்கிவிட்டு பிறகு பாடலை பாடப்பாட அப்படியே சொக்கிவிடுவார்கள் அன்பர்கள்.*

*தமிழ்ப்பண்பையும் இசைப்பண்பையும் கவிப் பண்பையும் ஒரு சேர நாட்டுப்புறப் பாடலில் பார்த்து அனுபவிப்பார்கள்.*

இனி, வெள்ளைக்காரனுக்கும், இந்தியர்களுக்கும் சம்பந்தமே கிடையாது. எத்தனை மலைகளையும் கடல்களையும் தாண்டி ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் கிடக்கிறது இங்க்லேண்ட்.

ஆனாலும் வெள்ளைக்காரன் இந்தியாவை சுருட்டி மடக்கி வைத்துக் கொண்டான். கோழிக்குஞ்சை பருந்து 'லபக்' என்று தூக்கிக் கொள்வது போல இந்தியாவையே சுருட்டி மடக்கித் தோள் மேல் போட்டுக் கொண்டான் வெள்ளைக்காரன்.

நான் வைத்ததுதான் சட்டம் என்றான். நான் சொல்வதைத்தான் படிக்கவேண்டும் என்றான். உங்கள் விவகாரங்களை நான்தான் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவேன் என்றான்.

அவ்வளவையும் நம்மவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்! இவை மட்டுமா? நீங்கள் செய்கிற தொழில்களில் இன்னின்ன தொழில்களை நீங்கள் செய்யக் கூடாது என்றான். இன்னின்னவற்றை இப்படி இப்படித்தான் செய்ய வேண்டும் என்றான்.

அது மட்டுமா.

உங்கள் நிலங்களில் இன்னின்னவற்றை நீங்கள் சாகுபடி செய்ய வேண்டும் என்றான். விளைந்த பொருள்களுக்கு நாங்கள்தான் விலை வைப்போம். அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இப்படிச் சொல்லிவிட்டான் வெள்ளைக்காரன்.

இந்தியன் இந்திய மண்ணில் உயிரை கொடுத்து பாடுபட்டுப் பருத்தியை பயிரிடுவான். விளைந்து பருத்திக்கு

விலை அவன் நிர்ணயிக்கிறது இல்லை. அவனிடம் பருத்தியை வாங்குகிற வியாபாரிகளும் நிர்ணயிக்கிறதில்லை. மான்செஷ்டரிலோ, லங்காஷயரிலோ உள்ள வெள்ளைக்கார மில் முதலாளிதான் பருத்திக்கு விலை நிர்ணயம் பண்ணுவான். அந்த விலையில் பருத்தியை இவன் விற்க வேண்டும்.

இதற்கு இணையான கொடுமை வேறு ஏதாவது உண்டா? இந்தக் கொடுமை எத்தனையோ இந்தியர்களின் மனத்தை கசக்கிப் பிழிந்தது. ரத்தக் கண்ணீர் விட்டது மனம். அந்த வேதனையையும் கொடுமையையும் நகைச்சுவையோடு கும்மாளி போட்டுச் சொல்கிறது தமிழ். எப்படி.

''ஊரான் ஊரான்
தோட்டத்தி லே,
ஒருவன் போட்டானாம்
வெள்ளரிக் காய்!

காசுக்கு ரெண்டாக
விற்கச்சொல் லி,
காகிதம் போட்டானாம்
வெள்ளைக்கா ரன்!!''

இந்த பாடலை விளக்கத்தோடு ராஜாஜியிடம் ஒரு தடவை டி.கே.சி பாடிக் காட்டினார்கள். விளக்கத்தையும் பாடலையும் கேட்ட ராஜாஜி அதிசயத்திற்குள்ளானார். அது அவரை தொடர்ந்து சிந்திக்க வைத்தது. அந்த சிந்தனையின் விளைவுதான் ராஜாஜியின் அரசியல் மாற்றங்கள் பலவற்றுக்கும் அவற்றின் தீவிரங்களுக்கும் அடிப்படையான மூலம்.

இனி, மேலே குறிப்பிட்ட ''ஊரான் ஊரான் தோட்டத்திலே'' என்னும் பாடலைக் கேட்டு அந்தக்

காலத்திலேயே வெள்ளைக்காரர்கள் மேல் பலர் ஆத்திரப்பட்டிருக்கிறார்கள்.

ஆத்திரமானது அடக்குவதற்கு இடம் கொடுக்காமல்,

**''வாராண்டா வாராண்டா**
**வெள்ளைக்கா ரன்**
**வரட்டும் தாயோளி**
**தொப்பிக்கா ரன்''**

என்று வீராவேசத்தோடு வெளிப்பட்டுள்ளது. இன்னொரு பாட்டு.

நந்தனார் கீர்த்தனம் பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார் உயர்நிலைப்பள்ளியிலோ, கல்லூரியிலோ ஏறி இறங்கவில்லை. திண்ணைப்பள்ளிக் கூடப் படிப்போடு சரி. ஆனால் இசைப்பண்பும் தமிழ்ப்பண்பும் அவரைத் தேடி வந்தன. அவர் இயற்றிய நந்தனார் சரித்திரத்தில் பாட்டும் இசையும் கைகோர்த்து விளையாடுகின்றன. பக்தியானது தாண்டவம் ஆடுகிறது.

நந்தனார் பாடல்களில் நாடோடிப் பாடலின் சாயல்கள் அங்கங்கே வரும். சில வரிகளைப் பார்த்தால் நாடோடிப் பாடலாகவே தோன்றும்.

உதாரணமாக

**தானன்ன தானன்ன**
**தன்னன்ன தான**
**தன்னன்ன தானன்ன**
**தன்னனா ன**

என்னும் மெட்டில்

"விதியின்ள முத்தைக் கி
ழித்தாச்சு - முன்பு
விட்டகு றைவந்து
தொட்டாச் சு"

இரண்டே வரிகள்.

ஐம்பது வருடங்களுக்கு முன் மகாபலிபுரம் கடற்கரையில் முன் இரவில், பால் ஒளி நிலவில் ரசிகமணி டி.கே.சி அற்புதமாக விளக்கம் கொடுத்து இந்த இரண்டு வரிகளையும் பாடிக் காட்டினார்கள். நண்பர்கள் குழாத்திலிருந்து கேட்ட கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியின் மனப்பொறியை ஒரு தட்டுத் தட்டிவிட்டது பாடலும் விளக்கமும்.

ஏற்கனவே கற்பனையில் ஊறப்போட்டு அங்கங்கே நிறுத்தி வைத்திருந்த அம்சங்கள் ஒன்றுபட்டு பரிபூரண சௌந்தர்யத்தோடு சிவகாமியின் சபதம் என்னும் பெயரில் அவதாரம் எடுத்துவிட்டது.

மேளதாள முழக்கத்தோடு சுகப்பிரசவம் பெற்று அவதரித்தாள் சிவகாமி. இதற்கு ரசிகமணியின் விளக்கமும் அவர்கள் பாடிக் காட்டிய பாங்கும் முக்கிய காரணம்.

இரண்டே வரிகளைக் கொண்ட ஒரு நாடோடி பாடல் ஒரு மாபெரும் வசன காவியத்தின் அவதாரத்துக்கு ஒளி ஊற்றாய் இருப்பது அதிசயந்தான்.

நாடோபடிப் பாடல்களின் சாயல்களும் கூறுகளும் கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்களில் மட்டுமல்ல, பல நூல்களில் சேர்ந்து ஒளிர்கின்றன.

*உதாரணமாக சில.*

*நீர்வளம் மிக்க வளமான நிலம். பொன் விளையும் பூமி. நெல்லும், கரும்பும், வாழையும் கொஞ்சிக் குலாவுகின்றன. இந்த அதிசயத்தை வறண்ட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவன் காண நேர்ந்தால் அவனை என்ன பாடுபடுத்தும் பூமாதேவியின் இந்த திருமணக் கோலம்!*

*இதோ அல்லி அரசாணி மாலையில் ஒரு பகுதி.*

**தானான தனனான**
**தானான தன்னான**

**"வாழை வடக்கீனும்**
**வான்கரும்பு தெற்கீனும்,**
**கட்டுக் கலங்காணும்,**
**கதிர்உழக்கு நெற்காணும்;**
**மாடுகட்டிப் போரடித்தால்**
**மாளாது செந்நெல் என்று**
**ஆனைகட்டிப் போரடிக்கும்**
**அழகான தென்மதுரை"**

*அல்லி அரசாணி மாலையிலுள்ள இந்தப் பகுதி மட்டும் அன்றி, அல்லி அரசாணி மாலையே நாட்டுப்புறப் பாடல்தான் என்பது படிக்கப் படிக்க விளங்கும்.*

*இனி, முருகப்பெருமான் மேல் பரவச உணர்ச்சியோடு பக்தர்கள் பாடிய பாடல்கள் ஏராளம். பக்தியின் மணம் பாடல்களில் காதலாகப் பரிமளிக்கும்.*

*அத்தகைய பாடல்களில் கண்ணி(கள்) - கிளிக் கண்ணி(கள்) என்னும் இசைப்பாங்குடைய பாடல்களும் உண்டு.*

*(கிளிக்)கண்ணிகள் நாட்டுப்புறப் பாடல்களின் அமைப்பையே கொண்டுள்ளன.*

*இதோ ஒரு எடுத்துக்காட்டு*

"வள்ளிக் கணவன் பேரை
வழிப்போக்கர் சொன்னாலும் மே,
உள்ளம் கு ழையுதடி -கிளியே!
ஊனும்உ ருகுதடி!

*இனி இன்னொரு கண்ணி*

"மாலைவடி வேலவற்கு
வரிசையாய் நான் எழுதும்
ஓலை கிறுக்காச்சுதே-கிளியே
உள்ளமும் கிறுக்காச்சுதே!"

*இனி, கட்டபொம்மு, ஊமைத்துரை இவர்களை சிறைப்பிடித்து பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தையே நிர்மூலம் பண்ணிவிட்டார்கள் வெள்ளையர்கள்.*

*எப்படி இருந்த பாளையமும் அரண்மனையும் இப்படி பாழாய்ப் போய்விட்டனவே என்று பார்த்தவர்கள் கேட்டவர்கள் எல்லோரும் வருந்தினார்கள்.*

*மக்களின் துயரவெறி எப்படி வருகிறதென்று பாருங்கள்.*

காகம் பறவாத
 கட்டபொம்மன் கோட்டைவிட்டு
கோகனக மாது
 குடிபோனான் அம்மானை!
கோகனக மாது
 குடிபோனாள் ஆம் ஆயின்,
கூகை இருந்து
 குழறுமே அம்மானை!

*(கோட்டைவிட்டு - கோட்டையை விட்டு (வெளியேறி), கோகனக மாது - லெட்சுமிதேவி வீரத்தின் அதிதேவதை. ஆம் - உண்மைதான். ஆயின்- ஆனால்.)*

*அடடா, வீரலட்சுமி கொலுவீற்றிருந்த இடத்தில் கோட்டானல்லவா கும்மாளம் அடிக்கிறது. கொடுமை! கொடுமை!!*

*அம்மானை என்னும் பிரிவைச் சேர்ந்தது பாடல். கட்டபொம்மன் வீரவரலாறு ஒரு பாடல் நூலாக இருந்திருக்க வேண்டும். அதன் ஒரு பகுதி என்று தெரிகிறது மேலே காட்டிய பாடல்.*

*இந்த அம்மானைப் பாடலும் நாட்டுப்புறப் பாடலை சேர்ந்ததுதான்.*

*கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களிலும் சரி, திருவாசகம் முதலிய பக்திப் பனுவல்களிலும் சரி, பல பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களின் சாயலை ஒட்டியே அமைந்துள்ளன.*

*ஆய்ச்சியர் குரலை, குன்றக்குறலை, திருச்சாழல், ஊசல், அம்மானை, வள்ளைப்பாட்டு, சுண்ணம் இப்படி விதம்*

விதமான துறைகளைச் சேர்ந்த பாடல்களுக்கெல்லாம் நாட்டுப்புறப் பாடல்கள்தாம் அடிமணை. அதாவது ஆதார சுருதி.

இன்னும் கொஞ்சம் உள்நோக்கி யோசனை செய்து பார்த்தால் கலம்பகம், பரணி, குறவஞ்சி, பள்ளு, கலம்பகம், உலா, மடல் முதலிய சிற்றிலக்கியங்களைச் சேர்ந்த பல துறைப்பாடல்களுக்கும் நாடோடிப் பாடல்களே ஊற்றுக்கண் என்பது தெரியும். அப்படியே கம்பர், வள்ளுவர், முத்தொள்ளாயிரம், ஆழ்வார், நாயன்மார், ஏன், சங்கநூல் பாடல்களுக்குக் கூட நாட்டுப்புறப் பாடல்கள்தாம் வழிகாட்டி என்பது தெரியும்.

இதோ ஒரு உதாரணம்

“வெள்ளரிக் காயா!
விரும்புமவ ரைக்காயா;
உள்ள(ம்) மிளகாயா!
ஒருபேச் சுரைக்காயா?

வெளிப்படையாகப் பார்த்தால், வெள்ளரிக்காய் விற்கும் வியாபாரியே! வாடிக்கையாக உன்னிடம் வாங்கும் ஆட்களிடம் ஏன் (காய்கிறாய்) கோபப்படுகிறாய்?

உன் மனசென்ன கல்லா? இளகவே இளகாதா? பச்சை மிளகாய் மாதிரி காரமாகவே இருக்கிறதே ஏன்? வாயைத் திறந்து பதில் சொல். ஊமையா நீ?

இப்படித் தெரியும் பொருள். ஆனால் பாடலின் தொனியில் வெள்ளரிக்காய், அவரைக்காய், மிளகாய், சுரைக்காய் ஆகிய தாவரப் பெயர்கள் அலங்காரமாய் அமர்ந்திருக்கின்றன.

வழுதலை வித்திடப்
பாகல் முளைத்தது;
புழுதியைத் தோண்டினேன்
பூசணி பூத்தது;
தொழுது கொண்(டு) ஓடினார்
தோட்டக் குடிமக்கள்;
முழுதும் பழுத்தது
வாழைக் கனியே!

*என்னும் திருமூலர் பாடலும் தாவரங்களை வைத்து அப்படியே கோர்த்து வாங்குகிறது.*

*இனி, திருநெல்வேலி-பாளையங்கோட்டையில் கோபால்பிள்ளை என்று அட்வகேட் ஒருவர் இருந்தார்கள். அவர்கள் தாய்மொழி மலையாளம், தமிழில் மிக்க ஈடுபாடு கோபால் பிள்ளைக்கு (இசைப் பேரறிஞர் திருவனந்தபுரம், லட்சுமண பிள்ளையின் நெருங்கிய உறவினர் திரு.கோபால்பிள்ளை)*

*ஆங்கிலத்தில் தெளிந்த புலமை.*

*ஐம்பது வருடங்களுக்கு முன் ரசிகமணி டி.கே.சியிடம் கோபால்பிள்ளை ஒரு நாடோடிப் பாடலை சொன்னார்கள். மலையாள நாடோடிப் பாடல் அது.*

"கருத்தப் பெண்ணே
கருங்குழ லி!
நினக் கொருத்தன்
கிழக்குதிச் சு!

கன்னங்கரிய இரவை காதலியாக பாவிக்கிற பாவனை. காதலனை எண்ணி எண்ணி விடிய விடிய தூங்கவில்லை காதலி. அதிகாலை ஐந்து ஐந்தரை மணிக்கு அயர்ந்து தூங்கிவிட்டாள். விடிந்தது தெரியாமல் உறங்கும் பெண்ணை அவள் தோழி சத்தம் போட்டு எழுப்புகிறாள். எப்படி.

உனக்காக உன் நாயகன் இதோ (கிழக்கே) காத்து நிற்கிறானே! வரவேற்று உபசரிக்க வேண்டாமா? இப்படியா தூங்குவது? பொம்பளையைப் பாரு பொம்பளையை?

இதே கருத்து ஒரு வெண்பாவிலோ விருத்தத்திலோ வந்தால் ஆகா ஓகோ என்று கும்மி அடிக்கிறோம். இயல்பான கிராமிய மெட்டில் வந்தால், 'பூ' வெறும் நாடோடிப் பாடல் என்று அலட்சியப்படுத்துகிறோம்.

நமது உன்னதமான பண்பட்ட கவிகளுக்கெல்லாம் நாடோடிப் பாடல்கள்தாம் ஒளி ஊற்று என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எல்லாக் கலைகளுமே இப்படிச் சாதாரண மக்களிடந்தான் பிறந்ததும், வளர்ந்ததும், பலன் கொடுப்பது தெரிந்ததும் ஆடம்பரம் மிக்க ஆரவாரக்காரர்கள் அவற்றை வசப்படுத்திக் கொள்கிறார்கள்.

உலகியல் அப்படித்தான்.

இசை, நடனம், ஓவியம், உழவு, வணிகம், கட்டிடம், மருத்துவம், பொருளாதாரம், ஏன், அரசியல் நிர்வாகம் கூட எல்லாமே சாதாரண மக்களிடந்தான் பிறந்தன, வளர்ந்தன.

பிறகுதான் கல்லூரி, பல்கலைக்கழகம், ஆராய்ச்சி மன்றம், பொறி இயல், மருந்தியல், பசுமைப் புரட்சி, தொழில் புரட்சி, அரசு கொற்றம் என்றெல்லாம் வேஷம் போடுவது.

இனி, விளங்காத பாடம், அதனால் ஏற்படுகிற சலிப்பு, வாத்தியார், பிரம்பு, இவைகளின் அட்டகாசத்தை வைத்து,

"நெடுமால் திருமருகா!
நித்தநித்தம் இவ்வழவா?
வாத்தியார் சாகானா? - எம்
வயிற்றெரிச்சல் தீராதா?

எப்படி அழுத்தம் கொடுத்து திருத்தம் தருகிறது நாட்டுப்புறப் பாடல். லட்சோப லட்சம் மாணவ, மாணவியர்களின் கசப்பையும், குமட்டலையும் ஆயிரம் புத்தகங்களில் எழுதினாலும் இப்படித் தத்ரூபமாக காட்ட முடியாது.

ஆனால் நான்கே வரிகளில் ஒரு நாட்டுப்புறப் பாடலில் ஆணியடித்தது போல் அடித்து நிற்க வைத்து விடுகிறது. உணர்ச்சியின் உருவத்தை.

நெடுமால் திருமருகா என்று முருகப்பெருமானையே கூப்பிட்டு முறையீடுகிறது பாடல்.

படிப்பின் பித்தலாட்டத்தைப் பார்க்கத்தான் மனுச மந்தையில் நாதி இல்லையே?

இனி ஒருவரி, இரண்டு வரிகளில் துண்டு பட்டுக் கிடக்கிற நாட்டுப்புறப் பாடல்கள் கூட - தெம்மாங்குகள் கூட நாவை விட்டு இறங்காது. பாடிக் கொண்டே இருக்கத் தோன்றும்.

அப்படி ஒரு மதுரமான பண்ணோசை. உல்லாசமான தாளம். மணங்கமழும் மெட்டு.

இதோ ஒன்றிரண்டு உதாரணம்.

காதலன் காதலியைப் புகழ்ந்து பாராட்டும் அலங்காரச் சொல்.

“கழுகுமலை குருவிகுளம்
கண்டெடுத்த சுண்டுமுத் தே”

எப்படி இருக்கிறது கழுகுமலை?

“உருண்டு திரண்ட மலை
ஒய்யாரக் கழுகுமலை”

*அந்த கழுகுமலைத் திருவிழாவுக்கு எப்படிப் போக வேண்டும்?*

“குட்டைக் காளை
ரெண்டு கட்டி,
கூடார வண்டி
கட்டி - கண்ணே
சிட்டாய்ப் பறக்க வேணும்
சீராகக் காண வேணும்

*வில் வண்டிக்குள் (நீயும் நானும்) எப்படி ஜம் என்று உட்கார்ந்து போக வேண்டும்.*

“நாட்டுக்கு நாடு மட்டம்
நாம் இரண்டும் ஜோடி மட்டம்”

*(மட்டம் - பொருத்தம்)*

ஆட்டுக்கும் மாட்டுக்கும்
ரெண்டு கொம்பு
ஐயங்கார் நெற்றிக்கு
மூணு கொம்பு”

என்பதும்

"சடகுடு மலையிலே
 ரெண்டா னை
தவறி விழுந்தது
 கிழட்டா னை"

என்பதும் நாடோடிப் பாடல்கள்தாம்.

நாடோடிப் பாடல்கள் உன்னதமான இலக்கியம். பண்பாடு மிக்க கலை. படிக்கப் படிக்க ஒரு உண்மை விளங்கும். எல்லாக் கலைகளுக்குமே தாயும் தந்தையும் மக்கள்தாம். சாதாரண மக்கள்தாம் என்னும் உண்மை.

இந்த உண்மை தெரிந்தால் மட்டும் போதாது. நாட்டுப்புறப் பாடல்களில் போலி அதிகம் நடமாடுகின்றன. போலியை ஒதுக்கித் தள்ளவும் உண்மையை அரவணைக்கவும் தைரியம் வேண்டும். அதுபோதும் நமக்கு.

## 4

# நாடக காட்சிகள்

'கடவுள் எங்கே இருக்கிறார்' இது கேள்வி.

''அவர் தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார்'' இது பதில்.

இந்தக் கேள்வியும் சரி, பதிலும் சரி இரண்டும் வெறும் பித்தாட்டம். உண்மைக்கும் இவற்றுக்கும் அணுவளவு கூட சம்பந்தம் இல்லை.

உண்மையே இல்லை என்றால் உணர்ச்சி எங்கிருந்து வரும்? அனுபவம் என்பதும் அப்படித்தான்.

''அங்கே என்றோ இங்கே என்றோ கடவுள் ஒதுங்கி நிற்கவில்லை. எங்கும் அவர்தான். அவரைத் தவிர ஒன்றும் இல்லை; என்பதுதான் உண்மை. உணர்ச்சிமயமான உண்மை என்றால் அது இதுதான்.

இதை உணர உணரத்தான் அனுபவம் ஏறும். கடவுளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. கடவுள் (தத்துவம்) ஒன்றுதான் உண்மை. அந்த ஒன்றுதான் வானமாக, நட்சத்திரங்களாக, மண்டலங்களாக, புழுப்பூச்சிகளாக, மனிதர்களாக, செடி கொடிகளாக உதித்துக் கொண்டே இருக்கிறது.

உதித்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, உதித்து வரும் ஒவ்வொன்றையும் 'நான், நான்' என்று ஆட்டம் போடவும் வைக்கிறது.

அப்படி வைப்பதுதான் அவருக்கு விளையாட்டு. அலகிலா (முடிவே இல்லாத) தொடர் விளையாட்டு என்றால் அதுதான்.

இப்படி அனுபவமானது ஞானிகள் மூலம் வெளிப்படுகிறது. பார்ப்பதற்கு இது சாதாதரணமாகத் தெரியலாம். ஆனால் மெய்ப்பொருளை உணர்ந்து அனுபவத்தில் கண்டு தெளிய அவர்கள் பட்டபாடு?

உயிரைக் கொடுத்து வாங்குவது என்று சொல்வார்களே அப்படி உழைத்து உழைத்து உடம்பை மட்டுமா - உணர்ச்சியை யும் சேர்த்து சக்கையாய் பிழிந்து தியாகம் பண்ணிப் பெற்ற உண்மை.

அனுபவம் என்றால் அப்படி வருவது தானே! இந்த அனுபவம் விளங்கி ஆனந்தத்தில் திளைப்பவர்களுக்கல்லவா கடவுள் தத்துவம் விளங்கும்.

தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார் என்பது வெறும் வார்த்தைச் சிலம்பம் - சவுடால்தனம் அவ்வளவுதான்.

எங்கே இருக்கிறார் கடவுள் என்று பரீட்சையில் கேள்வி கேட்கலாம். அவர் தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார் என்று பதில் சொல்லலாம்.

கேட்பவக்கோ பதில் சொன்னவனுக்கோ கடவுள் காட்சி கொடுத்து விட்டாரா?

பட்டம் வாங்கி - உத்தியோகம் பார்க்கத்தான் தேர்வு(பரீட்சையு)ம் வெற்றியும் பயன்படும். மனசோடு

ஒட்டவே ஒட்டாது அது. இனி, தமிழின் கதையை எடுத்துக் கொண்டால் அதுவும் கடவுளின் கதை மாதிரிதான்.

தமிழ் எத்தனை வகைப்படும் என்று கேள்வி வரும். கொஞ்சம் தடபுடலாகவே வரும் கேள்வி.

''தமிழா! அது மூன்று வகைப்படும். இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்று மூன்று வகைப்படும்'' என்று மீசையில் கையைப் போட்டுக் கொண்டே பதில் வரும்.

தமிழ் ஒன்றுதான். தமிழின் ஒவ்வொரு அம்சமு(வார்த்தையு)ம் பொருளை உணர்த்துகின்றன. வறட்டுத்தனமாக அர்த்தம் சொல்வதோடு நின்று விடுவதில்லை தமிழ்.

இசைமயமாக உணர்த்துகிறது பொருளை. கண், காது, மூக்கு, நெற்றி, கை, கால் அத்தனையும் வைத்தது. ரூபலாவண்யத்தைக் காட்டுவது போல அனுபவத்தை இசையோடு சேர்த்துக் காட்டுகிறது தமிழ். ஒலியில் ஏற்றம் இறக்கம் வளைவு, குழைவு, நெளிவு, நயம், சுகம் அத்தனையோடும் தொடர்ந்து காட்டுகிறது தமிழ். அதனால் அதுவே இசையாகவும் பரிமளிக்கிறது. நாடகமாகவும் பரிமளிக்கிறது.

அங்கொரு துள்ளல், இங்கொரு பாய்ச்சல், என்று நடனத்தில் வைத்துக் காட்டுவது போலவே பல்வேறு சாயல்களில் வைத்து உணர்ச்சியையே பளிச் பளிச் என்று அபிநயம் பிடித்து காட்டிவிடுகிறது தமிழ். மேள தாள முழக்கத்தோடேயே காட்டி விடுகிறது தமிழ்.

இசையாகவும், நாடகமாகவும் இருக்கிறது தமிழ்.

இயல் என்று சொல்கிறோமே அந்த ஒரே தமிழ்தான். அதுதான் சொற்களாக உதித்து விதவிதமான பொருள்களை

இசையிலும் நாடகத்திலும் வைத்து வைத்துக் காட்டுகிறது. அப்படியானால் தமிழ் ஒன்றுதான். தமிழைத் தவிர தமிழில் ஒன்றும் இல்லை. அந்தத் தமிழ்தான் இயல் (பொருளுணர்த்தும் சொல்) என்றும், இசை என்றும், நாடகம் என்றும் அவதாரம் எடுக்கிறது.

வார்த்தை, தாளம், நடனம், ஒவ்வொன்றையும் நான் நான் என்று பேதப்படுத்தி ஆரவாரம் பண்ணச் செய்கிறது.

கடவுளின் லீலா விநோதம் போல தமிழின் லீலா விநோதமும் அனுபவிக்கத்தக்கதுதான்.

தமிழ்ப் பாடல்(கள்) என்றால் இசைமயம், நாடக மயமேதான். உண்மையான இசையையும், நாடகத்தையும் தமிழ்ப் பாடல்களில்தான் பார்க்க முடியும்.

பாடல்களை விட்டு விட்டு வெளியே பார்க்கிற சங்கீதம் வெறும் இரைச்சல்தான். நாடகமோ பேயாட்டந்தான்.

கம்பருடைய பாடல் ஒவ்வொன்றிலும் இசை பூத்துக் குலுங்கும். நாடகம் கமகமவென்று பரிமளிக்கும்.

வாணவேடிக்கையில் வெடித்து தீப்பொறிகள் சிதறும். அதேபோல உண்மையானது பச்சை, சிவப்பு, நீலம் என்று ஒளிச்சுடர்களாய் வெடித்துச் சிதறுவதுதான் நாடகம்.

நினைத்த மாத்திரத்தில் சும்மா சிதறுமா உண்மை? சிதறவே சிதறாது.

உண்மையானது உணர்ச்சிமயமாகப் பழுக்க வேண்டும். பக்குவமாக கனிய வேண்டும். அப்படி பழுத்துக் கனிவதை அனுபவிக்க அனுபவிக்க ஆனந்த உணர்ச்சி தேனாக ஊறும். அது சொட்டுச் சொட்டாக இறங்கும். அப்படி இறங்குவதுதான் ஒளிமயமாக வெடித்துச் சிதறும் உண்மை. அதுதான் நாடகம்.

மகாகவி கம்பர் சதா உண்மையை பார்த்து பார்த்து அனுபவிக்கிறவர். அவர் அனுபவித்துப் பார்க்கிற ஒவ்வொரு காட்சியையும் நமக்கு காட்டுவார்.

நாம் கண்டுகளிக்க இடம் கொடுப்பதுதான் அவருடைய கைங்கர்யம். எப்படி என்று பார்ப்போம்.

ராவணன் என்றால் அழுதபிள்ளை வாயை மூடும். மரங்களையும், கரும்பாறைகளையும் வேர்ப்பிடுங்காகப் பிடுங்கி எறியும் சூறாவளிக் காற்றுக் கூட ராவணன் என்றால் பயப்படும். அப்படியே தன் வேகத்தையும், கோபத்தையும் மூட்டை கட்டிவைத்துவிட்டு ஒரு மூலையில் போய் படுத்துக் கொள்ளும். ஒரு போர்வையை இழுத்து மூடிப் போர்த்தி படுத்துக் கொள்ளும். சண்ட மாருதம் என்கிற சூறாவளியே!

அவ்வளவு வல்லமை பொருந்தியவன் ராவணன். அவன் பண்ணாத அட்டகாசமே இல்லை. முனிவர்கள், யோகிகள், ஞானிகள், எல்லோருமே கைகட்டி வாய் பொருத்தி அவன் சொன்னபடி கேட்பார்கள்.

அப்பேர்ப்பட்ட ராவணன் ஒரு பெண்ணின் அழகில் மயங்கிவிட்டான். கண்ணால் பார்க்கக் கூட இல்லை. காட்டில் இப்படி இப்படி அழகுள்ள ஒரு பெண் நடமாடுகிறாள் என்றாள் சூர்ப்பனகை. பெண்ணழகைச் சூர்ப்பனகை சொல்லச் சொல்ல தண்ணீராய் கரைந்துவிட்டான் ராவணன்.

மாரீசன் என்பவன் ராவணனுக்குத் தாய்மாமன். அவனையே பொன்மான் வடிவெடுத்து அந்தப் பெண்ணிடம் போய் சீதை முன் விளையாடு என்று ஏவிவிட்டாள்.

அப்படி ஏவிவிட்டு திருட்டுப்பயல் மாதிரி காட்டில் ஒளிந்து நின்று என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டே இருந்தான்.

இந்த மானை எனக்கு பிடித்துத் தரவேண்டும் என்று ராமனை வற்புறுத்தினாள் சீதை. ராமனும் மானுக்கு பின்னே நெடுந்தூரம் போய்விட்டான்.

மானைப் பிடிக்க முடியாது என்று ராமனுக்குப்பட்டது. திருட்டுத்தனம் பண்ணுகிறது மான் என்பதும் அவனுக்குத் தெரிந்துவிட்டது. கோபம் வந்தது. வில்லை வளைத்து ஒரு அம்பை மான்மேல் விட்டான். சுருண்டு விழுந்த மான் ''ஐயோ லட்சுமணா'' என்று ராமனைப் போலவே கூப்பாடும் போட்டது.

சத்தத்தில் காடு முழுவதும் குலுங்கிவிட்டது. சீதை பதறிவிட்டாள். லட்சுமணனைப் பார்த்து ''உன் அண்ணனை காப்பாற்று'' என்று விரட்டினாள்.

லட்சுமணன் சத்தத்தில் ஏதோ சூது இருக்கிறது என்று தீர்மானித்தான். அதனால் போவதற்கு தயங்கினான். ஆனாலும் சீதை விடவில்லை. கோபத்தில் கன்னாபின்னா என்று திட்டியே அனுப்பிவிட்டாள்.

லட்சுமணனும் போய்விட்டான்.

ராமபிரானுக்கு என்ன நேர்ந்ததோ என்னும் கவலையில் கலங்கிவிட்டாள் சீதை. கண்ணீர் வடிவதுகூடத் தெரியாமல் கலங்கி நின்றாள் சீதை.

இவ்வளவையும் திருட்டுத்தனமாக பார்த்துக் கொண்டிருந்தான் ராவணன்.

ராமனும் இல்லை. லட்சுமணனும் இல்லை. இதுதான் சமயம் என்று வயதானந சந்நியாசி போல் வேஷம் போட்டு சீதை இருக்கும் இடம் நோக்கி வருகிறான் ராவணன்.

*பர்ணகசாலையின் முற்றத்துக்கே வந்துவிட்டான் ராவணன். வந்து ''யார் இருக்கிறது'' என்று சத்தம் போட்டான்.*

*யாரோ வயதான சந்நியாசி அல்லவா வந்திருக்கிறார் என்கிற பரபரப்பில் கண்ணீரை துடைத்துக் கொண்டே முற்றத்துக்கு வந்தாள் சீதை.*

*கண்ணாரப் பார்த்துவிட்டான் ராவணன். அப்படியே சொக்கி அந்த அழகில் மதி மயங்கிப் போனான் ராவணன்.*

*மயக்கத்தில் எப்படி வருகிறது அவனுக்கு நினைப்பு.*

*''என் கைவசம் உள்ள சாம்ராஜ்யம் முழுவதையும் மூன்று உலகங்களையும் இந்த அம்மாளிடம் கொடுத்துவிடுவேன். இந்த அம்மாதான் இனி சக்கரவர்த்தினி. தேவர்கள், அவுணர்கள், அவர்களின் பெண்டு பிள்ளைகள் எல்லோரும் இனி சீதைக்குத்தான் தொண்டு செய்வார்கள். நானும் ஒரு அடப்பக்காரன் மாதிரி இந்த அம்மா சொல்கிற கட்டளைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவேன்''.*

*இனிப் பாடல்*

தானன தானன
தான தன்னை

தேவரும் அவுணரும்
தேவி மாரொடும்
கூவல்செய் தொழிலினர்
குடிமை செய்திட
மூஉல க மும் இவர்
முறையின் ஆளயான்
ஏவல் செய்(து) உய்குவென்
இனிதென்(று) உன்னினான்.

ராவணனுடைய நினைப்பும் எக்களிப்பும் உண்மையானது. காதல் வெறியில் சிக்கிய ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் இப்படித்தான் நினைக்கும். இப்படித்தான் எக்களிக்கும்.

உண்மையை அப்படி உணர்ச்சிமயமாக பழுத்துத் தேன் சொட்ட வைக்கிறது தமிழ்.

சீதைக்கு மகுடாபிஷேகம் செய்துவிட்டு அவளுக்கு குற்றேவல் செய்தால்தான் எனக்கு நிம்மதி என்று நினைத்தான் ராவணன். நினைத்தது உண்மைதான்.

ஆனால் இரண்டு நிமிடம் கூட அந்த நினைப்பு நிலைத்து நிற்கவில்லை. அதற்குள் புத்தி மாறிவிட்டது.

எப்படி மாறியது புத்தி?

சாம்ராஜ்யம் முழுவதையும் சீதைக்கா கொடுப்பது? சேச்சே! இந்த பேரழகியை கண்டு துப்புக் கொடுத்த என்தங்கை சூர்ப்பணகைக்கு அல்லவா கொடுக்க வேண்டும்!

அவள் சொல்லவில்லை என்றால், இந்த மாதரசி எனக்கு எப்படி கிடைப்பாள்?

இப்படி அலை மோதுகிறான் ராவணன். கண்ணீர் விட்டுக் கலங்கி நிற்கும் இந்த நேரத்தில் கூட ஜெகஜோதியாக காட்சி அளிக்கிறாளே! அப்படியானால் சந்தோஷமாய் இருக் கிற பொழுது எப்படி இருப்பாள் இந்த பெண்மணி! அடடா, அந்த அழகை இந்த இருபது கண்களால் தாங்க முடியுமா?

இந்த அழகுத் தெய்வத்தை எனக்கு உதவிய என் தங்கையை எப்படி மறக்க முடியும் நான்? இப்படி தத்தளிக்கிறான் ராவணன்.

உளைஉறு
ஒளிஇ
முளைஎயி(று)
முறுவல்
தளை அவிழ்
கண்டு
இளையவட்(கு)
அரசென்(று)

துயர்முகத்(து)
தாம்எனில்
இலங்கிடு
என்படும்!
குழல் இவள்
தந்த என்
அளிப்பன் என்
எண்ணினான்.

எழுத்தெண்ணிப் படிப்பவர்கள், வார்த்தைக்கு வார்த்தை அப்படி இப்படி என்று ஆராய்ச்சி பண்ணுகிறவர்கள் மேலே சொல்லிய இரண்டு பாடல்களையும் பார்த்தால் முன்னுக்குப் பின் முரண் என்று தள்ளிவிடுவார்கள்.

சொற்குற்றம் என்பார்கள். பொருட்குற்றம் என்பார்கள். ராவணன் அப்படி மாறி மாறி நினைப்பது பொருத்தமற்றது என்பார்கள்.

கம்பரையே முட்டாள் என்று கூடச் சொல்லி விடுவார்கள்.

காரணம் இலக்கணம் படித்துவிட்டார்கள். படித்தது மட்டுமல்ல. இலக்கணத்தையே பார்த்துக் கொண்டிருக் கிறார்கள்.

வாழ்க்கையை, மனம் என்னும் மாயச் சித்தை, உணர்ச்சிகளை இவைகளை எல்லாம் நேருக்கு நேராக பார்க்க வேண்டும். பார்த்தால் மட்டும் போதாது. அனுபவிக்க வேண்டும்.

ஒன்றையும் அனுபவிக்காமல் எல்லாவற்றையும் இலக்கணத்தை வைத்தே பார்த்தால் உருப்படவா செய்யும்?

இனி வேறொரு காட்சி.

தாடகையைத் தீர்த்துக் கட்டிவிட்டான் ராமன். விஸ்வாமித்திரர் காரியம் முடிந்தது. ராமலட்சுமணர்களை அழைத்துக் கொண்டு மிதிலைக்குப் போகிறார் விஸ்வா மித்திரர்.

போகிற போக்கில் மகாபலிச் சக்கரவர்த்தி பற்றிய கதையை அவர்களுக்கு முனிவர் சொன்னார்.

மகாபலியை ஒருவராலும் வெல்ல முடியவில்லை. அவ்வளவு நல்லவனாக இருந்தான் அவன். அப்படி ஒருவன் நல்லவனாக இருந்தால் இடையூறு செய்ய பலரும் அணி வகுப்பது இயல்புதானே.

தேவர்கள் திருமாலிடம் வந்து இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கோள் மூட்டினார்கள். திருமாலும் நம்பிவிட்டார்.

வாமனாக (சிறிய குள்ளனாக) அவதரித்தார். மகாபலியிடம் வந்து மூன்றடி மண் வேண்டும் என்றான் வாமணன். எடுத்துக் கொள் என்றான் சக்கரவர்த்தி. கொடுக்கக் கூடாது என்றார் மந்திரி.

கேட்கவில்லை அரசன். இதோ பிடி என்று தாரை வார்த்தே கொடுத்துவிட்டான் அரசன். அவ்வளவுதான் விண்ணுக்கும் மண்ணுக்குமாய் நிமிர்ந்து நிறைந்து விட்டான் குள்ளன்.

ஓரடியால் மண்ணுலகை அளந்தான். இன்னொரு அடியால் விண்ணுலகை அளந்தான். கடைசி அடியால் வாமனனையே அளந்துவிட்டான். அதாவது அவரை ஒன்றும் இல்லாத சைபர் ஆக்கிவிட்டான்.

அப்புறம் என்ன?

ராஜ்ஜியத்தை இந்திரனிடம் கொடுத்துவிட்டு மகாவிஷ்ணு போய்விட்டார்.

(மகாபலி) கதையே நாடகம் போல இருக்கிறது. கம்பர் அந்தக் கதையை சொன்னால் நாமே அந்த நாடகத்தில் நடிப்பது போலவே இருக்கும்.

இனி, நாடகத்தை எப்படி முடிக்கிறார் கம்பர் என்று பாருங்கள்.

அலுத்துச் சலித்து திருப்பாற்கடலில் போய் படுத்தாராம் மகாவிஷ்ணு.

லட்சுமிதேவிக்கு திருமாலைப் பார்த்தது சந்தோஷமாக இருந்தது. ஆனாலும் அவர் அலைந்து திரிந்து, மேல் கால்வலியோடு வந்து சேர்ந்தது கொஞ்சம் வருத்தம்தான்.

எதற்கு இந்த ஊர்வம்பு என்பது தேவியின் நினைப்பு.

அந்த நினைப்போடு பெருமானின் அலுப்புத்தீர- அவர் நன்றாக உறங்க அவருடைய காலை வருடி வருடி பிடித்துவிட்டாராம் சாட்சாத் லட்சுமிதேவி.

திருமாலின் நிறம் கருப்பு. தேவியின் நிறமோ சிவப்பு. செக்கச்சிவந்த நிறம் கரிய காலில் படப்பட என்ன ஆயிற்று?

இதோ வருகிறது பாடல்.

உரிய(து) இந் திரற்கிதென்(று)
உலகம் ஈந்துபோய்,
விரிதிரைப் பாற்கடல்
பள்ளி மேயினான்
கரியவன்; உலகெலாம்
கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச்
சிவந்து காட்டிற்றே!

*திருமால் (கரியவன்) கருப்பு. அவர் காலும் கருப்புத்தான். ஆனாலும் அந்தக் காலில் பட்டகை எப்பேர்ப்பட்ட கை. மஞ்சள் கிழங்காய்ச் சிவந்தகை அல்லவா? அது படப்பட இதுவும் சிவந்துவிட்டதாம்.*

*நாடக நயம் என்றால் கம்பர் காட்டும் காட்சிதான்.*

5

# நாடகமே உலகம்

**வா**ழ்க்கை என்றால் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் அற்புதம். அந்த அற்புதத்தில் லட்சோப லட்சம் அனுபவங்கள் உண்டாகின்றன. அவ்வளவையும் கண்கொண்டு பார்க்கிறது, பார்த்துப் பார்த்து உணர்ச்சிமயமாய் உருகுகிறது மனம்.

உள்ளம் உருக உருக உதிக்கிற உணர்ச்சியின் ஒரு அபூர்வ சாயலை வண்ணம் குலையாமல் அப்படியே படம் போட்டுக் காட்டி விடுகிறது பாடல். அப்படி ஓவியமாய் எழுந்து நிற்பதுதானே நாடகம்.

இனி வேறொரு காட்சி.

சீதையை ராவணன் இலங்கைக்கே கொண்டு போய்விட்டான். வனவனாந்திரங்களை எல்லாம் தேடி அலைந்து திரிந்து வருகிறார்கள் ராமலட்சுமணர்கள்.

கிஷ்கிந்தைப் பக்கமே வந்துவிட்டார்கள். அங்கே ஒரு குன்றின் சரிவில் இருக்கிறார்கள். இவர்களுடைய திவ்ய சொரூபத்தை ஒரு உச்சியிலிருந்து தற்செயலாக பார்த்தான் அனுமன்.

அப்படியே உருகிக் கரைந்துவிட்டான். அவனுக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை.

நேராக ராமலட்சுமணர்களிடமே வந்து சேர்ந்தான். வணங்கினான். மனசில் உண்டான உணர்ச்சிகளை எல்லாம் அவர்களிடம் கொட்டினான்.

அனுமனுடைய தோற்றம் சாதாரணமாக இருந்தது. ஆனால் அவன் வார்த்தைகளுக்குள் இருக்கிற நயம், வேகம், ஒழுங்கு, மரியாதை ஒவ்வொன்றும் பார்க்கப் பார்க்க அதிசயத்தை உண்டாக்கின.

நம்ப முடியவில்லை அவர்களால். அனுமனை மாறி மாறிப் பார்த்தார்கள். அதிசயப்பட்டார்கள்.

அதிசய பாவம் எப்படி துள்ளித் துள்ளிக் குதியாட்டம் போடுகிறது என்று பாருங்கள்.

லட்சுமணன் கையை ராமன் இறுகப் பிடித்துக் கொண்டே சொல்கிறான். ''இவன் சாதாரண மனிதன் இல்லை. சொல்லின் செல்வன். இவனுக்குள் இருக்கிற ஞானஒளியைப் பார்த்தால் பிரம்மதேவன் கூட அதிசயப்படுவான். ஏன், சிவபெருமான் கூட திகைத்துவிடுவார்.

கலைகளுக்கெல்லாம் இவன்தான் நாயகன். அனுபவங்களுக்கும் இவன்தான் வழிகாட்டி.

மனித சஞ்சாரம் இல்லாத இடத்துக்கு மனிதர்கள் புதிதாகப் போய் குடி ஏறினாலும் அங்கு கூட இவன் பெருமைதான் ஏற்கனவே இருந்து கொண்டு ஜொலிக்கும்.''

இப்படிச் சொல்கிறான் ராமன். ''வில்லார் தோள் இளைய வீர'' என்று லட்சுமணன் தோளைப் பிடித்து ஒரு குலுக்கு குலுக்கியே சொல்கிறான் ராமன்.

*அனுமனைப் பற்றி அவ்வளவு சந்தோஷம் ராமனுக்கு.*

*இனிப் பாடல்*

தானன தானன தன்
தானன தானன தன்

இல்லாத உலகத் தெங் கும்
ஈங்கிவன் இசைகள்கூ ற
கல்லாத கலையும்வே தக்
கடலுமே அணையகாட் சி
சொல்லாலே தோன்றிற்(று)அன் றே
யார்கொல்இச் சொல்லின்செல் வன்!
வில்லார் தோள் இளையவீ ர
விரிஞ்சனோ விடைவல்லா னோ!

*(இல்லாத உலகம் - மனித நடமாட்டம் இல்லாத செவ்வாய், புதன் முதலிய கிரகங்கள். கல்லாத கலை - அனுபவம், விரிஞ்சன் - பிரம்மா, விடைவல்லான் - காளைவாகன மூர்த்தி - சிவபெருமான்)*

*அனுமானுடைய உருவத்தை பார்க்கிறான். அவனுடைய மனசையும் பார்க்கிறான். முதலில் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாதவை போல் இருந்தன.*

*அனுமனுடைய தெளிவையும் உறுதியையும் பணிவையும், கனிவையும் நோக்க நோக்க அவன் மேனிக்குள்ளேயே ஏதோ ஒன்று ஒளிந்து கிடக்கிறது என்று நம்பினான் ராமன்.*

*அந்த ஆற்றல் இன்னதென்று தெரிய வேண்டும் என்று விரும்பினான். அதனால் அவனை விடாமல் மாறி மாறி*

விசாரித்தான். விசாரிக்க விசாரிக்க - உறவாட உறவாட, அதாவது அனுமனுடைய முழு ஆற்றலையும் தெரியும் வரை ராமனுக்கு அதிசயமாக இருந்தது.

பலவகைப்பட்ட யோக சாதனங்களால் உடம்பை ஒடுக்கவும் முடியும். விரிக்கவும் முடியும் என்பதை ராமலட்சுமணர்களுக்கு அனுமன் காட்டினான். அதைப் பார்த்தவுடன் அதிசயம் போய்விட்டது. அனுமன் மேல் பக்தியே உண்டாகிவிட்டது. ராமலட்சுமணர்களுக்கு பக்தியானது ஊற்றுப் பெருக்கெடுத்து பொங்கி வருவதை பாடலில் பார்க்கலாம்.

விழித்த கண்ணை மூடாமல் அப்படியே அதிசயத்தில் அனுமனை பார்த்துக் கொண்டே இருந்தானாம் ராமன்.

இதழ் (தாழ்) மூடாத தாமரை மலர்போல இருந்ததாம் ராமனுடைய கண்கள்.

பார்த்துப் பார்த்து வியந்தான். வியப்பில் அடடா! (அம்மா) என்றே சத்தம் போட்டு விட்டான் ராமன்.

''வேதங்களுக்கும் ஞானத்துக்கும் சிக்காத பரம்பொருள்தான் இப்படி (ஒரு அனுமனாக) அவதாரம் எடுத்து வந்திருக்கிறது'' என்று சொல்லி சொல்லி பரவசப்பட்டான் ராமன்.

இனி, கீழான மாயையை ஒட்டவிடமாட்டான் இறைவன். அவன் பூரணமானவன். புதிதாக உண்டாவதற்கு ஒன்றும் இல்லை இறைவனிடம்.

அந்த இறைவன்தான் இந்த அனுமன் என்கிறான்.

இனிப்பாடல்

தாழ்ப்படாக் கமலன் அன் ன
தடங்கணான் தம்பிக்(கு)அம் மா!
கீழ்ப்படா நின்ற நீக் கி,
கிளைபடா தாகி,என் றும்
நாள்ப்படா மறைகளாலும்
நவைபடா ஞானத்தாலும்
கோள்ப்படா பதமேஜ ய!
குரக்குருக் கொண்டதென்றான்

அற்புதமான நாடகம். நாடகம் என்றால் கம்பர் காட்டுகிற நாடகந்தான் நாடகம்.

ஒரு பாத்திரத்தை இவ்வளவு தெளிவாய் காட்டிய இடம் உலகில் வேறு எங்கும் இல்லை என்று உறுதியாய் சொல்லலாம்.

பக்தியை - அதாவது உள்ளத்து உணர்வை அப்படியே பாலாகவும் பன்னீராகவும் கொட்டி அபிஷேகம் செய்கிறது தமிழ்.

நாம் சக்ரவர்த்தி திருமகன் ஆயிற்றே. அவன் சாதாரண வானரந்தானே என்று ஆணவத்தில் நின்றால் உண்மை வருமா, உணர்ச்சி வருமா?

பேதம் விலகவேண்டும். ஆணவம் ஒதுங்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மை தெரியும்.

உண்மையானது உணர்ச்சிமயமாக பூரித்து விம்முகிற அற்புதமே இங்கே கம்பர் காட்டும் நாடகமாக் எழுந்து வந்திருக்கிறது.

இனி வேறொரு காட்சி.

சக்ரவர்த்தி திருமகனாகிய ராமன் காட்டுக்கு வந்துவிட்டான். சீதை, லட்சுமணன் இருவரும் கூடவே புறப்பட்டு விட்டார்கள்.

பெரிய சாம்ராஜ்யம் ஒன்றையே தேவை இல்லை என்று உதறி எறிந்துவிட்டான் ஒருவன் என்றால் அவனை நோக்கி எல்லோருடைய உள்ளமும் ஓடத்தானே செய்யும்.

சாம்ராஜ்யத்தை வேண்டாம் என்று விட்டுக் கொடுத்ததோடு நிற்கவில்லை. ஆடம்பரமான சுகபோகங்கூட வேண்டாம். வனவாசம் பண்ண காட்டுக்குப் போகிறேன் என்று புறப்பட்டால் அவனை தெய்வமாக மதிப்பது இயல்புதான்.

இருபது இருபத்தோரு வயது வாலிபன், வாழ்க்கையில் எப்படி எப்படியோ படாடோபமாக வாழவேண்டும் என்று கனவு காண்கிற இளைஞன். கைப்பிடித்து தாலி கட்டிய இளம் மனைவியோடு காட்டுக்குப் புறப்பட்டு விடுகிறான் என்றால், எனக்கு எதுவும் வேண்டாம் என்று ஊக்கத்தோடு புறப்பட்டு விடுகிறான் என்றால் ஜனங்களை அது உருக்காமல் எப்படி இருக்கும்?

அயோத்தியில் உள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் கூட பட்டாளம் பட்டாளமாக ராமனைச் சுற்றி திரண்டு விட்டார்கள்

ராமனைப் பின் தொர்ந்து அவன் போகும் இடம் எல்லாம் நிழல்போல வருகிறார்கள் ஜனங்கள்.

தனக்காக இத்தனை பேரும் சிரமப்படுகிறார்களே என்பதை எண்ணி எண்ணி ராமன் வருந்துகிறான். பெண்களும், குழந்தைகளும் சாப்பிடாமல் - தண்ணீர் கூட குடிக்காமல்

காட்டிலும், மேட்டிலும் நடந்தே வருவதை நோக்கி நோக்கி மனம் இடிகிறான்.

இனி, ''எப்படியாவது ராமனை அயோத்திக்கு அழைத்து வந்துவிடு. அவன் வந்தால்தான் எனக்கு உயிர். இல்லையென்றால் நான் செத்த பிணந்தான்' என்று தன தேரையும் பாகன் சுமந்திரனையும் அனுப்பிவிட்டான் தசரதன்.

தேர்ப்பாகன் சுமந்திரனும் தேரை அவர்கள் பின்னே மெள்ள மெள்ள ஓட்டிவருகிறான்.

''நீ ராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டாம். அயோத்தியில் சும்மா இருந்தால் போதும்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டே வருகிறான் சுமந்திரன்.

எங்கெங்கோ சுற்றி இரவு பத்துமணி அளவில் ஒரு வனாந்திரத்தில் வந்து தங்கினார்கள். நடந்து வந்த அலுப்பில் ஜனங்கள் அங்கங்கே படுத்தார்கள். அப்படி அப்படியே தூங்கிவிட்டார்கள். தரைதான் மெத்தை. கைதான் தலையணை.

பசியோடும், களைப்போடும் ஜனங்கள் படுத்துக்கிடப்பதை பார்த்து ராமனுடைய இதயம் இடிந்துவிட்டது.

சரியான கும்மிருட்டு. இரவு பதினோரு மணி இருக்கும். சுமந்திரனை கூப்பிட்டான். பக்கத்தில் உட்கார வைத்தான். ''நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்'' என்றான்.

என்ன என்றான் சுமந்திரன்.

சத்தம் இல்லாமல் மெள்ள இப்பொழுதே தேரை நீ அயோத்திக்கு கொண்டுபோய் விடு. நாங்களும் இவர்கள் விழிப்பதற்குள் இரவோடு இரவாய் வெகுதூரம்

போய்விடுகிறோம். காலையில் எழுந்தவுடன் தேர் தடத்தை பார்த்து அயோத்திக்கே திரும்பி விடுவார்கள் இவர்கள். வேறு உபாயம் இல்லை,'' என்றான் ராமன்.

உச்சியில் வந்து இடி விழுந்தது போல இருந்தது சுமந்திரனுக்கு இந்த வார்த்தை.

''அப்படியானால் உன் தந்தைக்கு என்னை எமனாக அனுப்புகிறாயா நீ'' என்று காலில் விழுந்து அலறினான் சுமந்திரன்.

சுமந்திரனை வாரி எடுத்தான் ராமன். மார்போடு அணைத்தான். முதுகைத் தடவிக் கொடுத்தான். பல வழிகளிலும் அவனை தேற்றினான்.

என் தந்தையையும், என் தந்தையை பெற்றெடுத்த குலத்தையும் பழியிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்றால், இது ஒன்றைத் தவிர வேறு வழி இல்லை'' என்று தெளிவுபடுத்தினான் ராமன்.

ஓரளவுக்கு வழிக்கு வந்துவிட்டான் சுமந்திரன்.

அப்படியானால் நான்போய் உன்னை எதிர்பார்த்து நிற்பவர்களிடம் என்ன சொல்ல என்று கேட்டான் சுமந்திரன்.

என் தாய்மார் மூன்று பேரிடமும் என் மனங்கனிந்த வணக்கத்தைச் சொல். தந்தையை மனம் தளரவிடாமல் கவனித்துக் கொள்'' என்றான் ராமன்.

சரி, சரி என்று தலையாட்டினான் சுமந்திரன். தயைாட்டிவிட்டு சீதையை பார்த்தான். ''அம்மா சொல்லிவிட்டதாக நான் என்ன சொல்ல'' என்று உள்ளம் உருகக் கேட்டான் ராமன்.

என்ன சொல்வது என்று வியந்து கொஞ்சம் வெட்கப்பட்டாள் சீதை. பிறகு தைரியமாக சொன்னாள்.

மாமாவுக்கும், அத்தைமார் மூவருக்கும் என் வணக்கத்தை சொல்ல வேண்டும். வளர்த்த கிளியையும், மைனாவையும் அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட்டேன். கிளியையும், மைனாவையும் கவனித்துக் கொள்ளும்படி வேண்டினேன் என தங்கைமார்களிடம் சொல்ல வேண்டும். மறந்துவிடக் கூடாது. ஞாபகம் என்றாள் சீதை.

இந்த வார்த்தையை சீதை சொன்னாளோ இல்லையோ சுமந்திரனின் இதயம் சுக்கல் சுக்கலாய் நொறுங்கிவிட்டது. ''அடடா, கள்ளம் கபடம் இல்லாத இந்த பேதை பெண்ணுக்கா இந்த கதி. முள்ளிலும் கல்லிலும் அர்த்த சாமத்தில் காட்டில் நடந்து போகிற வயதா இது'' என்று நினைத்தானோ இல்லையோ அம்மா, ஐயோ, ஐயையோ என்று அலறிவிட்டான். தன் முகத்தில் அடித்து அடித்து விம்மி விம்மி கூப்பாடு போட்டான்.

ராமன் அவன் கையை அழுத்திப்பிடித்துத் தேற்றத்தான் செய்தான். ஆனாலும் பீறிட்டுப் பொங்கும் உணர்ச்சியை சுமந்திரனால் அடக்க முடியவில்லை.

''இந்த கொடுமையைப் பார்த்தும் என் உயிர் போக மாட்டேன் என்கிறதே'' என்று கூப்பாடே போட்டுவிட்டான் சுமந்திரன்.

சீதைக்கு ஒன்றுமே ஓடவில்லை. நாம் என்ன சொன்னோம். தப்பாக ஒன்றும் சொல்லவில்லையே? பிறகு ஏன் இவன் இப்படி வருந்தவேண்டும்,'' என்று திகைத்து மறுகினாள் சீதை.

*இந்த அற்புதம் எப்படி எழுந்து வருகிறது என்று பாருங்கள்.*

**தேர்வலான் அவ்வுரை**
**கேட்டுத் தீங்குறின்**
**யார்வலார் உயிர்துறப்(பு)**
**அரிதின் றே எனாப்!**
**போர்வலாள் தடுக்கவும்**
**பொருமி விம்மினான்**
**சோர்விலாள் அறிகிலாத்**
**துயர்க்குச் சோரவே**

*அற்புதமான காட்சி. நான்கே கோடுகளில் மனுசவாழ்க்கையின் தவிப்பையும் திகைப்பையும் அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறது தமிழ். கம்பருடைய தமிழ்.*

*தேரை ஓட்டிக் கொண்டு சுமந்திரன் அயோத்திக்கு போய்விட்டான். இரவு பன்னிரண்டுமணி. நடுச்சாமம். கண்ணுக்கு ஒன்றுமே தெரியாத மையிருள்.*

*அந்த இருளில் ஜனங்களுக்கு தெரியாமல் அங்கிருந்து புறப்பட்டுவிட்டான். ராஜாதிராஜனாகிய இளைஞன்! ராஜ்யத்தையே வேண்டாம் என்று எறிந்துவிட்டு இருட்டில் காட்டு வழியில் நடந்து போகிறான் என்றால் அதுவல்லவா ஞானம்? அதுவல்லவா தியாகம்?*

*தெய்வம் தெய்வம் என்று மக்கள் கூப்பாடு போடுகிறார்களே! அந்தத் தெய்வம் இந்த தியாகத்தில்தான் இருக்கிறது.*

ராமன் நடப்பது இருக்கட்டும். அந்த மை இருட்டில் - ஒருத்தர் முகம் ஒருத்தருக்குத் தெரியாத கும்மிருட்டில் குண்டிலும் குழியிலும் நடந்து வருகிறாளே பதினாறு வயதுப் பெண், அவள் தியாகத்தை என்னவென்று சொல்ல?

தெய்வங்களுக்கெல்லாம் வழிகாட்டும் பெருந்தெய்வம் என்றுதான் போற்ற வேண்டும்.

ராமன், சீதை, லட்சுமணன் மூவரும் இருளில் காட்டில் தத்தித் தத்தி நடந்து போகிறார்கள். அவர்கள் போகிறதை கம்பர் பார்க்கிறார். அவர் உள்ளம் உருகிவிடுகிறது.

உள்ளம் உருகினால்தானே மரியாதை வரும்? இன்னொன்றை மதிக்கத் தோன்றும்.

மதிக்கவும் மரியாதை செய்யவும் தெரிந்து கொண்டால் போதும். உலகில் பிரச்சனைகளே இருக்கமாட்டா.

மரியாதை (பக்தி) ஒன்றுதான் இல்லை. அதை உண்டாக்குவதுதான் கவியின் காரியம்.

அர்த்த சாமத்தில் ராமன் கிளம்பிவிட்டான். அப்படி ஊக்கமாய் கிளம்ப அவனுக்கு ஆதாரமாக இருப்பவை எவை, அவனுடைய வலுவான வில், அவனுக்காக உயிரையே கொடுக்கும் தம்பி லட்சுமணன், இரண்டையும் சொல்லலாம்.

இந்த இரண்டையும் விட முக்கியமான ஒன்று இருக்கிறது. அது என்ன?

அதுதான் ராமனுடைய லட்சியம், தியாகம், பொறுமை. உண்மை உண்மை உணர்ச்சி எனலாம். அதையும் விட இன்னொன்று இருக்கிறது.

அது என்ன?

*சுகபோக வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு கணவனே கண்கண்ட தெய்வம் என்று ஒரு கல்யாணப்பெண் - கல்யாணம் ஆகி இரண்டு மாதத்தில் காட்டிலும் மேட்டிலும் உல்லாசமாய் நடந்து வருகிறாளே அந்தப் பெண்மணியின் கற்பு.*

*சீதையும் தியாகமும் உல்லாசமுந்தான் ராமனுக்கு கவசம்.*

*கருணையே மனித உருத்தாங்கி காட்டில் நடந்து போவதுபோல இருக்கிறது கம்பருக்கு.*

*நமக்கும் அப்படித்தான்.*

*இனிப்பாடல்.*

**தையல்தன் கற்பும்தன்**
**தகவும், தம்பியும்,**
**செய்யகை வில்லுமே**
**சேமமாகக் கொண்டு,**
**மையறு கருணையாய்**
**வையம் வந்துள**
**ஐயனும் போயினான்**
**அல்லின் நாப்பணே.**

*ராமன், சீதை, லட்சுமணன் மூவரும் நடந்து போகிறார்கள். இருண்ட கானகத்துக்குள் அவர்கள் போனாலும் நம் கண்களில் தெளிவாய்த் தெரிகிறார்கள்.*

*அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். நம்மையறியாமல் நாமே அவர்கள் பின் போய்க் கொண்டே இருக்கிறோம்.*

இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. குறுக்கே வந்து போகாதே போகாதே என்று வழிமறிப்பது போல இருக்கிறது இருட்டின் அழுத்தம்.

ராட்சதர்களிடம் லஞ்சம் பெற்று அவர்களின் கைக்கூலியாய் வந்து ராமலட்சுமணர்களை தடுக்கிறதோ என்று சொல்லும்படி இருக்கிறது இருட்டின் திருட்டுத்தனம்.

இரவு பன்னிரண்டுமணி. நள்ளிருள். தட்டுத் தடுமாறி நடந்து போகிறார்கள். அப்பொழுது சந்திரன் பூரணமாய் உதித்து எழுந்தருளி வருகிறான்.

ஜகஜோதியயாய் பிரகாசிக்கிறது நிலா. அடர்ந்த காட்டுக்குள் நிலா ஒளி திட்டுத்திட்டாய் விழுகிறது. மரங்களுக்குள்ளும், கிளைகளுக்குள்ளும், இலைகளுக்குள்ளு மாய் விழுந்து நிலா ஒளி தரையில் வந்து படிகிறது. பாதையில் இருளும் ஒளியும் பின்னிப் பின்னி அங்கங்கே கிடக்கின்றன.

ராஜகுமாரியாகிய இளநங்கை அல்லவா சீதை. அவளுடைய பூவினும் மெல்லிய பாதங்கள் அல்லவா காட்டில் நடந்து வருகின்றன. குண்டிலும் குழியிலும் நடந்து அந்த பாதங்கள் நொந்துவிடுமே என்று சந்திரன் இரக்கப்பட்டான்.

அதற்காக அவள் நடந்து வருகிற வழி எல்லாம் வெண்பஞ்சை பரப்பின மாதிரி இருந்தது நிலா ஒளி.

அவளுக்காகத்தான் நிலா அப்படி ஒரு ஏற்பாடு செய்தது. அவள் புண்ணியத்தில் இவர் (ராமலட்சுமணர்)களும் சுகமாக நடந்து போனார்கள்.

ராமன் ஒரு கருப்பு. லட்சுமணன் சிகப்பு. சிகப்பில் பொன்னிறம்.

*ராமனை ஒட்டியே லட்சுமணன் இருப்பான். அப்படி இருப்பது, கருமலைக்கு பொன்னாடை பீதாம்பரம் போர்த்தியது மாதிரித்தான்.*

*இனிப்பாடல்*

அஞ்சனக் குன்றம்அன் ன
அழகனும், அழகன்தன் மேல்
எஞ்சலில் பொன்போர்த்(து) அள்ள
இளவலும், - இந்து என் பான்
வெஞ்சிலைப் புருவத்தாள் தன்
மெல்லடிக்(கு) ஏற்ப வெண் ணூல்
பஞ்சிடைத் தொடுத்தால் என் ன
வெண்ணிலாப் பரப்பப்போ னார்

*அற்புதமான பாட்டு.*

*கம்பர் காட்டுகிற உண்மைதான் உண்மை. வாழ்க்கை என்றால் அதுதான். குடும்பம் என்றாலும் அதுதான்.*

*குடும்ப வாழ்க்கையில் தொடர்ந்து ஊறிப் பெருகுகிற உணர்ச்சிகளை பார்த்துப் பார்த்து வியக்கிறார். நம்மையும் வாருங்கள் வாருங்கள் என்று கூப்பிடுகிறார். பார்க்க இடம் கொடுக்கிறார்.*

*அப்படி இடம் கொடுப்பதுதானே நாடகம்.*

*இனி மற்றொரு காட்சி.*

*ராவணன் ஏவிவிட்ட பொன்மான், மாரீசன் என்னும் பொய்மான் சீதை முன் வந்து நடமாடியது.*

சீதை மலர் கொய்துகொண்டு இருந்த நந்தவனத்தின் பக்கத்தில் வந்தே மான் நடமாடியது.

மானின் அழகில் சீதை மனம் வைத்துவிட்டாள். அதைப் பிடித்துத் தரும்படி ராமனிடம் வேண்டினாள்.

ராமனும் சம்மதித்தான்.

ஆனால் லட்சுமணன் குறுக்கே விழுந்தான். நான் போய் பிடித்து வருகிறேன் என்று புறப்பட்டான்.

சீதைக்கு கோபம் வந்துவிட்டது. ஊடலே வந்துவிட்டது.

தன்னுடைய கணவன் தனக்கு செய்ய வேண்டியதை இவன் வந்து செய்கிறான் என்பதை அவளால் அங்கீகரிக்க முடியவில்லை. அத்துடன் தன் கணவன் தன் தம்பி சொல்லியதை ஆமோதிப்பதையும் அவளால் தாங்கவே முடியவில்லை.

பெண்களுக்கே உரிய ஊடலில் வம்பு பண்ண ஆரம்பித்துவிட்டாள், சீதை.

''சரி, சரி. எனக்கு மானும் வேண்டாம். மண்ணாங்கட்டியும் வேண்டாம். உங்களால் முடியாவிட்டால் விட்டுவிடுங்களேன்! என்று பட்பட் என்று சொல்லிவிட்டாள்.

பஞ்சவர்ணக்கிளி தத்தித் தத்திப் பேசுவது போலிருந்தது அது. ராமனை வெறித்து ஒரு பார்வை பார்த்தாள். படக்கென்று ஒரு வெட்டு வெட்டி முகத்தை திருப்பினாள்.

அப்பொழுது கண்ணீர்த் துளிகள் ஐந்தாறு பொல பொலவென்று உதிர்ந்தன. குவளை மலரிலிருந்து வெண்முத்து உதிர்வது போல இருந்தது.

இனிப்பாடல்

ஆயிடை அன்னம் அன்னாள்,
அமு(து)குத் தனை செய்ய
வாயிடை மழலைஇன் சொல்
கிளியினில் குழறிமாழ்கி,
'நாயக நீயேபற்றி,
நல்கலை போலும்?என்னா
சேயரிக் குவளைமுத்தம்
சிந்திபு சிதறிப்போனாள்.

மனவாழ்க்கையில்தான் எத்தனை எத்தனை முண்டு முடிச்சுகள். அத்தனையும் உணர்ச்சி மயம், உயிரோடு வாழ்வதென்றாலே அதுதான்.

அதைத்தான் காட்டுகிறார் கம்பர். நாம் பார்ப்பது நாடகந்தான்.

காட்டாதனவற்றை எல்லாம் காட்டி மகிழ்கிறார் கம்பர். காணாதனவற்றை எல்லாம் கண்டு கண்டு பூரிக்கிறோம் நாம்.

நம்மையே நமக்குக் காட்டிவிடுகிறார் கம்பர். நம் உணர்ச்சிகள் ஒவ்வொன்றையும் அல்லவா நாம் பார்த்து பார்த்துப் பரவசப்படுகிறோம்.

நம் உடம்பையே நாம் சரிவரப் பார்த்ததில்லை. பார்த்து அனுபவித்தது இல்லை. ஆனால் கம்பரோ நம் உடம்பை மட்டு மல்ல, உள்ளத்தையே, உணர்ச்சிகளின் நாடி நரம்புகள் ஒவ்வொன்றையுமே நமக்குத் தொட்டுத் தொட்டுக் காட்டிவிடுகிறார்.

ஆனாலும் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை பலருக்கு.

கம்பரா! அவர் ராமனை தெய்வம் ஆக்கிவிட்டார் என்று புலம்புகிறோம்.

நம்மையே தெய்வம் ஆக்கி விடுகிறாரே கம்பர். அப்புறம் ராமனை தெய்வம் ஆக்கினால் நமக்கு என்ன கேடு? என்று யோசிக்கிற புத்தி நம்மிடம் இல்லை.

புத்தி இல்லாத சமுதாயம் எப்படி உருப்படும்?

சும்மாவா சொன்னார் வள்ளுவர்?

''வகுத்தான் வகுத்த
வகையல்லால், - கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல்
அரிது''

என்றல்லவா சொல்லிவிட்டார்.

கம்பரது பாடல்கள் எத்தனை இருந்து என்ன செய்ய? அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே பலருக்கு.

நாடகம் போகிற போக்கு அப்படியே போகட்டும். நாம் வேறொரு காட்சியைக் கம்பர் எப்படிக் காட்டுகிறார் என்று பார்ப்போம்.

நாடகத்தின் குழைவும் நெளிவும்

ராவண்ன் என்றால் சாமான்யப்பட்டவனா? முப்புரங் களை எரித்து சாம்பலாக்கியவர் சிவபெருமான். அந்த சிவன பெருமானையே அவர் குடியிருக்கும் கைலை மலையோடு சேர்த்தெடுத்துப் பந்தாடினான் ராவணன்.

அப்பேர்ப்பட்ட ராவணனையே ஒரு உணர்ச்சி - அவனி டம் உண்டான உணர்ச்சிதான், அவனைப் பிடித்து பம்பரமாய் ஆட்டுகிறது.

அது என்ன உணர்ச்சி? சாதாரணம் என்று சொல்லக்கூடிய காம உணர்ச்சிதான்.

காதல் உணர்ச்சி கூட இல்லை அது. வயதாகிப் பேரன் பேத்தி எடுத்தவன் ராவணன். அவனுக்கு மனைவியர் பலர்.

அப்படி இருந்தும் சீதையின் மேல் அவனுக்கு விருப்பம் உண்டாகிவிட்டது.

சீதையோ இன்னொருவனுடைய மனைவி. அவள், இவனை - இவன் அயோக்கியத்தனத்தை நினைத்தாலே குடல் பதறுகிறாள்.

சாக்கடை பன்றியை விட மட்டமான மூர்க்கன் என்று ராவணனை அருவறுக்கிறாள் சீதை.

அப்படி இருந்தும் ராவணனுக்கு ஆசை விடவில்லை.

ஆசை ஒழுங்கான ஆசை இல்லை. திருட்டுத்தனமான ஆசை. அதனால் தன் அதிகாரத்துக்குட்பட்டவர்களிடம் கூட ஆசையை மறைக்கிறான் ராவணன்.

ஏதோ ராமனை தண்டிக்கவே அவன் மனைவியை சிறையில் பூட்டி வைத்திருப்பதைப் போல பெண்டு பிள்ளைகள், உற்றார், உறவினர்களிடம் புளுகிவிட்டான் ராவணன்.

அவர்களுக்கு அப்படி பயப்படுகிறான். ஆனாலும் சீதையை மறக்க முடியவில்லை.

ஏதோ அவளை மிரட்டி அரட்ட சிறைச்சாலைக்கு வருவது போல பாசாங்கு செய்துவிட்டு அவளிடம் வந்து கெஞ்சுகிறான்.

*ராவணனுக்கு இது தேவையா? விதியானது அப்படியெல்லாம் மனிதர்களை வைத்து விளையாடுகிறது.*

*சீதையை வந்து பார்த்த மாத்திரத்திலேயே வெலவெலத்துப் போகிறான் ராவணன். ஆசையானது துள்ளி ஏறுகிறது. வெட்கமோ அதைப் பிடித்து இழுக்கிறது. நிலை தடுமாறுகிறான் ராவணன். அதனால் வார்த்தைகள் கோர்வையில் வரமாட்டேன் என்கிறது.*

*வெட்கப்பட்டு அங்கொரு துண்டு இங்கொரு துண்டு என்று சிதறி விடுகின்றன சொற்கள்.*

*அவ்வளவு கூச்சம் ராவணனுக்கு.*

*இனிப் பாடல்.*

**ஈசற்(கு) ஆயினும்**
**ஈடழி உற்(று) இறை**
**வாசிப் பா(டு) அழி**
**யாதம ணத்தினான்**
**ஆசைப் பாடுடன்**
**நாணம்அ டர்த்திடக்**
**கூசிக் கூசி**
**இனையன கூறினான்.**

*ஈசனே எதிர்த்து வந்தாலும் உத்திக்கு உத்தி என்று நிற்பான். பயந்து பின்வாங்கமாட்டான். அணுஅளவு - அதில் கால்வாசி அரைக்கால்வாசி கூட மனம் தளரமாட்டான். அவன் நிலைமைதான் இது.*

*கூசிக் கூசி என்ன சொன்னான் சீதையிடம். ''அம்மா! நீ ஒரு பைத்தியக்காரி'' என்றான். பிறகு கொஞ்ச நேரம் கழித்து உன்னைப் போலப் பைத்தியம் எங்கும் இல்லை என்றான்.*

பதிலே இல்லை. வெட்கப்பட்டான். ஆனாலும் ஆசைவிடவில்லை.

என் சாம்ராஜ்யம் முழுவதையும் உன் திருவடியில் வைக்கிறேன் நான். அங்கீகரிக்க மாட்டேன் என்கிறாயே என்று உளறினான்.

தேவர்களே மனைவி மக்களோடு உனக்கு தொண்டூழியம் செய்யக் காத்து நிற்கிறார்கள். ஏற்றுக் கொள்ளக்கூடாதா என்று கெஞ்சினான்.

அலட்சியமாக ஏறிட்டு பார்த்தாள் சீதை. பிறகு மிக்க அருவருப்போடு குனிந்து கொண்டாள்.

பாடல்.

**தேவர் தேவியர்**
**சேவடி தைதொழும்**
**தாவில் மூவுல**
**கின்தனி நாயகம்**
**மேவு கின்றது**
**நுன்கண் வலக்கினை;**
**யாவர் ஏழையர்**
**நின்னின் இலங்கிழாய்;**

சீதை ஏறிட்டு பார்த்தவுடன் ராவணன் பதறினான். அவள் தலையைக் கவிழ்த்ததும் தைரியம் வந்துவிட்டது. இப்படியாக தைரியமும் பயமும் மாறி மாறித் தாக்க பழையபடியும் உளற ஆரம்பித்துவிட்டான் ராவணன்.

என் ராஜ்யம் முழுவதையும் உன் காலடியில் வைத்துக் கும்பிடுகிறேன். இந்த ஏழையை ஏற்று அருள் பாலிக்க

வேண்டும் நீ'' என்றே வாய் கூசாமல் சொல்லிவிட்டான் ராவணன்.

சொன்னதோடு நிற்கவில்லை ராவணன். **தலைக்கு** மேலே கையை எடுத்து வைத்து கும்பிட்டான். அதற்கும் **மேல்** அவள் காலில் - தரையில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்.

இது சம்பந்தமான பாடல்

குடிமை மூன்றுல-
கும்செயும் கொற்றத்(து) என்
அடிமை கோடி,
அருளிதி யால் என,
முடியின் மீது
முகிழ்த்துயர் கையினள்
படியின் மே மல் விழுந்-
தான் பழி பார்க்கிலான்,

உணர்ச்சியை நாம் மதிப்பதில்லை; அவ்வளவு திமிர் மனிதனுக்கு

உணர்ச்சியை பார்த்துவிட்டால் போதும். அடடா! உணர்ச்சிதான் உண்மை. நாம் வெறும் சைபர்தான் என்பது விளங்கிவிடும்.

ராவணனை வைத்து இந்த உண்மையை நமக்கு காட்டுகிறார் கம்பர்.

இனி, சீதை மூலம் வெளிப்படுகிற ஒரு வீர உணர்ச்சியை பார்ப்போம்.

அன்னியன் ஒருவன் இப்படி காமா சோமா என்று பேசினால் ஒரு பெண்ணுக்கு எப்படி இருக்கும். ஆயிரம் கருந்தேள்கள் சேர்ந்து நின்று கொட்டினாலும் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் ஒரு பெண்ணால் இப்படி ஒரு பேச்சை கேட்டுவிட்டு சும்மா இருக்க முடியாது.

ஒரு மாதிரி ஒருத்தன் பார்த்தால் கூட ஒரு பெண்ணால் பொறுக்க முடியாது. அப்படி இருக்க இந்தப் பாவியின் கொடுஞ்சொற்களை எப்படிப் பொறுப்பாள் பிராட்டி.

கொதித்துவிட்டது பிராட்டியின் உள்ளம். எதிரில் கிடந்த ஒரு துரும்பை எடுத்தாள். ராவணன் பார்க்க அதை இரண்டாக வகிர்ந்து கீறினாள். ''இந்தத் துரும்பினுடைய கதிதான் உனக்கும்'' என்று ஆங்காரமாய் பார்த்த அவள் பார்வையே ராவணனுக்கு பதில் சொல்லிவிட்டது.

அதன் பிறகும் சீதையின் கோபம் தணியவில்லை. பொங்கி பொங்கி சீறியது.

ஆணாக இருந்தால் ராவணனை மல்லுக்கட்டி கீழே தள்ளி நாலு மிதிமிதிக்க வைக்கும். சீதையோ பெண். என்ன செய்வாள்?

ஆங்காரத்தை வார்த்தைகளாய் கொட்டுகிறாள். மூடனே! உனக்கு ராமபாணம் இன்னதென்று தெரியாதா? மகாமேரு மலையை கண்ட துண்டமாக பிளக்கும். ஆகாயத்தையே கிழித்து ஊடுருவும். அண்டத்தையே தவிடு பொடியாக நொறுக்கும்.

அந்த ராமபாணத்துக்கு முன் உன் தலைகள் எம்மாத்திரம்? வீணாக அழிந்து போகாதே! ஜாக்கிரதை!

இப்படித் திட்டினாள் சீதை. ராவணனுக்கு அது ஒன்றும் உறைக்கவில்லை.

மேலும் சொல்கிறாள் சீதை. தன் ஆங்காரம் புரியவில்லையே இந்த மூடனுக்கு என்பதனால் எரிச்சல் வருகிறது.

எரிச்சலில் இகழ்ந்து பேசுகிறாள் சீதை. எப்படி.

சரி, சரி, உன்னிடம் தலைகள் பத்து இருக்கின்றன. தோள்களோ இருபது இருக்கின்றன. இவ்வளவு இருந்தால் தான் ராமபாணத்துக்கு ஆறுதல் ஏற்படும். அவ்வளவையும் அறுத்து, அறுத்து தரையில் உருட்டும்.

பனங்காயை உருட்டுவதைப் போல உருட்டிவிடும், ஓடிப்போ, மூடமே என்றாள்.

அப்பொழுதும் உறைக்கவில்லை ராவணனுக்கு. ஒன்றுக்கும் அசையாத கல்லுளிமங்கனாக இருக்கிறானே, சண்டாளன் என்று சீதைக்கு ஒரு வேகம் வந்தது. அதனால் பழைய கதைகளை கொஞ்சம் கிளறிவிட்டாள்.

''ஜடாயுவினிடம் நீ சிக்கித் தவித்ததை நான் பார்க்கத்தானே செய்தேன். சிவபெருமான் கொடுத்த தெய்வ வாள் இல்லை என்றால் அன்றே உன்கதை முடிந்திருக்கும்.

ஏதோ நீ வரம் பெற்றவனாய் இருக்கலாம். தவம் செய்தவனாக இருக்கலாம். அந்த வரத்தையும் தவத்தையும் வைத்து எமனை வேண்டுமானால் உன்னால் ஏமாற்ற முடியும். ஆனால் ராமபாணம் ஏமாறாது. ஜாக்கிரதை என்றாள் சீதை.

இப்படிச் சொன்னது ராவணனை கொஞ்சம் விழிக்க வைத்தது. ஆனாலும் நாணிக்கோணி அங்கேயே நின்றான்.

ஒரு பெண் இப்படி பேசிவிட்டாளே என்னும் சூடு சொரணை எள்ளளவும் அவனிடம் இல்லை.

ஆங்காரம், கோபம், எரிச்சல் அவ்வளவையும் கொட்டிவிட்டாள் சீதை.

இனி, ஆங்காரம் விலகி அனுதாபம் உண்டாகிறது சீதைக்கு.

வெறும் பைத்தியக்காரனாக இருக்கிறானே இந்த பேதை. அநியாயமாக அழியப் போகிறானே பாவி. அவன் மட்டுமா? மனைவி, மக்கள், உற்றார், உறவினர், குடிமக்கள், நாடு, நகரம் எல்லாவற்றையும் நாசமாக்கத் துணிந்து விட்டானே'' என்று இரக்கமே உண்டாகிவிடுகிறது சீதைக்கு.

இரக்கமானது புத்திமதியாய் வருகிறது. எப்படி,

''உன்மேல் தப்பில்லை. உனக்கு நல்ல வழிகாட்ட நண்பர்கள் இல்லை. இருப்பவர்கள் எல்லோரும் உன்னை ஒழித்துக்கட்டவே வேலை செய்கிறார்கள்.

நல்லவர்கள் துணை இருந்தால் இப்படித் தாறுமாறாக நடப்பாயா? இது நல்லது இது கெட்டது என்று எடுத்துச் சொல்ல நாதி அற்றவன் ஆகிவிட்டாய் நீ.

கொடிய சர்ப்பம் கூட மந்திரத்துக்கு கட்டுப்படும்.

நல்ல துணைவர்கள் இல்லை என்றால் உன்னை யார் காப்பாற்ற முடியும். உன் கதி அதோ கதிதான்.

இப்படி மனம் இடிந்து வருந்திச் சொன்னாள் சீதை.

பாட்டு.

கடிக்கும் வல் அரவும் கேட் கும்
மந்திரம் களிக்கின்றோ யை
அடுக்கும் ஈ(து) அடாத(து) ஈ தென்(று)
ஏதுவோ(டு) அறிவுகாட் டி
இடிக்குநர் இல்லை; உள் ளார்
எண்ணிய(து) எண்ணிஉன் னை
முடிக்குநர் என்றபோ து
முடிவன்றி முடிவ(து) உண் டோ!

*பழுக்கக் காய்ச்சிய இரும்புக் குழம்பு போன்ற கொடிய வசவுகளை தாங்கிக் கொண்டான் ராவணன்.*

*ஆனால் மனம் சோர்ந்து துவண்டு போன சீதை மென்மையாக எடுத்துச் சொன்ன புத்திமதியை அவனால் பொறுக்க முடியவில்லை.*

*ராவணனுக்கு உள்ளமெல்லாம் தீப்பிடித்து எரிந்தது. உடம்பெல்லாம் காந்தல்.*

*ஆங்காரமே வந்துவிட்டது ராவணனுக்கு.*

*நெளிந்து குழைந்து பண்ணிய பாவலா ஓடிவிட்டது.*

*''என்ன சொன்னாய்'' என்று ஒரு அதட்டு அதட்டினான். அந்த இரைச்சலில் பாறைகள் கூடக் குலுங்கிவிட்டன.*

*பல்லை நறநறவென்று கடித்தான். கண்களில் தீப்பொறி பறந்தன.*

*ஆசை விலகி ஆங்காரம் நிமிர்ந்துவிட்டது ராவணனுக்கு.*

*இனிப் பாடல்*

| | |
|---|---|
| என்(று) அ | றத்துறை |
| கேட்டலும் | இருபது |
| நய | ணம் |
| மின்தி | றப்பன |
| ஒத்தன. | வெயில் விடு |
| பகு | வாய் |
| குன்(று)இ றத் | தெழித்(து) |
| உரப்பினன். | குறிப்பதென் |
| கா மன் | |
| தன்தி | றத்தையும் |
| கடந்தது | சீற்றத்தின் |
| தகை | மை. |

*காமவெறி - அதாவது மோகவெறி என்பது பொல்லாததுதான். வலுவான கரும்பாறையைக் கூட அப்பளத்தை நொறுக்குவதைப் போல நொறுக்கிவிடும் அது. கொழுந்துவிட்டு எரியும் தீயையே பனிக்கட்டியாக உறைய வைத்துவிடும் அது.*

*ராவணனுடைய வீரம் என்ன, தீரம் என்ன, வல்லமை என்ன, புகழென்ன! அவ்வளவையும் சுருட்டி மடக்கி ஒரு அபலைப் பெண் முன் கும்பிட்டுக் கூத்தாட வைத்து விட்டதல்லவா அது?*

*அடுமட்டுமா? நெடுஞ்சான் கிடையாய் காலில் விழவும் வைத்தது.*

*அப்படி விழுந்து கெஞ்சிய ராவணனை சீதை இழித்தும், பழித்தும் திட்டினாள். அத்தனையையும் சூடு சுரணை இல்லாமல் தாங்கிக் கொள்ள வைத்தது அது.*

அதைத்தான் காமன் (தன்) திறம் என்று குறிப்பிடுகிறார் கம்பர்.

ஆனால் கடைசியில் பரிவோடும் கருணையோடும் சீதை சொல்லிய புத்திமதி அவன் மனப்பொறியை தட்டிவிட்டது. அதனால் இயல்பாக அவனிடம் குடிகொண்டிருந்த திமிரும் அகம்பாவமும் சீறி எழுந்துவிட்டன. புற்றிலிருந்து மூர்க்கமான சர்ப்பம் சீறி எழுவதுபோல் எழுந்துவிட்டன.

அடக்கம் ஒடுக்கம் பாவலா பம்மாத்து எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு நிமிர்ந்து நின்றன. ராவணனுடைய தடித்தனமும் முரட்டுப் புத்தியும்,

சீற்றத்தினந் தகைமை - காமன் (தன்) திறத்தையும் கடந்தது என்கிறார் கவிஞர்.

ராவணன் தடபுடலாக வந்தது, நெளிந்து குழைந்தது, கும்பிட்டது, கூத்தாடியது, எல்லாவற்றையும் கம்பர் நமக்கு காட்டுகிறார். சீதையின் வேதனை, சீற்றம், பரிவு இவற்றையும் கம்பர் காட்டுகிறார்.

ஒவ்வொன்றையும் நாம் ஆவலோடு பார்க்கிறோம். பரவசப்படுகிறோம்.

நம்மைப் போலவே இவ்வளவையும் கண்ணாரக் கண்டு அனுபவிக்கிறது ஒரு ஜீவன்.

ராம தூதனாகிய அனுமன்தான் அந்த அற்புத ஜீவன்.

ஒரு மரத்தின் உச்சியில் நின்று இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்தான் அனுமன்.

கருணையே வடிவமான - மென்னைமைக்கும் மென்மையான ஒரு பெண்ணின் உணர்ச்சி எப்படி உறுதியாய் நிற்கிறது? எப்படி தெளிந்து நிற்கிறது என்று வியந்தான்.

அடடா, ஞானம் என்றால் இதுவல்லவா ஞானம்! வீரம் என்றால் இதுவல்லவா வீரம்! என்று அதிசயப்படுகிறான்.

அந்த அதிசயம் பக்தியாக உருவெடுக்கிறது. அந்த பக்தியோ நினைக்க நினைக்க அவனைப் பரவசப்படுத்துகிறது.

எதை மறந்தாலும் இதை மறக்க முடியவில்லை. அப்படி நிலையாய் நின்றுவிட்டது பக்தி.

நொந்து பரிதாபப்பட்ட சீதையின் புத்திமதியால் ராவணன் சீற்றம் கொண்டான். அப்படியே அந்த இடத்தை விட்டு போய்விட்டான்.

அதன்பின் மரக்கிளையிலிருந்து இறங்கி வந்தான் அனுமன். தான் ராமதூதன் என்பதை விளக்கிச் சொன்னான். ராமபிரான் கொடுத்துவிட்ட கணையாழியை சீதையிடம் கொடுத்தான்.

சீதையின் ஆறாத்துயரத்தை எல்லாம் பார்த்தான். ஆறுதல் சொன்னான், தைரியப்படுத்தினான்.

சீதை கொடுத்த சூடாமணியை வாங்கி முன்தானையில் வைத்துக் காட்டினான். விடைபெற்று ராமனிடம் திரும்பினான்.

எதிர்த்து வம்பு பண்ணிய அரக்கர்களை ஓட ஓட விரட்டி அடித்தான். இலங்கையையே தீயை வைத்துப் பொசுக்கி விட்டான்.

இவ்வளவும் செய்துவிட்டு பத்திரமாக ராமனிடம் வந்து சேர்ந்தான் அனுமன்.

சீதையைத் தேடி போனவர்கள் ஒருவரும் வரவில்லையே! அனுமனைக் கூட காணவில்லையே! சீதை

இருக்கிறாளோ, இல்லையோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தான் ராமன்.

அந்த ராமன் முன்பே அனுமன் திடு திப்பென்று 'கண்டேன் சீதையை' என்று துள்ளினான். கற்பினுக்கு அணியை என் கண்களால் கண்டேன்'' என்று ஆரவாரித்தான்.

ராமனுக்கு அப்பொழுதுதான் உயிர் வந்தது.

பிராட்டியின் பொறுமை, தவம், தியாகம், கருணை அத்தனையும் அனுமனை உருக்குகின்றன. மரத்தின் உச்சியில் நின்று பார்த்த காட்சி ராவணனை நிலைகுலைய வைத்த காட்சி அப்படியே கண்முன் நிற்கிறது.

பார்த்துப் பார்த்து பரவசப்படுகிறான் அனுமன்.

பரவசம் எப்படிப் பாடலாய் உருவெடுத்து வருகிற தென்று பாருங்கள்.

உனக்காகவே உயிரை கையில் பிடித்துக் கொண்டிருக்கிறாள் சீதை. அவளுடைய உறுதியும், தெளிவும் அரக்கர்களின் கண்ணில் விழவா செய்யும்? மனிதர்களும் அப்படித்தான். பார்த்தாலும் மதிக்கமாட்டார்கள்.

சீதையினுடைய தெய்வீகப் பண்பை உணர்ந்து மதிப்பதற்கு மனித குலத்துக்கு நாளாகும். ஐந்நூறு ஆண்டுகள் ஆயிம் ஆண்டுகள் கூட ஆகலாம்.

ஆனால் அற்புதம் எங்கு தோன்றினாலும் சரி அதைப் பார்த்து மதிக்கிறவர்கள் தேவர்கள்.

சீதையின் தவத்தையும், அருளையும் பார்த்தார்கள் தேவர்கள். அடடா! பெண்களுக்கு முன் நாம் யார்?

அவர்களுடைய லட்சியந்தான் லட்சியம் என்று போற்ற ஆரம்பித்துவிட்டார்கள்.

அதனால் தெய்வப் பெண்டுகளின் நிலை முன்னைவிட இப்போது பிராட்டி காரணமாக உயர்ந்துவிட்டது.

தேவர்கள் என்ன? சிவபெருமானே சீதை காரணமாக பெண்களை உயர்வாக மதிக்க ஆரம்பித்துவிட்டார். அது காரணமாக இடதுபாகத்திலிருந்த உமாதேவியை தலையின் மேல் தூக்கி வைத்துக் கொண்டார்.

திருமாலும் மார்பில் வீற்றிருந்த லெட்சுமியை அப்படியே செந்தூக்காகத் தூக்கி தம்முடைய ஆயிரம் ஆயிரம் பொன்முடிகளின் மேலும் வைத்து பிரகாசிக்கச் செய்துவிட்டார்.

சீதை காரணமாக ஆடவர்கள் நிலை சாதாரணம் என்று ஆகிவிட்டது.

இப்படிச் சொல்கிறான் அனுமன்.

இனிப் பாடல்

**சோகத்தாள் ஆயநங் கை**
**கற்பினால்த் தொழுதற்(கு)ஒத் த**
**மாகத்தார் தேவிமா ரும்**
**வான்சிறப்(பு) உற்றார், மற் றைப்**
**பாகத்தாள் இப்போ(து)ஈ சன்**
**மகுடத்தாள்; பதுமத்தா ளும்**
**ஆகத்தாள் அல்லள் மா யன்**
**ஆயிரம் மௌலிமே லாள்**

அற்புதமான பாட்டு. அற்புதமான காட்சி. அற்புதமான நாடகம்.

இனி, அனுமனுடைய மனசில் சீதையின் வீரமும் தீரமும் மறக்க முடியாதபடி நிலைத்து நிற்பதைப் போல ராவணன் மனதிலும் நிலைத்து நிற்கின்றன.

சீதையின் மூலம் ஏற்பட்ட அவமானத்தை மறந்துவிட வேண்டும் என்று ராவணன் எவ்வளவோ முயன்று பார்த்தான். ஆனால் முடியவில்லை.

காலில் விழுந்து கெஞ்சிய தன்னை அவள் இகழ்ந்து பேசியதும், புத்தி சொன்னதும் அப்படியே அவன் உணர்ச்சியில் ஒட்டிவிட்டன.

6

# நாடக வழக்கு

**ரா**மாயண யுத்தமே ஆரம்பித்துவிட்டது. யுத்த ஆரம்ப நாளன்று மிக்க ஆடம்பரத்தோடு ராமனை எதிர்த்து வந்தான் ராவணன்.

நீண்ட நேரம் நடந்தது போர். ராவணனுடைய தேர் போய்விட்டது. வாள் போய்விட்டது. வில் போய்விட்டது.

ராவணனுடைய பொன் முடிகளைக் கூட தட்டித் தரையில் உருட்டிவிட்டன ராமபாணங்கள். கலங்கிப் போனான் ராவணன்.

இந்த நிலையில் ராமன் என்ன செய்தான். ராவணனை பார்த்து ''நீ நிராயுதபாணியாய் இருக்கிறாய். உன்னை இன்று விட்டு விடுகிறேன். வீட்டிற்குப் போய் நன்றாக யோசனை செய்து பார்.

தவறை திருத்திக் கொள்வாயானால் உனக்கு வாழ்வு உண்டு. திருந்த மனம் இல்லை என்றால் நாளை யுத்த சன்னத்தனாய் வா. சந்திக்கிறேன் நான்.''

இப்படிச் சொல்லி அனுப்பிவிட்டான். பெருத்த அவமானமாய் போய்விட்டது ராவணனுக்கு.

ராமனையும், லட்சுமணனையும் குண்டுக் கட்டாக கட்டி சீதை முன் கொண்டு வந்து காட்டி, ''பார்த்தாயா? ராவணன் யார் என்று இப்பொழுதாவது தெரிகிறதா,'' என்று கேட்க வேண்டும் என்கிற மமதையில் வந்தான் ராவணன்.

அப்படி வந்தவன் கதி இப்படி ஆகிவிட்டது. தாங்க முடியுமா வேதனை?

''சாதாரணப் பேர்வழிகள், மனுசப் பயல்கள் என்று ஏளனமாய் நினைத்த ராம லட்சுமணர்கள் தன்னை ஏளனமாய் பார்த்துச் சிரிப்பார்களே என்று புழுங்கினான்.

அதைவிட இன்னொரு புழுக்கத்தைத்தான் அவனால் பொறுத்த முடியவில்லை.

அது என்ன?

அசோகவனத்தில் காலில் விழுந்த தன்னை, ''சீ, நீ ஒரு மனுசனா? என்று கேட்டாளே சீதை. அவள் முகத்தில் நான் எப்படி விழிக்க?

''பார்த்தாயா ராமபாணத்தின் மகிமையை'' என்று சொல்லி இகழ்ச்சி பாவத்தோடு சிரிப்பாளே! ''என்ன செய்ய நான்'' என்று தவிக்கிறான் ராவணன்.

இனிப்பாடல்.

ஆகாயத்தைப் பார்த்து சிரிக்குமாம் இமயமலை. ''நீ என்ன அப்படி உயரம் என்று'' அந்த இமயமலையை பார்த்தே, ''பூ, உன் பலம் இவ்வளவுதானா'' என்று சிரித்ததாம் ராவணனுடைய தோள்.

அந்த ராவணன்தான்

வான்நகு கயிலைவெற் பை
நகும்நெடும் வயிரத்தோ ளான்
தான் நகும் மனுசர்தன் னை
நகுவர்என்(று) அதற்குநா னான்;
வேல் நகு கருங்கண் செவ் வாய்
மெல்லியல் மிதலைவந் த
சானகி நகுவள்என் றே
நாணத்தால் சாம்பிநைந் தான்

அனுமானும் ராவணனும் கீரியும் பாம்பும் போல. ஒன்றுக்கொன்று சம்பந்தமே இல்லை. ஆனால் ஒரு வகையில் ஒத்து நிற்கிறார்கள்.

சீதையினுடைய உறுதியையும் ஆவேசத்தையும் அனுமனாலும் மறக்க முடியவில்லை. ராவணனாலும் மறக்க முடியவில்லை.

இனி சில சமயங்கள் காரியங்கள் மளமளவென்று நடக்கும். நல்ல காரியங்களோ, கெட்ட காரியங்களோ சடசடவென்று நடந்துவிடும்.

இந்த நேரம் இவர் இருந்திருந்தால் இப்படி நடக்குமா என்று சொல்லும்படி ஒருவர் கூட அங்கு இருக்கமாட்டார்.

எப்பொழுதும் கூடவே இருக்கிறவர்தான் அவர். அப்படி இருந்தும் அந்தச் சந்தர்ப்பத்தில் மட்டும் அவர் அங்கு இருக்கமாட்டார்.

எல்லாம் சொல்லி வைத்தது மாதிரி இருக்கும். அயோத்தியில் தசரதனுடைய அரண்மனையில் காரியங்கள் வேகமாக நடந்தன.

அரசு பொறுப்பை ராமனிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தான். மந்திரி பிரதானிகளை கூட்டினான். தனது விருப்பத்தை தெரிவித்தான். அவர்களும் அங்கீகரித்தார்கள்.

நாளையே பட்டாபிஷேகம் தீர்மானம் ஆகிவிட்டது. விழாக்கோலம் பூண்டுவிட்டது அயோத்தி. சிற்றரசர்கள் பரிவாரங்களுடன் இரவோடு இரவாக வந்து டேராப் போட ஆரம்பித்துவிட்டார்கள்.

சாதாரண வேலைக்காரி - கூனி என்பவள் கைகேயியின் மனதை கலைத்துவிட்டாள். வேற்றுமை இல்லாத உள்ளத்தை வேற்றுமைப்படுத்திவிட்டாள்.

கட்டிய புருஷனையே - தசரதனையே வஞ்சனையால் சாய்த்து உயிரை வாங்கத் துணிந்துவிட்டாள் கைகேயி.

எப்போதோ ஒரு உல்லாசத்தில் தசரதன் கொடுத்த இரண்டு வாக்குறுதிகளையும் இப்பொழுதே நிறைவேற்ற வேண்டும் என்றாள். இரண்டில் ஒன்று ராஜ்யம் பரதனுக்கு, மற்றொன்று ராமன் வனவாசம்.

தசரதனால் தாங்க முடியவில்லை. மன்றாடி பார்த்தான். எடுபடவில்லை. தந்தேன் தந்தேன் என்று சாய்ந்தேவிட்டான்.

ராஜ்யத்தை விட்டுவிட்டு ராமன் காட்டுக்கு புறப்பட்டுவிட்டான். சீதையும் லட்சுமணனும் சேர்ந்து வந்தார்கள்.

இந்த நேரம் பார்த்து பரதனும் அவன் தம்பி சத்ருக்கனும் பாட்டனார் வீட்டில் கைகேய நாட்டில் இருந்தார்கள்.

அயோத்தியில் நடந்தவை ஒன்றும் அவர்களுக்கு தெரியாது.

பரதனை கையோடு கூட்டி வரும்படி தூதர்களை அனுப்பினாள் கைகேயி.

பரதனும், சத்ருக்கனும் பரிவாரங்கள் புடைசூழ கோசலை நாடு வருகிறார்கள்.

புறப்படும்போதே பரதனுக்கு மனம் சஞ்சலமாக இருக்கிறது. சோகல நாட்டுக்குள் தேர் வருகிறது. எங்கு பார்த்தாலும் இடி விழுந்த மாதிரி சோர்ந்து களை கெட்டு இருக்கிறது.

அயோத்திக்கே வந்துவிட்டான். அரண்மனைக்கே வந்துவிட்டான். சாதாரண வேலைக்காரர்களிலிருந்து அமைச்சர்கள் வரை உற்றார் உறவினர் எல்லோருமே பதறிப்போய் இருக்கிறார்கள்.

தந்தையை தேடினான். அண்ணன் ராமனை தேடினான். தாய் கைகேயினிடம் வந்து எங்கே என் தந்தை? எங்கே என் தமையன் என்று அலறினான்.

நடந்ததை நடந்தபடியே சொன்னாள் கைகேயி. முகத்தில் அடித்து அழுதான். கதறினான். முட்டினான். மோதினான். சரிந்து உட்கார்ந்தான். தூணைப் பிடித்து எழுந்தான். நிற்க முடியவில்லை. ஐயோ, ஐயோ என்று கத்தினான்.

நான் ராஜ்ய பாரத்தை ஏற்க மாட்டேன். நானும் காட்டுக்கு போகிறேன் என்று சொல்லிவிட்டான். வசிஷ்டர் முதலிய பெரியவர்கள் வந்தார்கள். ''ராஜா என்று ஒருவன் இல்லை என்றால் ராஜ்யம் சீரழிந்து விடும்,'' என்று சொன்னார்கள்.

அப்படியானால் ராமனை அழைத்து வந்து ராஜ்யத்தை ஆள வைக்கிறேன் என்று புறப்பட்டு விட்டான் பரதன்.

தாய்மார்கள், மந்திரி பிரதானிகள், உற்றார், உறவினர், நால்வகைப்படை, வசிஷ்டர் முதலிய குலகுருக்கள் எல்லோரும் சேர்ந்து புறப்பட்டுவிட்டனர்.

சமுத்திரமே எதையோ தேடி காட்டுக்குள் வருவது போலிருந்தது அந்த காட்சி.

வழியில் குகன் பார்த்தான். சந்தேகப்பட்டான். ராமன் மேல் படை எடுத்தல்லவா வருகிறான் என்று கோபப்பட்டான். பிறகுதான் உண்மை தெரிந்தது. மனம் கசிந்து போனான் குகன்.

குகனே வழிகாட்ட பரதனும் பரிவாரமும் தொடர்ந்து வந்தது.

ராமன் தங்கி இருக்கும் பகுதியை நெருங்கிவிட்டது கூட்டம்.

லட்சுமணன் ஆத்திரப்பட்டான். ராஜ்யத்தை கைப்பற்றியதோடல்லாமல் தீர்த்துக் கட்டுவதற்கே வந்துவிட்டான் பரதன் என்று வேகப்பட்டான் லட்சுமணன்.

ராமன் அவன் சந்தேகத்தை போக்கி அமைதிப்படுத்தினான்.

ஓடோடி வந்தான் பரதன். ராமனுடைய காலில் விழுந்தான். இரண்டு பாதங்களையும் இறுகப் பிடித்தான். ''இப்படி செய்யலாமா நீ? எப்படி வந்தது உனக்கு மனம்? தந்தையும் இல்லாமல் தாயும் இல்லாமல், தமையனும் இல்லாமல் என்னை அநாதை ஆக்கிவிட்டாயே? இதுதான் நாயமா? என்று அலறினான் பரதன்.

பரதனை வாரி எடுத்தான் ராமன். மார்போடு அணைத்தான். கண்ணீர் சொறு சொறு என்று கொட்டியது, அது பரதன் கட்டி முடித்திருந்த சடைமுடியை எல்லாம் நனைத்துவிட்டது.

சுற்றி இருந்தவர்கள் எல்லாம் உருகிவிட்டார்கள்.

பிறகு பரதனை மெள்ள மெள்ளத் தேற்றினான். தைரியப்படுத்தினான்.. ''குறித்த காலக்கெடு முடிந்ததும் அயோத்திக்கு வந்துவிடுவேன். ராஜ்ய பரிபாலனம் செய்வேன். அதுவரை என்னுடைய ஆளாக நீ இருந்து ராஜ்ய பரிபாலனம் செய்'' என்று கட்டளையே இட்டுவிட்டான் ராமன்.

''நீ வருகிறவரை உன் திருவடி (பாதுகை)களைக் கொடு. அதை வைத்து அரசாள்கிறேன் நான்'' என்றான் பரதன்.

அப்படியே தன் பாதுகை இரண்டையும் பரதனிடம் கொடுத்தான் ராமன்.

நவரத்னகசிதமான கிரீடத்தை வாங்குவதைப் போல பாதுகைகளை பக்தியோடு வாங்கினான் பரதன். மறுபடியும் ராமன் காலில் விழுந்து வணங்கினான். மார்பு, தோள் எல்லாவற்றிலும் புழுதி மினு மினு என்று மினுங்கின. ராமனை விட்டுப் போவதற்கு மனம் இல்லைதான். எப்படியோ தள்ளாடித் தள்ளாடிப் போனான்.

அவனுடைய அன்பும், பரிவும் பளபளவென்று ஜொலித்தன. அவன் மேனியில் தங்கிய புழுதி கூட அந்த ஜொலிப்பில் மின்னின.

இனிப் பாடல்.

அடித்தலம் இரண்டையும்
அழுத கண்ணினான்
முடித்தலம் இவை என
முறையில் சூடினான்,
படித்தலத்(து) இளைஞ்சினன்
பரிவில்ப் போயினான்;
பொடித்தலம் இலங்குறு
பொலங்கொள் மேனியான்

*பாதுகைகளை தலையில் வைத்துக் கொண்டு சோகமே உருவாக பரதன் போகிறான். அவன் போகிறது அப்படியே நம் கண்முன் நிற்கிறது.*

*அப்படி நிற்பதுதானே நாடகம். பரதன் புறப்பட்டு விட்டான். பிறகு தாய்மார்கள், சுற்றத்தார், அறிஞர்கள், சீலர்கள் எல்லோருக்கும் இனி அங்கு என்ன வேலை.*

*படை பரிவாரங்களுக்கும் என்ன வேலை?*

*அவ்வளவையும் திரட்டி முறைப்படுத்தி நெறிமுறை பிறழாமல் பின்தொடர வைக்கிறார் வசிஷ்டர்.*

*வசிஷ்டருடைய முதிர்ந்த மேனியும் அதில் கிடந்து அசையும் பூணூலும் பளிச்சிட்டு தெரிகின்றன.*

ஈன்றவர் முதலிய
எண் இல் சுற்றமும்
சான்றவர் குழுவொடும்
தவத்து ளோர்களும்,
வான்தரு சேனையும்,
மற்றும் சுற்றுற
மூன்றுநூல் கிடந்த தோள்
முனியும் போயினான்

பரதன் போனான். பரதனைத் தொடர்ந்து இவர் போனார். அவர் போனார் என்பதுதான் விஷயம்.

விஷயம் சாதாரணந்தான்.

ஆனால் விஷயத்தை விநியோகம் பண்ணுகிற பாங்கு நாடகமாக எழுந்து நிற்கிறது.

நாடகம் ஆகவேண்டும் என்றால் விஷயம் ஒதுங்கிவிட வேண்டும். உணர்ச்சியாகப் பொங்க வேண்டும்.

ஈடுபாடும் மரியாதையும் உணர்ச்சியை அழுத்த அழுத்த நாடகமாக விளைந்து விடும் தமிழ்.

அப்படி விளைகிறதை கம்பர் காட்டுகிறார்.

அரண்மனை சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் பரதனைச் சுற்றி பின் தொடர்ந்து போக வேண்டும் என்பது வசிஷ்டருடைய முடிவு.

அப்படியே நடத்திப் போகிறார் முனிவர். அவ்வளவு பேருக்கும் பின்னால் தனியாக வைத்துக் காட்டி இருக்கிறது வசிஷ்டரை.

இனி அரண்மனையோடு நெருக்கம் இல்லாதவர்கள் பலர். அவர்களில் சிலர் இலக்கியம், கலைகளில் பயிற்சியும் அனுபவமும் உடையவர்கள். வேறு சிலர் பொது ஜன நன்மையில் ஆர்வம் உடையவர்கள். நல்ல காரியங்கள் பல செய்கிறவர்கள். அரசியல் பொருளாதாரம் இவைகளில் உள்ள மேடு பள்ளங்களில் விழாமல் ஒதுங்கி வாழும் உயர்ந்த பண்பாடுடைய சான்றோர் (விண்டு உறைதேவர்) சிலர்.

இவர்கள் எல்லோருக்குமே ராமனிடம் நெருக்கம் அதிகம். அப்படி இருந்தும் ஒருவர் பின் ஒருவராக அவர்கள் கிளம்பிவிட்டார்கள்.

கடைசியாக ஒருவன் மட்டும் இருந்தான். அவன்தான் குகன்.

மேலே சொல்லியவர்களைப் போல அரண்மனையை சேர்ந்தவனும் இல்லை. அறிஞர் குழுவை சேர்ந்தவனும் இல்லை.

ஆனால் அன்புடையவன். தூய அன்பு மயமானவன் குகன்.

ஆனாலும் அவனுக்கும் விடை கொடுக்க எண்ணிவிட்டான் ராமன்.

அங்கிருந்து வேறு இடத்துக்குப் போக முடிவெடுத்து விட்டான் ராமன். அதனால் குகனுக்கும் விடை கொடுக்க வேண்டி வந்தது.

ஆனால் எளிதில் நடக்கிற காரியமா இது. தயங்கித் தயங்கி குகனுக்கு விஷயத்தை சொல்லி விடை கொடுத்தான் ராமன்.

குகனும் புறப்பட்டுப் போகிறான்.

இதோ வருகிறது காட்சி.

பண்டை நூல் தெரிந்துணர்
பலரும் போயினார்,
மண்டுநீர் நெடுநகர்
மாந்தர் போயினார்;
விண்டுறை தேவரும்
விலகிப் போயினநார்,
கொண்டல்தன் ஆணையால்
குகனும் போயினான்

அம்சம் அம்சமாக உணர்ச்சியின் ஒவ்வொரு சாயலையும் கண்டுகளிக்கிறார் மகாகவி கம்பர். அவரைப் போல் உணர்ச்சியை பார்க்கிறவர்கள் தமிழகத்தில் ஒருவரும் இல்லை. மதிக்கிறவர்கள் யாருமே இல்லை.

தமிழகத்திலேயே இல்லை என்றால் கவிஞர்களையும், கவிகளையும் உலகில் வேறு எங்கு பார்க்க முடியும்?

இனி வேறொரு காட்சி.

என் இனிய நண்பர்களில் ஒருவர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தார்.

நீதித்துறைக்கென்றே அவதாரம் செய்தவர் என்று சொல்லலாம் நண்பரை. இரக்கமும் நேர்மையும் அவரிடம் பொங்கி வழிந்தன. நல்ல ரசிகர். தமிழிலும் ஆங்கிலத்திலும் நிகரற்ற புலமை மிக்கவர்.

பண்பாடு என்று ஒன்று உண்டு. அது நீண்ட நெடுங்காலமாக மக்களுடைய உள்ளத்தோடு உறவாடி உறவாடி வளர்ந்து வருகிறது.

ஆனாலும் பண்பாட்டை கண்ணால் பார்க்க முடியாது. கவி, கலை முதலியவை மூலம் அதன் ரேகைகளை அங்கங்கே பார்க்கலாம்.

பண்பாட்டின் நேர் சாயலை அந்த சாயலின் நெளிவு, சுழிவுகளை நேருக்கு நேராகப் பார்க்க வேண்டுமானால் நீதிபதி நண்பரை பார்த்தால்போதும்.

கவியை அனுபவிக்கும் போது குழந்தையாய் கரைந்து விடுவார் நண்பர்.

நல்ல பாடல் ஒன்று கிடைத்தால் போதும். தலைமேல் தூக்கி வைத்துக் கூத்தாடுவார். வருவோர் போவோரிட மெல்லாம் பாடலையும் நயத்தையும் சொல்லிக் கொண்டே இருப்பார்.

மாதக் கணக்கில் வருடக்கணக்கில் கூடச் சொல்லிக் கொண்டே இருப்பார். சொல்ல சொல்ல சலிப்பே தட்டாது. புதிது புதிதாக தெம்பு உண்டாகும்.

சில சமயம் ஆங்கில இலக்கியங்களில் உள்ள ஒன்றிரண்டு பாடல்களை எடுத்து விளக்குவார். பாடலில் உள்ள அற்புதத்தை எடுத்துக் காட்டுவார். அதிலும் ஷேக்ஸ்பியர் நாடகத்தை எடுத்துச் சொல்லும்போது அப்படியே உருகிவிடுவார். நாடக பாத்திரங்கள், பேச்சு, விஷயம், உணர்ச்சி இவைகளை மட்டுமல்ல, அந்த மகாகவி வருணிக்கிற பாங்கை கூட எடுத்து சொல்வார்.

வருணனையில் உள்ள ஆழத்தையும் நுட்பத்தையும் மாறி மாறிக் காட்டி, ''இப்படி யார் சொல்ல ஷேக்ஸ்பியரை தவிர'' என்று கம்பீரமாக எடுத்து முழங்குவார்.

ஷேக்ஸ்பியர் வருணனைகள் பலவற்றில் பனிமூடிய ஆல்ப்ஸ் மலையில் சூரிய ஒளிபட்டு அதனால் அது தகதக என்று ஜொலிக்கிற காட்சி ஒன்று.

சூரிய பகவான் தன் பொன் மயமான பார்வையால் ஆசையோடு ஆல்ப்ஸ் மலையை பார்த்து அதன் உச்சி முதல் உள்ளங்கால் வரை குளிரக் குளிர பாராட்டுகிறான்'' என்பதாக ஒரு இடம்.

HIS
SUN FLATTERS THE MOUNTAIN TOPS
WITH SOVERIGN EYE.

இந்த வரிகளை நண்பர் சொல்லி சொல்லி உருகுவார். உணர்ச்சி வேகத்தில் ''எந்த கவிஞர் இப்படி பார்ப்பார்? இப்படி பார்த்து உருகுவார்? என்று சொல்லி ஆனந்தமயமாய் துள்ளி மகிழ்வார்.

''ஆல்ப்ஸ் மலை சூரிய வெளிச்சத்தில் பளபள என்று ஜொலிக்கிறது. அதை பார்த்து அப்படியே தியானத்தில் ஆழ்ந்து விடுகிறார் கவிஞர். தியானத்தின் உள்ளுணர்விலிருந்து வருகிறது வருணனை'' என்றெல்லாம் விளக்கம் சொல்லி மகிழ்வார்.

நண்பரை சுற்றி அரைமைல் வட்டாரத்துக்கு ஒரே கலகலப்பாக இருக்கும். அப்படி ரசித்து மகிழ்வார் ஷேக்ஸ்பியரை.

நண்பர் சொல்வது உண்மைதான். மகாகவி ஷேக்ஸ்பியரின் பார்வை தனிதான்.

உலகம் முழுவதுமே கவிஞர்கள் இருக்கிறார்கள். அணில், காக்காய், குருவி, சூரியன், சந்திரன், காதல், சாதல் எது பற்றி வேண்டுமானாலும் பாட்டுப் பாடி விடுவார்கள்.

ஆனால் அவர்கள் எதை பார்த்தாலும் எப்படி பார்த்தாலும் நான் என்னும் ஆணவ அறிவோடுதான் பார்ப்பார்கள். அதைவிட்டு விட்டு பார்க்க அவர்களால் முடியாது.

ஆனால் ஷேக்ஸ்பியர் போன்ற மகாமேதாவிகள் எதை பார்த்தாலும் உணர்ச்சி மயமாக பார்ப்பார்கள். அப்பொழுது ஆணவம் விலகி நிற்கும்.

ஆனாலும் ஒன்று ஷேக்ஸ்பியர் போன்ற மகாமேதாவிகள் மலரை பார்க்கும் போதும் சரி, மலையை

பார்க்கும்போதும் சரி அனுபவமும் ஆனந்தமும் அது அதுவோடு நின்றுவிடும். அதற்கு அப்பால் ஒன்றும் இருக்காது.

ஆல்ப்ஸ் மலையை பற்றிய வருணனை ஆல்ப்ஸ் மலையோடு சரி. ஷேக்ஸ்பியர் போல நாமும் அப்படியே மலையை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான்.

மலைக்குப் பின்னால் ஒன்றும் இருக்காது. ஆனால் கம்பருடைய காட்சி அப்படி இல்லை. ஒன்றை அனுபவித்துக் கம்பர் சொன்னால் அதற்கு பின்னால் இன்னொன்று இருக்கும்.

அற்புதமாக இருக்கும் அது.

உதாரணம் ஒன்று பார்க்கலாம்.

ராமன், லட்சுமணன், சீதை மூவரும் காட்டுக்கு வந்துவிட்டார்கள். அங்கு அரண்மனை இல்லை. தங்கக் கட்டில் இல்லை. திண்டு, தலையணை, மெத்தை ஒன்றுமே இல்லை.

கரடு முரடான தரைதான் கட்டில், புல், வைக்கோல் இவைதான் மெத்தை. குடிசைதான் அரண்மனை.

குடிசையில் வெளியில் நின்று காவல் காக்கிறான் லட்சுமணன். நாணல் புல்லை விரித்து அதில் படுத்து உறங்குகிறார்கள் ராமனும், சீதையும்.

விடியல் காலமே முதலில் எழுந்துவிட்டாள் சீதை.

தூங்கி எழுந்தவுடன் பெண்ணானவள் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் தன் கணவனை ஆசையோடு பார்ப்பாள். ஏற்கனவே கணவனை பற்றிய பக்தி உள்ளத்தில்

நிறைந்திருப்பதால் படுத்திருக்கும் கணவனுடைய மார்பு, தோள், முகம், கால், கை ஒவ்வொரு அம்சமும் புதிய புதிய அழகில் ஜொலிக்கும்.

ஒரு செயலில் இறங்கி அங்கும் இங்கும் சுறுசுறுப்போடு இயங்குகிற வேளையை விட வெறுமனே சும்மா படுத்திருக்கிற கணவனின் திருமேனி பெண்ணை பரவசப்படுத்திவிடும்.

முதலில் எழுந்த சீதை தூக்கம் கலையாத ராமனை பார்க்கிறாள். அணு அணுவாக அவன் திருமேனியை பார்த்து அனுபவிக்கிறாள்.

பரவசத்தால் அகம் மலர்கிறது. முகம் மலர்கிறது. செந்தாமரை மலர்போல விரிந்து மலர்கிறது. சீதையின் (வதனம்) முகம்.

சோற்றில் நின்று உழலும் தாமரையானது எட்டாத தூரத்தில் சூரியன் வெளிப்பட்டவுடன் செக்கச் செவேல் என்று பூத்து விடுகிறது.

வஞ்சியான் வதனம் என்றும் தாமரை மலரோ செஞ்சூரியனை கண்டு மலரவில்லை.

கட்டாந்தரையில் நாணல் புல்லில் படுத்திருக்கிறானே நீலமேக சாமள வண்ணணாகிய ராதன் - அதாவது கருஞ்சூரியன். அந்த கருஞ்சூரியனையே பார்த்து பார்த்து மலர்ந்ததாம்.

இனிப்பாடல்

செஞ்செவே சேற்றில்தோன் றும்
தாமரை, தேரில்த்தோன் றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மே னி
நோக்கின விரிந்தர்; வே றோர்
அஞ்சன ஞாயி(று)அன் ன
அடிகளை நோக்கிச் செய் ய
வஞ்சியாள் வதனம் என் னும்
தாமரை மலர்ந்த(து) அன் றே.

*தாமரையோடு நிற்கவில்லை பார்வை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உரம் பெற்று வந்திருக்கிற மனித வாழ்க்கையில் உள்ள ஒரு உண்மையை பார்க்கிறது கம்பருடைய பார்வை.*

*பெண்ணினத்தை தொடர்ந்து பாதுகாத்து வந்திருக்கிறது ஆணினம். அதற்காக எத்தனை எத்தனையோ தியாகங்களைச் செய்திருக்கிறது. இந்த உதவியை மறக்காமல் எப்பொழுதும் நன்றி உணர்ச்சியோடு மதித்து வருகிறது பெண்குலம். பெண்ணினத்தின் உண்மையான பக்தியையும் பரவசத்தையும் கையில் எடுத்துக் காட்டிவிடுகிறது தாமரை.*

*இந்த பாடலை நண்பர்கள் குழுவில் ஒரு தடவை சொல்ல நேர்ந்தது. அந்த குழுவில் நீதிபதியும் இருந்தார்.*

*கம்பர் பாடலை கேட்டாரோ இல்லையோ, அப்படியே துள்ளிக் குதித்து விட்டார்.*

*''கம்பர் பாடிய பாடலா இது? கம்பர் காவியத்திலா இது இருக்கிறது? என் கண்ணில் படவடில்லையே இது'' என்றெல்லாம் உருகிவிட்டார்.*

*கம்பருடைய பாடலை அனுபவிக்க அனுபவிக்க வார்த்தைகள் மறைந்துவிடும். விஷயம் மறைந்துவிடும்.*

பாத்திரங்கள் கூட ஒதுங்கிவிடும். ஏன்? உணர்ச்சி கூட கோபம், மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளும் மறைந்துவிடும்.

ஆனால் வாழ்க்கையின் அற்புதம் வாழ்க்கை என்னும் பேருண்மை அப்படியே எழுந்து நிற்கும்.

ஓவியமாகவே எழுந்து நிற்கும். அப்படி ஓவியமாக உண்மையானது எழுந்து நிற்பதுதானே நாடகம்.

கம்பர் காட்டும் காட்சிகள் நாடக காட்சிகள் ஒவ்வொன்றும் நம் இதயத்தில் நிலைபெற்று நிற்கும்.

# 7

## அழகின் அதிகாரமும் தோரணையும்

கூறிசொல்லும் குறத்தி இங்கே நின்று சிறிது இளைப்பாறட்டும். இனி வஸந்தவல்லியைப் பார்ப்போம்.

கோயிலை ஒட்டிய பகுதிக்குக் குடி இருப்பு என்று பெயர். நன்னகர் என்றும் சொல்வார்கள்.

வஸந்தவல்லி குழந்தையாக இருக்கும்பொழுதே தாயுடனோ பாட்டியுடனோ கோவிலுக்குப் போவாள். அபிஷேகம் நடக்கும். அலங்காரம் நடக்கும். தீப ஆராதனையில் பெருமானைப் பார்க்க பார்க்க மனம் உருகிவிட்டது குழந்தைக்கு.

வயது ஏற ஏற பெருமான் மேல் ஆசையே உண்டாகிவிட்டது. வெளியில் சொல்லாமல் உள்ளுக் குள்ளேயே ஆசையை மறைத்து வைத்ததால் அது அணு அணுவாய் பரவி வலுப்பட்டுவிட்டது.

குற்றாலநாதர் தேரேறி பவனி வருகிறார். பக்தர்களின் கூட்டமும் ஆரவாரமும் சொல்லி முடியாது. ஆண்களும் பெண்களும் திமுதிமு என்று கூடிவிட்டார்கள். வஸந்தவல்லி

தோழிமாருடன் அப்பொழுது பந்து விளையாட ஒரு சாக்காக வைத்துக் கொண்டு பவனியை பார்க்க வருகிறாள்.

கவிஞர் இங்கே வஸந்தவல்லியை எப்படி அழகு கொலு வீற்றிருக்கும் தேவகன்னியாக நிறுத்துகிறார் என்று பாருங்கள்.

புத்தியைச் சிறகடித்து யாரையும் தன்வசப்படுத்தும் அழகின் அவதாரம் வஸந்தவல்லி. அந்த அழகுக்குள் இருந்து திமுறுகிற இளமையும், முறுக்கும் தளதள என்று ஜொலிக்கும். அப்படி ஒரு பருவம் அவள் பருவம்.

பூரண சந்திரன் போன்ற அவள் முகத்தில் நெற்றியில் சுருள் சுருளாக விழுந்து ஆடும் முடி. அது நீருண்ட மேகம் போல குளுகுளு என்றிருக்கும் கெண்டை மீன்கள் துள்ளி விளையாடுவது போல அவள் கண்கள் அப்படியும் இப்படியுமாகத் துள்ளி மயக்கும். அவள் உதடுகளோ முருக்கம் பூப்போல் சிவந்து தேனூறும். அவள் நெற்றியை பார்த்துத்தான் பிறைச்சந்திரன் வளைவை எடுத்துக் கொண்டான் என்றும் அம்பு பூட்டிய வில்லும் வளைந்து குழையப் பழகிக் கொண்டது என்றும் சொல்ல தோன்றும்.

மேகத்தில் விழுந்து வர்ண ஜாலம் பண்ணுமே வானவில் அதுகூட இவள் புருவத்தின் நெளிவைப் பார்த்துப் பெருமூச்சுவிடும். இரண்டு வார்த்தை அவள் பேசினால் போதும். மதுரம் சொட்டும். கல்கண்டாய் இனிக்கும். தேவாமிர்தம் போல் உயிர் கொடுக்கும்.

ஜாதி முத்துகளை வரிசை குலையாமல் அடுக்கி வைத்தால் எப்படி இருக்கும். அதுவும் பவளப் பேழையில் வரிசை வரிசையாய் பதித்து வைத்தால் எப்படி இருக்கும்?

அப்படி இருக்கும் இவள் பல் வரிசை. இனி பாடல்

தான தானதன்
தான தானதன
தானதன - தன

(1) இருண்ட பருவமுகில்
சுருண்டு சுழிஎறியும்
கொண்டையாள்; - குழை
ஏறி ஆடி நெஞ்சைச்
சூறை ஆடும் விழிக்
கெண்டை யாள்;
திருந்து பூ முருக்கின்
அரும்பு போல் இருக்கும்
இதழினாள்; - வரிச்
சிலையை போல் வளைந்து
பிறையைப் போல் இலங்கும்
நுதலி னாள்;

(2) அரம்பை தேச வில்லும்
விரும்பி ஆசை கொள்ளும்
புருவத்தாள்; - பிறர்
அறிவை மயக்கும் ஒரு
கருவம் இருக்கும் மங்கைப்
பருவத் தாள்;
கரும்பு போல் இனித்து
மருந்து போல் வடித்த
சொல்லினாள் - கடல்
கத்தும் திரைகொழித்த
முத்து நிரைபதித்த
பல்லி னாள்.

*அவள் நடந்து வந்தால் அதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். நாம் மட்டும் அல்ல. அன்னமும் பார்த்துக் கொண்டே இருக்கும். பார்த்துப் பார்த்து நடை பழகும் அன்னம்.*

*அவள் நடையில் உள்ள ஒயிலுக்குத் தக்கபடி எல்லாம் சொகுசுக்குத் தக்கபடி எல்லாம் அவளுடைய சின்னஞ்சிறிய இடை நெளிந்தும் வளைந்தும் குழைந்து குழைந்து இடம் கொடுக்கும். அப்பொழுது அந்த இடையின் நுட்பத்தை பார்த்தால் ஒரு கைப்பிடிக்குள் அடங்கிவிடுவது போலத் தெரியும்.*

*அகலக் கரை போட்ட வண்ண வண்ண ஆடையை பன்னிரண்டு முழம் பதின்மூன்று முழம் உடைய புடைவையை மடித்து மடித்து - கொசவன் (கொய்சகம்) வைத்து அவள் வரிந்து வரிந்து கட்டுகிறாளே! அப்படி கட்டும்போது ஆசை வைத்து மோசம் போன இளைஞர்களின் உயிரை பறித்து அதையும் முன்தாணையோடு சேர்த்துச் சொருகிவிடுகிறாள் பெண். அப்படி இருக்கும் கட்டுமானத்தில் உள்ள நயம்.*

(3) துடிக்குள் அடிங்கி ஒரு
பிடிக்குள் அடங்கும் சின்ன
இடையினாள்; - காமத்
துட்டன் அரண்மனைக்குக்
கட்டும் கதலிவாழைத்
தொடை யினாள்;
அடுக்கு வண்ணச்சேலை
எடுத்து நெறிபிடித்த
உடையினாள்; - மட

அன்ன நடையில் ஒரு
சின்ன நடைபயிலும்
நடையி னாள்

*பத்தரை மாத்துத் தங்கத்தை உருக்கி ஓடவிட்டு வார்த்தெடுத்த சுவர்ண விக்ரகமாக இருக்கிறாள் வஸந்தவல்லி. அவள் மேனி முழுவதும் **ஒளி**ரேகைகளாய் பொன் ஒளிபூத்துச் சொரிகிறது. மேனியின் ஒவ்வோர் அணுவும் ஒளி கசிந்து ஊறும் அமிர்த ஊற்றேதான்.*

*ஆனந்த பரவசத்துக்கு வெறியூட்டும் போதைப் பொருளாக இருக்கிறாள் அவள். அவள் அழகும் அவள் அழகில் இருக்கிற பொலிவும் கல்லையும் கரைத்துவிடும்.*

*குற்றாலத்தில் கோயில் கொண்டு சக்தி பீடராக விளங்கும் திரகூடராஜ(ன்) குற்றாலநாதர் உள்ளத்தைக் கூட இளக்கிவிடுகிறது வஸந்தவல்லியின் வற்றாத அழகு.*

(4) வெடித்த கடல் அமுதை
எடுத்து வடிவு செய்த
மேனியாள்; - ஒரு
வீமப் பாகம் பெற்ற
காமப் பாலுக்கொத்த
சீனி யாள்;
பிடித்த சுகந்தவல்லி
கொடிப்போல் வசந்தவல்லி
பெருக்கமே - சக்தி
பீட வாசர்திரி
கூட ராசர் சித்தம்
உருக்கு மே.

அழகை மட்டும் அல்ல. அழகில் உதித்து எழுந்து வரும் ஒய்யாரத்தையும் கையில் எடுத்துத் தாளம் போட்டுக் காட்டுகிறது கவி.

அழகின் செருக்கு, வீறாப்பு, முறுக்கு இப்படி எத்தனையோ விதவிதமான துடிப்புகளையும் கவி காட்டுகிறது. வெட்கம் பாதி ஒய்யாரம் பாதி என்கிற கணக்கில் பாய்ச்சலும் பம்மாத்துமாய்ச் செயல்படுகிற வேகங்களையும் அப்படி அப்படியே எடுத்துக் காட்டுகிறது தமிழ்.

பழுத்த இசையிலும் தாளத்திலும் வைத்து அபிநயம் பிடித்துக் காட்டுகிறது தமிழ்.

பைரவி ராகத்தில் சாப்பு என்னும் தாளத்தில் பாடல் அமைந்திருக்கிறது.

பாடலை இசையோடு வைத்து அதுவும் அளவோடு இசையை வைத்துப் பாடத் தெரிந்தவர்களுக்கு ஒரு வரப் பிரசாதந்தான் குறவஞ்சிப் பாட்டு.

பாடலைப் பாடப்பாட மனதில் இருக்கிற அழுக்கு கரைந்துவிடும். சுத்தம் ஆகிவிடும் மனம். அப்படியே பயம் ஓடிவிடும். வாழ்க்கையில் ஓர் ஊக்கம் பிறக்கும்.

இனி, குற்றாலநாதர் பவனி வருகிறார்.

பவனியை பார்க்க பெண்கள் கூட்டம் கூட்டமாய் வருகிறார்கள். கூட்டத்தை விலக்கிக் கொண்டு வருகிறது பவனி. குற்றாலநாதர் உச்சி முதல் உள்ளங்கால் வரை நவரத்ன கசிதமான ஆபரணங்கள் அணிந்திருக்கிறார். அது கோடி சூரியப்பிரகாசமாய் ஜொலிக்கிறது. தலையில் சந்திரனை வேறு சூடியிருக்கிறார். பெண்களின் முத்து மூக்குத்திகளோ நட்சத்திரங்களாய் மின்னுகின்றன.

*சந்திரனைச் சூடிய சூரியனே தேரேறி வருவதுபோல இருக்கிறது குற்றால நாதரின் உலா.*

“மூக்கெழுந்த முத்துடையார் அணி
வகுக்கும் நன்னகர
மூதுார்வீதி
மேக்கெழுந்த மதிசூடி
கிழந் தெழுந்த
ஞாயிறு போல் மேவினாரே”

*குற்றால நாதர் தேரில் வந்தாலும் தேரில் நிற்கிற காளை வாகனத்தில்தான் ‘ஜம்’ என்று அமர்ந்திருக்கிறார்.*

*காளை (விடை) வாகனம், வெள்ளி மலை (சிலம்பு) போல கம்பீரமாக இருக்கிறது. வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, ஆசிரியப்பா என்னும் நால் வகைப் பாடல் (மறை)களும் இரண்டு சலங்கைகளாக வடிவெடுத்து குற்றாலநாதர் பாதங்களோடு சேர்ந்திருக்கின்றன. சலங்கையின் நாதம் தேனாய் (தேக்கு) இனிக்கிறது. சிலம்பொலி முழங்க சிலம்பில் (காளை மேல்) ஏறி பவனி வருகிறார் குற்றால நாதர்.*

“தேக்கெழுந்த மறைநான்காய் சிலம்பெழுநித பாதர் விடைசி
சிலம்பில் ஏறி”

*இனி, சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் இமயமலை (கைலாசத்தில்) மேல் வைத்துக் கல்யாணம் நடந்தது. கல்யாணக் கூட்டம் அதிகம். பாரம் தாங்க முடியவில்லை மலையால். கீழே இறங்க ஆரம்பித்துவிட்டது இமயமலை.*

*பார்த்தார் சிவபெருமான். அகத்தியரைக் கூப்பிட்டார். ''நீர் உடனே தென்திசை (பொதியை மலை) போக வேண்டும்'' என்றார்.*

*அகத்தியர் திகைத்தார். சிவபெருமான் தேற்றி அனுப்பினார். ''திருமணக் காட்சியை உம்முடைய இருப்பிடத்துக்கு வந்து காட்டுகிறோம்,'' என்று வாக்கு கொடுத்தார்.*

*அகத்தியர் தென்திசை வந்தார். தெற்கும் வடக்கும் சமம் ஆகியது. சிவபெருமானும் சொன்ன சொல் மாறாமல் பொதியை மலை வந்தார். திருமணக் கோலத்தோடு வந்துவிட்டார். அகத்தியர் கண்டுகளிக்க குற்றால நாதராகவே தங்கிவிட்டார்.*

*இனிப்பாடலை முழு உருவத்தில் பார்க்கலாம்.*

**''மூக்கெழுந்த முத்துடையார் அணி வகுக்கும்**
**குற்றால மூதூர் வீதி**
**வாக்கெழுந்த குறுமுனிக்கா மறி எழுந்த**
**கரம் காட்டு வள்ளலார் சீர்**
**தேக்கெழுந்த மறைநான்காய் சிலம் பெழுந்த**
**பாதர் விடைச் சிலம்பில் ஏறி**
**மேக்கெழுந்த மதிசூடிக் கிழந்தெழுந்த**
**ஞாயிறு போல் மேவனாரே''**

*கூட்டம் கட்டுக்கு அடங்கவில்லை. அதனால் பவனி அசைந்து அசைந்து வருகிறது.*

*மலர் சூடிய தெய்வ மகளிர் போடுகிற குரவை ஒலி பரவை (கடல்) ஒலியை விட வலுவாக இருக்கிறது. குற்றாலநாதர் செவியோடு செவியாக (இரண்டு)*

இசைவாணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாடிக் கொண்டே இருக்கிறவர்கள். அந்தப் பாடல்கள் எல்லோரையும் உருக்கி விடுகின்றன. பல பெண்கள் பவனிக்கு முன்னே நடனம் ஆடுகிறார்கள். மத்தள ஒலி திம்திம் என்று விழுகிறது. இவ்வளவையும் இடப்பக்கத்தில் அமர்ந்திருக்கும் குழல்வாய் மொழி அம்மை பார்த்துப் பார்த்து ரசிக்கிறாள். அப்படி கோலாகலமாக வருகிறது பவனி.

*பல்லவி.*

பவனி வந்தனரே மழவிடைப் பவனி வந்தனரே

*அனுபல்லவி*

அவனி போற்றிய குறம்பலா உறை
மவுன நாயகர் எவன நாயகர்;
சிவனும் ஆய்அரி அயனும் ஆனவர்
கவன மால்விடை அதனில் ஏறியே பவனி

*சரணம்*

கொத்து மலர்க்குழல்
தெய்வ மங்கையர்
குரவை பரவையை
நெருக்க வே.

ஒத்த திருச்செவி
இருவர் பாடல்கள்
உலகம் ஏழையும்
உருக்க வே;

மத்த ளம்புயல்
போல்மு ழங்கிட
மயில னார் நடம்
பெருக்க வே;

சக்தி பயிரவி
கௌரி குழல்மொழி
தையலாள் இடம்
இருக்க வே (பவனி வந்தனரே)

பந்துவராளி என்னும் சொகுசான ராகத்தில் சாப்பு தாளத்தில் இசைப்பாடலாய் எழுந்தருளிக் காட்சி கொடுக்கிறது குற்றாலநாதர் உலா.

கவி என்றால் இசையும், தாளமும் அப்படிக் கைகோர்த்து வரவேண்டும். அப்பொழுதுதான் உணர்ச்சிக்கு உருவம் கிடைக்கும். கண்ணைத் துடைத்துக் கொண்டு ஆசையோடு பார்க்கத் தோன்றும். அப்படிப் பார்ப்பதுதான் படிப்பு. அதுதான் கலை. ''கலையின் மூலம் எதுவென்று கண்டு தெளியும் கல்விதான் கல்வி'' வெறும் புத்தகங்களைக் கட்டி அழுகிற படிப்பு கல்வி அல்ல. இந்த உண்மை பாடலை பாடல் பாடக் கண்முன் வந்து நிற்கும்.

வஸந்தவல்லி தோழிமார்களுடன் மும்முரமாக பந்து விளையாடுகிறாள்.

மிக்க துரிதத்தில் நடக்கிறது பந்தாட்டம். அத்தனை துரிதத்திலும் அணுவளவு கூட பிசகாத கவனம். ஆட்டத்தின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் வளையல் (சங்கு) கலீர் என்று அலறுகிறது. துள்ளலையும் பாய்ச்சலையும் தாங்க முடியாமல் இடையானது துவண்டு துவண்டு குழைகிறது.

*அதற்காக சலங்கையும் தண்டையும் துள்ளித் துள்ளித் கதறுகின்றன. பந்தின் திரட்சி எம்மாத்திரம் என்று விம்மிப் புடைத்த இரண்டு நெஞ்சுகளும் இந்த ஆட்ட பாட்டத்தோடு சேர்ந்து குதியாட்டம் போடுகின்றன. அப்படி ஒய்யாரமாய் விளையாடுகிறாள் வஸந்தவல்லி.*

*இராகம் - பைரவி, தாளம் - சாப்பு.*

*கண்ணிகள்*

செங்கையில் சங்கு
 கலின்கலின் என்று
செயம் செயம் என்றாட - இடை
 சங்கதம் என்று
சிலம்பு புலம்பொடு
 தண்டை கலந்தாட - இரு
கொங்கை கொடும்பகை
 வென்றனம் என்று
குவிந்து குவிந்தாட - மலர்
 பைங்கொடி நங்கை
வசந்த சவுந்தரி
 பந்து பயின்றா ளே.

*காதின் குண்டலம் (குழை) வரை பாய்ந்து கண்கள் துள்ளின. கூந்தல் கலைந்து சொருகி வைத்த பூச்சரமும் உலைந்துவிட்டது. அதனால் மன்மதன் வில்லுக்கு நாணாகிய வண்டுகள் சிதறி ஓடின. வேகம் தாங்காமல் இடை முறிந்து விடுமோ என்று பலரும் கவலைப்பட்டார்கள்.*

பொங்கு கனம்குழை
மண்டிய கெண்டை
புரண்டு புரண்டாட - குழல்
மங்குலில் செண்டு
கலைந்தது கண்டு
மதன்சிலை வண்டாட - இனி
இங்கு துவண்டிடை
என்படும் என்றயல்
நின்றவர் திண்டாட - மலர்
பங்கய மங்கை
வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே.

*ஆட்டத்தைப் பார்த்தவர்கள் எல்லாம் அப்படியே அசந்துவிட்டார்கள். மனோ வேகத்தைத் தாண்டி கண் செயல்படுகின்றன. அதையும் தாண்டிய வேகத்தில் பந்தை பிடித்து வீசுகிறதுகை. என்ன அதிசயம்! என்று திகைத்து நின்றார்கள் பார்த்தவர்கள்.*

இந்திரை யோ! இவள்
சுந்தரி யோ! தெய்வ
மோகினி யோ! சிந்-தை
முந்திய தோ! கெண்டை
முந்திய தோ! செங்கை
முந்திய தோ! தான்-என்
சந்திர சூடர்
குறும்பலா ஈசர்
சங்கணி வீதியிலே - மணிப்

பைந்தொடி நாரி
வசந்த ஒய் யாரிபொன்
பந்து கொண்(டு) ஆடின -ளே.

*வஸந்தவல்லியும் அவள் விளையாட்டும் அப்படியே நம் கண்முன் நிற்கின்றன. சரேல் சரேல் என்று துள்ளிப் பாய்ந்து, பந்தைப் பிடிக்கவும் வீசவும் நாமே ஓடி ஆடுவதுபோல இருக்கிறது.*

*இசை, தாளம் இரண்டும் சேர்ந்து உணர்ச்சியை அப்படி ஆட்டு ஆட்டென்று ஆட்டுகின்றன.*

*இனி பவனி வருகிறவர் சாதாரணப் பேர்வழி அல்லர். குற்றாலநாதர், வான், மண், நீர், காற்று, தீ என்னும் ஐம்பெரும் பூதங்களையும் படைத்தவர். படைத்தவர் என்பதை விட விளைந்தவர் என்று சொல்வதுதான் பொருத்தம். அப்படி விளைந்த பேரண்டம் முழுவதும் ஒவ்வோர் அணுவிலும் அணுவின் துகளிலும் நிறைந்து செயல்படுகிற வித்தகர் - சரியான சித்தர்தான் குற்றாலநாதர்.*

*குற்றாலநாதருக்கு சளைத்தவள் இல்லை வஸந்தவல்லி. இவள் அழகுக்கு முன் அவர் ஆற்றல் அப்படியே கரைந்து உருகிவிடும். இவளுக்கு குதிகால்கள் இரண்டு. மார்பு இரண்டு. ஆக நான்கும் உருண்டு திரண்ட பந்துகள்தான். இவள் கையால் பிடித்து பிடித்து வீசுகிற பந்தும் ஒரு பந்துதான். ஆக இவளிடமும் ஐந்து வித்தைகள் இருக்கத்தான் செய்கின்றன.*

*இந்த தோரணையில் பவனியைக் கண்டாள் வஸந்தவல்லி.*

*சந்தம்.*

**தானான தன்ன தான**
**தனனான தான தான**

**"வருசங்க வீதிதன் னில்**
**வசந்தபூங் கோதைகா லில்**
**இருபந்து குதிகொண்டாட,**
**இருபந்து முலைகொண்டாட,**
**ஒரு பந்து கைகொண்டாட,**
**ஒரு செப்பில் ஐந்துபந்தும்**
**தெரிகொண்டு வித்தை ஆடும்**
**சித்திரை எதிர்கொண்டாளே!**

*உண்மையில் வஸந்தவல்லியைப் பார்த்து குற்றாலநாதர் தான் திகைக்க வேண்டும். ஆடாமல் அசையாமல் பவனிநிலை கொண்டிருக்க வேண்டும். ஆனால் விளையாட்டைத் திருப்பிப் போட்டுவிட்டது விதி.*

*குற்றாலநாதருடைய அழகும் அலங்காரமும் நெய்யை உருக்கிவிட்டதைப் போல் வஸந்தவல்லியை உருக்கிவிட்டன. தான் ஒரு பெண் என்பதை மறந்து, தான் நிற்கும் இடம் நாலு தெருவும் கூடுகிற ராஜவீதி என்பதையும் மறந்து அப்படியே சொக்கிவிடுகிறாள் வஸந்தவல்லி.*

*சொக்கி நிற்பதோடு மட்டுமா? பயமே இல்லாமல் அங்கம் அங்கமாக எப்படி வருணிக்கிறாள் என்று பாருங்கள்.*

*ராகம் - அடானா, தாளம் - ரூபகம்.*

*பல்லவி.*

இந்தச் சித்தர் ஆரோ - ஆகா
விந்தைக் காரர் ஆக
விடையில் ஏறி வந்தார் - (இந்த)

*சரணங்கள்*

(1) நாகம் புயத்தில் கட்டி
நஞ்சு கழுத்தில் கட்டி
காகம் அணுகா(து) எங்கும்
காடுகட்டி
பாகம்தனில் ஒரு பெண்
பச்சைக் கிளிபோல் வைத்து
மோகம் பெற ஒரு பெண்
முடியில் வைத்தார் - (இந்த)

(2) மெய்யில் சிவப் பழகும்
கையில் மழுவழகும்
மையார் விழியார் கண்டார்
மயங்காரோ!
செய்ய சடையின் மேலே
திங்கள் கொழுத்திருக்கப்
பையை விரிக்குதம்மா!
பாம்பு சும்மா! (இந்த)

(3) அருள்க்கண் பார்வை யால்என்
அங்கம் தங்கம் ஆக
உருக்கிப் போட்டார்; கண்ட
உடனேதான்!
பெருக்கம் பார்க்கில் எங்கள்
திருக்குற்றாலர் போல
இருக்கு(து) இவர் செய் மாயம்
ஒருக் காலே! (இந்த)

தோழிமார் பாடு சங்கடமாய்ப் போய்விட்டது. கொஞ்சம் கூட வெட்கம் இல்லாமல் நட்ட நடு வீதியில் நின்று இப்படி நடந்து கொள்கிறாளே! ''இவள் என்ன மனுசி'' என்று ஆத்திரப்பட்டார்கள்.

ஆத்திரத்தைக் காட்டக்கூடிய இடமா அது. காதோடு காது வைத்து வஸந்தவல்லிக்கு தோழிமார் சொன்னார்கள்.

''குற்றால நாதரேதான். சந்தேகம் வேண்டாம். குற்றாலநாதரேதான்'' என்று வஸந்தவல்லியின் கையை பிடித்து அழுத்தினார்கள். உழத்தாமல் எங்கள் பின் வா என்னும் குறிப்பில் அழுத்தினார்கள்.

குற்றாலநாதர்தான் என்று தோழிமார் சொன்னார்களோ இல்லையோ உச்சிக்கு ஏறிவிட்டது வெறி!

''ஆகா, அப்படியா! குற்றாலநாதர், குற்றாலநாதர் என்று காது குளிரச் சொல்லுங்கள். மனங்குளிரச் சொல்லுங்கள்'' என்று தோழிமார் ஒவ்வொருவரையும் கட்டி தழுவுகிறாள் வஸந்தவல்லி.

*விருத்தம்.*

“திங்களை முடித்தார் கண்டாய்,
திரிகூடச் செல்வர் கண்டாய்,
எங்குள சித்துக்(கு) எல்லாம்
இறையவர் இவரே என்று
நங்கைமார் பலரும் கூற,
நன்மொழித் தேறல் மாந்தி,
மங்கையாம் வசந்தவல்லி,
மனம் கொண்டாள்!
மயல் கொண்டாளே!”

*தோழிமார்களுடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்* **வஸந்த** *வல்லி. படுக்கையில் படுத்தாள். உறக்கம் வரவில்லை.* **இருப்** *புக் கொள்ளவில்லை அவளுக்கு. ஆசை கொள்வது எளிது. அந்த ஆசையை ஊன்றி வைப்பதும் எளிது. காரணம் இந்த இரண்டை யும் நாம் செய்வதில்லை. தானாகவே செய்து கொள்கிறது உணர்ச்சி!*

*ஆனால் அந்த ஆசையை அடக்குவதுதான் கஷ்டம்! நம்மால் முடியவில்லையே என்று நினைக்க நினைக்க கஷ்டம் இன்னும் அதிகம் ஆகும்.*

*ஒன்று அதை அடைவது, இல்லாவிட்டால் மடிவது என்னும் நிலைக்கே கொண்டு வந்து தள்ளிவிடும் அந்த பொல்லாத ஆசை.*

*அப்படி ஒரு வெறிக்கு ஆளாகிவிட்டாள் வஸந்தவல்லி. காதல் வெறி அவளை கதற கதற அடிக்கிறது, வஸந்தவல்லி வாய்விட்டுப் புலம்புகிறாள்.*

*ராகம் - புன்னுகவராளி தாளம் - ரூபகம் கண்ணிகள்.*

(1) முனிபரவும் இனியானோ! - வேத
முழுப்பலவின் கனிதானோ!
கனியில் வந்த செந்தேனோ! - பெண்கள்
கருத்(து) உருக்க வந்தானோ?
தினகரன் போல் சிவப்பழகும் - அவன்
திருமிடற்றில் கறுப்பழகும்,
பனகமணி இருகாதும் - கண்டால்
பாவையுந்தான் உருகாதோ? (முனிபரவும்)

(2) வாகனைக் கண்டு உருகுதையோ! - ஒரு
மயக்கமதாய் வருகுதையோ!
மோகம் என்ப(து) இதுதானோ? -இதை
முன்னமே நான் அறியேன்; ஓ!
ஆகம் எல்லாம் பசந்தேனே - பெற்ற
அன்னன சொல்லும் கசந்தேனே!
தாகம் இன்றிப் பூணேனே - கையில்
சரி வளையும் காணேனே! (முனிபரவும்)

*கோபம், வீரம் முதலிய உணர்ச்சிகள் கொஞ்ச நேரத்துக்கு தடபுடல் பண்ணும். பிறகு மெல்ல மெல்ல தீர்ந்துவிடும். துயரம் கூட அப்படித்தான். வஞ்சம் தீர்த்தல் என்று ஒரு குணம். அது உள்ளுக்குள் கிடந்து கறுவிக் கொண்டே இருக்கும்! அதை விட மோசமானது பொறாமை! இந்த இரண்டு உணர்ச்சிகள் கூட காலப்போக்கில் மாறும்! அவைகளோடு மோதாமல் விலகி ஒதுங்கினால் போதும். அதன் காரம் குறையும். அந்த குணம் உடையவர்களை புகழ்ந்து பாராட்டினாலும் உபசரித்தாலும் அவைகளின் விஷம் இறங்கிவிடும். இருந்த இடம் தெரியாமல் அவை ஓடிவிடும்.*

ஆனால் காதல் என்பது அப்படி அல்ல. அதற்கு எந்த மாற்றம் கிடையாது. நாளாக நாளாக அதற்கு ஆற்றம் கூடும். வயிரமாக விளைந்துவிடும் காதல்.

கொஞ்சம் உபசாரம் பண்ணித் தணிக்கலாம் என்றால், துருத்தியால் ஊத ஊத கொல்லனுடைய உலைத் தீ 'ஜம்' பண்ணி ஏறுவது போல சீறி ஏறும் காதல்.

எந்த வகையாலும் தாஜாப் பண்ண முடியாத ஒன்று காதல்.

வேண்டாத அம்சங்கள் ஒவ்வொன்றாய் மனுசாளை விட்டுக் கழன்றுவிடும். ஆனால் அன்பு, காதல், பக்தி என்னும் பண்பு அப்படிக் கழலாது. எண்சாண் உடம்பு என்னும் இந்தக் கட்டை வெந்து நீறிய பின்பும் அந்த அன்பு சுடர்விட்டுப் பிரகாசிக்கும். மனுச தத்துவத்தோடு ஒட்டியது ஒன்று உண்டென்றால் அது அன்புதான்.

அந்த அன்பில் அகப்பட்டுவிட்டாள் வஸந்தவல்லி. வஸந்தவல்லியால் சாப்பிட முடியவில்லை. தூங்க முடியவில்லை. தோழிமார்களுடன் மனம் விட்டு பேச முடியவில்லை.

காதல் வெறியில் திண்டாடித் திணறுகிறாள் வஸந்த வல்லி. யாரும் சிரித்துப் பேசினால் போதும்; இவளுக்கு எரிச்சலாக இருக்கிறது. குளித்து முழுகி வெளுத்த உடை தரித்து நகை நட்டுகளோடு கலகலப்பாக ஒருவர் கண்ணில் பட்டால் போதும் தாங்க முடியவில்லை அவளுக்கு.

பிறகு குளிர்ந்த தென்றலை எப்படி அவள் பொறுப்பாள்? வானத்தையும் பூமியையும் பாலாபிஷேகம் பண்ணும் சந்திரனை எப்படி சகிப்பாள். குயிலின் சத்தம், வீணையின் நாதம், தேவார திருவாசகப் பாடல்கள் கூட எரிச்சலை உண்டாக்குகின்றன.

வஸந்தவல்லியின் துன்பத்தை குறைக்க தோழிமார் ஏதேதோ உபாயம் செய்கிறார்கள். ஒன்றும் பிரயோசனப்படவில்லை.

தென்றலைத் திட்டுகிறாள். "நீ ஓர் ஆம்பிளையடா என்று மன்மதனை தாக்குகிறாள். சந்திரனை விளாசு **விளாசு என்று** விளாசி விடுகிறாள்.

பிறகு, தானே புலம்புகிறாள்! எப்படி வருகிறது புலப்பம் என்று பாருங்கள்.

காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றுந்தான் மனுசனை சின்னாபின்னம் ஆக்கும் இடங்கள். அதாவது முப்புரங்கள்.

அடியார்களுக்காக இந்த முப்புரங்களை தீயை வைத்து எரிக்கிறவர் பெருமான். ஆனால் அடியார்களை அந்த வெப்பம் தாக்கிவிடாதபடி அணைக்கிறவரும் அவர்தான். அப்படித் தீயை அணைக்கிற குற்றாலநாதர் என்னுடைய ஆசைத் தீயை அணைக்கமாட்டேன் என்கிறாரே! என்று கதறுகிறாள்.

(1) புறத்து நெருப்பை மூவர்க்கு அவித்தவர்
மையல் கொண்ட என்
ஒருத்தி காம நெருப்பை அவிக்கிலார்!

நான் மூன்றுபேர் இல்லையே! ஒருத்திதானே! உதவ முடியாதா என்கிறாள்!

அது மட்டுமா?

அவருக்கு தலைகள் ஐந்து, அந்த ஐந்து தலைகளிலும் பொங்கப் பொங்க ஆறை (கங்கையை) **நிறைத்து வைத்துள்ளார்.**

*விரக வேதனையால் அஞ்சி அஞ்சி சாகிறேனே நான்! எனக்கு ஓர் ஆறு(தல்) காட்ட வேண்டாமா? என்கிறாள்!*

(2) அஞ்சு தலைக்குள் ஆறு தலை வைத்தார்
மனம் மயங்கி
அஞ்சு தலைக்கோர் ஆறுதலை
வையார்

*தேவேந்திரனுக்கு (தேவர்களின் துரைக்கு) வந்த பழியை நீக்கினவர் இவர். ஆனால் மன்மதன் (சின்னத்துரை) கரும்புவில்லை (சாபம்) வளைத்து காதல் புஷ்பங்களை என்மேல் எய்து கொண்டுதானே இருக்கிறான்? குயிலின் எக்காளம் வேறு அவனுக்கு. அந்த கொட்டத்தை அடக்குகிறாரா இவர்? யார் யாருக்கோ உதவி செய்கிறார். ஆனால் வேண்டியவர்களாகிய என்னை கைவிட்டு விட்டார்.*

(3) தேவர் துரைதன் சாபம் தீர்த்தவர்
மாங்குயில்
சின்னத் துரைதன் சாபம் தீர்க்கிலார்!
யாவ ரும்புகழ் குற்றால நாதர்தான்
யாவர்க்கும்
இரங்கு வார் எனக்(கு) இரங்கிலார்
பெண்ணே!

*தனியே புலம்பினதோடு இல்லாமல் தோழிமார் களிடமும் இப்படி அழுது புலம்பினாள் வஸந்தவல்லி. தோழிமார்கள் அனுதாபப்பட்டார்கள். புத்திமதி சொன்னார்கள். தேற்றிப் பார்த்தார்கள். ஒன்றும் எடுபடவில்லை.*

*இந்த விவகாரத்தில் இதற்கு மேல் அவர்களால் என்ன செய்ய முடியும்? வேண்டும் என்றால் அவளுக்காக*

குற்றாலநாதரிடம் தூது போகலாம். அதுவும் கஷ்டமான காரியம்தான்.

மனுசாளுக்கு காரியம்தான் முக்கியம். நேற்று, இன்று, நாளை என்றெல்லாம் கணக்குப் போட்டு பார்ப்பது இல்லை. நேற்று அவரை நாம் மதிக்கவில்லயே? இன்று எப்படி விஷயத்தை அவரிடம் சொல்வது? இப்படி எல்லாம் யோசனை பண்ணிக் கொண்டிருந்தால் காரியம் நடக்காது.

காரியம் ஒன்றுதான் குறி என்று வந்துவிட்டால் யோசனை முழுவதும் காரியத்தின் மேல்தான். மனுசகாரியம் இப்படித்தான்.

தோழியிடம் வஸந்தவல்லி கலகலப்பாக இல்லை. ஒரு மாதிரி ஒதுங்கியே இருந்தாள். ஆனாலும் காரியம் என்று வந்தவுடன் தோழியின் கையை பிடிக்கிறாள். கன்னத்தை தடவுகிறாள். 'எனக்காக ஒரு தடவை குற்றாலநாதரிடம் தூது போய் வா' என்று கெஞ்சுகிறாள்.

தோழியும் சம்மதித்துவிட்டாள். அவ்வளவுதான் உடனே புறப்படு என்று அவசரப்படுத்துகிறாள் வஸந்தவல்லி.

அன்பு வைப்பது எவ்வளவு துன்பம் என்பதை இப் பொழுது தெரிந்து கொண்டேன். அதுவும் பெண்ணோடு பிறக் காத மலட்டுச் சென்மத்து மேலே அன்பு வைத்தேனே நான்!

இப்படிச் சொன்னாள் தோழியிடம். மேலும், ''மறந்து தொலையலாம் என்றால் அதுவும் முடியவில்லை. தூங்கி எத்தனை நாள் ஆகிறது நான்? பெண்ணாகப் பிறக்கிறது போல கேவலம் வேறொன்றும் இல்லை.

இவ்வாறு விம்மி விம்மிக் குமுறுகிறாள் வஸந்தவல்லி.

*பிறகு ஒரு தெளிவு பிறக்கிறது. ''இரண்டில் ஒன்றை கேட்டு விட்டு வா'' என்று அடித்தே சொல்லிவிடுகிறாள் வஸந்தவல்லி.*

*வஸந்தவல்லியின் வேதனையில் துடிக்கிற துடிப்பை அழகிய இசையிலும், தாளத்திலும் வைத்து அபிநயம் பிடிக்க வைக்கிறார் கவிஞர். காம்போதி ராகத்தில் ஆதி தாளத்தில் அற்புதமான ஜதியோடு நடனம் ஆடி வருகிறது பாடல்.*

*பல்லவி.*

தூதுநீ சொல்லிவா ராய் - பெண்ணே!
குற்றாலர் முன் போய்த்
தூதுநீ சொல்லிவா ராய்.

*அனுபல்லவி.*

ஆதிநாள் சுந்தரர்க்கு
தூதுபோ வைர்முன்னே (தூதுநீ)

*சரணங்கள்*

(1) உறங்க உறக்கமும் வாராது;
மாயம் செய்தாரை
மறந்தால் மறக்கவும் கூடாது;
பெண்ணாய்
பிறந்திடல் ஆகாது;
ஆனாலும் பெண்ணோடே
பிறந்தறி யார்மேல் பேராசை
ஆகாது; ஆகாது;
இப்பொழுதே (தூதுநீ)

(2) வந்தால் இந்நேரம் வரச் சொல்லு;
வாரா(து) இருந்தால்
சந்தேகம் பிழைப்பென்று சொல்லு;
உற்றாதரித்து
தந்தால்மா லையைதரச் சொல்லு;
தராதிருந்தால்
தானுண்ட நஞ்சைத் தரச் சொல்லு;
தாமதியாதே (தூதுநீ)

*வாய்தாக் கீய்தாப் போடக்கூடாது. வரவேண்டும் என்று நினைத்தால் இப்பொழுதே வரவேண்டும். இல்லை அவர் கழுத்தில் கிடக்கும் மாலையையாவது வாங்கிவா. அதுவும் கொடுக்க மனம் இல்லை என்றால் நஞ்சையாவது கொடுக்கச் சொல். நான் யாருக்காக இருக்க வேண்டும்? போய்த் தொலைகிறேன் என்று சொல்லிவிடுகிறாள் வஸந்தவல்லி.*

*கலக்கம், சோர்வு, அழுகை, வருத்தம், உறுதி ஒவ்வொன்றும் தங்க விக்கிரகங்களாய் எழுந்து வருகின்றன. எழுந்து வந்து நடனம் ஆடுகின்றன. எல்லாம் தமிழில்தான்.*

*குற்றாலநாதரிடம் தூது போகச் சம்மதித்து விட்டாள் தோழி. போய் வருகிறேன் என்று சொல்லிப் புறப்பட்டு விட்டாள் தோழி.*

*அப்படி போகிறவளை கைதட்டிக் கூப்பிட்டாள் வஸந்தவல்லி. ''நீ மளமளவென்று உள்ளே போய்விடாதே! நேரம் பார்த்து இடம் பார்த்து, சந்தர்ப்பம் பார்த்து விஷயத்தை சொல்ல வேண்டும். பக்குவமாக சொல்ல வேண்டும். நான் படுகிற கஷ்டத்தை அவர் கண்கொண்டு பார்க்கும்படி கோடிட்டு காட்டிவிட வேண்டும்,'' என்று கனிந்து உருகி விடுகிறாள் வஸந்தவல்லி.*

*''என்னைப் போலவே பல பெண்கள் தூது அனுப்பி இருப்பார்கள். தூதாக வந்த வண்டுகளும், கிளிகளும் காத்துக் கிடக்கும். பார்த்துப் போக வேண்டும்'' என்கிறாள்.*

மைக்கருங்கண் மாதர்விட்ட
வண்டுகளும் கிள்ளைகளும்
வாசல்தொறும் காத்திருக்கும்
கண்டாய் சகியே!

*அதுமட்டுமா? அவர் கொலுவீற்றிருக்கும்போது;*

''நாலுமறைப் பழம்பாட்டும்
நால்வர் சொன்ன திருப்பாட்டும்
நாலுகவிப் புலவர் புதுப்
பாட்டும் சகியே!
''நீலகண்டர் குற்றாலர்
கொண்டருளும் நிறைகொலுவில்
நீக்கம் இலை எல்லார்க்கும்
பொதுக்காண் சகியே!

*அதனால் மளமளவென்று நீ போய்விடக் கூடாது.*

*''பள்ளியறையிலிருந்து குற்றாலநாதர் வரும் நேரம்தான் நீ பார்ப்பதற்கு வாய்ப்பான நேரம். அப்பொழுது கண் ஜாடையாலேயே சொல்லிவிட வேண்டும். மாலையையாவது வாங்கி வந்து விட வேண்டும்''.*

கொப்பழகுக் குழைமடந்தை
பள்ளியறை தனில் இருந்து
கோயில் புகும் ஏகாந்த
சமயம் சகியே!
மைப்பழகு விழியால் என்
பெருமாலை நீ சொல்லி
மருமாலை வாங்கியே
வாராய் சகியே!

*பெருமாலை என்பது விரக வேதனை. மருமாலை என்பது மணமாலை. கொப்பழகு குழை மடந்தை - குழல்வாய் மொழி அம்மை. வஸந்தவல்லி தூது அனுப்பிவிட்டாள் தோழியை. அப்படி அனுப்பிவிட்டு நேரம் ஆக ஆகத் தவனிக்கிறாள். அந்த நேரம் குறத்தி வருகிறாள் குறி சொல்ல.*

# 8

## சிங்கியா சிங்காரியா!

சிவபெருமான் கையில் சூலாயுதம் இருக்கிறது. அது மூன்று கவுர் (தலை)களுடன் பளபளவென்று கண்ணைப் பறிக்கும். அதற்குத் திரிசூலம் என்று பெயர்.

ஒரே சூலம் எப்படி மூன்று முனைகளுடன் இருக்கிறதோ அப்படி மூன்று சிகரங்களுடன் எழுந்து நிற்கும். மலை குற்றால மலை. அதுவும் திரிகூட மலைதான்.

மலை மேல் போகப் போக அடர்ந்த காடுகளும், அருவிகளும் யானைக் கூட்டங்களும் வேடர்களும்தான். செண்பகாடவி, தேனருவி இவைகளுக்கும் மேலே ஒரு வளமான பிரதேசம்; அதில் இருந்துதான் இறங்கி வருகிறாள் குறத்தி.

குறி சொல்வதில் கைதேர்ந்தவள் குறத்தி. சிங்கி என்பது அவள் பெயர்.

இனி... உமாதேவியின் அருள் கொளிக்கும் கண்கள் வண்டுபோல கறுகறுவென்று இருக்கின்றன. அந்தக் கண்கள் எப்பொழுதும் சிவபெருமானைப் பார்த்துக் கொண்டே இருக்கும். கண்ணாகிய வண்டுக்கு வேண்டிய ஆகாரம் (தேன்) பெருமானுடைய கொன்றை மாலையில் இருக்கத்தானே செய்கிறது.

*அந்தப் பெருமானும் பெருமாட்டியும் எழுந்தருளி இருக்கும் மலையிலிருந்து வருகிறாள் குறத்தி.*

*ஆசிரியப்பா*

"சைவமுத் திரையை
    வானின் மேல்தரிக்கும்
தெய்வமுத் தலைசேர்
    திரிகூட மலையான்,
வாலசுந் தரி, சூழல்
    வாய்மொழி அருள்க்கண்
கோலவன்(டு) இணங்கும்
    கொன்றைமா லிகையான்,
பூவளர் செண்பகத்
    காவளர் தம்பிரான்,
தேவர்கள் தம்பிரான்
    திருவருள் பாடி,
கொங்கணம் ஆரியம்
    குச்சலர் தேசமும்
செங்கைமாத் திரைக்கோல்
    செங்கோல் நடாத்தி
கன்னடம் தெலுங்கு
    கலிங்கராச் சியமும்
தென்னவர் தமிழால்
    செயத்தம்பம் நாட்டி,
மன்னவர் தமக்கு
    வலதுகை நோக்கி
இன்னகை மடவார்க்கு,
    இடதுகை பார்த்து,

காலம்முன் போம்குறி
கைப்பலன் ஆம்குறி
மேல்இனி வரும்குறி
வேண்டுவார் மனக்குறி
மெய்க்குறி கைக்குறி
விழிக்குறி மொழிக்குறி
எக்குறி ஆயினும்
இமைப்பினில் உரைக்கும்
மைக்குறி விழிக்குற
வஞ்சிவத் தனளே''

*'குறவஞ்சி' என்று ஒரு சீருக்குள் அடங்க மாட்டேன் என்கிறாள் குறத்தி. 'குற' என்று முன் சீரின் கடைசியில் காலை ஊன்றி அடுத்த சீரின் முகப்பில் இன்னொரு காலை 'வஞ்சி' என வைத்து ஒரு சிமிட்டுச் சிமிட்டுகிறாள் குறத்தி.*

*அவள் கண்களின் அட்டகாசமே தனி, அதற்கும் மேல் மை தீட்டப்பட்டு தடபுடல் பண்ணுகின்றன கண்கள். 'மைக்குறி விழி'*

*வலது கையை நீட்டச் சொல்லி கட்டளை இடுவாள் ஆண்களை. அவர்களின் ரேகைகளை மாத்திரைக் கோல் (கைப்பிரம்பை) வைத்தே கணக்குப் போட்டுப் பார்ப்பாள். பெண்கள் என்றாலோ ஆசையோடு அவர்களின் இடது கையை பிடித்துப் பார்ப்பாள். குறத்தியின் இந்த வழக்கமான தோரணையை அப்படி 'நோக்கி' என்றும் 'பார்த்து' என்றும் அடையாளம் வைத்துக் காட்டுகிறது தமிழ்.*

*மூன்று காலங்களைப் பற்றியும் தாராளமாகச் சொல்லுவாள். குறிகேட்பவர்களின் பார்வை, படபடப்பு,*

பேச்சு இவைகளை வைத்தே அவரவர்களுக்குத் தக்கபடி சொல்லி விடுவாள்.

நாடக மேடைக்கு வர வேண்டும் என்றால் இப்படி அல்லவா வர வேண்டும். கல்யாண (மண) மேடைக்கு வருகிற பெண்ணுக்கு நடையும் உடையும் எப்படி ஒரு தனித்த அலங்காரத்தில் இருக்கிறதோ அப்படி இருக்க வேண்டும். நாடகப் பாத்திரத்தின் வரத்து. இனி குறத்தியின் உல்லாசமும் சந்தோஷமும் எப்படி அவளுடைய மேனியிலும் அங்கங்களிலும் விழுந்து ஒளி வீசுகின்றன என்று பார்ப்போம்.

கமகம என்று மணக்கும் கஸ்தூரிப் பொட்டென்ன, மேகம் பூத்த முல்லை வனம் போலக் கூந்தலில் சூடிய புஷ்பம் என்ன, கண்களில் தீட்டிய மை என்ன, கையில் பிடித்த மாத்திரைக் கோல் என்ன, இடுப்பில் வைத்த பிரப்பங்கூடை தான் என்ன?

அடடா அவள் நடை என்ன, உடை என்ன, நகை என்ன? சாதாரணப் பெண் போலவா வந்தாள்?

கவியாக அல்லவா பெருமிதத்தோடு நிமிர்ந்து உல்லாசம் பண்ணி வருகிறாள் குறத்தி.

விருத்தம்

தானான தனனான் தனனான தன்
தனனான தனனான தன்

''சிலைநுதலில் கஸ்தூரித்திலகம் இட்டு,
நறும் குழலில் செச்சைசூடி
கொலை மதர்க்கண் மைஎழுதி
மாத்திரைக் கோல்

வாங்கி, மணிக்கூடை தாங்கி,
கலைதிகழக் குன்றிமணி வடம் பூண்டு,
திரிகூட முதல்வர்காக்கும்
மலைதனில் பொன் வஞ்சி, குறவஞ்சி, அப
ரஞ்சி, கொஞ்சி வருகின்றாளே''

*ஆடி ஆடி அசைந்து வஸந்தவல்லியின் வீட்டுக்கே வந்துவிட்டாள் குறத்தி. குறி சொல்ல ஆள் கிடைத்து விட்டது! கொஞ்ச நேரமாவது மனம் விட்டுப் பேச ஆள் கிடைத்து விட்டது என்று உற்சாகம் கொண்டாள் வசந்தவல்லி.*

*குறத்தியை ஆசையோடு பார்த்தாள். அன்போடு வரவேற்றாள். உல்லாசம் பொங்கப் பொங்கக் குறத்தியிடம் கேட்டாள். 'நீ எங்கிருந்து வருகிறாய்? உன் ஊரும் வட்டாரமும் எப்படி?' என்று.*

''அந்தரதுந் திபிமுழங்கும் நன்னகர்குற்
றால லிங்கர் அருளைப் பாடி
வந்தகுற வஞ்சிதன்னை வசந்தவல்லி
கண்டுமனம் மகிழ்ச்சிகொண்டு,
சந்தமுலை துவளும் இடை தவளநகைப்
பவள இதழ்த் தையலே! உன்
சொந்தமலை எந்தமலை? அந்தமலை
வளம் எனக்குச் சொல் என்றாளே!''

*அறிவை மட்டும் வைத்துப் பார்த்தால் சிங்கி வெறும் குறத்தியாகவே தெரிவாள். உணர்ச்சிமயமாகப் பார்த்தாலோ தேவ கன்னியாகவே தெரிவாள்.*

*வசந்தவல்லி அறிவை வைத்து ஆராய்ச்சியா பண்ணிக் கொண்டிருக்கிறாள்? உணர்ச்சிமயமாகி உருகியல்லவா*

கொண்டிருக்கிறாள்? அதனால் தெய்வம் அனுப்பிய தூதாகவே மதிக்கிறாள் குறத்தியை!

இனி, ஒரு சுழற்றுச் சுழற்றி பம்பரத்தைத் தரையில் சுற்ற விடுவான் பையன், பம்பரத்தைத் தரையில் சுற்ற விடுவான் பையன். பம்பரத்தைப் பின்னிக் கிடந்த கயிறு பக்குவமாய் உருவி அவன் கையில் நிற்கும். அப்படி லாவகமாய் வீசுவான் பம்பரத்தை. அதை விட லாவகமாய் ஆடும் பம்பரம்.

இதை ஒரு குழந்தை பார்த்தால் அந்தக் காட்சி எப்படி இருக்கும்? தியானத்தில் கண்டு அனுபவிப்பது போலப் பார்த்துப் பார்த்து அனுபவிக்கும் குழந்தை. ஆனந்தமும், சிரிப்பும் குழந்தையின் உள்ளத்தில் ஊறும். அவை அப்படியே குழந்தையின் முகத்தில் வந்து கோலம் போடும். இதற்காக அப்படி இப்படி என்று அலட்டிக் கொள்வதில்லை குழந்தை. எல்லாம் இயல்பான காரியம்தான்.

முழுக்க முழுக்க உணர்ச்சி மயமாகவே இருக்கிறவர்கள் குழந்தைகள். பெண்களும் கிட்டத்தட்ட அப்படித்தான் கவிஞர்கள் என்றால் ஆண் ஆனாலும் சரி; பெண் ஆனாலும் சரி... அவர்கள் உணர்ச்சி மயமாகவே இருப்பார்கள்.

வசந்தவல்லியின் உணர்ச்சிக்கு உருவம் கொடுத்து விட்டார் கவிஞர். தமிழ் இதைப் பார்த்துத் தாளம் போடுகிறது.

பாடலைப் பாடிப் பார்த்தால் உணர்ச்சி, உருவம், ஆனந்தம் எல்லாம் கண்முன் வந்து நிற்கும்.

வசந்தவல்லியின் கேள்விக்குக் குறத்தி சொல்கிறாள் பதில். இந்தப் பதிலிலும் இந்தக் காட்சியைக் காணலாம்.

குற்றால மலைதான் என்னுடைய இடம் என்கிறாள். அவள் வாழும் வட்டாரத்தில் நவரத்தினங்களும் விளையும்

என்கிறாள். சந்து பொந்து எல்லாம் கைவிட்டுத் தேடுவானாம் சூரியன். ஏன்? ரத்தினங்களை அள்ளி எடுக்க!

குற்றால மலைக்கு தென் எல்லை (சிவ) சைலமலை. அது குற்றாலத்திலிருந்து பத்து மைல்தான் இருக்கும். குற்றால மலை போல அதுவும் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதிதான். அப்படிப் பக்கத்தில் உள்ள சைல மலையைத் தெற்கு எல்லை என்று சொல்லி விட்டு, வட எல்லையாக ஆயிரத்து ஐநூறு மைல் தொலைவிலுள்ள வானளாவிய இமய (கைலை) மலையைச் சொல்கிறாள் குறத்தி.

சிவபெருமான் திருப்பாதத்தைக் கண்டு பிடித்து விடுவேன் என்று மகாவிஷ்ணு (துயிலும் அவர்) முனைந்து தேடினார். அண்ட பிண்டம் எல்லாம் ஆராய்ந்து தேடினார். அகப்படவில்லை பெருமான் திருவடி.

அந்த மர்மமான பெருமான் எழுந்தருளி இருக்கும் மலைதான் எங்கள் குற்றாலமலை என்று துள்ளுகிறாள் குறத்தி.

*கண்ணிகள்*

*ராகம் - புன்னாக வராளி*

*தாளம் -ஆதி.*

கயிலை எனும் வடமலைக்குத்
தெற்குமலை அம்மே!
கனகமகா மேரு என
நிற்கும் மலை ஆம்மே!
சயிலமலை தென்மலைக்கு
வடக்குமலை அம்மே!
வயிரமுடன் மாணிக்கம்
விளையும் மலை அம்மே!

வாள் இரவி முழைகள் தொறும்
நுழையும் மலை அம்மே!
துயிலும் அவர் விழிப்பாகி
அகிலம் எங்கும் தேடும்
துங்கர்திரி கூடர்மலை
எங்கள்மலை அம்மே!

*(கனகமகா மேரு என நிற்கும் மலை - பொன் மயமான மகா மேரு மலை போல ஓங்கி உயர்ந்து நிற்கும் மலையாம் குற்றால மலை. வாள் இரவி - ஒளிமயமான சூரியன். துயிலும் அவர் - யோக நித்திரையில் அமர்ந்த மகாவிஷ்ணு, துங்கர் - சிவபெருமான்)*

மேலும் சொல்கிறாள் குறத்தி. உச்சியிலிருந்து தரையை நோக்கி முழக்கத்தோடு பாய்ந்து வரும் அருவிகள். அங்கங்கே விழுந்து சிதறி மேலே மேலே அவை ஏறுவதும் இறங்குவதும் அழகாக இருக்கும். பெண்கள்தாம் கற்களை மேலே போட்டுப் பிடித்து (கழங்கு) விளையாடுகிறார்களோ என்று சொல்லத் தோன்றும் அந்தக் காட்சி.

தடாகங்களில் விழுந்து பெருகிய அருவி சில சமயங்களில் வேகமாக வெளியே ஓடி வரும். தெருக்கோடிக்கே வந்து விடும்.

வந்து என்ன செய்யும்?

குழந்தைகள் மணலால் வீடுகளைக் கட்டிக் கொண்டிருப்பார்கள். அருவி நீர் வந்து அந்த வீடுகளை அடித்துக் கொண்டு போய் விடும். வேறு சில குழந்தைகள் வீடு கட்டி முடித்திருப்பார்கள். அவர்கள் கிரகப் பிரவேசம் பண்ணுகிற வேளை பார்த்து ஆத்திரத்தோடு வந்து

*அவற்றையும் அடித்துப் போய் விடும். சில குழந்தைகள் வீடு கட்டி அங்கு கல்யாணமே நடத்துவார்கள். பொடிப் பொடிக் கற்களைக் கொண்டே சோறு பொங்கிக் கறி வைத்து விருந்தும் நடத்துவார்கள். அந்த வேளை பார்த்து இந்த அருவி வந்து அட்டூழியம் பண்ணும்.*

*அருவியும் மனுசாள் மாதிரிதான்.*

*தேனும் கிழங்கும் நாங்கள் விரும்பி உண்ணும் உணவு. யானையை மடக்கி அதன் கொம்புகளை ஒடித்து அதையே உலக்கையாக உபயோகிப்போம்.*

*குரங்குகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. செண்பகப் பூப் பூத்து விட்டால் இங்கு மட்டுமா மணம்? தேவலோகம் வரை 'கம்' என்று இருக்கும்.*

முழங்கு திரைப் புனல் அருவி
கழங்கெனமுத்து ஆடும்;
முற்றம் எங்கும் பரந்து பெண்கள்
சிற்றிலைக் கொண்(டு) ஓடும்;

கிழங்கு கிள்ளித் தேன் எடுத்து
வளம்பாடி நடிப்போம்;
கிம்புரியின் கொம்பொடித்து
வெம்புதினை இடிப்போம்;

செழும்குரங்கு தேமாவின்
பழங்களைப் பந்(து) அடிக்கம்;
தேன் அவர்சண் பகவாசம்
வானுலகில் வெடிக்கும்;

வழங்கு கொண்ட மகராசர்
குறம்பலவின் ஈசர்
வளம்பெருகும் திரிகூட
மலை எங்கள் மலையே

*மலையை நினைத்த உடனேயே அங்குள்ள மக்களும் அவர்களுடைய வாழ்க்கையும் அப்படி அப்படியே கண்முன் வந்து நிற்கின்றன. வானத்துக்கும், பூமிக்கும் ஒரு வெள்ளிப்பாலம் போட்டது போல கொட்டுகிறதே அருவி. அதுவும் அப்படியே கண்முன் வந்து நிற்கிறது. குறத்தியின் கண்ணில் தெரிவதை அப்படியே நம்கண்முன் வந்து நிறுத்துகிறார் ஆசிரியர்.*

*ஒரு தடவை பண்டித ஜவஹர்லால் நேரு சொன்னார். ''அமெரிக்காவை நினைக்கிறபொழுது முதலில் என் கண்முன் வந்து நிற்பவை இரண்டு. அவற்றுள் ஒன்று திருமதி. எலினார் ரூஸ்வெல்டின் கடல் மடை திறந்தால் போன்ற சொல் மழை... மற்றொன்று கம்பீரமும் பெருந்தன்மையும் மிக்க நயாகரா நீர் வீழ்ச்சி'' என்று. பிரம்மாண்டமான மலையின் உயரத்தை அருவிதானே அளந்து காட்டுகிறது. மேலும் ஓர் அழகிய பெண்ணின் உருவம் நம் மனத்திரையில் இருந்து கலைந்து விட்டாலும், அவள் நெற்றியில் வைத்திருந்த பொட்டு அப்படியே மனதில் நிற்கும். அதை வைத்து பெண்ணின் உருவத்தை பழையபடி மனம் கொண்டு வந்து விடும்.*

*அருவியும் அப்படித்தான் அளவிட முடியாத மலையையும் அதன் செழிப்பையும் ஒவ்வொன்றாய் பார்ப்பதற்கு அருவிதான் கண்ணாடி. மலையை மறந்தாலும் அருவி கொண்டு வந்து விடும்.*

*அதனால் அருவியை ஒருவராலும் மறக்க முடியாது. குறத்தியால் மறக்க முடியுமா?*

*சாரல் காலத்தில் குற்றால அருவியில் குளித்தவர்களுக்குத் தெரியும். சாரலும் தூறலுமாய் இருக்கும். ஏறிட்டு மேலே பார்த்தால் மேகங்கள் கூட்டம் கூட்டமாய் ஓடிக் கொண்டிருக்கும். மேகத்தில் கிடக்கும் இந்தரவில் அருவி நீரில் விழுந்து பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் என்று ஜொலிக்கும். குளிக்கிறவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். வானவில்லோடும் சேர்ந்தல்லவா குளிக்கிறோம் என்று!*

*அழுக்கைக் களைவதற்காகக் கழுவி விட்ட நீர் ஓடுவது போல குளிக்கக் குளிக்க உடல்பாரம் எல்லாம் ஓடி விடும். உற்சாகம் பொங்கும். பிறகு மனதில் கவலை எப்படி இருக்கும்? பாவ விமோசனந்தான்.*

*அருவிக் கரையை விட்டுச் சிறிது மேற்குப் பக்கம் நடந்து வந்தால்... கோயில், சித்திரசபை எல்லாம் இருக்கின்றன. அங்கு முழங்கும் முரச வாத்தியம் தேவ கானமாய் ஒலிக்கும். இப்படி ஒரு இன்பம் இருந்தால் அங்கே நேரம் போவது தெரியவா செய்யும்? காலம் என்பதே கரைந்து விடும். மாதம், வருஷம், யுகம் கூட ஓடுவதே தெரியாது. அப்படி மாயமாய் ஓடிவிடும் காலம்.*

*இனிப் பாடலைப் பார்க்கலாம்...*

*ராகம் - பிலகரி*

*தாளம் - ஜம்பை*

கங்கை எனும் வடஅருவி
தங்கும் இந்திர சாபம்;

கலந்தாடில்க் கழு நீராய்த்
தொலைந்தோடும் பாவம்!

மன்றுதனில் தெய்வமுர(சு)
என்று மேல் முழங்கும்;
வழமைபெறும் சதுரயுகம்
கிழமைபோல் வழங்கும்!

*இப்படியாகப் பிறந்த இடம், வளர்ந்த இடம் பற்றி மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போனாள் குறத்தி. அவள் வர்ணனையைக் கேட்கக் கேட்க வசந்தவல்லிக்கு இன்பமாய் இருந்தது. தேனும் பாலும் கலந்து செவி வழி வார்த்தாற்போல் சுகமாக இருந்தது வசந்தவல்லிக்கு.*

*ஆனாலும் காரியத்தை விட்டு விடக் கூடாதே! குறி சொல்கிறவள் வந்திருக்கிறாள். வந்தது மட்டும் அல்ல; ஒட்டி உறவாடிக் கொண்டும் இருக்கிறாள். தூது போன தோழியோ இன்னும் வரவில்லை. போன காரியம் அப்படியா இப்படியா என்று ஒன்றும் தெரியவில்லை!*

*இந்த நிலையில் இவளிடம் குறி கேட்டு விட வேண்டியதுதான். அதுதான் வழி என்று அவசரப்பட்டாள் வசந்தவல்லி!*

*''நீ குறி சொல்கிறவள் ஆயிற்றே! என் கையைப் பார்த்து மனதில் உள்ளதைச் சொல்ல முடியுமா?'' என்றாள் வசந்தவல்லி.*

*''குறியா? அதுதானே என் குலத்தொழில்! முதலில் என்னுடைய பசியை ஆற்று. ஒரு பழந்துணியைக் கொடு. கொஞ்சம் வெற்றிலை, பாக்கும் கொடு'' என்று ஒன்றன் பின் ஒன்றாகச் சொல்லி வாங்கிக் கொண்டாள் குறத்தி.*

பிறகு உட்காரும் இடத்தைத் துப்புரவு பண்ணச் சொன்னாள். குத்து விளக்கைப் பொருத்தச் சொன்னாள். சாம்பிராணிப் புகை போடச் சொன்னாள்.

இஷ்ட தெய்வங்களை வரவழைக்க முழக்கம் கொடுத்தாள். விபூதியை அள்ளி வசந்தவல்லியின் தலையில் போட்டாள். ஆவேசம் வந்தவளைப் போல அருளவாக்கு இடுவது போல 'கையைக் காட்டு அம்மா' என்று கொஞ்சினாள் குறத்தி.

வசந்தவல்லி குறத்தியிடம் தன் கையை நீட்டினாள். கையைப் பிடித்து அதன் ரேகைகளை உற்றுப் பார்த்தாள். பார்த்துக் கொண்டே சிறிது நேரம் இருந்தாள். பிறகு சொன்னாள் குறவஞ்சி.

''அன்னபூரணி என்றால் நீ தானம்மா?

அடடா! உன் கையின் யோகத்தை எப்படி வார்த்தைகளால் சொல்ல முடியும்?

தொடர்ந்து தர்மக் காரியங்களைச் செய்கிற கை இந்தக்கை. மங்களம் பொங்க மனையறம் காத்து வாழ்க் கைக்கே ஒளி கொடுக்கும் கை உன்கை. செல்வம் கொழிக்கும் கை. பால் சோறும், நெய்ச்சோறுமாய் பிசைந்து கொடுக்கும் தர்மக்கை. பசித்து வந்தவர்களுக்கு எல்லாம் களஞ்சியம்தான் உன் கை. ஆடம்பரமும் வசதியும் மிக்க உயர்குடிப் பெண்கள் உன்னைப் பார்த்தால் போதும் .... அப்படியே கும்பிட்டு ஒதுங்கி நிற்பார்கள். அப்படி ஒரு கைராசிக்காரி நீ! குற்றால வட்டாரம் முழுவதுக்கும் உன்னுடைய கையும், கருணையும் தான் காவல். இந்தக் கையைத் தொட்டுப் பிடிக்க உலகத்தில் யார் இருக்கிறார்கள்? கடவுள் ஒருவருக்குத்தான் அதற்குத் தகுதி உண்டு. நீ தெய்வப் பெண்ணம்மா, தெய்வப் பெண்!

*இப்படிச் சொன்னாள் குறத்தி*

மாறாமல் இருநிலத்தில
அறம்வளர்க்கும் கையே;
மனை அறத்தால் அறம்பெருக்கித்
திறம் வளர்க்கும் கையே;

வீறாக நவநிதயம்
விளையும் இந்தக் கையே;
மேன்மேலும் பாலமுதம்
அளையும் இந்தக் கையே;

ஆறாத சனங்கள் பசி
ஆற்றும் இந்தக் கையே;
அணங்கனையார் வணங்கி நித்தம்
போற்றும் இந்தக் கையே;

பேறாக நன்னகரம்
காக்கும் இந்தக் கையே;
பிறவாத நெறியார்க்கே
வாய்க்கும் இந்தக் கையே!

*பாடலைப் பாடிக் கொண்டே இருக்கலாம். பாடப் பாட நாம் செய்த பாவம் எல்லாம் தொலையும். புண்ணியமும் பெருகும்.*

*அன்னபூரணி அன்னபூரணி என்று வாய் நிறையச் சொல்கிறோம். பெண்களை நோக்கியே அந்தச் சொல் உண்டாகி இருக்கிறது. ஆடவர்களை நோக்கி*

உண்டாகவில்லை. அன்னபூரணன் என்று சொல்ல இடம் கொடுக்காது தமிழ்.

ஆண்கள் தர்மம் செய்யவில்லையா? என்று கேட்கலாம். தாராளமாகச் செய்வார்கள் ஆண்கள். கோயில், கும்பாபிஷேகம், பள்ளிக்கூடம், பட்டிமன்றம், விளையாட்டுக் கழகம் என்று அள்ளிக் கொடுப்பார்கள். ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்று கூடக் கொடுத்து விடுவார்கள். ஆனால் பசித்தவர் முகம் பார்த்து மனம் கசிகிற தைரியம் ஆடவர்களுக்கு உண்டா? அது பெண்களோடு பெண்களாகவே சேர்ந்து கிடக்கிறது.

## 9

# திருப்பைஞ்ஞீலி - பஞ்சரத்னமாலை

உலகில் எங்கும் - அரசனிலிருந்து ஆண்டிவரை மூலை முடுக்கு, சந்து பொந்து எல்லா இடங்களிலுமே எரிச்சலும் கசப்புந்தான் நிறைந்துள்ளன. கழனிகள், தொழில் கூடங்கள், போக்குவரத்து நிலையங்கள், அதிகாரிகள், பணியாளர்கள், ஏன் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் எங்கு வேண்டுமானாலும் நீங்கள் போய்ப் பாருங்கள். உண்மையிலேயே உங்களுக்கு விளங்காத ஒன்றை இது என்ன என்று கேட்டுப் பாருங்கள். உடனே அலட்சியமாக உங்களைப் பார்ப்பார்கள். அக்கினித்திராவகத்தைக் கொட்டுவது போலக் கடுகடுப்பாய்ப் பேசுவார்கள்.

கத்தரிக்காய் விலை பத்து ரூபாயா? நேற்று ஆறு ரூபாயாகத்தானே இருந்தது என்று நீங்கள் சொன்னால் போதும். போய்யா! போய்யா! கத்தரிக்காய் வாங்குகிற ஆளைப்பாரு என்று நடைபாதையில் காய்கனி போட்டு விற்கிறவனே உங்களை விரட்டுவான்.

அப்படி இருக்க அஞ்சலகத்திலோ, விமான நிலையத்திலோ மருத்துவமன்னயிலோ, நீதிமன்றத்லோ ஏதாவது ஒன்றைக் கேட்க முடியுமா? ஏன் இவ்வளவு கொதிப்பு மக்களிடம்? காரணம் இதுதான்.

நிம்மதி ஏன்பது யாரிடமும் இல்லை. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் பல பல தொல்லைகளால்

நெருக்கப்பட்டுத் திக்கு முக்காடுகிறான். ஒரு பிரச்சனை போனால் இன்னொரு பிரச்சனை. பிரச்சனை இல்லாத நாளே இல்லை.

உடம்பு படுத்துகிறபாடு, அதைவிட மருத்துவன் படுத்துகிறபாடு. கடன் கொடுத்தவன் திட்டம், கடன் வாங்கினவன் தந்திரம், மனையாள் பிரச்சனை, கணவன் பிரச்சனை, பிள்ளைகளின் வம்பு, தும்பு. பெற்றோர்களின் ஆதிக்கம், தண்ணீர்த் தொல்லை மின்சாரத் தொல்லை; அதிகாரிகளின் அடாவடித்தனம், பணியாளர்களின் குறும்பு, ஈகை இரக்கம் இல்லாமல் பணம் பணம் என்று கறக்கிற கல்வி நிலையங்களின் அட்டகாசம், வாய்தா, வாய்தா என்று தள்ளிக் கொண்டே போடுகிற நீதிமன்றங்களின் கொடுமை, பழிபாவத்துக்கு அஞ்சாத அரசியல்! அடடா இன்னும் எத்தனை எத்தனை தொல்லைகள்!

அல்லும் பகலும் இருபத்து நான்கு மணி நேரமும் தொல்லைக்கு மேல் தொல்லைகள் ஒத்துப் பேசி மனுசனைக் கசக்கிப் பழிந்தால் எப்படிப் பொறுமை இருக்கும்? மரியாதை இருக்கும்?

அதனால் உலகம் முழுவதும் எரிச்சல் மயம். ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களைக் கடித்துச் சமட்டி எறிய வேண்டும் என்னும் ஆங்கார மயம்.

நம்முடைய எரிச்சலை மற்றவர்கள் பார்க்கிறார்கள். மற்றவர்கள் எரிச்சலை நாம் பார்க்கிறோம். இப்படியாக ஒவ்வொரு மனிதனும் அடிக்கடி பார்ப்பது எரிச்சல் ஒன்றையே.

உலகில் எதைப் பார்க்கிறானோ பார்க்கவில்லையோ ஆனால் ஒவ்வொரு மனிதனும் போதும் போதும் என்னும் அளவுக்கு எரிச்சலைப் பார்க்கிறான்.

பார்த்து என்ன பண்ண? இந்த எரிச்சலுக்கு காரணம் என்ன, அந்த க் காரணத்துக்கு மூலம் என்ன அடிப்படையான இயல் என்ன என்று பெரும் பாலானவர்கள் யோசிப்பதில்லை. அதனால் பார்த்ததோடு சரி. காற்றோடு காற்றாய் மண்ணோடு மண்ணாய் மறைந்து மறந்தே போய்விடுகிறது எரிச்சல்.

லட்சத்தில் ஒருவர் இருவர்தான் ஏன் இப்படி எரிச்சல்படுகிறான் என்று யோசிக்கிறார்கள். யோசிக்க யோசிக்க வாழ்க்கையில் மனிதன் போட்ட முடிச்சுகள், சிக்கல்கள், முரண்பாடுகள், கோளாறுகள், அமிர்தமே ஆனாலும் நாளாக நாளாகப் புளித்து நஞ்சாகிப் போன விபரீதங்கள் இப்படியாக ஒன்றன் பின் ஒன்றாய் வந்து காட்சி கொடுகின்றன.

அடடா, உலகமும் உலகியலும் இப்படியா இருக்கின்றன. சரியான கோமாளித்தனங்களாக அல்லவா இருக்கின்றன மனுச காரியம். குறுக்கும் நெடுக்கும் முட்டி மோதப் பாய்ந்தோடி வரும் இந்தக் கோமாளித்தனங்களை யல்லவா சமாளிக்க வேண்டி இருக்கிறது. வாழ்க்கையில். வாழ்க்கையைப் போல எளிமையானதும் வேறொன்றும் இல்லை. அதே நேரத்தில் வாழ்க கையைப் போல கடுமை யானதும் வேறொன்றும் இல்லை என்று தெளிகிறார்கள். மேலே சொன்ன அந்த ஓரிருவர்.

அவர்கள்தாம் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், கற்றவர்கள் என்று பாராட்டுவது அவர்களைத்தான். அவர்கள் வாயிலிருந்து வரும் அருள் வாக்குத்தான் கவிதை.

உண்மையையே நேருக்கு நேராகவே பார்க்கிற சான்றோர்கள் வியப்படைகிறார்கள். வியப்பிலிருந்து சிரிப்பும் கும்மாளியுந்தான் பிறக்குமே தவிர எரிச்சல் பிறக்காது.

கற்றுணர்ந்த நல்லோர்கள் அனுபவிக்க அனுபவிக்க உண்மையானது குதித்தும் கும்மியடித்தும் சிரித்தும் மேளதாள முழக்கத்தோடு தாண்டவக் கோலத்தில் வந்து விளையாடுகிறது பாடல்களாக.

பாடல்களை அனுபவிக்க அனுபவிக்க எரிச்சல் போய்விடுகிறது. கசப்பும் போய்விடுகிறது. தேனாய் கல்கண்டாய் தித்திக்கிறது வாழ்க்கை.

இப்படியாக கொடிய நஞ்சையே அமிர்தமாக மாற்றுவதுதான் கவியின் செயல், கவியில் உள்ள கலைப் பண்பின் இயல். தேவாமிர்தம் போன்ற பாடல் சிலவற்றை இனிப்பார்க்கலாம்.

எதை எடுத்தாலும் ஏறுக்கு மாறாகச் சிலர் பேசுவார்கள், தாறுமாறான விபரங்களைச் சம்பந்தமே இல்லாதபடி தடித்தனமாகக் கொட்டுவார்கள். ஏட்டிக்குப் போட்டியாகவே பேசும் இவர்கள் தங்களைத் தாங்களே பெரிய தர்க்க நிபுணர்கள் என்று நம்புவார்கள். அரங்கேறிக் காட்டுவார்கள்.

புத்தருடைய கருணையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது என்ன பெரிய புத்தர்? அரண்மனையை விட்டுக் கிளம்பும் போது உறங்கிக் கொண்டிருந்த மனைவியையும் மகனையும் மாறி மாறிப் பார்த்தவர் தானே'' என்று இவர்கள் ஒரு போடு போடுவார்கள்.

மகாத்மா காந்தியின் பொறுமையையும், அருளையும் மெய்யுணர்வையும் பற்றிப் பேசுகிற இடத்தில் என்ன சார் காந்தி? இளம் பெண்கள் இரண்டு பேர்களின் தோள்களைப் பிடித்துக் கொண்டு நடக்கிறவர்தானே காந்தி, என்பார்கள்.

இவர்களை எப்படித் திருத்த? யாராலும் முடியாது. நாய் வாலை யாரால் நிமிர்த்தி நேராக்க முடியும்?

*அடடா, கோணல் இயற்கையிலேயே அல்லவா விழுந்துவிட்டது! என்று அதிசயப்பட்டார் கவிஞர். பொன்னம்பலத்தில் நடராஜமூர்த்தியின் நடனத்தைப் பார்க்கும் போது இவர்களைக் கொண்டு போய் நிறுத்தினாலும் அங்கும் தர்க்கம்தான் செய்வார்கள். திருநடனத்தின் ஆனந்தத்தைப் பார்க்க மாட்டார்கள். நடராஜமூர்த்தியின் திருஉருவில் (ஓவியத்தில்) தங்கம் இவ்வளவு, வெள்ளி இவ்வளவு, செம்பு இவ்வளவு என்று கணக்குப் போட்டுத் தர்க்கந்தான் பண்ணுவார்கள். இப்படி எண்ணி எண்ணி வியப்படைகிறார் கவிஞர். வியப்பு எப்படிக் கட்டளைக் கலித்துறையில் வந்து விளையாடுகிறது என்று பாருங்கள்.*

*பட்டப் பகல் கூட கோட்டானு (கூகை)க்கு நள்ளிருள் தான்(கு)தர்க்க வாதிகளும் கோட்டான் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான்.*

*இனிப்பாடல்*

நிற்கா(து) இருளை
உகந்தேறு பாற்கரன்
நேர்படினும்

துர்க்குணக் கூகைக்குக்
கண் குருடாகும்,
துலங்கு கல்வி

நற்குணத் தோருக்கு
மெய்ஞ்ஞானம் ஆகும், அஞ்
ஞானருக்கு

தர்க்கச் சமருக்கு
இடமாகும் ரத்ன
சபாபதியே!

இருளை உகந்து ஏறு(ம்) பாற்கரன் - இருட்டை விரட்டி விரட்டி அடித்து முன்னேறும் சூரியன். பாற்கரன் - பால் போன்ற தூய ஒளியையே கைகளாக நீட்டி வரும் சூரியன். நேர்படினும் - நேருக்கு நேர் நிற்பது போல் வெளிச்சம் கொடுத்தாலும் துர்க்குணக் கூகைக்கு - வக்கிரமான கோட்டானுக்கு கண் குருடு ஆகும். கண் தெரியாது. கும்மிருட்டாக இருக்கும் பட்டப்பகல். அதுபோலத்தான். ரத்ன சபாபதியே - நடராஜமூர்த்தியின் ஓவியமும் ரத்ன சபையுமே. அஞ்ஞானருக்கு - விபரம் தெரியாத தடிப்புத்திக்காரனுக்கு தர்க்கச் சமருக்கு இடமாகும் - வாதப் பிரதிவாதம் பண்ணவே இடங்கொடுக்கும். துலங்கு கல்வி நற்குணத்தோருக்கு - கற்றுணர்ந்த பண்பாளருக்கோ, மெய்ஞ்ஞானம் ஆகும். பொன்னம்பலமும் நடராஜமூர்த்தியின் ஓவியமும் போதும். கலக்கம் நீங்கித் தெளிந்துவிடும். அறிவு. பரவசப்படுத்திக் கொண்டே இருக்கும் அந்த மெய்யறிவு.

இனி, குதர்க்கம் என்கிற தடித்தனம் எப்படி இயற்கையில் விழுந்த கோளாறோ, அப்படியே மூர்க்கத்தனம் என்கிற திருட்டுத்தனமும் இயற்கையில் விழுந்த கோளாறுதான்.

பழிபாவத்துக்கு அஞ்சாத கொடுமைகளை மேலும் மேலும செய்து கொண்டே இருப்பார்கள். ஆனால் என்னைவிட உத்தமர்கள் உலகில் யார் இருக்கிறார்கள் என்று விளம்பரமும் பண்ணுவார்கள். தவறை ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள்.

கையும் மெய்யுமாகப் பிடிபட்டாலும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். களவுபோன அல்லது வழிப்பறி செய்யப்பட்ட வயிரமும் வைடூர்யமும் உன் மடிக்குள் எப்படி

வந்தது?'' என்று நீதிபதியே கேட்கட்டுமே! அப்பொழுதும் எனக்குத் தெரியாது என்றுதான் சாதிப்பார்கள்.

''என் வீட்டில் அப்படி வயிரமும் வைடூர்யமும் இருக்கக் கூடாதா? என்று நீதிபதியையே மடக்கப் பார்ப்பார்கள்.

பொதுவாகப் பெண்களிடமிருந்து எந்த ரகஸ்யத்தையும் கிரகிக்க முடியாது என்று சொல்வார்கள். வீட்டு வீட்டுக்குப் போய் ஊர்ப் புரணியைக் கொட்டி வருவார்கள் பெண்கள். ஆனால் தங்களைப் பற்றிய குறிப்புகளில் ஒரு மஞ்சாடியைக் கூட வெளியிட மாட்டார்கள். உயிரே போனாலும் அந்தரக்கக் குறிப்பைச் சொல்லவே மாட்டார்கள். கடவுளே வந்து விசாரிக்கட்டுமே. துளி அளவு விபரங்கூடப் பெண்களின் வாயிலிருந்து வராது.

கிடுக்கிப்படி போட்டு நாலா வழிகளிலிருந்தும் நெருக்கினால் ''ஐயையோ! நான் அநாதை என்பதால் என்னை எல்லோரும் சேர்ந்து கொடுமைப்படுத்துகிறார்கள் என்று ஒப்பாரி வைப்பார்கள்.

போய்த் தொலைகிறது என்று இரக்கப்பட்டுவிட்டாலோ கருணை காட்டியவனையே குற்றவாளியாக்கி விடுவார்கள்.

மென்மையே உருவான பெண்களிடமே மூர்க்கத்தனமானது இப்படி அட்டகாசம் பண்ணினால் ஆடவர்களிடமிருந்து அது என்ன பாடுபடுத்தும்.

மூர்க்கனை நம்பவே கூடாது கெஞ்சினால் மிஞ்சுவான். மிஞ்சினால் கெஞ்சுவான் படக்கென்று குடுமியைப் பிடித்து ஆட்டு ஆட்டென்று ஆட்டுவான். அவன் கையை ஒரு தட்டுத் தட்டி அவனை மண்ணில் உருட்டிவிட்டால் - உருட்டிவிட்டு மிதிப்பதற்குத் காலைத் தூக்கி ஓங்கினால் அந்தக் காலையே

இரண்டு கைகளாலும் பற்றுவான். கண்ணீர் விட்டுக் கதறுவான். இந்த ஏழையை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கெஞ்சுவான்.

ஒன்றுக்கும் கட்டுப்படாதவன் மூர்க்கன். அவனைத் திருத்துவது என்பது முடியாத காரியம். தமிழ்ப் பெரும் புலவர் என்று பாராட்டப்பட்ட வெள்ளகால், திரு, வெ, ப

சுப்பிரமண்ய முதலியார் அவர்கள் இந்த மூர்க்கர்கள் தாம் கீழோர் என்று சொல்கிறார்கள்.

இந்தக் கீழோர்களாகிய துட்டர்கள் பிடியில் சிக்கிவிடக் கூடாதென்பதற்காகவே சிவபெருமான் தன்தலையை அண்டத்திற்கு அப்பால் கொண்டு போய் நீட்டுகிறானாம். திருவடிகளை பாதாளத்துக்கும் கீழே கொண்டு போய் ஊன்றுகிறானாம்.

இப்படி வருகிறது அவர்கள் பாடல்.

எட்டில் குடுமியை,
எட்டா விடில் காலை
கிட்டிப் பிடிப்பரே
கீழோர்கள் - துட்டரிடம்
தப்புதற்(கு) அன்றே
தலைகால்விண் பாதலத்திற்(கு)
அப்புறத்தான் ஆனான்
அரன்.

இனி, பஞ்சரத்ன மாலை பாடிய கவிஞரோ தமக்கே உரிய அதிசயப்பண்பில் இந்த மூர்க்கர்களின் போக்கை அனுபவித்து அனுபவித்துச் சொல்கிறார்.

*கரும்பாறையில் செதுக்கிய பசுவின் மடியில் கூட பாலை ஊறவைத்து விடலாமாம்! கொடிய சர்ப்பத்தின் விஷங்கூட மந்திரவாதியின் கட்டளைக்குக் கட்டுப்படுமாம். அதாவது ஏறாது இறங்கிவிடுமாம். நயவஞ்சகமான பேய் கூட ஏவலுக்கு இணங்கி சொல்கிறபடி கேட்டு நடக்குமாம். ஆனால் மனிதர்களில் மூர்க்க குணம் உடைய திருடர்களை வசக்கவே முடியாதாம்.*

*இனிப்பாடல்*

கல்லாவும் பால்தரும்,
காயும் அரவின்
கனல்விடமும்

சொல்லால் திரும்பும், வெம்
பேயும் தொழில் செயும்
சொற்படியே,

பொல்லாத மூர்க்கர்க்குத்
தம்குணமே அன்றிப்
போதிக்கினும்

சல்லாப சற்குணம்
வாராது ரத்ன
சபாபதியே.

*(கல்ஆ - கல்லில் செதுக்கிய பசு (சிலை) காயும் அரவு - சீறிப்பாயும் பாம்பு. கனல்விடம் - உயிர்ச் சத்து முழுவதையும் சுட்டுப் பொசுக்கி செயலிழக்கச் செய்யும் நஞ்சு. சொல் - மந்திரம். தொழில் செயும் - ஏவினபடி கேட்டு நடக்கும். சல்லாப சற்குணம் - பண்போடு உறவாடும் பாங்கு.)*

*இனி, விஞ்ஞானம் எவ்வளவோ வளர்ந்துவிட்டது. ஆனாலும் ஆலம்பழத்தைப் பலாப் பழம் ஆக்க முடிகிறதா? நாய்வாலை நிமிர்த்த முடிகிறதா? கிளியைப் போல காக்கையைப் பேசவைக்க முடிகிறதா?*

**ஆலைப் பலா ஆக்கல்**
**ஆமோ? அருஞ்சுணங்கள்**
**வாலை நிமிர்க்க**
**வசமாமோ? நீலநிறக்**
**காக்கைதனை பேசுவித்தல்**
**ஆமோ? கருத்தில்லா**
**மூர்க்கரைச்சீர் ஆக்கலாமோ.**

*என்று ஔவையார் வாக்கைத் துணைக்கு வைத்துக் கொண்டால் பஞ்சரத்னமாலை இன்னும் சுவையாக இருக்கும். (சுணங்கன் - நாய்)*

*ஆயிரக்கணக்கான மக்களை ஒரு நெறியில் நிற்கவைப்பதும், அதில் நடக்க வைப்பதும் எளிதான காரியம் இல்லை. அந்த நெறியே வாழ்க்கைக்கு உகந்த நெறி என்று ஆயிரக் கணக்கான மக்கள் நம்பவும், மதிக்கவும் செய்கிறார்கள் என்றால் அது ஒரு வரப்பிரசாதமான காரியந்தான்.*

*அரசைச் சேர்ந்த பல்வேறு துறைகள் இந்த நெறிமுறைகளைக் கட்டிக் காக்கின்றன. இவற்றில் ஏதாவது ஒரு துறைக்கு ஒரு அதிகாரி ஆகிறார் என்றால் - நெறியாளர் ஆகிறார் என்றார் அவர் கொடுத்து வைத்தவர்தான்.*

*மனித வாழ்க்கையின் போக்குகளையும் நெளிவு, சுழிவுகளையும் ஐயம் திரிபறக் கற்றறிந்த மேதையாக இருக்கவேண்டும் அவர். அது மட்டும் போதாத, பண்பட்ட*

நயமான பக்குவமும், பெருந்தன்மையும், தெளிவும், உறுதியும் மிக்க சான்றோராகவே இருக்க வேண்டும் அதிகாரி.

கல்வியும் பண்பாடும் எழுபது எழுபத்து ஐந்து சதம் இருந்தால் கூடப் போதும். அவர் வகிக்கும் அதிகார பீடம் மீதம் இருபத்து ஐந்து சதத்தையும் அவருக்கு மெல்ல மெல்ல ஊட்டிவிடும். அவ்வளவு வல்லமை பொருந்தியது அதிகார பீடம்.

ஆனால் பாடம் பண்ணி ஒப்புவிக்கிறவன் தேர்வில் எப்படியாவது தேறியவன் இப்படிபட்ட ஆசாமிகள் அறிவாளிகள் என்று வந்து விடுகிறார்கள். பண்பாட்டைப் பற்றி யோசிக்காமல் வெறும் பட்டத்தை நம்பி மட்டும் பெரும் பொறுப்புகளை ஒருவனிடம் ஒப்படைத்தால் அது எப்படிச் சரியாக நிற்கும்?

அதுமட்டுமல்ல இப்பொழுதுள்ள அரசுகள் குடியரசுகள், வாக்காளர்களின் வாக்கை வைத்துத்தான் அரசாள வேண்டி உள்ளது. அதனால் யார் யாரையோ திருப்திப்படுத்த யார் யாருக்கெல்லாமோ பெரும் பெரும் பதவிகளைக் கொடுத்துத் தொலைக்க வேண்டி இருக்கிறது. பங்கு போட்டுப் பாகப் பிரிவினை செய்தே கொடுத்துத் தொலைக்க வேண்டி இருக்கிறது.

அப்புறம் நாடு எப்படி உருப்படும்? மக்கள் எப்படி மக்களாய் இருப்பார்கள்.

பெண்ணின் கூந்தலில் மல்லிகை மலர் மாலையை வைத்துச் சூட்டினால் அழகாக இருக்கும். கிழவனுடைய தாடியில் அதே மல்லிகை மாலையைச் சுற்றிவிட்டால் அலங்கோலந்தான்.

குதர்க்கம், மூர்க்கத்தனம் போல தகுதி இல்லாதவர்கள் பெரும் பதவி வகிப்பதும் விபரீதந்தான்.

இதோ வருகிறது பாடல்

**மோடிப்பட் டாருக்கு**
**அலங்காரம் செய்திடில்**
**மோடி தரும்;**

**சோடிப்பில் லாதார்க்(கு)**
**எத்தனை செய்கினும்**
**சோபிக்க லா(து).**

**வேடிக்கை காட்டும்**
**மணமாலை கொண்டைக்கு**
**மேற்கட்ட லாம்.**

**தாடிக்குப் பூக்கட்ட**
**லாகுமோ ரத்ன**
**சபாபதியே!**

மோடிப்பட்டாருக்கு - இயற்கை அழகுள்ளவர்களுக்கு மோடி - அழகுக்கு அழகு. சோடிப்பு இல்லாதார் அலங்காரத்தக்குப் பொருத்தம் இல்லாதவர்கள். எடுப்போ துடிப்போ இல்லாத அப்பாவிகள். சோபிக்கலாது, எடுபடாது அழகு. வேடிக்கை - கண்ணைப் பறிக்கும் அலங்கார அழகு.

உலகில் இப்பொழுது எங்கும் சேமநல அரசுகள்தாம் சேமநல அரசின் குறிக்கோள் பலவற்றில் ஒன்று எல்லோருக்கும் படிப்பு.

கிட்டத்தட்ட எல்லோருமே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் ஆகிறார்கள். லட்சக்கணக்கில் பட்டதாரிகள்.

பட்ட மேற்படிப்புதாரர்களும் பலபல ஆயிரம் என்று குவிகிறார்கள்.

யாரைப் பார்த்தாலும் அது படித்திருக்கிறேன். இது படித்திருக்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் பண்பாடுடையவர்களைத் தேடி அலைய வேண்டி இருக்கிறது. தேடித் தேடி அலைந்து கொண்டே இருக்க வேண்டி இருக்கிறது.

ஊருக்கு இரண்டு பேராவது பண்பாளர்கள் இருக்க வேண்டும். பண்பாடுடையவர்களுக்குச் சான்றோர் என்று பெயர். சற்குணர் என்று சொல்வதும் உண்டு.

சான்றோர்கள் ஒன்றிரண்டு பேராவது இருக்கிறார்கள். கொடிய பஞ்ச காலத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் இருப்பதால்தான் உலகம் நிலைபெற்று நிற்கிறது என்று புறநானூற்றில் ஒரு பாடல். பாடிய கவிஞர் பாண்டியர் குல அரசன் - இளவரசன். அதனால் அவனுக்கு இளம்வழுதி என்றே பெயர்.

எழுபது வயதுக்கு மேலாகியும் உங்களுக்கு மட்டும் முடி ஒன்று கூட நரைக்கவில்லையே என்று கேட்டவர்களிடம் பதில் சொல்கிற பிசிராந்தையார் என்னும் சங்ககாலப் புலவர் ''தம் மனைவியின் பெருந்தன்மை, மக்களின் ஒத்துழைப்பு, பணியாளர்களின் பொறுப்பு, மன்னனின் நீதிநெறிவழுவாமை இவைகளைச் சொல்லிவிட்டு, சான்றாண்மை நிரம்பிய பண்புடையாளர் நிழலில் வளர்கிறேன் நான். (சான்றோர் பலர் யான் வாழும் ஊரே) இதுவே என்மாறா இளமைக்குக் காரணம் என்கிறார்.

பண்புடையாளர்கள் இல்லாத நாடு நாடே அல்ல, ஊரும் ஊரே அல்ல, சமுதாயமும் சமுதாயமே அல்ல.

*இதுசம்பந்தமாக எப்படி வருகிறது பாட்டென்று பாருங்கள்.*

**இனிதான சற்குணர்**
**இல்லாத ஊரில்**
**இருப்பதி னும்**
**தனியாய் இருக்கும்**
**வனவாசம் நல்லது,**

*உண்மைதான் சான்றோரில்லாத ஊர் புலிநடமாடும் காட்டைவிட மோசமானதுதான்.*

*இனி காமம், குரோதம், லோபம் என்று துர்க்குணங்கள் மூன்று, இந்த மூன்றில் காமம் என்பது பக்குவப்பட்டுப் பக்குவப்பட்டு காதலாகி உயர்ந்துவிட்டது. அப்படியே குரோதம் என்பதும் திருந்தித் திருந்தி வீரம் என்று பரிணமித்துவிட்டது. லோபம் மட்டும் மாறவே இல்லை. அதனால் அதன் கொடுக்கும் விஷமும் வளர்கிறதே தவிர தேய்வதில்லை.*

*ஈகை இரக்கமில்லாத லோபிகள் ஏழரை நாட்டுச் சனியன்களைவிடக் கொடியவர்கள்.*

*இனிப்பாடலின் முழு உருவம்.*

**இனிதான சற்சனர்**
**இல்லாத ஊரில்**
**இருப்பதி னும்**
**தனியாய் இருக்கும்**
**வனவாசம் நல்லது,**
**தர்மம் செய் யா(து)**

**அநியாயம் செய்யும்**
**கொடுங்கோல் துரைகளில்**
**அட்டமத் துச்**

**சனியா கிலும்மிக்க**
**நன்றாகும் ரத்ந**
**சபாபதி யே.**

*கொடியவர்களில் மிகமிகக் கொடியவன் லோபி. இன்றில்லாவிட்டாலும் என்றாவது அவன் மனம் இளகும். ஏதாவது உதவுவான் என்று சாதாரண மக்கள் ஏமாறலாம். பாவம் அவர்கள் நிலை அப்படி. பரிதாபப் படவேண்டிய நிலைதான்!*

*ஆனால் கற்றுவல்ல புலவர்கள் லோபியை நம்பலாமா? நம்பி ஏமாறலாமா? அவனை நம்புவதைவிட ஒரு சாண் கயிற்றை நம்பலாம் என்கிறார் கவிஞர்.*

*பிழைப்புக்கு இடமா இல்லை? வழியா இல்லை? மலையாள நாடு போய் மாந்த்ரீகம் படித்து வந்தால் போதுமே. பிழைப்பு ஜாம் ஜாம் என்று உயருமே! இல்லை காவி வேட்டி, சடைமுடி, திருவோடு எல்லாம் இருக்கத்தானே செய்கின்றன.*

*இவைகளைவிட இந்த லோபி எந்த வகையில் உயர்ந்தவன் என்கிறார் கவிஞர்.*

*இனிப்பாடல்*

**மலையாள நாடிலை**
**யோ,சடை போட**
**மயிரிலை யோ,**

கலைகாவித் துண்டிலை
யோ, ஒருச் சாணாம்
கயிரிலை யோ,

உலையா(து) இரந்துண்ண
ஓடுந்தான் இல்லையோ
லோபியர் தம்

தலைவாசல் காக்கும்
புலவோர்க்கு ரத்ந
சபாபதி யே!

இனிக்கடைசியாக ஒரு பாட்டு. நாம் வாழும் இந்தக் காலத்தை கலியுகம் என்று சொல்வார்கள். கலியுகத்தில் உண்மைக்கு இடம் இல்லை. போலிகளுக்குத்தான் கொண்டாட்டம் என்று சொல்வார்கள்.

சொல்கிறதென்ன, கேட்கிறதென்ன, நடைமுறையைப் பார்த்தால் அப்படி அப்படித்தான் இருக்கின்றன காரியங்கள்.

கலிகாலம் வருவதற்கு முன்பே அதுபற்றி கணித்துச் சொல்லி இருப்பதாக ஒரு கருத்து.

''கலிகாலம் வரப்போகிறது. பூமியில் உயிர்ச்சத்து தேய்ந்துவிடும். அதனால் விளைச்சல் நன்றாக இருக்காது. மருந்துகளில் வீர்யம் குறைந்துவிடும். அதனால் சரியானபடி வேலை செய்யாது. எங்கு பார்த்தாலும் சொத்துத் தகராறே நடக்கும். தந்தையும் மக்களும் நீதிமன்றத்தில் எதிரிகளாய் நிற்பார்கள். பெண்கள் சொன்னபடி கேட்க மார்ட்டார்கள். தாறுமாறாய் அலைவார்கள்.'' இப்படி ஒரு பொருளில் வடமொழியில் ஒரு சுலோகத்தைப் பார்த்திருப்பதாக நண்பர்

ஒருவர் என்னிடம் சொல்லி இருக்கிறார். இனி, நாம் வாழும் காலம் கலிகாலம்தான். கொடுமையானதுதான். பித்தலாட்டமானதுதான். அதற்காக என்ன செய்ய முடியும் நாம்? இதை உதறி எறிந்துவிட்டு வேறு எங்காவது ஓடிப்போக முடியுமா நம்மால்? எவ்வளவுதான் பொல்லாத காலமாக இருந்தாலும் சமாளிக்க வேண்டியதுதான். ஐயோ கலிகாலம் ஆச்சே! என்ன செய்ய! என்று புலம்புவதில் பயனே இல்லை. திருச்செந்தூர், ராமேஸ்வரம், முதலிய இடங்களில் கடல் நீராட விரும்புகிறவர்கள் கடலில் இறங்க வேண்டியதுதான். முங்கி நீராட வேண்டியதுதான்.

அலை அடித்துக் கொண்டிருக்கிறதே, அலைகள் ஓயட்டும் அதன்பின் நீராடலாம் என்றால் ஏமாற வேண்டியதுதான். ஓயவே ஓயாது அலை. ஆவேசமாக அலைகள் வரும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வரும். அப்படி வந்து அலை நம்மீது மோதும் போது அந்த அலைகளின் ஒத்துழைப்போடு ஒரு உன்னு உன்னி மேலே'ஜம்' பண்ண வேண்டியது. அவ்வளவுதான் ஊஞ்சலில் வைத்து ஆட்டுவது போல ஆட்டிவிட்டுப் போகும் அலை.

இனி அலை வந்து மோதும் போது குனிந்து நீருள் மூழ்கினால் போதும். ஒன்றும் செய்யாது அலை. ஆசையோடு தோளைப் பிடித்துக் குலுக்குவது போலக் குலுக்கி விட்டுப் போய்விடும் அலை.

கடல் அலையை எப்படிச் **சமாளிக்க** வேண்டுமோ அப்படியே கலிகாலத்தையும் **சமாளிக்க**வேண்டும். விலகி ஓட முடியாது.

எங்கு பார்த்தாலும் பொய்யும் பித்தலாட்டமும் தாண்டவமாடத்தான் செய்கின்றன. ''என்னய்யா இப்படியா மோசம் செய்வது என்று கேட்டால், அரசியலில் அதெல்லாம்

*இயல்புதான். நாணயம், ஒழுங்கு இவைகளுக்கும் அரசியலுக்கும் தூரம் அதிகம்'' என்கிறார்.*

*தலைவர் (அரசியல்) பொறுப்பில் இருப்பவரே!*

*அரசியல்தானே அரசாங்கம். அப்படியானால் அரசாங்கத்தின் லட்சணமே அயோக்கியத்தனந்தான் என்றாகிறது.*

*அப்புறம் எப்படி யோக்கியதையை எதில் பார்க்க முடியும்.*

*அத்தனையும் ஊழல் மயம். அதற்காகப் புலம்புவதில் புண்ணியம் இல்லை. ஒன்று மூழ்கி ஒளிய வேண்டும். இல்லை நிமிர்ந்து துள்ள வேண்டும்.*

*இனி கலிகாலக் கொடுமையைக் கவியில் பார்க்கலாம்.*

காட்டோடும் பேய்தெய்வம்
ஆகிய காலம்,
கசட்டு அண்டப்

பாட்டோது வார்க்குப்
பரிசுள்ள காலம்,
படையில் கத் தி

போட்டோடிப் போய் வெற்றி
பேசிய காலம்,
புழுக்கையர் தம்

தாட்டோட்டுக்(கு) ஏற்ற
கலிகாலம் ரத்ந
சபாபதி யே.

*அற்புதமான பாடல்*

*காட்டோடும் பேய் தெய்வம் ஆகிய காலம் - காட்டில் அடித்து விரட்டு வேண்டிய பித்தர்களையும் பேயர்களையும் வாழவைக்கும் தெய்வம் கண்கண்ட தெய்வம் என்று கும்மி அடிக்கிற கூட்டம். பெருகுகிற காலம். கசட்டு அண்டப் பாட்டு ஓதுவார்க்கு - அண்டப்புளுகுகளை கற்பனை என்று அசட்டுத்தனமாக வைத்து கவிபாடுகிறவர்களுக்குத்தான் பொன்னாடை, பொன்முடிச்சு, பாராட்டு. புறமுதுகிட்டு ஓடுகிறவன் நான்தான் வென்றேன் என்று தம்பட்டம் அடிப்பான். புழுக்கையர் - அற்பர்கள். தாட்டோட்டுக்கு ஏற்ற - சவுடால் தனத்துக்கு ஒத்து ஊதுகிறவர்கள் நிறைந்த கலிகாலம்!*

10

# கவியின் தனிச்சிறப்பு

கவிஞரை வெறும் போட்டோகிராபர் என்றோ செய்திப் பத்திரிகை நிருபர் என்றோ எண்ணக் கூடாது.

விஷயங்களை மட்டும் சொல்வதற்காகவா கவி இருக்கின்றன? சம்பவங்களைக் காட்டுவதற்காகவா கவி இருக்கின்றன?

உண்மையை காட்டுவதற்குத்தான் கவி! உண்மையை உணர்ச்சி மயமாகக் காட்டுவதுதான் கவி! அதுதான் கலைப்பண்பு.

மனிதன் இருக்கிறான். அவனிடம் ஒரு குறைவும் இல்லை. வளமாகவே இருக்கிறான். சொத்து, சுகம், படிப்பு, உத்தியோகம், மனைவி, மக்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன.

ஆனாலும் மனதில் தவிப்பு இருக்கிறது. இன்னதென்று சொல்லிக் காட்ட முடியாத ஓர் ஏக்கம் இருக்கிறது. எதையோ கண்டுகளிக்க ஏங்குகிறது உள்ளம். அந்த ஏக்கம்தான் உணர்ச்சி முழுவதும், தேகம் முழுவதும் மேலும் கீழுமாய் அடித்து துடித்துக் கொண்டிருக்கிறது.

நாடித்துடிப்பு என்று சொல்கிறோமே அது இதுதான். நரம்புகளை சுண்டிவிட்டு அணு அணுவாக தாளம் போட வைக்கிறது இந்த நாடித்துடிப்பு.

இந்த நாடித்துடிப்புத்தான் உயிர். இதற்குத்தான் தாளப்பண்பு (ரிதம்) என்று பெயர்.

உண்மையை பார்க்க வேண்டும்; உணர்ச்சியை பார்க்க வேண்டும் என்று தவிக்கிறது மனம். தன்னுள் பொதிந்து கிடக்கும் உண்மையை - உணர்ச்சியையே பார்க்க வேண்டும் என்று துடிக்கிறது அந்த மனம்.

பார்த்தால் மட்டும் போதாது. அதன் மேல் தாவிப் பாய வேண்டும். கட்டிப் பிடிக்க வேண்டும். புரள வேண்டும். உருள வேண்டும் என்றெல்லாம் ஏங்குகிறது உள்ளம்.

ஆனால், பரம்பரை பரம்பரையாக வந்த சட்டதிட்டங்கள், குல மரபுகள், மத ஆசாரங்கள் எல்லாம் சேர்ந்து உள்ளத்தை அமுக்கிப் போடுகின்றன. எழுச்சியின் குரல்வளையையே நெறித்து விடுகின்றன பழக்க வழக்கங்கள்.

என்ன செய்யும் அப்பாவி மனம்? கூண்டுக்குள் அடைபட்ட சிங்கம் போல் திணறுகிறது.

இந்த கட்டு திட்டங்களை சுக்கல் சுக்கலாய் நொறுக்கி விடுகிறது கவி. காதல், வீரம், சோகம், பொறுமை, தியாகம், துன்பம், இன்பம் முதலிய உணர்ச்சிகளை எல்லாம் கொண்டு வந்து நிறுத்திவிடுகின்றன. இசைமயமான தாளத்திலும், நடனத்திலும், நாடகத்திலும் வைத்து அவற்றை கும்மாளி போட்டு ஆடும்படி செய்து விடுகின்றன கவி.

மனதின் தவிப்பை நீக்கி ஆறுதல் கொடுக்கிறது கவி. உணர்ச்சிகளை விதவிதமான கோலங்களில் வைத்து காட்டும்

கவி. கோலங்களை அரசர் அரசிகள் மேல் வைத்தும் காட்டும். வெறும் ஆண்டிப் பண்டாரங்கள் மேல் வைத்தும் காட்டும். கோமாளி, ஞானி, வீரன், கோழை, தியாகமூர்த்தி, பேராசைக்காரன், ஆசை மிக்கவன், மோசக்காரன், ஆண், பெண், குழந்தை எல்லோரும் கவி போடும் கோலங்கள்தாம்.

மலை, கடல், புஷ்பம், மான், கிளி, நீர், நெருப்பு, தென்றல், சந்திரன் இவைகள் மேலும் மனுசப் பண்பு (உணர்ச்சி)களை வைத்துக் காட்டிவிடும் கவி.

உணர்ச்சிகள் விளைந்து விளையாடுவதற்கு எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் படம் (ஓவியம்) போட்டுக் கொடுத்துவிடும் கவி.

கண்ணால் கண்டுகளிக்கிற உணர்ச்சியும், உள்ளத்தில் பொங்கிக் குமுறும் உணர்ச்சியும் இப்படியாக கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்கிறது கவியில் - கலைப் பண்பில்.

மனதில் பதுங்கி இருக்கும் உணர்ச்சியும், பார்க்கும் உணர்ச்சியும் வேறு வேறல்ல; ஒன்றுதான் என்று அனுபவிக்க வைத்து விடுகிறது கவி.

அதனால் கவியை வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் பண்ணிப் பார்த்தால் விளங்காது. வார்த்தைகளை தாண்டி ஒன்று கிடக்கிறது. அது அந்த வார்த்தைகளுக்குள், தாளத்துக்குள், இசைக்குள், சிக்கியும், சிக்காமலும் விளையாண்டு கொண்டிருக்கிறது. அதை மனதால்தான் பார்க்க முடியும். உணர்ச்சிமயமான ஆவலால்தான் பார்க்க முடியும்.

திரைப்படங்களை பார்த்தால் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அசாதாரணமாகவே இருக்கின்றன. புராணக்

கதைகளை தூக்கி எறிந்துவிடும் திரைப்படங்களில் வருகிற தடபுடல்கள். ஆனாலும் தொடர்ந்து பார்க்கிறார்கள். காரணம் அந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னே ஒன்று இருக்கிறது. நம் உள்ளும் அந்த உண்மைதான் இருக்கிறது. ஆனால் அதை நாம் பார்க்க முடியவில்லை. நம்மால் முடியாததை திரைப்படம் வந்து காட்டுகிறது. அதனால் அதை நாம் பார்த்து பார்த்து மகிழ்கிறோம்.

இது அசாதாரணமானதா, சாதாரணமானதா என்பதில் சிக்காமல் மறைவில் நிற்கும் உண்மையையே பார்க்கிறோம். அப்படியே கவியிலும் பார்க்க வேண்டும்.

இனி, குற்றாலநாதர் வசந்தவல்லி இவர்களை வைத்து உணர்ச்சிகளில் புதுப்புது வர்ணங்களை எல்லாம் காட்டினார் கவிஞர். குறத்தியை வைத்தும் அப்படியே காட்டினார்.

இனிக் குறவன் (சிங்கன்) மூலமும் உணர்ச்சிமயமான உண்மையை காட்டுகிறார் கவிஞர். எப்படி என்று பார்ப்போம்.

குறி சொல்லப் போன குறத்தி திரும்பி வர வேண்டிய நாள் வந்து போய்விட்டது. சிங்கனுக்கு பெண்டாட்டி மேல் நினைப்பும் வந்துவிட்டது. எப்படியும் அவளை பார்த்து கூட்டிக் கொண்டு வந்துவிட வேண்டியதுதான் என்று கிளம்பிவிட்டான்.

சிங்கியைப் பார்க்கப் போகிறோம் என்னும் நினைப்பில் உற்சாகம் வந்துவிட்டது சிங்கனுக்கு. உற்சாகத்தில் அலங்காரம் எல்லாம் மளமளவென்று நடந்தது. அலங்காரத்தோடு அலங்காரமாய்ப் புறப்பட்டான் சிங்கன்.

எப்படி?

ராகம் - அடானா தாளம் - சாப்பு

*கண்ணிகள்.*

"கொக்கிறகு சூடிக் கொண்டு,
குருவி வேட்டை ஆடிக்கொண்டு
வக்கா மணி பூட்டிக் கொண்டு
மடவார்கண் போல் ஈட்டி கொண்டு,
தொக்காக் கச்சை இறுக்கிக் கொண்டு
துள்ளும் மீசை முறுக்கிக் கொண்டு
திக்கடங்காக் குறவச் சிங்கன்
திரிகூடச் சிங்கன் வந்தான்"

*தலைப்பாகையோடு இறகு, தோளில் கழுத்தில் பாசிமணி, கையில் ஈட்டி, உடையை இறுக்கிக் கட்டும் கச்சை, முறுக்கு மீசை, இவ்வளவு ஆர்வாரத்தோடு வருகிறான் சிங்கன். வருகிற வழியில் காடை, கவுதாரி, குருவி எதிர்பட்டால் குறிவைத்து விழத் தட்டி விடுகிறான்.*

*வரும் வழியில் அங்கங்கே வளமான தோட்டம் (புரவுகள்). பறவைகள் அங்கு இருக்கும். அதனால் அங்கங்கே கண்ணி வைக்கிறான். மறைந்து ஒளி கட்டுகிறான். நாரை, கொக்கு, முயல், மயில் தட்டுப்பட்டால் போதும். அதன் தடத்தை ஒட்டியே போவான். நாய் மோப்பம் பிடித்து போவது போல் போவான். வாய்ப்பு கிடைத்தவுடன் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அடித்து விடுவான். பேயடி மாதிரி விழும் அவன் அடி. சிங்கன் என்றால் சிங்கன்தான்.*

*இனிப் பாடல்*

*விருத்தம்.*

**ஆளிபோல் பாய்ந்து, சுரும்(பு) இசைகேட்கும்**
**குற்றாலத்(து) அமரர் நாட்டில்;**
**வேளைதொறும் புகுந்து, திருவிளையாட்டம்**
**கண்ணிகுத்தி, வேட்டை ஆடி,**
**ஞாளிபோல் சுவடெடுத்து, பூனைபோல்**
**ஒளிபோட்டு, நரிபோல் பம்மி,**
**கூளிபோல் தொடர்ந்தடிக்கும் திரிகூடச்**
**சிங்கன் எனும் குறவன்தானே**

*ஆளி-சிங்கம், திருவிளையாட்டம் - தோட்டம், ஞாளி-நாய், கூளி-பேய், கரும்பு - இசை சேர்த்து நாட்டில் - வண்டு முரலும் வளமான இடத்தில்.*

*பாடிக்கொண்டே இருக்க வேண்டும். பாடலை பாடப்பாட உண்மை தெரியும். உணர்ச்சி பொங்கப் பொங்க தெரியும். பொழிப்புரையில் போட்டுப் பார்த்தால் உருப்படாது. ஒன்றுமே உருப்படாது.*

*சிங்கனுடன் நூவன், எலுவன் என்று அவன் கூட்டாளிகள் வந்தார்கள். போகிற வழியில் ஒன்றிரண்டு வேட்டை கிடைத்தால் நல்லதுதானே என்று சொன்னார்கள்.*

*சிங்கனும் அவர்களுடன் அங்கங்கே வலை விரித்தான். ஆனாலும் அவனுக்கு சிங்கிதான் குறி. சிங்கியை எப்படியாவது இன்று மாலைக்குள் கண்டுபிடித்து விடவேண்டும் என்பதுதான் அவனுக்கு குறி.*

*பறவைகளில் ஒன்றிரண்டு சிக்கின. எப்படிச் சிக்கின என்று சொல்கிறான் சிங்கன்?*

*திருட்டுப் பயல்கள் யோக்கியன் போல நடமாடுவான். அப்படிச் சாதுவாய் நடமாடியதாம் நாரை. சில பொட்டை*

பொறுக்கிகள் நடமாடுவது போல வேறு சில பறவைகள் நடமாடினவாம்.

அவ்வளவையும் கண்ணிக்குள் சிக்க வைத்துவிட்டான் சிங்கன். பொல்லாத குறவன்தான் சிங்கன்.

ஆனால் பாலும் நெய்யும் வழிந்தோடும் சர்க்கரைப் பொங்கலை சாப்பிடும்போது அதில் கல்லும் மணலுமாய் கிடக்கின்றன. பல்லும் உதடும் என்ன பாடுபடும்? (ஓட்டத்தில் என்றால், உதட்டில் என்று பொருள்).

அதுபோல பறவைகள் அகப்பட்டன. ஆனால் சிங்கி...?

இனிப்பாடலைப் பார்ப்போம்.

*கல்யாணி ராகம் - ஆதி தாளம்.*

ஆலாவும் கொக்கும்
அருகே வருகுது;
ஆசாரக் கள்ளர்போல்
நாரை திரியுது;
வேலானந கண்ணியர்
ஆசையினால் கீழும்
மேலும் திரிந்திடும்
வேடிக்கைக் காரர்போல்;
காலால் திரிந்து
திரிந்து திரிந்தெங்கள்
கண்ணுக்குள் ஆகும்
பறவையை போகட்டு;
பாலாறு நெய்யாறு
பாய்கின்ற ஓட்டத்தில்
பல்ஓடிக் கச்சிறு
கல்அகப் பட்டாற்போல்;

(ஆலா-ஒரு வகைப் பறவை. போகட்டு வேட்டையாடி)

இனி, நீலாம்பரி ராகத்தில் அதே ஆதி தாளத்தில் வைத்து சிங்கனுடைய தவிப்பை காட்டுகிறார் கவிஞர்.

பறவைகள் சிக்கின. ஆனால் சிங்கி சிக்கவில்லையே என்று தவிக்கிறான் குறவன்.

எப்படி?

ராகம் - நீலாம்பரி. தாளம் - ஆதி.

(1) பேடைக் குயிலுக்கு கண்ணியை வைத்து நான் - மாடப்புறாவுக்கு போனேன்; மாடப்புறாவும் குயிலும் படுத்து நான் - வேடிக்கை சிங்கியை காணேன்.

(2) கோல மயிலுக்கு கண்ணியை வைத்து நான் - ஆலாப் படுக்கவே போனேன்; ஆலாவும் கோலமயிலும் படுத்து நான் - மேலான சிங்கியை காணேன்.

(3) வெவ்வாப் பறவையின் வேட்டைக்கு போய்க் காம - வேட்டையை தப்பவிட்டேனே! வவ்வால் பறக்க மரநாய் அகப்பட்ட வைபவம் ஆச்சுது தானே!

(4) இவ்வாறு வந்த என் நெஞ்சின் விரகத்தை - எவ்வாறு தீர்த்துக் கொள்வேனே! செவ்வாய்க் கரும்பை அனுராக வஞ்சியை - சிங்கியை காணுகிலேனே!

பாடப்பாட வாய் மணக்கும் - மனம் மணக்கும். வாழ்வே கமகம என்று மணக்கும்.

சிங்கியை காணாமல் அங்கும் இங்குமாய் குற்றாலத்தில் அலைகிறான் சிங்கன். பைத்தியம் கண்டவனைப் போல அங்கங்கே விட்டுவிட்டு தானாகவே புலம்பிக் கொள்கிறான்.

இப்படி தவியாய் தவித்து சிங்கன் அலைகிற பொழுது எதிர்ப்பட்டு விட்டாள் சிங்கி.

தேன் நிறைந்த புஷ்பத்தை கண்ட வண்டு, சிறகடித்து அதன்மேல் பாய்வதுபோல் துள்ளிப் பாய்ந்தான் சிங்கன்.

ஆசையோடு அவள் முகத்தை பார்த்தான். அன்போடு அவள் கையைப் பிடித்தான். அங்கம் அங்கமாய் அவளை பார்த்துப் பார்த்து அதிசயப்பட்டான்.

பெண்களின் காது வள்ளைக்கொடி போல் இருக்கிறது என்று சொல்வார்கள். சிங்கியின் காதும் அப்படித்தானே இருக்கும். ஆனால் அந்த வள்ளைக்கொயிலே காதணி (கொப்பு) இருக்கிறதே! அது மினுமினு என்று மினுக்குகிறது. துத்திச் செடியிலே பூப்பூத்து மினுக்குவதுபோல் இருக்கிறது. அப்படியானால் வள்ளைக் கொடியிலே துத்திப்பூ எப்படிப் பூத்தது என்று சிங்கியிடம் கொஞ்சிக் கேட்கிறான் சிங்கன்..

''இது வங்காள தேசத்தில் கிடைத்த ஆபூர்வ காதணி'' என்று ஒரே போடாய் போடுகிறாள் சிங்கி.

சிங்கியின் மூக்கு அழகிய குமிழ்போல இருக்கிறது. அதில் மூக்குத்தி போட்டிருக்கிறாள். அது புன்னை மொட்டுப்போல வெள்ளை வெளேர் என்று ஜொலிக்கிறது. அந்த அதிசயத்தையும் கேட்டான்.

''இதுவா! காயல் பட்டணத்துக் கடலில் விளைந்த முத்தால் செய்த மூக்குத்தி'' என்றாள் சிங்கி.

சரி போகட்டும்; பொன் மயமான உன்மேனி முழுவதும், மின்னலடிப்பது போல ஒளி வீசுகிறதே! ஏன் என்றான் சிங்கன்.

''கண் தெரியவில்லையா! வயிரம், வைடூர்யம், பச்சை, நீலம், புஷ்பகராகம் என்னும் நவரத்னக் கற்களால் ஆன

நகைகளை நான் போட்டிருப்பது தெரியவில்லையா?'' என்று ஒரு சிமிட்டுச் சிமிட்டுகிறாள் சிங்கி.

இனிப்பாடல்.

கண்ணிகள்.

ராகம் - புன்னாக வராளி.

தாளம் - ஆதி.

1. வள்ளைக் கொடியிலே துத்திப்பூ
பூப்பானேன் சிங்கி! - காதில்
வங்காளத் தார் இட்ட சிங்காரக்
கொப்படா சிங்கா!

(2) வன்னக் குமிழிலே புன்னை
அரும்பேது சிங்கி! - காயல்
முந்நீர்ச் சலாபத்து முத்துமூக்-
குத்திகாண் சிங்கா!

(3) பொன்னிட்ட மேல் எல்லாம் மின்வெட்டிப்
பார்ப்பானேன் சிங்கி! - இந்த
வன்னப் பணிகளின் மாணிக்கக்
கல்லடா சிங்கா!

சிங்கனுக்கு சிங்கியை பார்த்துவிட்டதில் ஆனந்தம். அதைவிட ஆனந்தம் சிங்கனைப் பார்த்ததில் சிங்கிக்கு.

இரண்டு பேரும் அருவியில் நீராடினார்கள். குற்றாலநாதரை வழிபட்டார்கள். பெண் யானையை அழைத்துக் கொண்டு ஆண் யானை போவதுபோல காட்டுக்குள்ளே ஆடியும் பாடியும் நடந்து போனார்கள். வீட்டுக்கே போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

# 11

## வள்ளல் சீதக்காதி

மூந்நூறு வருடங்களுக்கு முன் சீதக்காதி என்னும் பெயருடைய வள்ளல் ஒருவர் வாழ்ந்து வந்தார். திருச்செந்தூரின் பக்கத்தில் உள்ள காயல்பட்டிணம் என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார் சீதக்காதி வள்ளல்.

காயல்பட்டிணம் அந்தக் காலத்தில் ஒரு துறைமுகப் பட்டிணம்.. சீதக்காதியின் முன்னோர்கள் கடல் வாணிகத்தின் மூலம் பெரும் பொருள் ஈட்டினர். அவர்களிடம் சொந்தமாக மரக்கலங்கள் பல இருந்தன.

சீதக்காதியின் முன்னோர்கள் அரபு நாட்டில் இருந்து வணிக முறையில் தமிழகம் வந்து குடியேறியவர்கள்.

காயல்பட்டிணத்தைச் சேர்ந்த முஸ்லீம்களில் பலர் ஆதியில் அரபு நாட்டிலிருந்து வணிக முறையில் வந்து குடியேறியவர்கள்தான். ஒரு சிலர்தான் மதம் மாறிய தமிழர்கள்.

பெருங்செல்வக் குடும்பத்தில் பிறந்த சீதக்காதி அரசர் போலவே வாழ்ந்தார். வணிகத்தை விரிவு செய்து பொன்னும் பொருளும் திரட்டினார். அதனால் அவர் குபேரன் போல செல்வச் சீமானாக வீற்றிருந்தார்.

சீதக்காதியிடம் செல்வம் எப்படிக் குவிந்து குடிகொண்டிருந்ததோ அப்படியே அன்பும் அருளும் குடிகொண்டிருந்தன. தமிழ்ப் பாடல்களை உய்த்துணர்ந்து அனுபவிக்கும் புலமை நிரம்பியவர் சீதக்காதி. நுட்பம், ஆழம், எளிமை, எதையும் ஆராய்ந்து பார்க்கும் நுழைபுலம் இத்தனையும் நிரம்பியவர் சீதக்காதி.

ஏழை, எளியவர்களுக்கு வாரி வாரி வழங்கும் பண்பாளர் சீதக்காதி. தமிழ்ப் புலவர்கள் எப்பொழுதும் சீதக்காதியைச் சுற்றி இருப்பர். புலவர்களை ஆதரித்து தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உயிருக்குயிராக வளர்த்த வள்ளல் சீதக்காதி.

உண்மையான தமிழ்ச் சங்கம் காயல்பட்டிணம் சீதக்காதியின் அரண்மனையில் இருந்தது.

சாதி சமய வேறுபாடுகளைத் தாண்டி எல்லோரும் இறைவன் படைப்பு என மதிக்கும் பண்பாளர் சீதக்காதி.

உமறுப்புலவர் என்னும் கவிஞரை ஆதரித்து சீறாப் புராணத்தை இயற்றும்படி செய்தவர் சீதக்காதிதான். அதே போல் படிக்காசுப் புலவர் நமச்சிவாயப்புலவர் போன்ற கவிஞர்கள் பலரை ஆதரித்து அவர்களும் தமிழும் தலை நிமிர்ந்து நடமாடச் செய்தவரும் அதே சீதக்காதி வள்ளல்தான்.

சடையப்ப வள்ளலுக்குப் பின் தமிழகத்தில் எத்தனை எத்தனையோ வள்ளல்கள் இருந்தனர். வள்ளல் பரம்பரை இடைவிடாமல் தொடர்ந்திருந்து புலவர்களையும், பாடல்களையும் ஆதரித்தது உலகிலேயே தமிழகம் ஒன்றில்தான்.

எண்ணிறந்த வள்ளல்கள் பரம்பரை பரம்பரையாக இருந்தனர் என்பது உண்மை. ஆனாலும் சடையப்ப

வள்ளலுக்குப் பின் சடையப்ப வள்ளல் போலவே தமிழ்ப் புலமையும், தமிழார்வமும் மிக்க வள்ளல் ஒருவர் இருந்தார் என்றால் அது சீதக்காதிதான்.

பழம் பழுத்த மரத்தைத் தேடி நாலா திசைகளிலிருந்தும் பறவைகள் வரும். அங்கேயே தங்கும். அதுபோல் தமிழைப் பேணி புலவர்களை ஆதரிக்கும் பிரபுக்களைத் தேடி புலவர் கூட்டம் வரும். பிரபுவின் ஆதரவில் சௌகர்யமாக இருக்கும்.

வள்ளல் சீதக்காதியைச் சுற்றி இருந்த புலவர்கள் தமிழ்ப்பண்பு, கவிப்பண்பு, இசைப் பண்பு அவ்வளவையும் எடுத்து விளக்குவார்கள். சகலகலா வல்லவனாக விளங்கிய வள்ளல் சீதக்காதி ஆழமும் நுட்பமும் தெளிவும் நிறைந்த பாட்லகளையும் பாடல்களில் இருக்கும் கலை நயங்களையும் உணர்ந்து உணர்ந்து அனுபவிப்பார்.

புலமை ஒரு பக்கம், செல்வம் ஒரு பக்கம், கொடை ஒரு பக்கம், ஊக்கம் ஒரு பக்கம், அருள் ஒரு பக்கம், மரியாதை ஒரு பக்கம். இப்படியாக நாலாபக்கமும் தன்னைச் சுற்றி பண்பை வளர்த்த வண்ணம் பிரபு ஒருவர் இருந்தால் அவரை பாட்டுடைத் தலைவராக வைத்துப் புலவர்கள் பாடல்களைப் பாடிப் பாடி அரங்கேற்றவே செய்வார்கள்.

வள்ளலின் அரிய பண்புகளைக் கருவாக வைத்து காதல் துறையிலும் வீரத் துறையிலும் பாடல்களைப் பாடி மகிழ்வார்கள். வள்ளலின் கொடை வளம் ஒவ்வொரு பாடலிலும் ஊறிப் பெருகும்.

சீதக்காதி வள்ளலைக் காதல் துறை நாயகனாக வைத்துப் புலவர்கள் பாடிய பாடல்களில் இரண்டு

காதல்துறை நாயகன் என்பது நாடகம்.

*சீதக்காதியின் அருமையும் பெருமையுமே விஷயம். மகளின் வேதனையைத் தாங்க முடியாமல் தாய் வருந்துவதாகத் தறை.*

*''எத்தனை சோதிடர்களிடம் கேட்டேன். யாராவது சொன்னார்களா உண்மையை? சீதக்காதியின் மேல் காதல் கொண்டதனால்தான் இந்தக் கோளாறு என்று''*

*இப்படி வருந்துவதாக விஷயம்.*

*இனிப் பாடல் - கட்டளைக் கலித்துறை*

**மாகத்தத் தும்புக**
**ழான், பகை வேந்தர்**
**மகுடம் பொடி-**

**யாகத்தத் தும்பரி-**
**யான்சீதக் காதி**
**அணிமல ரின்**

**ஏக(த்) அத் தும்பி**
**இசைபாடும் மார்பனால்**
**என்மகட்(கு) ஓர்**

**மோகத் தத்(து) உண்டென்று**
**சொன்னார் இலைமுன்**
**மொழிந்தவ ரே.**

*மாகம் - ஆகாயம்; மாகம் தத்தும்புகழான் - விண்ணையே முட்டும் அளவு உயர்ந்த புகழுக்கு நாயகன்; மகுடம் பொடியாக - பொன்முடியானது தூள் துளாய்ச் சிதற; தத்தும்பரியான் - துள்ளிப் பாயும் குதிரை (ப்படை) உடையவன்; அணிமலரின்*

ஏக - சீதக்காதி அணிந்திருக்கும் அழகிய மாலையில் தேனுண்ணப் போவதற்கு; தும்பி இசைபாடும் - வண்டுகள் ரீங்காரம் பண்ணுமாம்; மோக(ம்) தத்து உண்டு என்று - சீதக்காதியின் மேல் மோகம் வைத்ததால் வந்த சிக்கல் இது என்று ஒருவரும் இதுவரை சொல்லவில்லையே.

அருமையான பாடல்.

இன்னொரு பாடல். அதுவும் காதல் துறையைச் சேர்ந்ததுதான்.

நாயகன் நாயகிக்கு நாட்டு வளம் கூறல் என்னும் துறை - பாட்டுடைத் தலைவனாகச் சீதக்காதியை வைத்து அவனுடைய வீரத்தையும் புகழையும் எடுத்துக் காட்டுகிறது கவி

அழகிய பெண்ணே, வள்ளல் சீதக்காதியின் வளநாடு இது. சீதக்காதியின் அரண்மனை முற்றத்தில் அரசர்கள் பலர் காத்துக் கிடப்பார்கள். அவர்கள் ஏறி வந்த யானைகள் வரிசை வரிசையாக நிற்கும். தலையில் அலங்கரித்த பொன்முடி, பட்டுத் தலைப் பாகையை எல்லாம் கழற்றி வைத்து விட்டுக் காத்துக் கிடப்பார்கள் மன்னர்கள். அதனால் அவைகளும் யானைகளின் பக்கத்தில் வரிசை வரிசையாகக் கிடக்கும்.

இனிப் பாடல்.

தடக்கும்ப கிம்புரிக்
கொம்பச லப் பெரும்
தந்தி பட

நடக்கும் துரங்கத்
துரை சீதக் காதிநன்
நாட்டில் ந(ல்) ல

வடக்குங் குமக்கொங்கை
மின்னே! அவன்திரு
வாயிலி லே

கிடக்கும் கரியும்
பரராச ரத்ன
கிரீடமு மே.

*தடக்கும்பம் - பருத்து அகன்ற மத்தகமும்; கிம்புரிக் கொம்பு - வயிரம் பாய்ந்த தந்தங்களும் உடைய; அசலம் - மலை போன்ற; தந்தமபட நடக்கும் துரங்கத்துரை சீதக்காதி - யானையே நாணும்படி கம்பீரமாக நடந்து வரும் அழகன் சீதக்காதி. வாயில் முற்றம்; நல்லவடம் குங்குமக் கொங்கைமின்னே - அழகிய முத்துவடம் பூண்டு குங்குமச் சேறுகொண்டு பூசிய மார்பினையுடைய பெண்ணே; கரி - யானை; பரராசர் - வேறுவேறு நாட்டு அரசர்கள்.*

*காதல் துறையில் வைத்து நமச்சிவாயக் கவிராயர் பாடிய பாடல்கள் இரண்டையும் பார்த்தோம். இனி படிக்காசுப் புலவர் பாடிய பாடல்களில் சிலவற்றைப் பார்ப்போம்.*

*கொடுத்துச் சிவந்தகை என்னும் தொடர் மொழியை நாங்கள் தான் கண்டு பிடித்தோம் என்று பலர் சொல்வார்கள். தமிழை முறையாகப் படித்தவர்களுக்குத் தெரியும் அது தொன்மையான தமிழ் வழக்கு என்பது.*

*புதிய புதிய அழகுகளையும் உத்திகளையும் நயங்களையும் உணர்ச்சி வேகங்களையும் பாடல்களில் பார்த்துப் பரவசம் அடைவார்கள் புலவர்கள். அதற்கு எவ்வளவோ பொறுமை வேண்டும். ஆர்வம் வேண்டும். இரண்டும் இருந்தால்தான் நுட்பமும் ஆராய்ச்சியும் விளைந்து புலமையாகப் பரிமளிக்கும்.*

அதனால் புலமைக்கு மேலும் மேலும் கூர்மை உண்டாகும். பளபள என்று ஜொலிக்கும் புலமை. அந்தப் பளபளப்புத்தான் சிவப்பு.

சீதக்காதியைச் சுற்றி இருக்கும் புலவர்களின் உணர்ச்சியானது பளபளப்போடு மிளிர்கிறது. பாடல்களை ஆராய்ந்து ஆராய்ந்து சிவக்கிறது.

''தொலைவில் நன்நூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம்''

அப்படி ஆய்ந்து ஆய்ந்து கண்ட அனுபவ இன்பங்களை சீதக்காதியிடம் எடுத்துச் சொல்வார்கள் புலவர்கள். சீதக்காதியும் சீதக்காதியைச் சுற்றி இருக்கும் அறிஞர் கூட்டமும் கேட்டுக் கேட்டு பரவசத்தில் திளைக்கும்.

அப்படியே தாம்பளத்தைக் கொண்டு வரச் சொல்வார் வள்ளல். பொன் (நாணய) மூட்டையையும் கொண்டு வரச் சொல்வார். மூட்டைக்குள் இரண்டு கைகளையும் கொடுத்து தங்க முகராக்களை அள்ளி அள்ளித் தாம்பாளத்தில் குவிப்பார். இரண்டு கையாலும் எடுத்து தாம்பாளத்தோடு கவிவாணர் கையில் கொடுப்பார் சீதக்காதி. அப்படிக் கொடுத்துக் கொடுத்து பளபளத்த கை சீதக்காதியின் கை.

''அனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக்காதி இருகரமே''

சூரியகாந்தி மலர்கள் ஆதவனை நோக்கியே சிவந்து விட்டது. திருமணமான இளநங்கையர் ஊடலிலும் கூடலிலுமாக இரவெல்லாம் துயிலவில்லை. அதனால் சிவந்து விட்டன நயனங்கள்.

*இனிப்பாடலின் முழு உருவம்.*

காய்ந்து சிவந்தது
சூரிய காந்தி,
கலவிய லே

தோய்ந்து சிவந்தது
மின்னார் நெடுங்கண்,
தொலைவில்பன் நூல்

ஆய்ந்து சிவந்தது
பாவாணர் நெஞ்சம்,
அனுதின மும்

ஈந்து சிவந்தது
மால்சீதக் காதி
இருகர மே.

*படிக்காசுப் புலவரும் காதல் துறை தொனிக்கவே பாடலைப் பாடியுள்ளார். நலம் பாராட்டல் என்னும் துறையில் நாயகியானவள் நாயகனுடைய அருமை பெருமைகளைச் சேடியரிடம் சொல்வதாக ஒரு ஏற்பாடு.*

*புலவர்களுக்கும், கவிவாணர்களுக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறவர்தான் வளளல் சீதக்காதி. அதோடு நின்று விடுவதில்லை வள்ளலின் காரியம். உற்றார், உறவினர், இரவலர் (யாசகர்) எல்லோருக்குமே கொடுத்துக் கொடுத்து உதவினார் வள்ளல்.*

*சில சமயம் யாரும் எதிர்பாராத நிலையில் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு விடும். பஞ்சத்தின் கொடுமையைத் தாங்க முடியாமல் குழந்தையைக் கூட விற்று விடுவாள் தாய்.*

நெல், சோளம் முதலிய தவசங்களுக்குத்தான் மதிப்பு. பொன், வெள்ளி, வைரம், வைடூர்யங்களுக்குக் கூட மதிப்பில்லை.

சூறாவளியில் அகப்பட்ட இலவம் பஞ்சு போல் மக்கள் சிதறி நொறுங்கினார்கள். பஞ்சத்தின் பிடியில் சிக்கித் தவித்த மக்களைக் காப்பாற்ற தம் நெல்களஞ்சியங்களைத் திறந்து கொடுத்தார் வள்ளல் சீதக்காதி.

நெல்லைக் குத்தி அரிசியாக்க முடியாதவர்களுக்கு அரிசியைக் கொடுத்தார். அரிசியைச் சமைத்துச் சோறாக்க முடியாதவர்களுக்கு வண்டி வண்டியாய் சோறு சமைத்தே வழங்கினார் சீதக்காதி.

களஞ்சியங்களில் இருந்த நெல் காலி ஆன பின் கஜனாவிலிருந்த பணத்தைக் கொடுத்து வேறு இடங்களில் இருந்து அம்பாரம் அம்பாராமாய் நெல்லை வாங்கினார். அதைக் கொண்டு வந்து பசியால் வாடும் மக்களுக்கு வழங்கினார்.

பணக்காரர்கள் பலர் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் வள்ளல் சீதக்காதி போல் உதவ முன் வரவில்லை. தங்கள் பணத்தைப் பொட்டலம் போட்டு மறைத்து வைத்தார்களே தவிர உதவவில்லை.

லட்சக்கணக்கான மக்களின் பசியை நீக்கி அவர்களை ஒருவரே காப்பாற்றுகிற காரியம் சாதாரண காரியமா? இதற்கு இணையான காரியம் வேறு எது இருக்க முடியும்?

சரித்திரம் எழுதுகிறவர் இதை விட்டு விட்டு வேறு எதை எழுத?

இனிப்பாடல்

ஓர் தட்டி லேபொன்னும்,
ஓர் தட்டி லேநெல்லும்,
ஒக்கவிற் கும்

கார்தட்டி யபஞ்ச
காலத்தினும் தங்கள்
காரியப் பேர்

யார்தட்டி னும் தட்டு
வாராம லே அன்ன
தாளத்துக் கு

மார்தட்டி யதுரை
மால்சீதக் காதி
வரரோதய னே...

ஓர் தட்டிலே - பஞ்ச காலம் - தவசமும் தங்கமும் எடைக்கு எடை என்றால் கொடிய பஞ்சந்தான். நெல்லுமணி இல்லாத நீள் நிலத்தே காசு பணம் கல்லும் மண்ணும் அல்லவோ காலலவா என்பது நாடோடிப் பாட்டு. கார் - மழை; காரியப்பேர் - சுயநலக்காரர்; தட்டுவாராமல் - தடை இல்லாமல்; மார்தட்டிய துரை - என் பொறுப்பு என்று செயல்பட்ட வள்ளல்.

சையீத் காதிர் என்னும் அரபுச் சொல் சீதக்காதி என்று தமிழோடு ஒட்டி வருகிறது. அப்படி வருவதல்லவா மொழி மாற்று. ஷேக்ஸ்பியரை சர்க்கரைப் பாகு என்றால் தமிழோடு ஒட்டும் தசகப் பிரியர் என்றால் ஒட்டவா செய்யும்? வள்ளல் சீதக்காதியிடம் குறுநில மன்னர்கள் மட்டுமல்ல பேரரசர்களே கடன் வாங்குவார்கள். அப்படிக் குவிந்திருந்தது செல்வம்.

செல்வத்தைப் போலவே கலைஞானமும் வள்ளலிடம் பூத்துக் குலுங்கியது. கலைமகளும் திருமகளும் களிநடம் புரியும் கொலுமண்டமாகத் திகழ்ந்தது வள்ளல் சீதக்காதியின் அரண்மனை. டெல்லி பாதுஷா ஔரங்கசீப்பின் வேண்டுகோளுக்கு இணங்கி வங்காளத்தின் கவர்னராக (முடிசூடா மன்னராக) இருந்தார் வள்ளல் சீதக்காதி. சிறிது காலமே இருந்தார். தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் காயல்பட்டிணத்தில் இருந்து கவிவாணர்களோடு அனுபவிப்பது போல் கல்லகத்தாவில் இருந்து அனுபவிக்க முடியவில்லை வள்ளலால். அதனால் கவர்னர் பதவி வேண்டாம் என்று வந்து விட்டார் வள்ளல்.

பொன்னும் மணியும் குவியல் குவியலாய் வள்ளலின் களஞ்சியத்தில் நிறைந்திருந்தன. ஆனாலும் ஆடம்பரமோ ஊதாரித்தனமோ படாடோபமோ வள்ளலுக்குப் பிடிக்காது. தன்னுடைய விளம்பரத்துக்காக - சுயநலம் ஒன்றுக்காக தம்பிடி கூட விரயம் பண்ண மாட்டார் வள்ளல்.

ஏழை, எளியவர்களின் இன்னல் தீர உதவும் வள்ளலின் செல்வம் நோயாளிகளின் நோய் நீங்க உதவும். கல்விக்கு உதவும். பண்பாட்டுக்கு உதவும். புலமை செழிக்க உதவும். புலவர்கள் மகிழ உதவும்.

செல்வத்தின் அருமை பெருமை தெரிந்தவர் வள்ளல் பெருமான் அதனால் செல்வத்தை அரிய சாதனமாகக் கொண்டு வாழ்க்கையில் செம்மையையும் ஆனந்தத்தையும் உருவாக்கினார்.

பொன்னையும் மணியையும் வெறும் உலோகமாக - கல்லாக நினைக்கவில்லை வள்ளல். தெய்வமாகவே மதித்தார் அவற்றை. அதனால் அள்ளிஅள்ளி அவர் கொடுத்தாலும்

*அவரை விட்டு நீங்காமல் வள்ளலோடு குடி கொண்டு வீற்றிருந்தது செல்வம். மற்றவர்களின் நிலை அப்படி இல்லை.*

*இனிப்பாடல்,*

**நேசித்து வந்த**
**கவிராசர் தங்கட்கு**
**நித்தநித் தம்**

**பூசிக்கும் நின்கைப்**
**பொருள்மன்னுமே; மற்றைப்**
**புல்லர் பொருள்**

**வேசிக்கும், சந்து**
**நடப்பார்க்கும், வேசிக்கு**
**வேலைசெ யும்**

**தாசிக்கும் ஆகும் கண்**
**டாய் சீதக் காதி**
**தயாநிதி யே!**

*நேசித்து வந்த - ஆவலோடு தேடி வந்த; பூசிக்கும் நின்கைப் பொருள் - காணிக்கை போல பக்தியோடு கொடுக்கும் செல்வம் ஒன்றுதான்; மன்னும் - நிலைத்து நிற்கும் செல்வம் ; சந்து நடப்பார் - மாமாத் தொழில் செய்பவர்.*

*ஏதாவது ஒரு நிகழ்ச்சியானது மனசை வந்து தாக்கும். அப்பொழுது உள்ளமானது உணர்ச்சியமாக வடிவெடுக்கும். உணர்ச்சிமயமாக வடிவெடுக்கும் அந்த உணர்ச்சியானது அலை அலையாக எழுந்து புரளும். இது மனுச இயல்பு.*

*உணர்ச்சியும் அதன் வேகங்களும் வார்த்தைகளாக வடிவெடுக்கத் துடிக்கும். எடுக்கவும் செய்யும் இதுவும் மனுச இயல்புதான்.*

உறக்கத்தோடு உறக்கமாய்க் கனவுகள் போய் விடுவது போல் உணர்ச்சிகள் வேகங்கள், வார்த்தைகள் போய் விடுகின்றன. மறைந்தே போய் விடுகின்றன. இதுவும் மனுச இயல்புதான்.

ஆனாலும் உண்மையான கவிஞர்களின் உணர்ச்சிகளும் வேகங்களும் அழியாத்தன்மையோடு கூடிய மந்திரச் சொற்களாக - கவிதையாகவே அவதாரம் எடுத்து விடுகின்றன. இது மனுச காரியம் இல்லை. தெய்வ கடாட்சம்.

வள்ளல் சீதக்காதியைப் பற்றி நமச்சிவாயப் புலவர் படிக்காசுப் புலவர் இன்னும் எத்தனையோ புலவர் பெருமக்களின் அனுபவங்கள் கவிதைகளாக மலர்ந்தன என்றால் அது திருவருள் செயல்தான்.

இனி வள்ளல் சீதக்காதி காலமாகி விட்டார் என்ற செய்தி காதில் விழுந்தவுடன் புலவர் உலகம் இடிந்து நொறுங்கி விட்டது. அச்சத்தால் நடுநடுங்கிப் போனார்கள் புலவர் பெருமக்கள்.

பூத்துக் குலுங்கிய மரங்களை எல்லாம் இரவோடு இரவாக வெட்டிக் கொண்டு போய் விட்டார்கள் என்றால் தேடி வந்த வண்டுகள் கதறிக் கதறி அழும் அல்லவா? அப்படிச் சத்தம் போட்டு அழுது கதறினார்கள் கவிராச சிம்மங்கள்.

வள்ளல் சீதக்காதியின் பிரவாற்றாமையைப் பொறுக்க முடியாமல் எத்தனையோ பாடல்கள் அவற்றில் படிக்காசுப் புலவர் பாடிய சில பாடல்களைப் பார்க்கலாம்.

தேவர்களின் நாயகனாகிய தேவேந்திரன் போலச் செழிப்பாய் வாழ்ந்த பெருமகன் சீதக்காதி. அன்றலர்ந்த செந்தாமரை மலர் போல மகிழ்ச்சி பூத்து அன்பர்களை வரவேற்கும் அவர் முகம்.

*மனம் குளிர அப்படி ஒரு முகத்தை இனி எங்கே பார்க்க முடியும்?*

*இனிப்பாடல்.*

விண்ணுக்கும் மண்ணுக்கும்
பேராய் விளங்கும்தே-
வேந்த்ரன்என் னும்

கண்ணுக்(கு) இனிய
துரைசீதக் காதி;
கமலம் நிகர்

தண்ணுக்(கு) இசைந்த
வதனசந்த்ரோ தய
சாமி இந் த

மண்ணுக் குளே ஒளித்
தான்புல வோர்முகம்
வாடிய தே!

*கண்ணுக்கு இனியதுரை - பார்க்கப் பார்க்கப் பரவசப் படுத்தும் அழகன்; கமலம் - தாமரை; தண்ணுக்கு இசைந்த - (மனதைக்) குளிர வைக்கும்; வதனம் - முகம்; சந்த்ரோதய சாமி - முழு நிலாப் போலத் தண் என்ற குளிர்ந்த முகமுடைய பண்பாளன்; மண்ணுக்கு உள் - சாமதிக்குள்.*

*சோக ரசத்தை அப்படியே பிழிந்து கொட்டுகிறது தமிழ். தமிழோடு கலந்த மாத்திரத்திலேயே சோகம் கல்கண்டாய் மாறி விடுகிறது.*

*சீதக்காதியின் மரணம் ஏதோ ஒரு இரங்கல் பா இயற்றியவுடன் முடிந்து போகிற காரியமா? நினைக்க*

நினைக்க இதயம் சுக்கல் சுக்கலாய் நொறுங்குகிறது. உணர்ச்சியை ஏதோ ஒன்று விஷப் பாம்பு சுற்றி வளைத்து முறுக்குவது போலக் கசக்கிப் பிசைகிறது. மேலும் மேலும் ஏறுகிறது சோகம். எப்படி என்று பாருங்கள்.

தேட்டாளன் காயல்
துரைச் சீதக் காதி,
சிறந்தவச் ர

நாட்டான் புகழ்க்கம்பம்
நாட்டிவைத் தான்; தமிழ்
நாவல் ரை

ஓட்டாண்டி ஆக்கி,
அவர்கள்தம் வாயில்
ஒருபிடி மண்

போட்டான், அவனும்
ஒளித்தான் சமாதிக்
குழிபுகுந் தே!

தேட்டாளன் - நினைக்க நினைக்க இனிக்கும் பண்பாளன்; காயல் - காயல்பட்டணம்; புகழ்க்கம்பம் நாட்டி வைத்தான் - விண்ணுக்கும் மண்ணுக்குமாக புகழ் ஓங்கி நிற்க வைத்து விட்டான். அதன் பிறகுதான் போனான். ஆனால் அவனை நம்பி வாழ்ந்த புலவர்களாகிய நம் கதி! தன் மரணத்தின் மூலம் மண்ணை வாரியல்லவா நம் வாயில் போட்டு விட்டான்.; ஓட்டாண்டி ஆக்கி ஒளித்தான் - திருவோடும் கையுமாக நம்மை அலைய விட்டு அவன் நிம்மதியாகச் சமாதிக்குள் தங்கி விட்டான். இது ஞாயமா?

*புலவர்கள் வாழ வழி ஒன்றுதான் உண்டு. வேறு வழி இல்லவே இல்லை. அது என்ன?*

மறந்தா கினும் அரைக்
காசும் கொடாமட
மாந்தர்மண் மேல்

இறந்தாவ(து) என்ன?
இருந்தாவ(து) என்ன?
இறந்துவிண் போய்

சிறந்தாளும் காயல்
துரைச்சீதக் காதி
திரும்பிவந் து

பிறந்தால் ஒழியப்
புலவோர் தமக்குப்
பிழைப்பில்லை யே!

*விண்போய் சிறந்து ஆளும் காயல்துரை - வானுலகு சென்று வானவர் போற்ற அவர்களை மகிழ்விக்கும் வள்ளல் சீதக்காதி, மறுபடி அப்படியே வந்து பிறக்க வேண்டும். அப்படியானால் தான் புலவர்களுக்கு வாழ்வு. வேறு பணக்காரர்கள் இல்லையா என்றால் அவர்கள் யார்? நாம் யார்?*

*உலகில் செல்வந்தர்கள் (பூமாது - லெட்சுமி கடாட்சம் பெற்றவர்கள்) இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படியே பண்ணையார்களும் (புவிமாது) இருக்கத்தான் செய்கிறார்கள். சாகவழி இன்றி சரஸ்வதி தேவி (நாமகளும்)யும் இருக்கத்தான் செய்கிறாள். கலிவாணர்களாய் நாமும் நடை பிணங்களாய் நடமாடிக் கொண்டுதான் இருக்கிறோம்.*

*எல்லாம் உருப்படிக் கணக்குக்குத்தான். அதாவது பேருக்குத்தான்.*

*தரும தாதாவாகிய சீதக்காதி போன உடனேயே எல்லாம் போய் விட்டன.*

*கவி உணர்வாவது மண்ணாங்கட்டியாவது!*

பூமா(து) இருந்தென்?
புவிமா(து) இருந்தென்? இப்
பூதலத் து

நாமா(து) இருந்தென்ன?
நாமும் இருந்தென்ன?
நாவலர்க் குக்

கோமான் அழகமர்
மால்சீதக் காதி,
கொடைக்கரத் துச்

சீமான் இறந்திட்ட
போதே புலமையும்
செத்தது வே!

*தும்பியாய்த் துடித்து அலறுகிறார் படிக்காசுப் புலவர். அவரைப் போலவே புலவர் குழாம் முழுவதும் அழுது கதறியது.*

*வள்ளல் சீதக்காதி காலமான பின் தமது அனுதாபத்தை எப்படி வெளியிடுகிறார் நமச்சிவாயப் புலவர் என்று பாருங்கள்.*

*மத்தகமும் தும்பிக்கையும் உடைய பட்டத்து யானை போன்ற கம்பீர புருஷன் வள்ளல் சீதக்காதி. ஐந்நூறு ஏக்கர் ஆயிரம் ஏக்கர் விஷ்தீரணம் உள்ள நன்செய்ப் பகுதியையே கவிஞர்களுக்குத் தானமாக அருளும் வள்ளல் அவன்.*

*புலவர்கள் ஏறிப் போக யானையைப் பரிசிலாகக் கொடுக்கும் பேராளன் அவன்.*

*அவன் காலமான பிறகல்லவா பணத்தின் அருமை இன்னதென்று தெரிகிறது! அடடா, வள்ளல் இருந்த காலம் முழுவதும் செல்வந்தர்கள் சீதக்காதி மாதிரித்தான் கிட்டத்தட்ட இருப்பார்கள்.*

# 12

## மதுரை வீர கஞ்சுகன்

நிறம் இப்படி உருவம் இப்படி சாயல் இப்படி என்று கடவுளை படம் போட்டுக் காட்ட முடியுமா? படம் (ஓவியம்) வெறும் அடையாளந்தான். படத்தில் இல்லை கடவுள்.

இனி கவியின் காரியமும் அப்படித்தான் உணர்ச்சியை இப்படி அமைத்து இன்னமாதிரி தோற்றத்தில் கவி வரும் என்று எழுதிக் காட்டுவது படம் போட்டு காட்டுகிற காரியந்தான்.

வெண்பா இப்படி விருத்தம் இப்படி கலித்துறை இப்படி தாழிசை என்று செய்யுளின் புற உருவத்தை - யாப்பியலைக் காட்டுமே தவிர கவியை - கலைப்பண்பை இலக்கணம் காட்டவே முடியாது.

கவிக்கு மூலம் தெய்வ கடாட்சம். வெறும் புத்தகப் படிப்பு (நூலறிவு) கவியை உண்டாக்க முடியாது.

நூலறிவு நிரம்பியவர்களும் கவிஞர்களாக இருக்கலாம். நிரம்பப் பெறாதவர்களும் கவிஞர்களாக இருக்கலாம்.

ஏன் என்று கேட்க ஒருவருக்கும் அதிகாரம் இல்லை.

டாக்டர், உ.வே.சாமிநாத ஐயரவர்கள் உயர்ந்த கல்விமான். தலபுராணங்களிலிருந்து சங்கநூல்கள் முடிய அத்தனை தமிழ் நூல்களையும் ஐயம் திரிபறக் கற்றறிந்த மேதை, மகாவித்வான், மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் அன்புக்குரிய மாணவர். மறைந்து போன புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி முதலிய நூல்களைத் தேடிக் கண்டுபிடித்து அருமையாய் பதிப்பித்து வெளியிட்ட வள்ளல். அதற்காக தமிழ்நாட்டிலுள்ள பட்டி தொட்டிகள், மூலை முடுக்களில் எல்லாம் சென்று ஏடு தேடியவர்கள், தமிழகத்தில் வாழ்ந்த அத்தனை புலவர்களுடனும், கவிவாணர்களுடனும் பழகி உறவாடியவர்கள்.

அப்படியானால் சாமிநாத ஐயரிடம் விஷயம் எவ்வளவோ உண்டு. அனுபவமும் எவ்வளவோ உண்டு.

ஐயரவர்களின் தந்தையார் வேங்கட்ராம ஐயர். சிறந்த சங்கீத வித்வான். தன் தாய் வழிப்பாட்டியின் உடன்பிறந்த சகோதரர் கனம், கிருஷ்ணய்யரிடம் பணிவிடை செய்து- வீட்டு வேலைக்காரன் போல் இருந்து இசை பயின்றவர்.

அவர்தம் புதல்வன் சாமிநாதனை அறிஞனாக திகழவைக்க வேண்டும் என்பதற்காக அந்த காலத்தில் பல தமிழறிஞர்களை தேடி அலைந்தார். கடைசியில் மகா வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் தம் புதல்வனை ஒப்படைத்தார்.

தனக்காக தன்னுடைய கையை பிடித்துக் கொண்டு பல இடங்களுக்கு தம் தந்தை அலைந்ததும், பல புலவர்களின் வாசல்படியிலும், திண்ணையிலும் காத்துக் கிடந்ததும் சாமிநாதய்யரின் பசும் உள்ளத்தில் பதிந்து நின்றது.

*கற்க வேண்டுவனவற்றை எல்லாம் கற்று ஆசிரியர் பணிக்கும் வந்து உயர்ந்துவிட்டார் சாமிநாத ஐயர்.*

*இந்த நிலையில் நூறு வருடங்களுக்கு முன் (8-10-1893ல்) சாமிநாத ஐயரின் தந்தையார் திரு.வேங்கட்ராம ஐயர் காலமானார்கள். அது சாமிநாத ஐயரின் உள்ளத்தை இடிவிழுந்து தாக்குவதுபோல தாக்கித்தானே இருக்கும். மடைஉடைந்த வெள்ளம் போல் சோக உணர்ச்சி பொங்கித் தளிக்கவே செய்யும்.*

*பளங்கு போல் தெளிந்த தூய கவி உண்டாவதற்கு விஷயம், அனுபவம், உணர்ச்சி ஆகிய மூன்றும் தேவைதான்.*

*ஆனால் இந்த மூன்று மட்டும் கவியாகிவிட முடியாது. இந்த மூன்றையும் வாங்கி ஒருமைப்படுத்தி இசையிலும், தாளத்திலும் வைத்து கவி என்னும் புதிய அவதாரம் எடுக்க வைக்கும் மொழி (தமிழ்)ப் பண்பு வேண்டும், அந்த பண்புக்குத்தான் இறையருள் (மெய்யுணர்வு) என்று பெயர்.*

*அதற்கும் படிப்புக்கும் சம்பந்தம் இல்லை.*

*தந்தையார் காலமானதால் ஏற்பட்ட சோகத்தில் சாமிநாத ஐயரவர்கள்*

பற்றல் எங்கே செந்தமிழைப்,
பற்றிக்கற் றோர் பலர்பால்
துற்றல் எங்கே, மீனாட்சி
சுந்தரன்நல் ஆரியன்பால்
கற்றல் எங்கே, கற்றுக்
கவலை ஒரீஇ அந்நிலையே
நிற்றல் எங்கே இன்றுவரை
நீ அருள்செய் யாவிடினே

இப்படி பாடி வருந்தினார். தனக்காக தந்தையார் நடந்த நடையும், பட்ட சிரமமும் தனயன் முன் துற்றல்-கூடி உறவாமல், கவலை ஒரீஇ-மனக்கவலையை விட்டொழித்து, ஒரீஇ-நீங்கி, அந்நிலை-அமைதியான நிலையில் அப்படி அப்படியே கண்முன் வந்து நிற்கின்றன. ஆனால் விஷயம், உணர்ச்சி முதலியவற்றை கவியாக உருவாக்கும் கலைப்பண்பு கண்முன் வந்து நிற்கமாட்டேன் என்கிறது.

கவிப்பண்பு பொருந்தி வரவில்லையே என்பதற்காக சாமிநாதய்யரின் படிப்பை குறைசொல்ல முடியுமா? அவர்கள் காலத்தில் மட்டுமல்ல, இன்றளவும் அவர்கள் அளவுக்கு நுணுகி நுணுகி எல்லா நூல்களையும் - தமிழ் இலக்கண இலக்கியங்கள் அவ்வளவையும் படித்தவர்கள் யாரும் இல்லை.

இனி ரசிகமணி, டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள் 1954ல் காலமானார்கள். குடத்தில் வைத்த விளக்காயிருந்த கவிஞர் தேசிகவி‌நாயகம் பிள்ளை அவர்கள் மலைமேல் வைத்த விளக்காக செய்தவர்கள் ரசிகமணி, டி.கே.சி.

வாழ்நாள் முழுவதும் தமிழ் அன்பர்களை வரவேற்று, உபசரித்து தம் அனுபவங்களை அன்பர்களோடு பகிர்ந்து அனுபவித்து தமிழுக்கு அரும்பணி ஆற்றவயர்கள் டி.கே.சி.

உண்மையான தமிழ் சங்கமாக திகழ்ந்தது ரசிகமணியின் இல்லம். அவர்களின் வவேற்பும் உபசரிப்பும் உண்மையான தவ வாழ்க்கையாக பரிமளித்தது.

வேள்வி வேள்வி என்று சொல்கிறோமே அந்த வேள்வியை - தவவேள்வி கண்குளிரப் பார்க்கும் இடம் ரசிகமணியின் வரவற்பு உபசரிப்பும் நிறைந்த அன்னதான கூடந்தான்.

*ரசிகமணி காலமான செய்தி கவிமணியின் உள்ளத்தை தாக்கிவிட்டது. உணர்ச்சியைக் குழைத்து பிசைந்துவிட்டது.*

*சோக பாலமே உருவெடுத்து வெண்பா எப்படி வருகிறதென்று பாருங்கள்.*

**அன்னைபோல் என்னை**
**அருவியில் நீராட்டி,**
**இன்அமிழ்தம் பக்கத்(து)**
**இருந்தூட்டி, - இன்னமும்**
**தங்குதங்(கு) என்றுரைக்கும்**
**தங்கக் குணத்தானை**
**எங்கு போய்க் காண்பேன்**
**இனி.**

*சாமிநாத ஐயர் அளவுக்கு தேசிகவிநாயகம் பிள்ளை படிக்கவில்லை. ஆனால் தேசிக விநாயகம்பிள்ளையிடம் குதித்துக் கொண்டு ஓடிவரும் கவி. சாமிநாத ஐயரிடம் சண்டித்தனம் பண்ணும்.*

*பள்ளிக்கூடப் படிப்போ நூலறிவோ திரு.டி.என், ராஜரத்தினம்பிள்ளையிடம் அவ்வளவாக இல்லை. சர்வ பள்ளி ராதாகிருஷ்ணனோ வேத வேதாங்கங்களையும் உபநிடதங்க ளையும் ஐயந்தரிபறக் கற்ற தத்துவ நிபுணர். ஆனாலும் இசைத் தெய்வம் எழுந்து கொலுவிருப்பது டி.என்.ராஜரத்தி னத்திடந் தான். ராதாகிருஷ்ணனிடம் இல்லை.*

*ஏன், எப்படி என்று யாரும் கேள்வி கேட்க முடியாது. கேட்கக் கூடாது. காரணம் விடை கிடைக்காது. ஊழிஊழி காலத்துக்கும் விடை கிடைக்காது.*

கவி என்பது தனி. நூலறிவு என்னும் சாண் போட்டோ தச்சு முழம் வைத்தோ கவியை அளக்கக் கூடாது.

இனி காதல் சம்பந்தமான அனுபவம் காதலின் உச்சவெறியில் எப்படி வாய் திறந்து பேசுகிறது என்பதைக் கவிகள் சில கொண்டு பார்க்கலாம்.

சோழர்கள் எழுந்து தலைநிமிர்ந்து பேரரசை நிறுவிய போதே பாண்டியர் ஆட்சி ஆட்டம் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. நூறு நூற்றைம்பது வருட காலத்துக்குள் பாண்டிய நாடு பல அரசுகளாய் சிதறிவிட்டது.

திருநெல்வேலி, தென்காசி, கரிவலம் வந்த நல்லூர், இராமநாதபுரம், சின்னயனூர் என்று பல பகுதிகள் ஏற்பட்டன. ஒவ்வொரு பகுதியை ஒவ்வொருவர்-பாண்டியர் மரபை ஒட்டியவர்களே அரசாண்டனர். இவர்கள் சோழர்களுக்கு அடங்கி கப்பம் கட்டினர். அதனால் இவர்கள் சிற்றரசர்கள்.

இவர்களை தவிர ஆங்காங்கே பல குறுநில மன்னர் (ஜமீன்தார்)கள் வேறு.

மதுரையையும், அதன் சுற்று வட்டாரம் அழகர்மலை, மேலூர், உள்ளடங்கிய பகுதியையும் ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்குக் கஞ்சுகன் என்று பெயர்.

மதுரையை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்னும் கெட்ட நோக்கம் எதிரிகளிடம் குடிகொண்டிருந்தது. அதனால் அடிக்கடி எதிரிகள் மதுரையின் மேல் படையெடுத்தார்கள். முற்றுகை கூட இட்டார்கள்.

பயிற்சிமிக்க உயர்ந்த வீரப்படையை கஞ்சுகன் எப்பொழுதும் பராமரித்து வந்தான். அதனால் எதிரிகளின்

திட்டம் நிறைவேறவில்லை. எதிரிகளை விரட்டி விரட்டி அடித்துவிட்டான் கஞ்சுகன்.

மதுரையை காத்த மாவீரன் என்கிற பெயர் அவனுக்கு, வீரம் நிறைந்த கஞ்சுகனிடம் அருளும் நிறைந்திருந்தது. குடிமக்களை கண்ணும் கருத்துமாக பாதுகாத்தான். மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளை தனக்கு நேர்ந்த தொல்லைகளாக நினைத்தான். அதனால் உடனுக்குடன் அல்லல் நீக்கி அருள் பாலித்தான் மக்களுக்கு.

நீதிநெறி வழுவாத மாவீரன் தங்களுக்கு நாயகனாக - காவலனாக இருக்கிறான் என்றால் மக்களிடம் அவன்மேல் பக்தி உண்டாகவே செய்யும். அப்படி உண்டாகும் ராஜபக்தி அவனை பலதுறைகளில் வைத்துப் போற்றிப் புகழும்.

காதல் துறையில் வைத்தும் - அவனை ஒரு கற்பனை நாயகனாக வைத்தே பலபடப் பாராட்டும் மக்கள் மனம்.

பலாச்சுளையை வண்டு மொய்த்த மாதிரி மதுரை வீர கஞ்சுகனை எப்பொழுதும் கலைஞர்கள் மொய்த்த வண்ணம் இருப்பார்கள. பாணர், கூத்தர், செவியர், புலவர் இப்படி கலைஞர்களின் கூட்டம்.

அவ்வளவு பேருக்கும் தாயகமாக இருந்தது கஞ்சுகனுடைய அரண்மனை.

மக்களின் ஆர்வம் புலவர்வாக்கில் கவியாக வருகிறது.

மதுரை வீரன் மேல் ஒரு பெண்ணுக்கு காதல். காதலானது மோகவெறியாகிவிட்டது. வெறியில் தோழி களிடம் சொல்வதாக பாடல்.

நெல்லைப்பகுதி - தஞ்சைப்பகுதி அவ்வளவையும் ஒரு கலக்குக் கலக்கக்கூடிய யானைப்படையை உடையவன்

*கஞ்சுகன். தீப்பந்தங்களைக் கையில் எடுத்துக்கொண்டு எதிரியின் கோட்டை கொத்தளங்களை தீயிட்டு கொளுத்தும் ஆவேசமிக்க போர் யானைகளை உடையவன் மதுரை வீரகஞ்சுகன். கொச்சி முதலிய மலையாள நாட்டை குதிரைப் படை கொண்டு வென்றவன். அப்பேர்ப்பட்ட கஞ்சுகனுடைய அழகர்மலை, பாரிமலைப்பகுதியில் பிறந்து வளர்ந்த பெண்களே என்று கூப்பிடுகிறாள் பெண்.*

காவிரித் துறைபடிந்து
பொருநையைக் கலக்கியே
கடைக்கண் அங்கி
கொண்டுறைந்தை கனல் கொளுத்தும்
ஆனை யான்
வாவுகொற்ற மாஉகைத்து
வஞ்சிவென்ற சுந்தரன்
மதுரைவீர கஞ்சுகன்
வரைப்புறத்து மாதரீர்!

*சேடியரை இப்படிச் செல்லமாக அழைத்து என்ன சொல்கிறாள்.*

*தென்றல் ஒன்றுதானே? அப்படியானால் எனக்கு மட்டும் தணலாய்த் தகிக்கிறது. நாட்டில் உள்ள மற்றவர்களுக் கெல்லாம் தண்ணென்று சுகம் கொடுக்கிறது?*

*மெத்தை தலையணையோடு கூடிய படுக்கையும் எனக்கு மட்டும் முள்ளாய் குத்துகிறது. நிலவும் அப்படியே. ஏன் இந்த கொடுமை?*

*ஒன்றாய் இருந்த உலகம் என்னால் இரண்டு பட்டுவிட்டது!*

*இனிப் பாடலின் முழு உருவம்*

தான தன்ன தன்ன தன்ன
தன்ன தன்ன தன்ன தன்ன
தான தன்ன தன்ன தன்ன
தன்ன தன்ன தன்ன தன்

காவிரித்து றைபடிந்து
பொருநையைக் கலக்கியே,
கடைக்கணங்கி கொண்டுறைந்தை
கனல் கொளுத்தும் ஆனையான்,

வாவு கொற்ற மாஉகைத்து,
வஞ்சிவென்ற சுந்தரன்,
மதுரைவீர கஞ்சுகன்
வரைப்புறத்து மாதரீர்!

பாவையர்க்கு வாடைவேறு
எனக்குவேறு வாடையோ?
பாயல்மற்(று) அவர்க்குவேறு
எனக்குவேறு பாயலோ?

யாவருக்கும் மதியம்வேறு
எனக்குவேறு மதியமோ?
யான்ஒருத்தி பெண்பிறந்து
இரண்டுபட்ட(து) உலகமே!

*பொருநை-தாமிரபரணி ஆறு, அங்கி-தீ, வாவுகொற்ற-தாவிப்பாயும், மாஉகைத்து-குதிரைப்படையை ஏவி, வஞ்சி-கொச்சி, பாயல்-படுக்கை, மதியம் -சநதிரன்-வெண்ணிலா.*

அற்புதமான பாட்டு. இசையிலும் தாளத்திலும் நின்று நின்று அபிநயம் பிடிக்கிறது தமிழ். தொன்மையான பண்ணும் திறமும் பாடலில் தெளிந்து பேசுகிறது.

வருகிற பாடல்களும் அப்படியே.

மதுரைவீர கஞ்சுகனுடைய வீரம், வெற்றி, நீதி, நேர்மை, பரிவு எல்லாம் சேர்ந்து பெரும் புகழாய் விளைந்துவிட்டது.

அவனுடைய பெயரும் புகழும் எல்லா இடத்திலும் எல்லோராலும் பாராட்டிப் போற்றப்பட்டது. உலகின் எந்தக் கோடிக்குப் போனாலும் மதுரைவீரனுடைய புகழைப் பாராட்டிய பேச்சாகவே இருக்கும்.

கவிக்கே உரிய சாதுர்ய தோரணையில் மதுரை வீரனுடைய (கருடக்) கொடி எட்டுத் திசைகளையும் போய் முட்டுகிறது என்றும் திசை யானைகளை இடிக்கிறது என்றும் புகழைப் பற்றி எடுத்துச் சொல்கிறது.

சேரர், சோழர் மட்டுமல்ல, சிதறிக் கிடக்கும் பாண்டிய குல அரசர்களும் மதுரைவீரன் அரண்மனை முற்றத்தில் காத்துக் கிடப்பார்களாம்.

கொண்டு வந்த திறையை (கப்பத்தை) கணக்கிட்டு களஞ்சியத்தில் சேர்க்க!

'இத்தனை சிறப்புகள் நிறைந்த கஞ்சுகனுடன் உறவாடிப் பெற்ற இன்பம் எப்படிப்பட்டது தெரியுமா? அடடா அதை வார்த்தைகளால் எப்படிச் சொல்ல முடியும்?

எனக்கும் அவனுக்கும் அது தெரியும். மற்றவர்களுக்கு காட்டவும் முடியாது. அவர்களால் பார்க்கவும் முடியாது.

சேடிமார்களிடம் இப்படிச் சொல்கிறாள் பெண்.

திக்கயங்கள் எட்டும்முட்ட
வைத்தபுள் பதாகையான்,
செழியர்சேரர் வளவர்வந்து
திறைஅளக்கும் முன்றிலாள்,

மைத்தடங்கண் மாதரார்
மனம்கவர்ந்த மாரவேள்,
மதுரைவீர கஞ்சுகன்
மணந்துதந்த காதல்நோய்

கைக்குவந்(து) அகப்படாது
கண்முன்நிற்கும், ஒருவரால்
காணொணாது, காணும் என்று
காட்டொணா(து) அ(து); அன்றியும்

ஒக்கும் என்(று) உரைக்கொணாது,
உவமை இல்லை, இருவரும்
உள்ளறிந்த(து) அன்றிமற்றிவ்
ஊரறிந்த(து) இல்லையே!

*எப்படி வருகிறது பாடல், இப்படி வருகிற பாடல்களுக்குத்தான் அருள்வாக்கு என்று பெயர். கலைமகள் கடாட்சம் என்றால் இதுதான்.*

*திககயங்கள்-திசையானை, புள்-பறவை, பதாகை-கொடி, செழியர்-பாண்டியர், தென்காசி முதலிய இடங்களிலிருந்து அரசாண்ட பாண்டியர், வளவர்-சோழர், திறை-கப்பம், முன்றில்-முற்றம், மாரவேள் - மன்மதனை ஒத்த அழகன், உள்ளறிந்தது அன்றி-இரண்டு பேருடைய உணர்ச்சிக்குதான் அந்த ஆனந்தமும் சுகமும் தெரியும். ஊர்*

*அறிந்தது இல்லை - மற்றப்படி வருகிறவர் போகிறவர் ஒருவருக்கும் அந்த சுகம் இன்னதென்று தெரியாது.*

*இனிக் கடைசியாக ஒரு பாட்டு. காதலனுக்கும் சில சமயம் காரியம் இருக்கும். அதனால் இரண்டுநாள் காதலியை பிரிய வேண்டிவரும். பிரிவினால் வரும் துன்பம் சேர்ந்திருக்கும்போது தெரியாது. பிரிந்தவுடன் தெரியும். அதுவும் வந்துவிடுவேன் என்று சொன்ன நாள் கழிந்தும் வரவில்லை என்றால் தாங்கமுடியாது துயரத்தை. அழுகை அழுகையாக வரும். எப்படி அடக்கினாலும், எப்படி மறைத்தாலும் வந்து கொண்டே இருக்கும் கண்ணீர்.*

*மனசில் பயம் உண்டாகிவிடும். அது காரணமாக எதைப் பார்த்தாலும் பயமாக இருக்கும். அத்தனையும் தனக்கு ஒத்துப் பேசி அணிவகுத்து எதிர்த்து நிற்கின்றனவோ என்று கலங்குவாள் பெண். அதனால் அஞ்சி நடுங்குவாள் பெண்.*

*மதுரை வீர கஞ்சுகன் மேல் ஆசை வைத்த பெண், பகல் கனவிலேயே அவனுடன் பழகுகிறாள். உறவாடுகிறாள். பிரிவுத் துன்பத்துக்கும் ஆளாகிறாள்.*

*தோழிமார்களே என்று அழைத்து, ஏன் இப்படி உலகமே என்னைத் தொந்தரவு செய்ய முனைந்து நிற்கிறது என்று அலறுகிறாள் பெண்.*

அந்தி மாலைதனில்
வந்து போர்செயும்
அனங்க வேள்பகழி
வெள்ள மோ,

ஆவி சோரமடம்
நாண்வரம்(பு) அழிய
ஆசை கொண்டபெரு
வெள்ள மோ,

இந்த வாள்நிலவின்
வெள்ள மோ, மகளிர்
ஏசு கின்றிபெரு
வெள்ள மோ,

இருகண் மாரிபொழி
வெள்ள மோ உலகில்
எங்கும் வெள்ளம் மிக
ஆன தே!''

*மாலைநேரம் எப்பொழுது வரும் என்று பார்த்துக் கொண்டிருக்கிறான் மன்மதன். வந்ததும் காதலர்கள் ஆசையை தூண்ட அவர்கள் மேல் மலரம்புகளை எறிகிறான். ஆசை பெருகப் பெருக அடக்கம், கட்டுப்பாடு, பொறுமை, கூச்சம் எல்லாம் நொறுங்கிவிடுகின்றன. வெள்ளப் பெருக்காய் பெருகுகிறது வெறி.*

*நிலாவின் ஒளி வெள்ளம் வேறு, போன புருஷன் வரமாட்டானா என்ன? அதற்குள் இப்படியா தவித்து மறுகுவாள் பெண்? பொம்பளையைப் பார் பொம்பளை என்று பல பெண்கள் ஜாடை மாடையாகப் பேசிச் சிரிப்பார்கள்.*

*பிரிவாற்றாமை வாட்ட வாட்ட கண்ணீர் தாரை தாரையாக கொட்டும்.*

அத்தனையும் ஒரு அபலைப் பெண்ணைச் சுற்றி வளைக்கும் கொடிய வெள்ளமேதான்.

பெண்கள் அடக்கமானவர்கள். அவர்கள் பேசுவதே தெரியாது. நடப்பதும் தெரியாது, இருப்பதும் தெரியாது, குனிந்த தலை நிமிராதவர்கள் பெண்கள். அப்படி ஒரு மென்மை, அப்படி ஒரு நளினம் அவர்களிடம் குடிகொண்டிருக்கிறது.

இப்படி ஒரு கூச்சமும் நாணமும் நிறைந்த பெண் ஒரு ஆவேசத்துக்கு ஆளாகிவிட்டால் போதும் பயற்சி பெற்ற போர் வீரர்களால் தகர்க்க முடியாத கோட்டை கொத்தளங்களையும் தகர்த்து விடுவாள். அப்பொழுது அவளுடைய கதறலும் கூப்பாடும் விண்ணுக்கும் மண்ணுக்குமாக எதிரொலிக்கும்.

காதல் வெறிக்கு ஆளான பெண்ணின் கதறல் இங்கே அப்படி முட்டி மோதுவதைப் பார்க்கிறோம்.

பொதியமலையில் பிறந்த தமிழை மதுரையில் சங்கம் வைத்து வளர்த்தவர்கள் பாண்டியர்கள். மதுரை வீர கஞ்சுகனும் பாண்டியர் குலவிளக்குத்தானே!

மதுரை வீர கஞ்சுகனுடைய யானைப்படையை நினைத்தாலே போதும். எதிரிகள் தாங்கமாட்டார்கள் அப்படி நடுங்க வைக்கும் போர் வெறி கொண்ட யானைப்படைக்கு அதிபதி மதுரை வீரன்.

அவனுடைய மாலைமேல் ஆசை வைத்ததால் எப்படி எல்லாம் வேதனைக்கு ஆளாகிவிட்டேன் என்று அலறுகிறாள் பெண்.

இனிப் பாடலின் முழுஉருவம்

தான தானை தான தானை
தன்ன தானை தானை

"சந்த ணாடவிம லைப்பி றந்த தமிழ்
சங்கம் வீறிவளர் கூடலான்,
தாறு கொன்றுநிழல் சீறி நின்றுகடை
சாய்தெ றிந்தகளி யானையான்,

மந்த ராசலம் எடுத்து வாசுகி
பிணித்து வாருதி கடைந்தமால்
வாகை வாகுபுனை சுந்தரன் வென்றி
மாலை வேட்டபின் மடந்தைமீர்!

அந்தி மாலைதனில் வந்து போர் செயும்
அனங்க வேள்பகழி வெள்ளமோ,
ஆவி சோரமடம் நாண்வரம் பழிய
ஆசை கொண்டபெரு வெள்ளமோ,

இந்த வாள் நிலவின் வெள்ளமோ, மகளிர்
ஏசு கின்றபெரு வெள்ளமோ,
இருகண் மாரிபொழி வெள்ள மோ உலகில்
எங்கும் வெள்ளம் மிக ஆனதே"

*சந்தன அடவிமலை-பொதியமலை, சந்தனக்காடுகள் நிறைந்த பொதியமலை, கூடல் - மதுரை, தாறுகொன்று - நிழலைப் பார்த்து சீறி ஒரு மிதிமிதிக்குமாம் யானை கடைசாய்த்து எறிந்த - எதிரிகளை தொம்சம் பண்ணின. களியானை - போர் யானை.*

*மந்தராசலம் - மேருமலை, மந்தரம் அசலம் - மந்தராசலம், வாசுகி - பாம்பு, வாருதி - கடல், மால்-திருமால்,*

பாற்கடலை மகாமேருமலையை மத்தாகப் போட்டு, வாசுகியைக் கயிறாகக் கட்டி கடைந்து அமிர்தம் எடுக்க உதவினார் திருமால். அவர் தங்கி இருக்கும் மலை அழகர்மலை. அதை வென்று கைப்பற்றினான் மதுரை வீர கஞ்சுகன்.

அவன் தோளில் கிடைந்து அசையும் மாலைமேல் ஆசைவைத்தேன். அதனால் மறுகித்தவிக்கிறேன் என்கிறாள் பெண்.

மூன்று பாடல்களும் அற்புதமான பாடல்கள். பழுத்துக் களிந்த இசை அப்படியே தேன் சொட்டுகிறது பாடலில். சீருக்குச் சீர் நிறுத்திப் பாடினால் கையையும் காலையும் வீசியபடி தாளத்தில் நின்று நின்று தமிழானது தாண்டவம் ஆடுவது தெரியும்.

பாடல்களில் உள்ள உணர்ச்சியும், வேகமும் சிறப்பத்துக்கும், ஓவியத்துக்கும் உகந்தவை.

தமிழ்க் கடலில் விளைந்த சாதி முத்துக்கள் மூன்று பாடல்களும்.

# 13

# ஏகம்பவாணன்

**வ**டக்கே திருவேங்கடமலை (திருப்பதி) தெற்கே இந்து மாக்கடல் (குமரிக்கடல்) கிழக்கும், மேற்கும் முறையே வங்காள குடாக்கடலும், அரபிக் கடலும், இப்படி ஒரு எல்லைக்குள் அமைந்த தீப கற்பந்தான் தமிழகம்.

பனம் பாரனார் பாடிய தொல்காப்பியப் பரயிரத்திலிருந்து சுப்பிரமண்ய பாரதியார் பாடிய 'செந்தமிழ் நாடு' என்னும் பாடல்வரை இலக்கண இலக்கிய நூல்கள் அவ்வளவிலும் இப்படித்தான் வகுத்துச் சொல்லப்பட்டுள்ளது தமிழக எல்லை.

இந்த வளமான தீபகற்பதத்தை - தமிழகத்தை சேரர், சோழர், பாண்டியர் என்னும் முடியுடைமன்னர் மூவரும் ஆண்டுவந்தனர். படைப்புக் காலந்தொட்டு இவர்களே தொடர்ந்து ஆண்டு வருவதாக பரிமேலழகர் போன்ற ஆசிரியர்கள் சொல்கிறார்கள். அது காரணமாகவே தமிழ்நாடு என்பது பாண்டிநாடு, சோழநாடு, சேரநாடு என்றே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மூன்று நாடுகளும், சேர்ந்த தமிழகத்தை தமிழ்நாடு என்று சொல்வதற்குப் பதில் தமிழ்கூறும் நல்லுகம் என்று வியந்து சொல்லி இருக்கிறது.

வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழ்கூறும் நல்லுலகம் சேர சோழ பாண்டியநாடு என மூன்று பிரிவாக

இருந்தது. ஆனாலும், நான்காவது பகுதியாக தொண்டை நாடு என்னும் பெயரில் ஒரு பகுதி இருந்ததாகச் சங்க காலம் தொட்டே சொல்லப்பட்டு வருகிறது.

தொண்டை நாடு என்பது சோழநாட்டின் ஒரு பகுதிதான். இது (மலை) குன்றுகளாலும் காடுகளாலும் நிறைந்திருந்த இயற்கையான காட்டரணாக இருந்தது. சோழ நாட்டுக்கு மட்டுமல்ல. தமிழகத்துக்கே அசைக்கமுடியாத காத்திரமான பாதுகாப்பரணாக விளங்கியது.

வடக்கே இருந்து யாரும் தமிழகத்தின் மேல்படை எடுத்து வரமுடியாது. வந்தாலும் இந்தக் காட்டைக் கடந்து நாட்டிற்குள் வந்து வெற்றி பெற்று மீளமுடியாது.

நீண்ட நெடுங்காலத்துக்கு முன் கடல் வழியே நாகநாடு சென்றிருக்கிறான் சோழன் ஒருவன். அங்கே நாகநாட்டு அரசன் மகளை மணந்து சேர்ந்து வாழ்ந்திருக்கிறான். பிறகு சொந்த நாட்டுக்குப் புறப்பட்டிருக்கிறான் சோழன்.

கலங்கிய நிலையில் என்நிலை என்ன, வயற்றிலிருக்கும் இந்தச் சிசுவின் நிலை என்ன என்ற பெண்ணிடம் தன்னுடைய அடையாள மாலை ஆதொண்டையைக் காட்டி அதில் சத்தியம் பண்ணி சோழநாடு வந்து விட்டான் அரசன்.

சிங்கக் குட்டி போன்ற ஆண்குழந்தையைப் பெற்றெடுத்த நாககன்னியோ வருவான் வருவான் என்று எதிர்பார்த்தாள். வரவே இல்லை மன்னன். குழந்தையின் மேல் ஆதொண்டைக் கொடியைச் சுற்றி கடல்வழியே சோழநாடு நோக்கி மிதக்க விட்டுவிட்டாள் குழந்தையை.

குழந்தையும் மெள்ள மெள்ளச் சோழ நாட்டுக் கடற்கரைப் பக்கம் ஒதுங்கியது. அதை எடுத்து வளர்த்த சோழன் குழந்தைக்கு தொண்டைமான் என்று பெயரிட்டான்.

வளர்ந்து வாலிபன் ஆனான் பையன். வில்வித்தை, வாள் வித்தை எல்லாம் முறைப்படி படித்து முடித்தான். சோழநாட்டின் வட பகுதிக்கு அரசனாக்கி மகுடாபிஷேகமும் செய்து விட்டான் பையனுக்குச் சோழமன்னன்.

ஆதொண்டைக் கொடியால் சுற்றப்பட்டு வந்தவன். அதனால், அவனுக்குத் தொண்டைமான் என்று பெயர். சோழநாட்டின் வடபகுதி தனிநாடாகி தொண்டைமானால் ஆளப்பட்டது. அதனால், அதற்கு தொண்டைநாடு என்று பெயர்.

அளவுக்கு மீறிய கற்பனையில் பௌராணிக பாணியில் இப்படி ஒரு கதை வழங்குகிறது.

பௌராணிகப் போக்கு வலுவாகப் பின்னப்பட்டிருந்தாலும் உண்மையான அம்சம் ஒன்று அடிப்படையாகக் கதையில் இருக்கும். இந்தக் கதையிலும் அப்படியே ஒரு உண்மை இருக்கவே செய்கிறது.

இருண்ட வனப்பகுதியாக இருந்த சோழநாட்டின் வடபுலத்தை ஒரு சோழமன்னன் திருத்தி இருக்கிறான். பெரிய பெரிய ஏரிகளை வெட்டி பாலாறு முதலிய நதிகளின் நீரை அவற்றில் பாய்ச்சி நிறைத்திருக்கிறான். ஏரிகளைச் சுற்றி இருந்த காடுகளைக் களைந்து சாகுபடிக்கு ஏற்றவிளை நிலங்களை உருவாக்கி இருக்கிறான்.

அதனால், (சிறு) ஊர்கள், நகரங்கள், உழவு, வணிகம், தொழில் சமுதாயம் என்று ஏற்பட்டு நாடாக உருவெடுத்து வந்துள்ளது வடபுலக்காடு.

பரத கண்டத்தின் வடபகுதியைச் சேர்ந்த நாட்டார் பலர் கன்யாகுமரி, ராமேஸ்வரம், திருவரங்கம், சிதம்பரம் முதலிய இடங்களுக்கு வந்து போகவும், வணிகம், கல்வி முதலிய

துறைகளில் தென்நாட்டாரோடு உறவாடவும் முன்பு மிக்க சிரமமமாக இருந்தது. காடு திருந்தி நாடானதைத் தொடர்ந்து சிரமம் குறைந்துவிட்டது. வடநாட்டாரின் தென்னாட்டு உறவுக்கு ஒரு கோபுர வாசலாய் அமைந்தது காடு விலகி நாடானது. அதனால், தொண்டை (வழி)நாடு எனப்பெயர் பெற்றது புதுப்பகுதி.

தொண்டை நாட்டை ஆண்ட சோழர் பிரிவுக்கு தொண்டைமான் எனப் பெயர் கிடைத்தது.

சங்க காலத்தில் இலைமறை காயாகவே இருந்தது தொண்டைநாடு. பல்லவர் காலத்தில் தொண்டைநாடு விரிந்து பரந்தது.

நூற்றுக்கணக்கில் ஏரிகளை வெட்டினார்கள். ஆயிரக்கணக்கில் ஊர்களும், நகரங்களும் உண்டாகின. கோவில், குளம், தேர், திருவிழா, கல்வி, வணிகம், தொழில் உழவு எல்லாம் பளமளவென்று வளர்ந்தன. அந்த அளவுக்குக் காடுகளை வெட்டி அழித்து நாடாகத் திருத்தினர் பல்லவர்.

அதனால், பல்லவர்களுக்கு காடு வெட்டிகள் என்றே பெயர் ஏற்பட்டது. இன்றைய சென்னை, ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்கள்தாம் அன்றைய தொண்டைநாடு. சித்துார், நெல்லுார், மாவட்டங்களில் சில பகுதிகளும் தொண்டைநாட்டில் இருந்தன.

இன்றைக்கும் பிரமாண்டமான ஏரிகளை தொண்டை நாட்டில் பார்க்கலாம். காடுகள் நிறைந்திருந்தன அந்தப்பகுதி யில் என்பதற்கு ஆற்காடு, வேல்காடு, ஆலங்காடு, மாங்காடு தண்டலம் (தண்டலை - சோலை) பெருந்தண்டலம், (திண்டி) வனம், மயிலம், குன்றத்துார், நெற்குன்றம், படப்பை, திருமுல்லைவாயில், மதுரவாயில், போன்ற ஊர்ப்பெயர்களே சாட்சியம்.

காட்டைத் திருத்தி நாடாக்கினதில் நன்மை உண்டுதான். அதேநேரத்தில் சில தொல்லைகளும் ஏற்பட்டன. சோழ நாட்டின் வடக்கிலும், வடமேற்கிலும் ஒரு நிலப்பகுதி. அது கருநாடகத்தின் கிழக்குப் பாகமும், ஆந்திரத்தின் மேற்குப் பாகமும், மகாராஷ்டிரத்தின் தென்கோடியும் சந்திக்கும் ஒரு முடிச்சு. இந்த முடிச்சில் கன்னட, மகாராஷ்டிரா, ஆந்திர நாடோடிகள் முரட்டு ஆசாமிகள் வாழ்ந்து வந்தனர். சோழ நாட்டில் காடு நாடாகத் திருந்துவதை அறிந்து இவர்கள் அலை அலையாய் தமிழ்நாட்டில் புகுந்தனர். ஏற்கனவே சோழ நாட்டின் வட பகுதியைத் திருத்திக் கொண்டிருந்தவர் களும் தேகபலம் நிறைந்த வலுவான தமிழ்க் கூட்டந்தான். போர் வீரர்கள் மரபில் வந்த இந்தத்தமிழ்க் கூட்டத்தோடு வடக்கி லிருந்து வந்த பல திறப்பட்ட முரட்டுக் கூட்டமும் சேர்ந்து கலந்து விட்டது.

நாளாக நாளாக மகாராஷ்டிரர், கன்னடர், தெலுங்கர் என்பதெல்லாம் மறைந்து எல்லோரும் தமிழர்களாகி விட்டார்கள். பலதிறப்பட்ட தமிழர்களின் இந்தக் கூட்டத்துக்கு பல்லவர் என்று பெயர் ஏற்பட்டது.

நல்ல உழைப்பாளிகள், தேகபலம் நிறைந்தவர்கள், போர்ப்பயிற்சி மிக்கவர்கள், அதனால் இவர்களுக்கு படை யாட்சி(கள்) என்ற பெயர் கிடைத்தது. படையாட்சியர் என் றால் போர்மறவர் என்பது பொருள். இந்தப் பல்லவர்களின் நம்பிக்கைக்கு உரிய தலைவர்கள் அரசர்களானார்கள். பல்லவர் ஆட்சி இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாகச் சீரும் சிறப்புமாய் இருந்தது.

பண்பாடு, வழிபாடு, இசை, நடனம், இலக்கிய இலக்கணம், நிர்வாகம், நீதி எல்லாம் உயர்வாய் இருந்தன. அதேநேரத்தில் வீரமும் அரசு கொற்றமும் கொடி வீசி வானளாவிப் பறந்தன. சோழநாட்டின் வடபுலம்

தமிழ்நாட்டின் அரணாகத் திகழ்ந்தது. பிறகு காடுகள் அழிக்கப்பட்டன. நாடுகள் மலர்ந்தன. ஆனாலும், பாதுகாப்புக்கு யாதொரு பங்கமும் நேரவில்லை.

இயற்கை அரணுக்கு நிகராக - அதைவிட உயர்வாக பல்லவர்களின் (படையாட்சிகளின்) போர்ப்பயிற்சியும், ஊக்கமும், காத்திரமும் சேர்ந்து தமிழகத்துக்கு மிக்க பாதுகாப்புக் கொடுத்தன.

பாலாற்றங்கரையில் உள்ள காஞ்சிபுரம் பல்லவர்களின் தலைநகரம். மாமல்லை (மகாபலிபுரம்) பல்லவர்களின் கடற்படைத்தளம், துறைமுகமுங்கூட கடலூார், புதுவை, மயிலை, திருவல்லிக்கேணி, திருவொற்றியூர், முதலிய கடற்கரை நகரங்களும் திருத்தணிகை, திருவண்ணாமலை, திருக்கோவலூார், திருநாவலூார், மதுராந்தகம், விழுப்புரம் போன்ற செல்வமும் பண்பாடும் மிக்க திரு நகரங்களும் பல சிற்றூர்களும் பே ரூர்களும் சேர்ந்து தொண்டை மண்டலத்தை உன்னதமான நாடாக உயர்த்தியது.

கலை, இலக்கியம், பண்பாடு, ஒழுக்கம், சமயவழிபாடு எல்லாம் சேர்ந்த சான்றாண்மை மிக்க ஆன்றோர்கள் தொண்டை மண்டலத்தில் தொடர்ந்திருந்து அலங்கரித்தார்கள். அதனால், 'தொண்டைநாடு சான்றோர் உடைத்து' எனப் புகழ்ந்து பாராட்டப்பட்டது.

பாலாற்றங்கரையில் அமைந்த நகரம் காஞ்சி. (காஞ்சி என்பதும் ஒரு வகைத் தாவரந்தான்) தொண்டை மண்டலம் உடம்பு என்றால், காஞ்சி மாநகரம் உயிர். அத்தனை பண்புகளுடன் ஒளிர்ந்தது காஞ்சி மாநகர்,

தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் சான்றோர்களை வைத்துத்தான் உலகம் வாழ்கிறது. சான்றோர் இல்லை என்றால்

உலகின் கதி அதோகதிதான். இப்படி அழுத்தந்திருத்தமாக தீர்ப்பு வழங்கினார் இளம்பெருவழுதி என்னும் சங்ககால பாண்டியர் குலக்கவிஞர்,

காஞ்சி மாநகரமோ சான்றோர்கள் நிறைந்த நகரம். அப்படியானால் உலகின் கதிக்கு ஆதாரம் காஞ்சி மாநகரமே. இந்த கருத்து ஒரு வெண்பாவில் எப்படி வருகிறது என்று பாருங்கள்.

ஒரு பெண் குழந்தை தினந்தோறும் பாலாற்றின் உள் பகுத்துப்போய் ஒரு திரடின் பக்கத்தில் குளிப்பாள். பிறகு திட்டின் மேல் வந்து மணலைச் சிவலிங்கமாக குவித்து வழிபடுவாள். பிறகு குடத்தில் நீர் எடுத்து வீடு வருவாள். ஆற்றங்கரையில் பூசைப்பெட்டியோடு மணியாட்டி வழிபட்ட தடபுடலான சாமியார்கள் பெண் குழந்தையின் செயலை மதிக்கவில்லை. மிகச்சாதாரணம் என்று அதை ஒதுக்கினார்கள்.

ஒருநாள் திடுதிப்பென்று மழை. ஆற்றில் வெள்ளம். படித்துறையில் ஏறி ஆரவாரித்தது வெள்ளம். சாமியார்கள் மணி, பூசைப்பெட்டி எல்லாவற்றையும் போட்டுவிட்டு ஓட ஆரம்பித்து விட்டார்கள்.

வெள்ளம் சூழச் சூழ மணல் குவியலை இறுகப் பிடித்தாள் பெண். சிவபெருமான் மனம் குழைந்து விட்டார். பெண்ணின் முழங்கால் அளவுக்குமேல் அந்த இடத்தில் மட்டும் வெள்ளம் ஏறாமல் பார்த்துக் கொண்டார்.

பக்தி என்றால் இந்தப் பெண்ணின் பக்திதான் பக்தி. இந்த உண்மையான பக்திதான் உலகுக்கு ஒரு ஆதாரம்.

இனி காஞ்சி மாநகரில் கோயில்கள் ஏராளம். ஒவ்வொரு கோவிலிலும், ஏராளமான விளக்குகள். அத்தனை

விளக்குகளும் தொடர்ந்து ஒளிரும் விளக்குகள். அவ்வளவுக்கும் தேவையான நெய்யை சுற்று வட்டார மக்கள் ஏழை, எளிய மக்கள் முறை தவறாமல் கொடுத்து வந்தார்கள்.

இதுவும் ஒரு அற்புதமான பக்திதான்.

காஞ்சியில் எப்பொழுதும், திருவிழாக்கள் நடந்த வண்ணமாக இருக்கும். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள். அத்தனை கூட்டத்துக்கும் விருந்து நடக்கும். ஒவ்வொருவரும் சிலவிருந்தினர்களைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துப் போய் உபசரிப்பார்கள். மிக்கமரியாதையோடு உபசரிப்பார்கள்.

இதுவும் ஒரு அற்புதமான பக்திதான். காஞ்சியும் அதைச் சுற்றிஉள்ள பகுதியும் நிலவளமும் நீர் வளமும் செழித் திருந்தன. அது காரணமாக மக்களின் மனவளம் மேலும் மேலும் செழித்தது.

மனவளம் பெருகப் பெருக உலகுக்கு நிம்மதிதானே! சிக்கல் ஏது பிறகு?

இனி பாடல்.

பூண்தாங்கு கொங்கை
பொாரவே குழை பொருப்பும்,
தூண்டாத தெய்வச்
சுடர்விளக்கும் - நாண்தாங்கு
வண்மைசால் சான்றவரும்
காஞ்சி வளம்பதியும்
உண்மையால் உண்டிவ்
உலகு

பூண்தாங்கு கொங்கை - ஆபரணம் பூண்ட மார்பு; பொர குழை பொருப்பு- வெள்ளம் குலைத்துவிடக்கூடாதே என்னும் ஆத்திரத்தில் மணல் குவியலை அணைத்து இறுக்கினாள் பெண். அவள் பிடி இறுக, இறுக பெருமாள் உள்ளம் குழைந்தார்.

தூண்டரூத... விளக்கு- அணையாவிளக்கு -நெய்விளக்குகள், நாண்தாங்கு வண்மை - கூசிக் கூசி அழைப்பார்களாம் விருந்தினரை. அத்தனை எளிமை, அடக்கம், பணிவு, உபசரிப்பதில்! உண்மையால் - இருப்பதால்தான், உலகு உண்டு- உலகம் நிலைபெற்று நிற்கிறது.

இத்தனை சீரும் சிறப்பும் மிக்க தொண்டை வளநாட்டை பல்லவர்களுக்குப் பின் பிற்காலச் சோழர்கள் (ராஜராஜ சோழன் முதல்) கைப்பற்றி ஆண்டார்கள்.

அவர்கள் காலத்திலும், தொண்டை வளநாடு வான்புகழ் பெருக வாழ்ந்தது. வீரம், கொடை, செல்வம், ஞானம், எல்லாத்துறைகளிலும் சிறந்தோங்கித் திகழ்ந்தது தொண்டைநாடு.

அதன்பிறகு அதாவது பிற்காலச் சோழர் ஆட்சி முடிந்தபின் ஆறு நூறு ஏழு நூறு வருடங்களுக்கு முன் வாணர் குடியைச் சேர்ந்த மாவீரன் ஒருவன் தொண்டை மண்டலத்தை ஆண்டான், அவனுக்கு ஏகம்பன் என்று பெயர். செங்கல்பட்டின் கிழக்கில் உள்ள ஆற்றூர்தான் அவன் தலைநகரம்.

ஏகம்பவாணன் பயிற்சி பெற்ற வலுவான ராணுவத்தை வைத்திருந்தான். மேலும் குறுகிய மன்னர்களாய் (ஜமீன்தார்கள் போல்) ஆங்காங்கு அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்த சோழ

பாண்டியச் சிற்றரசர்கள்- ஏன் கொங்கு (சேர) நாட்டைச் சேர்ந்த பல சிற்றரசர்கள் எல்லோருமே எப்பொழுதும் வாணன் தயவையே எதிர்பார்த்து வாழ்ந்தனர்.

சிற்றரசர்களுக்குள் ஏற்படும் தகராறுகள், மனவேறுபாடுகள், வழக்குகள் அவ்வளவும் வாணனிடமே வரும். வாணன் வழங்கும் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டார்கள் அவர்கள்.

அரசர்களுக்கு வருமானம் எவ்வளவு இருந்தாலும் அடிக்கடி பற்றாக்குறை ஏற்படும். அவர்களுக்குப் பணம் தட்டுப்பாடு ஏற்படுகிற வேளையில் வாணன் அவர்களுக்குக் கொடுத்து உதவினான்.

தொண்டை மண்டலத்துக்கு வடக்கே இருந்த நாடுகள் பலவற்றில் முரடர் கூட்டம் அதிகம். அவர்கள் கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்து கொள்ளை அடிப்பதையே பிழைப்பாகக் கொண்டிருந்தார்கள். இந்தக் கொள்ளைக்கூட்டங்கள் ஒருபுறம். இன்னொருபுறமோ வடதேசத்து அரசர்களில் சிலர் கொள்ளைக்காரர்களாக இருந்தார்கள். அவர்களைத் தென்னாட்டுக்குள் வரவிடாமல் தடுத்து நிறுத்தியது வாணனுடைய படைதான்.

மன்னாதி மன்னர்கள் என்று போற்றப்பட்ட சேர, சோழ பாண்டியர் சிதறி வலுவிழந்தது ஒரு அதிசயந்தான். ஏகம் பவாணன் என்னும் மாவீரன், சேர, சோழ, பாண்டியர்போல் பரம்பரை அரசன் இல்லை. பெரிய பண்ணையார்தான் ஏகம்பவாணன். ஆனாலும் ஒழுக்கம், ஊக்கம், பண்பாடு, கலை உணர்வு, கொடை, கட்டுப்பாடு ஆகிய அருங்குணங்களால் அரசர்க்கரசனாய் வாழ்ந்துவந்தான். அது பெரிய அதிசயம். எல்லாவற்றையும் விட அதிசயம். அதிசயத்திலும் அதிசயம் ஒன்றுண்டு. அதுஎன்ன? சேர, சோழ, பாண்டியர்களுக்

கெல்லாம் வாழ்வளிக்கும் வள்ளலாகத் திகழ்ந்த ஏகம்பவாணன்- மன்னர். மன்னனாய்ப் பெருவாழ்வு வாழ்ந்த மாவீரன் எளிமையும், இனிமையும் நிறைந்தவன். அகம்பாவமோ செருக்கோ இல்லாதவன். நினைத்த நேரம் எல்லாம் வயலுக்குப்போவான். உழவர்களுடன் உறவாடு வான். உழவுத் துறையின் பல்வேறு காரியங்களை மிக்க ஈடுபாட்டோடு செய்வான்.

களை எடுக்கிறவர்கள் கண்ணில் படாமல் தப்பிய ஒன்றிரண்டு களையை குனிந்து பறிப்பான். சூடு அடிப்பவர்கள் சரியாக அடிக்காமல் போடும் முடியை எடுத்து இவனே அடித்து விழும் நெல்லைக் காட்டுவான்.

அருமைக்கு அருமையானவன்தான் ஏகம்பவாணன். ஆனாலும், அவன் எளியவர்களைக் கைவிடவில்லை. அவன் அவர்களின் உற்ற துணைவன் என்பதை உலகிற்கு காட்டினான். அப்படி ஒரு எளிமை, அப்படியொரு அடக்கம்.

இந்த அரிய பண்பாட்டை அனுபவித்து ஆனந்தத்தில் திளைத்திருக்கிறார் கவிஞர் ஒருவர்.

அவர் உள்ளத்தில் ஒரு நாடகம் உதிக்கிறது. சேர, சோழ, பாண்டியர்கள் வாண பூபதியைத் தேடி வருகிறார்கள். அரண்மனையில் விசாரிக்கிறார்கள். வாண மகாராஜா வயலுக்குப் போயிருக்கிறார் என்று வருகிறது பதில்.

'வயலுக்கா! வயலில் போய் (நாற்று) முடி நடப்போயிருக்கிறாரா' என்று இளக்காரமாகச் சொல்லிவிட்டார் ஒருவர்.

''ஆம், முடி நடத்தான் போயிருக்கிறார். சேர, சோழ, பாண்டியர்களின் (பொன் முடித்தரித்த) திருமுடிகளைத்

*திருகிப் பறித்து போர்க்களமாகிய வயலில் நடப்போயிருக்கிறார் மன்னர்'' என்று சூடாக விழுந்தது சொல்.*

*இப்படி ஒரு பகல்கனவு கண்டு அனுபவிக்கிறார் புலவர் பெருமான். பகல்கனவு நாடக பாவத்தோடு உருவெடுக்கிறது வெண்பாவில்.*

*எப்படி*

| | |
|---|---|
| சேனை | தழையாக்கி |
| செங்குருதி | நீர்தேக்கி |
| ஆனை | மிதித்த |
| அடிச்சேற்றில் - | மானபரன் |
| மாவேந்தர் | வேந்தன் |
| வாணன் | பறித்துநட்டான் |
| மூவேந்தர் | தங்கள் |
| முடி! | |

*தழை - தழை உரம். எதிரிகளின் படைகளை தொம்சம் பண்ணி உரமாக்கிவிடுகிறான் வாணன். செங்குருதி - இரத்தம். ஆனை மிதித்த அடிச்சேறு -நடுகைக்கு முள் வயலில் நீர்பாய்ச்சி குழைகளைக் கொட்டி மிதிப்பார்கள். இதற்கு தொழிமிதி என்று பெயர். யானைகளை கொண்டு எதிரிகளின் சேனையைத் தொழுமிதி மிதிக்க விட்டான் வாணன். மானபரன் - வீரத்தின் இருப்பிடமாகத் திகழ்கிறவன்.*

*உண்மையான உணர்ச்சி விம்மிப்புடைத்து உருவம் எடுக்கிறது. எதுகை மோனை முதலிய தமிழ் உறுப்புகளுடன் கலந்து அபிநயம் பிடிக்கிறது. அருமையான கவி. தமிழின் அற்புத சக்தியை எடுத்துக் காட்டும் கவி.*

வாணனுடைய அரண்மனைக்காரர்களின் பதிலைக் கேட்டு வெட்கப்பட்டுப் போனார்கள் மூன்று அரசர்களும். அங்கு இருக்க இடம் கொடுக்கவில்லை மனம். அப்படியே வாணன் போயிருக்கும் வயலை நோக்கி நடந்து வந்தார்கள் அரசர்கள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை அதற்கு அப்பாலுமே எல்லா வயல்களும் அந்த வட்டாரம் முழுவதுமே வாணனுடைய பண்ணைதான்.

வரப்புகளையும் வாய்க்கால்களையும் கடந்து நடந்து வருகிறார்கள். மூவேந்தர்கள் பண்ணை வேலைகளை முடித்துவிட்டு வாணன் அரண்மனைக்கு வருகிறான். வரும் வழியில் நெல் (மணி)கள் அங்கங்கே சிந்திக் கிடக்கின்றன. அவற்றைக் குனிந்து பொறுக்குகிறான் வாணன். பொறுக்கிய நெல் (மணி)களை மடியில் போடுகிறான்.

இதைப் பார்த்துக் கொண்டார்கள் வேந்தர்கள் மூவரும். நேருக்கு நேர் சந்தித்தவுடன் முதல் கேள்வியாக' என்ன, வழியில் நவரத்தினங்கள் சிந்திக்கிடந்தனவா? என்று வாணனிடம் கிண்டலாகவே கேட்டார்கள்.

'ஆம்' என்று பதில் சொல்லிவிட்டு அவர்களை அரண்மனைக்கு அழைத்து வந்தான். மூவேந்தர்களையும் உபசரித்து தன்னுடன் சாப்பிட வேண்டும் என வேண்டினான்.

நான்கு இலைகள்-தலை வாழை இலைகள் போடப்பட்டன. வாணனுடைய இலையில் மட்டும் அவியல், பொரியல், கூட்டு, பச்சடி, சாதம், பருப்பு, நெய், குழம்பு, நெய், ரசம், அப்பளம் தொடர்ந்துவந்தன. மூவேந்தர்களின் இலைகளிலோ வைரம், வைடூர்யம், பச்சை, சிவப்பு, பவளம், முத்து என்று பரிமாறப்பட்டன.

ஒருவரை ஒருவர் பார்த்து மூவேந்தர்களும் திகைத்தார்கள். அப்பொழுது வாணமகாராஜன் சொன்னான்.

நான் சாதாரண விவசாயி, நெல்லும், அரசியுந்தான் எனக்கு உயிர். நீங்கள் மூவேந்தர் குலம். உங்களுக்கு நவரத்தினங்கள்தான் உயிர். அதனால் உங்களுக்கு ரத்தினங்களையே பரிமாறுகிறார்கள். முறைப்படிதானே பரிமாறப்படுகின்றன?

பேயறை பட்டவர்கள் போல் திருதிருவென்று விழித்தார்கள் மன்னர்கள். மன்னிக்கும்படி வேண்டினார்கள்.

என்ன இருந்தாலும் விருந்தினர்கள் ஆயிற்றே அவர்கள் இலைகளிலும் உணவு வகைகள் பரிமாறப்பட்டன.

இப்படி ஒரு கதை. எல்லாம் வாணனுடைய பண்புகளையும் செயல்களையும் அனுபவித்த அனுபவத்திலிருந்து உண்டான நாடகங்கள்தான்.

பணபலம், படைபலம் இரண்டும்தான் பலம். இந்த இரண்டும் எங்கிருக்கிறதோ அங்கு அதிகாரம் பலமாக இருக்கும். அதுமற்றவர்களுக்கு அச்சத்தை உண்டாக்கும். உள்ளுக்குள்ளேயே உருவாகி வளர்கிற பயமானது புகழாகவும் மரியாதையாகவும், பணிவாகவும் வெளிப்பட்ட வண்ணமாக இருக்கும்.

கவிஞர்கள் இந்த விநோதமான போக்கை அனுபவிப்பார்கள். அனுபவம் அழுத்த அழுத்த நாடகப் பாங்குகள் உண்டாகும் பகல் கனவுகண்டு அந்தக் காட்சிகளை அனுபவிப்பார்கள் கவிஞர்கள். மற்றவர்கள் அனுபவிக்க கவியாக விளைந்து இடம் கொடுப்பார்கள்.

கவிஞரின் கனவும் காட்சியும் தமிழோடு சேர்ந்து எப்படிப் பேசுகிறது என்று பாருங்கள்.

அவன் அள்ளிக் கொடுக்கும் கொடைக்கு அளவு கிடையாதாம். வாங்குகிறவர்களின் தேவை எவ்வளவோ

*அவ்வளவுக்குப் போகும் அளவு. எட்டுத் திக்குகளின் மூலைகளிலும் அவன் ராணுவம் நிற்கும்.*

*இனிப்பாடல்.*

**வாணன் புகழ்க்கெல்லை**
**வாழ்த்துவோர் நா(வு)எல்லை,**
**வாணன் புவிக் கெல்லை**
**மண்ணெல்லை -வாணன்**
**படைக்கெல்லை திக்கெல்லை**
**பைந்தமிழ் தேர் வாணன்**
**கொடைக்கெல்லை ஏற்பவர்தம்**
**கோள்.**

*இன்னும் எப்படி அந்தக் காட்சி படலம் படலமாய் விரிகிறதென்று பாருங்கள்.*

*நாளாவிதமான மக்களுக்கும், ஆண், பெண், இளைஞர், முதியவர் எல்லோருக்குமே லட்சிய புருஷன் வாணன்தான். எதைப் பற்றி யோசித்தாலும் எதைப் பற்றிப் பேசினாலும் வாணனோடு சேர்ந்தே வருகிறது.*

*வாணனுடைய பெயரை-ஏன் உருவத்தையே மார்பிலும் தோளிலும் வரைந்து கொள்வதில் மக்களிடம் ஒரு வேகம். மக்கள்தான் இப்படி என்றால் அரசர்கள் எல்லோருமே போட்டி போட்டுக் கொண்டு வாணன்தான் எங்களுக்கு நாயகன்-சக்கரவர்த்தி என்று கப்பம் கட்டுகிறார்கள்.*

*இனிப்பாடல்*

வாணன் பெயர் எழுதா
மார்புண்டோ, மாகதர்கோள்
வாணன் புகழ் உரையா
வாயுண்டோ -வாணன்
கொடி தாங்கி நில்லாத
கொம்புண்டோ, உண்டோ
அடிதாங்கி நில்லா
அரசு''

*மாகதர்கோள்-ஏகம்பவாணன் அரசாண்ட தொண்டை நாட்டுக்கு மகதநாடு என்று ஒருபட்டப் பெயர். கொடி தாங்கி நில்லாத கொம்பு உண்டோ-நாட்டில் உள்ள எல்லா மரங்களிலும் எல்லாக் கொம்புகளிலும் வாணனுடைய கொடியைக் கட்டிப் பறக்கவிடுகிறார்கள் மக்கள். அடிதாங்கி நில்லா அரசு உண்டோ?-வாணனுக்கு நாங்கள் அடிமை என்று பிரகடனம் செய்யாத ராஜ்யமே இல்லை*

*இனிவேறொரு பாடல்.*

*உண்மை உணர்ச்சியோடு கற்பனை சேர்ந்துவிட்டால் நாடகம்-பகல்கனவு விரிந்து பரந்து வட்டம் போட்ட வண்ணமாகவே இருக்கும். விண்ணுக்கும் மண்ணுக்கும் அது சிறகடித்துப் பறக்கும்.*

*வீரதீரம் மிக்க அரசர்கள் பலர். அவர்கள் தேவிமார்கள் தாம் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளைப் பார்த்துப் பார்த்துப் புளகாங்கிதம் அடைகிறார்கள். கையும் காலும் மூக்கும் விழியும் கடைந்தெடுத்த சிற்பம் போல வாய்ப்பாய் அமைந்திருப்பதைப் பார்த்துப் பரவசப்படுகிறார்கள்.*

*குழந்தைகளின் மார்பு அகலமாக இருப்பதைப் பார்த்து உண்டாகிற ஆனந்தத்திற்கோ அளவே இல்லை. ஏன்?*

*வாணனுடைய சொந்தப் பெயர், பட்டப் பெயர், பாராட்டுப் பெயர் எல்லாவற்றையும் சேர்த்து எழுத இடம் கிடைத்துவிட்டதே என்கிற எக்களிப்புத்தான் காரணம்.*

| | |
|---|---|
| பேரரசர் | தேவிமார் |
| பெற்ற | மதலையர்தம் |
| மார்பகலம் | கண்டு |
| மகிழ்வரால் | -போர்புரிய |
| வல்லான் | அகளங்கன் |
| வாணன் | திருப்பெயர்கள் |
| எல்லாம் | எழுதலாம் |
| என்று. | |

*இனி வேறொரு பாடல்.*

*வானில் பெரிய இரைச்சல் ஒன்று. எட்டு திகைளிலும் முட்டி மோதுகிறது சத்தம். முற்றத்துக்கு வருகிறோம். அண்ணாந்து பார்க்கிறோம். விமானம் கண்ணுக்குத் தெரியவிலலை. மேற்குத் திசையை அண்ணாந்து பார்க்கிறோம். கிழக்கிலிருந்து வருவது போல இருக்கிறது. அப்படியே கிழக்குத் திசையைப் பார்க்கிறோம். தெற்கிலிருந்து வருவது போல் இருக்கிறது.*

*ஏரோப்பிளேன் சம்பந்தமாக எல்லோருக்குமே அடிக் கடி ஏற்படுகிற அனுபவம் இது.*

*இனி வாணனுடைய் அரண்மனை முற்றத்தில் உயரமான மேடை - மணிக்கூண்டு மாதிரி மிக உயரமான மேடை. அதன் மேல் தளத்தில் பிர்மாண்டமான முரச வாத்தியம். வலுவான மல்லர்கள் சிலர் டம், டம் என்று மாறி மாறி முரசை அறைகிறார்கள். அதன் ஒலி வானில் அலை அலையாய்ப் பாய்கிறது. நாலாதிசைகளிலும் தாவித் தாவிப் பாய்கிறது.*

ஓசையின் கனம், அதை எழுப்பும் இடத்தின் உயரம் இவற்றைப் பொறுத்து வான வெளியில் வேகமாகப் பரவுகிறது இரைச்சல் எங்கிருந்து வருகிறது என்று அதன் திசையை காணமுடியவில்லை. ஆளுக்கொரு திசையைச் சொல் கிறார்கள்.

குடகர்
என்பர்
இடகர்
என்பர்
தென்கடலோ
திருந்துதார்
முன்கடை
முரசு.

குணகடலோ
குடகுக்கு
வடகடலோ
- வடகடலோர்
என்பர்
அச்சுத! நின்
நின்(று) ஆர்க்கும்

குடகர்-மேற்குத்திசையைச் சேர்ந்தவர்கள். குணகடலோ என்பர் - கீழ்கடல்தான் பொங்கிக் கரை கடந்து விட்டதோ என்று நினைக்கிறார்கள். குடகுக்கு இடகர் - மேற்கு முகமாக முகத்தை வைக்கிற பொழுது இடதுகைப் பக்கம் தெற்கு. தெற்குத்திசையில் உள்ளவர்கள் வடகடலின் ஆர்ப்பரிப்போ என்று யோசிக்கிறார்கள். அச்சுதன் - வண்டிக்கு அச்சுப் போல நாட்டைத் தாங்கிப் பாதுகாப்பவன். முன்கடை-அரண்மனை முற்றம்.

உலகின் நாலாதிசைகளிலும் கடல் முட்டுகிற வரை பரந்து கிடக்கிறது. வாணனுடைய ராஜ்யம். இந்த உண்மை யானது உணர்ச்சிமயமாகிப் பாடலாய்ப் பொங்குகிறது.

இனிவேறொரு பாடல்.

நாட்டைப் பாதுகாப்பதால் அச்சுதன் என்று பெயர். பாதுகாக்கும் நிர்வாக இயலில் மஞ்சாடி கூடத் தவறோ

*பிழையோ ஏற்படாது. அப்படிக் கண்ணும் கருத்துமாய்ச் செயல்படுகிறவன் வாணன். அதனால் அகளங்கன் என்று பெயர். கள்ள கபடம் இல்லாதவன் அகளங்கன்.*

*வாணனுடைய அரண்மனையில் அடிக்கடி பிறந்தநாள் விழா வரும். மகிழ்ச்சியான அந்த நன்நாளில் சிறைபிடிக்கப்பட்ட அரசர்களுக்கு விடுதலை கிடைக்கும். சிறைவைக்கப்பட்ட அரசர்களின் கால் விலங்குகளை உளி வைத்து வெட்டித் தறிப்பார்கள். அப்பொழுது உண்டாகும் ஒலி, முரச வாத்தியத்தின் ஒலியையே அடக்கிவிடுமாம்.*

*இனிப்பாடல்*

அரசன் அகளங்கன்
அச்சுதன் முற்றத்(து)
அரசர் அவதரித்த
அந்நாள்- முரசதிரக்
கொட்டும் ஒலிதனினும்
கோவேந்தர் கால் தளையை
வெட்டும் ஒலியே
மிகும்.

*பூமியில் வாழும் அரசர்கள் யாராக இருந்தாலும் சரி, ஏகம்ப வாணனுடைய தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்படி இல்லை என்றால் - குறும்பு பண்ணினால் அவர்கள் தொலைந்தார்கள். வளமான அவர்கள் நாடு கட்டமண்ணும் குட்டியச் சுவருமாய்ப் போய்விடும்.*

*பாடல்.*

தீய்ந்து பொழில் ஆகா,
சிந்தி நகர்ஆகா,
தூர்ந்து மணிநீர்த்
துணையாகா, - ஏந்துபயிர்
பேணாகா, மாரி
பெயல்ஆகா பொன்நடுந்தேர்
வாணாகா என்னாதார்
மண்.

வாணா-வாணமகாராஜனே. கா-நாங்கள் உன் அடைக்கலம். எங்களைப் காப்பாற்ற வேண்டும். என்னாதார் மண்-என்று ஒப்புக் கொள்ளாதவர்களின் நாடு சின்னாபின்ன மாகி விடும். வாணனுடைய படைகள் ஏரிகள், அணைகள் எல்லாவற்றையும் அழித்துவிடும். அதனால் மழையும் போய் விடும். நீர்வளம் போனால் நிலவளம் ஏது? பயிர் பச்சை எது?

பொழில்-சோலை. தீய்ந்து கருகிவிடும். தூர்ந்து-தூர்வை சேர்ந்து மேடாகிவிடும். ஏரியின் மடுவையே மூடிவிடும் தூர்வை. பேணாகா-விளைச்சல் இருக்காது. பிறகு மேனி ஏது?

வாணனுடைய தயவு இல்லை என்றால் அரசர்களுக்கு வாழ்வு இல்லை என்கிற விசயம் நாடக உருவெடுத்து வருகிறது தமிழில்.

புத்திகெட்டு வாணனிடம் திமிறியவர்கள் நாடு இழந்து அரசபோகம் இழந்து ஓடி ஒளிந்தார்கள். பிறகு புத்திதெளிந்து வாணனுடைய காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கிறார்கள்.

ஏகம்பவாணனும் அவர்களை மன்னித்து அவர்களிடம் பறித்து உடைமைகளை எல்லாம் பெற்றுக் கொள்ளும்படி உத்திரவு போட்டுவிடுகிறான்.

ஆவலோடு வருகிறார்கள் அரசர்கள் கொட்டிலுக்குள். தங்கள் உடைமைகளை அடையாளம் கண்டு துள்ளிக் குதிக்கிறார்கள்.

எப்படி

அதுவும் ஒரு அற்புதமான நாடக உருவெடுத்தே வருகிறது. ஏகம்பவாணனுடைய வெற்றியையும் கொடையையும், தாராளத்தையும், ஊக்கத்தையும் பல துறைகளில் வைத்துக்கு கவிவாணர்கள் பாடல் இசைத்தார்கள். பாவாணர்களுக்குப் பரிசில் வணங்கினான் வாணன். யானை, குதிரை, தேர், குடை, பல்லக்கு என்று விதவிதமாக வழங்கினான். பொன்மூட்டைகளுடன் இவைகளைப் பெற்றுக்கொண்டு புலவர்கள் வருகிறார்கள் .

புலவர்களின் தோரணையைப் பார்த்த அரசர்கள்

| | |
|---|---|
| என்கவிகை | என்சிவிகை |
| என்துவசம் | என்கவசம் |
| என்கரி ஈ(து) | என்பரி ஈ(து) |
| என்பரால் | - மன்கவன |
| மாவேந்தன் | வாணன் |
| வரிசைப் | பரிசுப்பெற்ற |
| பாவேந்தரை | வேந்தர் |
| பார்த்து | (என் கவிகை) |

என் கவிகை - இது என்னுடைய வெண் கொற்றக் குடை சிவிகை - முத்துப்பல்லக்கு. துவசம், கொடி, கவசம்-பாதுகாப்பு வளையம். கரி-யானை, பரி-குதிரை, மன்கவனமா வேந்தன் - நண்பர்களோ, வீரோதிகளோ அரசர் என்றால் அவர் மேல் எப்பொழுதும் கவனமாய் இருப்பான் வாணன். பரிசு பெற்ற பாவேந்தரை-வாணனிடம் பரிசில் பெற்றுப் போகும் புலவர்களைப் பார்த்த வேந்தர் - அரசர்கள் ஐயையோ இது

என்னுடைய குடை ஆயிற்றே. இது என் பல்லக்கு ஆயிற்றே என்று அலறுவார்களாம்.

வாணமகாராஜன் எதிரிகளுக்கு எமன்தான். நண்பர்களுக்கு குபேரன் மாதிரி. கல்விமான்கள், அறிஞர்கள், புலவர்கள் என்றால் அவனுக்கு உயிர். அவர்களுடைய கலைப்பண்ணு நிலைபெறவும் வளரவும் சகல ஆதரவும் கொடுப்பான் வாணன்.

'கற்றோர் திறன் தாங்கும்' அறிஞர்களைப் எப்படி மதித்தானோ அப்படித்தான் நாட்டை அதாவது நாட்டு மக்களின் பிரச்சனகளைத் தீர்த்து அவர்களுக்கு நிம்மதியான வாழ்வு கொடுத்தான். அதற்காக அறத்தையும் ஒழுக்கத்தையும் கண்ணுக்குக் கண்ணாகப் பேணி வளர்த்தான்.

சேர சோழ பாண்டியர்களுக்கு ஆதரவாகத் திகழ்ந்தவன் வாணன். அவனுடைய கொடியில் அடையாளமாக தொண்டைக் கொடி. அதன் நிழலில்தான் (வாணன் தயவில்தான்) திருவாத்திமரம் (சோழன்) பனைமரம் (சேரன்) வேப்பமரம் (பாண்டியன்) வாழ்ந்தன.

இனிப்பாடல்.

வெற்றிபுனை தாதகிக்கும்
வேம்புக்கும் பெண்ணைக்கும்
சுற்றும் பெருநிழலாய்த்
தோன்றுமே -கற்றோர்
திறம்தாங்கும், மன்னு
செகம் தாங்கும் எண்ணில்
அறம் தாங்கும் தொண்டை
அரசு

குறிப்பு:-திருவாத்தி, வேம்பு, பனை, ஆதொண்டை ஆகிய தாவரங்களை வைத்து தமிழ் விளையாடுகிறது.

இனிக் கடைசியாக ஒரு நாடகம்

மகத (தொண்டை) நாட்டு அரசனாகிய ஏகம்பவாணனைப் பாடிப் பரிசில் பெற்றுப் புலவர்கள் போவார்கள். வாணன் தலைநகரமாகிய ஆற்றூரில் புலவர் கூட்டம் தினந்தோறும் வரும் போகும். இது வழக்கம்.

ஒரு புலவர் ஏகம்பவாணனுடைய அருமை பெருமைகளை வைத்து மதுரமான இசையில் நாடகச் சுவை கசிந்து கசிந்து ஊறும்படி பல பாடல்களைப் பாடினார். ஒவ்வொரு பாடலையும் வாண பூபதியின் செவியும் மனமும் குளிரப்பாடி அரங்கேற்றினார்.

கேட்டு மகிழ்ந்த வாணபூபதி புலவருக்கு யானை, குதிரை, தேர், முத்துப்பல்லக்கு, பட்டுக்குடை, பொன்மூட்டைகள் எல்லாம் கொடுத்து வழியனுப்பி வைத்தான்.

இத்தனை பரிவாரங்களோடு ராஜதோரணையில் வருகிறார் புலவர். வழியில் ஒரு ஆலமர நிழலில் தங்கி இளைப்பாறினார்கள்.

அந்த வழியே ஒரு பாணர் தம் சுற்றத்தோடு வந்தார். ''கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி இருக்கிறேதே'' ராஜாவே இங்குவந்து இளைப்பாறுகிறாரே! நம்பாடு யோகந்தான் என்று மகிழ்ந்தார் பாணர்.

பணிவாக வந்தார். திக்விஜயம் செய்து சிற்றரசர்களிடம் கப்பம் (திறை) பெற்று வரும் மகாராஜாவே! தங்கள் தேசம், பெயர் அறிய ஆவல் என்றார்.

*இளைப்பாறும் அரசர் (புலவர்) சொன்னார்.*

*பாணரே வாரும், உட்காரும். நீரும் நாமும் ஒரு கூட்டந்தான். வாணபூபதியிடம் பெற்று வரும் வெகுமதிகள் தாம் இவை. திக்விஜயம் செய்து பெற்றவை அல்ல. வாணபூபதியைப் போய்ப் பாரும். பாடல்களை இசையில் வைத்துப்பாடும். இதுபோல நீரும் பரிசில் பெற்று வரலாம்.*

*ஆறையூரில் அவன் அரண்மனைக்கு விலாசமே தேவையில்லை. சோழ, சேர, பாண்டியர்கள் முற்றத்தில் காத்துக்கிடப்பார்கள். திருவாத்தி மரம், பனைமரம், வேப்பமரம் (எழுதிய கொடிப் படலங்கள்) அங்கு வட்டமடிக்கும். அரசர்கள் ஏறிவந்த அத்தி (யானை) மரங்களும் நிற்கும். இறங்கி நிற்கும். அரச (ராஜாக்கள்) மரங்களும் நிற்கும்! போதாதா அடையாளம்.*

*இனிப்பாடல்*

**தேர் உ ளைப்புரவி**<br>
**வார ணத்தொகுதி**<br>
**திறைகொ ணர்ந்துவரு**<br>
**மன்ன/ நின்**

**தேயம் ஏதுனது**<br>
**நாமம் ஏதுபுகல்;**<br>
**செங்கை யாழ்தடவு**<br>
**பாண ரே!**

**வாரும் ஒத்தகுடி**<br>
**நீரும் நாமும், மக**<br>
**தேச ஆறைநகர்**<br>
**காவ லன்.**

வாண
மகிழ்ந்த
வரிசை
புலவன்

பூப்தி
ளித்தவெகு
பெற்றுவரு
யான்.

நீரும்
பெற்று
ஆகும்.
முன்றில்

இப்பரிசு
மீளவரல்
ஏகும் அவன்
வாய்

நித்திலச்
மாட
நெருங்கு
மருங்கெ

சிகர
மாளிகை
கோபுர
லாம்

ஆரும்
பனையும்
வேம்பும்
அருகி

நிற்கும் உயர்
நிற்கும் வளர்
நிற்கும் அங்(கு)
லே

அரசும்
சைச்சு
அத்தி
யாள

நிற்கும் அர
மந்த சில
நிற்கும்அடை
மே.

*உளைப் புரவி-பிடரிமயிரோடு கூடிய குதிரை-வாரணம்-யானை. திறை-கப்பம். நித்திலச்சிகரம்-முத்துப்பதித்தே கோபுரம். ஆர்-திருவாத்தி அரசு-அரசமரம் (இளவரசர்) அத்தி-அத்திமரம் யானை.*

*இனி அவசரத்தில் யானையை என்பதற்குப் பதில் விலங்கு என்று நினைத்து விலங்கைக் கொண்டுவா என்று சொன்னால் போதும்.*

**அலங்கலணி**
**ஆரையர்கோன்**
**விலங்கு**
**என்றான் -**
**சேரற்கோ,**
**தென்பாண்டி**
**வீரற்கோ**
**விலங்கு"**
**தார்மார்பன்**
**வாணன்**
**கொடுவருக**
**இலங்கிலையீர்!**
**சோழற்கோ,**
**நாடாளும்**
**யார்க்கோ**

*இப்படி எல்லோருமே திகைப்பார்களாம்.*

*அற்புதமான பாடல்கள். தமிழிசையில் பாடல் உண்டா கேட்கிறார்களே அவர்கள் இந்தப் பாடலைப் பாடிப் பார்க்கவேண்டும். மாப்பிள்ளையும் பெண்ணும் போல தமிழு (பாட்டு)ம், இசையும் கைகோர்த்துக் காட்சி கொடுப்பது தெரியும்.*

*நன்றாக அலங்காரம் பண்ணித் தேரேறிவந்து அம்மனும் சாமியும் பக்தர்களைப் பரவசப்படுத்து போலல்லவா பரவசப்படுத்துகின்றன பண்ணும் பாட்டும்.*

*இனி ஒழுக்கமும், பண்பாடும் ஒரு நாட்டில் சிறந்தோங்க வேண்டும் என்றால் விவசாயம் செழிப்பாக இருக்க வேண்டும். அதற்கு நிலவளமும் நீர்வளமும் உயிர். தொழில் துறை வணிகத்துறை தேவை இல்லையா என்று கேட்கலாம். யார் சொன்னது தேவை இல்லை என்று? விவசாயம் செழித்தால் வியாபாரம் பெருகத்தானே செய்யும்? அதுதானாகவே பெருகும். அதை ஒட்டிய தொழில்களும் வளரும். ஆனால்*

விவசாயந்தான் பிரதானமாக இருக்கவேண்டும். விவசாயிகளுக்கு உள்ளடங்கியே வணிகர்களும் தொழில் துறையினரும் நடமாடவேண்டும்.

விவசாயம் சாதாரணம், தொழிலும், வணிகமுமே பிரதானம் என்று வந்துவிட்டால் ஒழுக்கம்தேயும், பண்பாடு கலையும். தொண்டை நாட்டில் விவசாயம் உயர்வாக இருந்தது. எங்கு பார்த்தாலும் செழிப்பு, எல்லோருக்கும் வேலை. எல்லோருக்கும் வாழ வசதி. அதனால் பொய்க்கோ பித்தலாட்டத்துக்கோ தொண்டை நாட்டில் இடமே இல்லை.

கடைசியாக காதல் துறையில் வைத்து ஒரு பாடல்.

இனி மழைக்காலம் வந்துவிட்டால் காதலர்கள் சேர்ந்திருக்கவேண்டும். பிரிந்து வாழ முடியாது. அவசரகாரியமாக நாயகியைப் பிரிந்து நாயகன் சென்றான். மழை ஆரம்பிக்கும் முன் (இரண்டு வார காலத்தில்) வந்து விடுவேன் என்று சொல்லிப் போனான்.

சொன்னபடி அவனால் வரமுடியவில்லை.

நாடக இடம் செஞ்சி மலைவட்டம்.

புகைப்படலத்தை கண்டால் ஐயோ மேகம் திரண்டுவிட்டதே என்று புலம்புகிறான் காதலி. அட பயித்தியமே! அது மேகம் இல்லை. குளித்துவிட்டு கூந்தலின் ஈரம் உலர பெண்கள் போடும் அகில் புகை அது என்று தேற்றுகிறாள் தோழி. பூக்களிலிருந்து விழும் பன்னீர்த் துளியை மழைத்துளி என்று மயங்குகிறாள் காதலி. இல்லை இல்லை அது தேன்துளி என்று விளக்குகிறாள் தோழி.

கடைசியாகச் சொல்கிறாள் தோழி!! இதோ பார் எது எப்படியானாலும் சொன்ன சொல் தவறமாட்டார் நாயகர். மழை ஆரம்பிக்குமுன் வந்து விடுவார். பாவம் நீ அயலிடத்துப்

*பெண். தொண்டை நாட்டார் குணம் எடுத்த எடுப்பில் உனக்கு எப்படித் தெரியும்?*

*இனிப்பாடல்*

நையும் படி என்!
கொற்றந் தை
நம்கோள் செஞ்சி
வரைமீ தே,—

ஐயம் பெறும் நுண்
இடைமட வாய்!
அகிலின் தூபம்
முகில் அன் று,

பெய்யும் துளியோ
மழையன் று
பிரசத் துளியே
பிழையா து;

வையம் பெறினும்
பொய்யுரைக் க
மாட்டார் தொண்டை
நாட்டா ரே.

*நையும்படிஎன் - வருந்தும்படி என்ன நடந்து விட்டது. செஞ்சி - தொண்டை மண்டலத்திலுள்ள செஞ்சிமலை. ஐயம்பெறும் நுண் இடமடவாய் - உண்டா இல்லையா என்று திகைக்க வைக்கும் இடையை உடைய பெண்ணே . முகில் - மேகம். பிரசத்துளி - பன்னீர்த் துளி. வையம் .... நாட்டாரே - ராஜ்யம் கிடைக்கும் என்றாலும் சொன்ன சொல் மாறார் தொண்டை நாட்டார். வாணன் அரசாண்ட இடம் இல்லையா தொண்டை மண்டலம்!*

# 14

## மக்கள் கையில் மருத்துவம்

பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தின் இரும்புத் தூணாக இருந்தவர் வின்ஷ்டன் சர்ச்சில். அவர்வெறும் பிரதம மந்திரி மட்டும் அல்லர். எதிரிகளால் நொறுங்கி விழுந்த செங்கல் துண்டு, சிமிட்டி, இரும்பு கம்பி இவைகளைக் கூட உயிர்பெற்று எழச்செய்யும் நாநலம் மிக்கவர் .வீராவேசத்தோடு அவைகளைச் செயல்பட வைக்கும் மந்திர சக்தி பெற்றவர். கிரேட் பிரிட்டன் என்னும் இங்கிலாந்து தேசத்தையே இரண்டாம் உலகப் போரில் தியாக பூமியாக உருவாக்கிய செம்மலவர்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனின் பிரதமர் சர்ச்சில். பிரதம தளபதி-சேனாதிபதியோ மாண்ட் கோமரி. வீரலட்சுமி பெற்றெடுத்த தவப் புதல்வன் என்றுதான் சொல்லவேண்டும். மாண்ட் கோமரியை. ஜெனரல் மாண்ட் கோமரியிடம் அவ்வளவு வீரம். அவ்வளவு அடக்கம். அவ்வளவு பெருந்தன்மை.

மாண்ட்கோமரியிடம் சர்ச்சில் ஒரு நாள் பேச்சோடு பேச்சாக கீழ்க்கண்டபடி கேட்டார். ''உங்களுக்கு வயது கூடக் கூட உங்களிடமிருந்து முதுமைக்குப் பதில் இளமை பூத்துக்குலுங்குகிறதே காரணம் என்ன? என்று ''நான் புகைபிடிப்பதில்லை. மது அருந்துவதில்லை. புலால்

விஷயத்திலும் சரி, தாம்பத்ய உறவிலும் சரி ஒரு வரைமுறையையும் கட்டுப்பாட்டையும் விரதமாக வைத்துக் கடைப்பிடிக்கிறேன்'' இப்படிப் பதில் சொன்னார் மாண்ட் கோமரி.

பதிலைக் கேட்ட வின்ஸ்டெண்ட் சர்ச்சில் விழுந்து விழுந்து சிரித்தார். சிரித்துக் கொண்டே சொன்னார். ''மிஸ்டர் மாண்ட் கோமரி! நான் விடாமல் தொடர்ந்து புகைக்கிறவன். மதுபானத்தில் முங்கித் திளைக்கிறவன். புலால் இல்லாமல் உண்ணமாட்டேன். பெண் இல்லை என்றால் எனக்குத் தூக்கம் வராது. ஆனாலும் உங்களை விட நான் திடகாத்திரமாகத் தானே இருக்கிறேன்? வாலிப முறுக்கென்ன குறைந்தா இருக்கிறது என்னிடம்? இப்படிப் போட்டார் ஒரே போடாக சர்ச்சில்! என்ன சொல்வார் பதில் அப்பாவி மாண்ட் கோமரி! சர்ச்சில் கூடச் சேர்ந்து ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். விடைபெற்று தப்பித்தோம் பிழைத்தோம் என்று வீட்டுக்கு ஓட்டமாய் ஓடிவந்து விட்டார் மாண்ட்கோமரி.

வின்ஷ்ட்டன் சர்ச்சிலின் வாக்குமூலம் முரட்டுத் தனமாகத் தெரியும். ஆனால் அதில் ஒரு உண்மை இருக்கவே செய்கிறது. அடிப்படையான உண்மை அது.

இதில் தான் சத்து, அதில் தான் சத்து என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதார்த்தத்தை ஒவ்வொரு பக்குவத்தை விடாப்பிடியாகப் பிடித்துத் தொங்குகிறார்கள். அப்படித் தொங்குகிறவர்களில் பலர் சதா நோய்வாய்ப்பட்டு அவதிப்படுகிறார்கள். அப்படித் தொங்காதவர்களில் பலர் நோய்க்கே இடம் கொடுக்காமல் கிழங்கு மாதிரி திடகாத்திரமாகவே இருக்கிறார்கள்.

நெல்லிக்காய்தான் உசத்தி, ஆப்பிள் பழத்தில்தான் சத்து, கரிசிலாங் கண்ணியில்தான் ஆரோக்கியம், வேப்பம்பூதான்

மருந்து, பருப்பும் நெய்யுந்தான் ரத்தவிருத்தி, தேனும் இளநீரும்தான் ரத்த சுத்தி என்றெல்லாம் உறவு கொண்டாடுகிறவர்கள் நடக்கக்கூடச் சீவனற்று அலைகிறார்கள். இவைகளை வாங்க வசதியற்றவர்கள். காளங்கன்று போலத் துள்ளி விளையாடுகிறார்கள்.

தற்காலம் மருத்துவமும் மருத்துவர்களும் வைட்டமின் அட்டவணையையே தயாரித்து வைத்துள்ளார்கள். இன்னின்ன பொருள்களில் இன்னின்ன வைட்டமின்கள் உள்ளன என்றெல்லாம் பாகுபாடு காட்டி வைத்துள்ளனர்.

தாது உப்புகள், உலோகச் சத்துக்கள், உயிர்ச் சத்துக்கள் உள்ள பொருள்களை எல்லாம் குறிப்பிட்டு அளவு காட்டி வைத்துள்ளனர்.

மருத்துவர் சொல்கிறபடியே பதார்த்தங்களையும் மருந்துகளையும் தொடர்ந்து பலர் சாப்பிட்டு வருகிறார்கள். வெறும் பழையதும், நீர் ஆகாரமுமாகச் சாப்பிட்டுக் காலந்தள்ளுகிற கூட்டமும் கோடிக் கணக்கில் இருக்கத்தான் செய்கின்றன.

இலக்கண விதிப்படி உயர்ந்த ஆகாரத்தைச் சாப்பிட்டு முறைப்படி மருந்து சாப்பிடுகிற கூட்டம் ஆரோக்கியமாக இருக்கிறதா? சாதாரணக் கஞ்சியும், கூழும், சோறும், குழம்பும் மட்டும் சாப்பிடுகிற கூட்டம் ஆரோக்கியமாக இருக்கிறதா?

நன்றாகச் சோதித்துப் பாருங்கள். சாதாரணக் கஞ்சியும் கூழும் மோரும் ஊறுகாயும் வைத்தே காலம் தள்ளுகிற கூட்டந்தான் நோய் நொடி இல்லாமல் வாட்ட சாட்டமாக இருக்கிறார்கள்.

பால், தேன், நெய், புஷ்பம், செந்தூரம், ஆப்பிள், பச்சடி, ஆரஞ்சுக் கிச்சடி என்றெல்லாம் வகைவகையாக வைத்துச்

சாப்பிடுகிற கூட்டமோ சதா மருந்தும் கையுமாகவே அலகின்றன.

இந்தக் கூட்டங்களுக்கு (தனியார்) மருத்துவ மனைகள்தாம் கோவில், எம்.டி.ஷ்பெஷலிஷ்ட் என்றெல்லாம் ப்ட்டம் சுற்றிப் பறக்கவிடுகிற மருத்துவர்கள்தாம் கண்கண்ட தெய்வம். கடவுள் கொடுத்த சீதனமாகிய இந்தப் பொன்னான உடம்பை-உயிருக்கு உயிரான செல்வக் ''களஞ்சியத்தை-தனக்கும், மனைவிக்கும், மக்களுக்குமே உரிய வாடாமலரை நான் கவனிக்க மாட்டேன். அதற்கென்று பணம் கொடுத்து (ஆள்) மருத்துவரை வைத்திருக்கிறேன். அவர் பார்த்துக் கொள்வார் என் உடம்பை'' என்று இன்னொருவன் கையில் ஒப்படைக்கலாமா உடம்பை? மருத்துவர் வேண்டாம். மருந்தே வேண்டாம் என்று நாம் சொல்லவில்லை.

ஏதோ எதிர்பாராத விபத்தில் சிக்கிய உடம்பை மற்றவர் பராமரிப்பது இயல்பு. அதற்காக வாழ்நாள் முழுவதும் நோய் நோய் என்று நம் உடம்பை வேறு ஒருவரிடம் ஒப்படைப்பது நேர்மையாகுமா?

நம்மில் சிலர் :- பெயர் பெற்ற சில மருத்துவர்களை என் குடும்ப மருத்துவர் அவர்தான் என்று ஜம்பம் அடிப்பதில் ஒரு எக்களிப்பு!

இனி, பாலில் வெண்ணெயில், தேனில், நெய்யில், கனிகளில், காய்களில், பருப்புகளில், தவசங்களில் சத்து இல்லை என்றோ, அவை நமக்குத் தேவை இல்லை என்றோ நாம் சொல்வதாக யாரும் நினைத்துவிடக் கூடாது.

அட்டவணையில் குறிப்பிட்டபடி அந்தந்தப் பொருள்களில் உயிர்ச்சத்து (வைட்டமின்ஸ்)கள், தாது உப்புகள், உலோகச் சத்துக்கள் நிறைந்திருக்கவே செய்கின்றன.

ஆடாதோடை, வல்லாரை, கரிசிலாங்கண்ணி, பொன்னாங் கண்ணி, துளசி, வேம்பு, தூதுவளை, கண்டங்கத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கருப்பட்டி (பனைவெல்லம்) கீழ்வாய் நெல்லி இவைகளில் எல்லாம் ரத்தத்தையே சுத்தம் பண்ணக்கூடிய ஆற்றல் இருக்கத்தான் செய்கிறது. நோயை விரட்டக்கூடிய பண்பும் இருக்கத்தான் செய்கிறது.

இல்லை என்று சொல்லவில்லை.

செடிகளிலும், கொடிகளிலும் மனிதர்களுக்கு வேண்டிய உணவும் ஆரோக்கியமும் நிறைந்திருப்பது அதிசயந்தான். ஆனால் அதைவிட அதிசயம் மனித உடம்பு. லட்சோபலட்சம் தத்துவங்கள் ஒன்றாய் நின்று ஒன்றை ஒன்று அனுசரித்து சதா செய்படுகிற உணர்ச்சிப் படலம் உடம்பு. வெறும் ஜடம் என்று உடம்பை நினைப்பது அறியாமை. உச்சிமுதல் உள்ளங்கால் வரை ஒவ்வொரு அணுவும் உடம்பில் உயிர்மயம். உயிருக்கு யிரான உணர்ச்சி மயம்.

உணவும், மருந்தும் உடம்புக்காகத்தான். உணவுக்கா கவோ மருந்துக்காகவோ உடம்பு இல்லை. அப்படியானால் உடம்புக்குத் தேவை என்ன? அது எவ்வளவு வேண்டும்? என்பதை ஒவ்வொருவரும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

பார்ப்பதற்கு அத்தனை உடம்புகளும் ஒன்று போலத் தெரியும். ஆனாலும் ஒவ்வொரு உடம்பும் ஒவ்வொருவிதம்.

மனித உள்ளங்கள் எப்படித் தனித்தனிச் சாயல்களில் இயங்குகின்றனவோ, அப்படியே உடம்புகளிலும் தனித் தனியான சாயல்கள் உண்டு.

அதனால் ஒவ்வொரு உடம்புக்கும் தேவை தனித்தனியாக இருக்கும். அளவும் தனித்தனியாக இருக்கும். உயிர்வாழ்வதற்கு ஆகாரம் இன்றியமையாதது. ஆனால்

ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு உணவின் அளவு குறையவே இருக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள் தாம் எழுதிய பாட நூல்கள் ஒன்றில் சாப்பாடு அரை வயறு, தண்ணீர் கால்வயறு, காற்றுப் போய்வர கால்வயறு'' இப்படி இருக்க வேண்டும் என்று எழுதி இருக்கிறார்கள். சின்ன வயதில் அதை நான் படித்தது உண்டு. பின்பற்றியதும் உண்டு ஆனால் வயது ஆக ஆக அனுபவத்தில் என்ன தெரிகிறது என்றால் ஒவ்வொரு மனிதனுக்கும் (அவனவனுடைய வயற்றுக்குத் தக்கபடி) உணவு கால்வயிற்றுக்கு இருந்தால் போதும் அதைவிடக் குறைவாக இருந்தாலும் போதும். தண்ணீர் அரை வயிற்றுக்கு இருக்கவேண்டும். சிறிது கூடினாலும் நல்லதுதான். காற்றுப் போய்வர-அதாவது காலியிடமாக கால்வயிறு இருக்க வேண்டும்.

இப்படி இருந்தால் நோய் தலைகாட்டாது. நோயை வரவழைத்து பிறகு அதனோடு மல்லுக்கட்டி விரட்டுவது சாதாரண காரியம். நோயை ஒட்டவிடாமல் உடம்பை வைத்துக் கொள்வதுதான் பண்பு. அப்படியானால்தான் எப்பொழுதும் கலகலப்பாக இருக்கும் உடம்பு. பறவையின் சிறகுபோல இலேசாக இருக்கும் உடம்பு. சப்பணம் போட்டு உட கார்ந்திருப்பன் எழுந்து நிற்க வேண்டும் என்றால் கைய ஊன்றாமல், காலைத் தேய்க்காமல் கண்ணை மூடி வழிப்பதற்குள் துள்ளி எழுந்து நிற்க வேண்டும். அத்தனைக்கு லகுவாக இருக்கவேண்டும் உடம்பு.

முக்காமல் முனகாமல் பளிச்சென்று எழுந்து நிற்கிற உடம்புதான் எப்பொழுதும் விழிப்போடு இருக்கும். உற்சாகமாகவும் இருக்கும்.

உட்கார்ந்தவன் எழுந்திருக்க முடியாமல் திணறுகிறான். கையை ஊன்றி, காலை நிமிர்த்தி, உடம்பையே திருக்கி, முறுக்கி மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கித்தான் அவனால் எழுந்திருக்க முடிகிறது என்றால் அவன் உடம்பு உடம்பே இல்லை. அது ஒரு குப்பைத் தொட்டி. முனிசிபல் குப்பைத் தொட்டி என்றுதான் அதைச் சொல்ல வேண்டும்.

''பொல்லாப் புழு மலி நோய் புன்குரம்பை'' என்று ஔவையார் குறிப்பிடுகிறாரே அது இத்தகைய உடம்பு(களைத்)தான் (குரம்பை-கூடை, பெட்டி. மலி - நிறைந்த)

திருநெல்வேலி கோவில்பட்டி நெடுஞ்சாலையில் கயத்தாறுக்கும் கோவில் பட்டிக்கும் இடையில் உள்ளது. இடைசிவல் என்னும் ஒரு சிற்றூர். அவ்வூர் நெடுஞ்சாலையில ஒரு சிறு கூரைக் குடிசை. ஐம்பது வருடங்களுக்கு முன் அந்தக் குடிசையில் ஒரு வைத்தியர் இருந்தார். நாட்டு வைத்தியர் அவர். சரியாக எழுதப்படிக்கத் தெரியாது. அவருக்கு. அழுக்கு வேட்டி. அழுக்குப் பனியன். சதா வெற்றிலை போடுவதால் காவி ஏறிய பல்லும் வாயும். எப்பொழுதும் சாராயம் குடிப்பார். பீடியையும் மாறி மாறி இழுப்பார்.

வைத்தியரின் மருத்துவக் குடிசையை ஒட்டி ஒரு இட்லிக் கடையும் இருந்தது. அதனால் வைத்தியரை நோட்டுக்கடை வைத்தியர் என்றே மக்கள் சொல்வார்கள். உருவத்தில்தான் வைத்தியர் அலங்கோலம் என்று நினைக்காதீர்கள். அவர் வாய் திறந்து பேச ஆரம்பித்துவிட்டால் ஒவ்வொரு சொல்லும் அலங்கோலமாக இருக்கும். ஆனால் நோய் இன்னதுதான் என்று ஆளைப்பார்த்த மாத்திரத்திலேயே அவருக்குத் தெரிந்துவிடும். இந்த நோய்க்கு மூலமான விஷம் இன்னதுதான் என்பதும் அவருக்குத் தெரிந்துவிடும். அதனால் ஒரு பொழுது

மருந்திலேயே விஷத்தை முறித்து நோயைக் களைந்தெறிந்து விடுவார். அவர் கொடுக்கும் மூன்று வேளை மருந்தைத்தாண்டி எந்த நோயாலும் தாக்குப்பிடிக்க முடியாது.

என்ன வைத்தியரையா! நோயாளி வந்து இன்னின்ன தொந்தரவு என்று உங்களிடம் சொல்லவில்லை. அவர் கையைப் பிடித்து நீங்கள் நாடி பார்க்கவும் இல்லை. அதற்குள்ளாக ''என்னப்பா! விட்டுவிட்டுக் காய்ச்சல் வருதா? வயிற்று வலியா? மேல் கால் உளைச்சலா? சாப்பாட்டைக் கண்டால் குமட்டுதா? மண்டையடியா? என்று நீங்களே கேட்டுவிடுகிறீர்கள்! வந்த ஆளும் ஆமா ஆமா என்று ஒப்புக் கொள்கிறார்! என்ன அதிசயம் ஐயா இது? விளங்கவில்லையே என்று வியந்து கேட்டால் அதுவும் வேண்டியவர்கள் கேட்டால் சில சமயம் அந்தக் காவிக் கரைவாயைத் திறந்து சொல்வார் வைத்தியர்.

''பய நடந்து வருகிறப்போ அவன் காலை எடுத்துப் பூமியிலே வைக்கிற தினுசுலேயே அவனுக்கு என்ன கோளாறு என்பதுதான் துண்டாத் தெரியுதே! அதுக்கும் மேலே அவன் முகரக் கட்டையிலே (முகக்களையிலே)தான் அவனுக்குள்ள கோளாறை எழுதி ஒட்டி இருக்குதே!

இதுக்கும் மேலே அவன் கையைப் பிடித்துப் பார்த்துத் தெரிய வேண்டியது என்ன இருக்கிறது. நாடி பேசுவதைத்தான் அவன் நடையும் முகமும் பேசுதே! இப்படிச் சொல்லி முடிப்பார் ரோட்டுக்கடை வைத்தியர்.

உட்கார்ந்து ஒருவர் எழுந்து நிற்கிற விதத்தில் மட்டுமல்ல, அவர் பூமியில் காலை எடுத்து வைக்கிற அழுத்தத்தின் மூலமாகவும் அவர் உடல் நிலை இன்னின்ன தினுசு என்பது தெரியும். அவருடைய முகக்களையிலிருந்தும் ஆசாமியின் நிலை என்ன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இனி ஒரு நோயாளியை அழைத்துக் கொண்டு அவனைச் சேர்ந்தவர்கள் வைத்தியரிடம் வருவார்கள். ஐயா, சாமி மகராஜன், நீங்க(ள்)தான் காப்பாத்தணும். நல்லா இருப்பிக சாமி'' என்று நோயாளிக்காகக் கெஞ்சிக் கூத்தாடுவார்கள் வந்தவர்கள்.

கல்லுளி மங்கனாக இருப்பார் வைத்தியர். பிறகு அவர்களுடைய தொந்தரவும் புலம்பலும் பொறுக்க மாட்டாமல் மடித்து வைத்த இரண்டு தாள் பொட்டலங்களை மடியிலிருந்து எடுத்துக் கொடுப்பார். வீட்டுக்கு இவனைக் கூட்டிக் கொண்டு போங்கள். வெற்றிலையில் சூரணத்தை (ஒரு பொட்டலத்தை) தட்டி அதில் தேனைவிட்டுக் குழப்பிக் கொடுங்கள். அப்படி இரண்டு பொழுது சாப்பிடட்டும். பிறகு பார்க்கலாம் என்று அவர்களை அனுப்புவார்.

அவர்கள் போகும்போது அவர்களில் முக்கியமான ஒருவனைச் சைகை காட்டி அழைப்பார். அவனிடம் காதும் காதும் கடித்த மாதிரி ''இந்தாப்பா!'' அவன் பிரியப் பட்டதை வாங்கிக் கொடுங்கள். நெருங்கின சொந்தக் காரங்களுக்கு மட்டும் தெரியப்படுத்துங்கள். மத்தப்படி ஆகிற காரியத்தைக் கவனியுங்கள்'' என்று சொல்லி அனுப்புவார்

அவர்கள் போன பின் அவராக வேவாய் விட்டுச் சொல்வார். ''பயல் முகத்திலே தான் சவக்களை தட்டிவிட்டதே? இனி மருந்தென்ன செய்யப் போகுது?'' என்று வாழ்வு என்ற ஒன்று. மரணம் என்று இன்னொன்று வாழ்வின் ஆரோக்கிய நிலைகள் பலபல. ஒவ்வொன்றையும் உல்லாசமாக எடுத்துக் காட்டும் முகத்தின் உயிர்க்களை அதேபோல மரணத்தின் நோய் நிலைகளும் பலப்பல. அவை ஒவ்வொன்றையும் முகத்தில் கோலம் போட்டுக் காட்டும் சவக்களை. இந்த இரண்டு களைகளும் அவற்றின் சாயல்களும்

ரோட்டுக் கடைவைத்தியருக்குத் தனித்தனியாகத் தெரிந்தன. நம்போன்றவர் கண்களுக்கோ அத்தனையும் ஒன்றுதான்.

மேலை நாட்டு வைத்தியத் துறையில் நிபுணர்களாக விளங்கியவர்கள் பலர். அவர்களில் டாக்டர் குருசாமி முதலியார். ஏ.லட்சுமணசாமி முதலியார் கேப்டன் காந்தி மதிநாதபிள்ளை, டாக்டர் ரங்காச்சாரி போன்றவர்களிடம் ஒரு அருட்சக்தியே இருந்தது.

கருவிகளின் மூலம் நோய்ாளியைப் பரிசோதிக்க மாட்டார்கள். அதென்ன இதென்ன என்று நோயாளியிடம் விசாரிக்கவும் மாட்டார்கள். நோயாளியின் நடை, முகக்களை, பார்வை, அவன் தலையைத் தொங்கப் போடுகிறது. கழுத்தைத் திருப்புகிறது முதலியவைகளை வைத்தே நோயைக் கண்டுகொள்வார்கள். பார்த்த பார்வையிலேயே விபரம் தெரிந்துவிடும் அவர்களுக்கு.

இனி, கழுகுமலை கோவில்பட்டி ஆகிய இரண்டு பேரூர்களுக்கு இடையில் ரோட்டின் மேல் ஒரு நடுத்தரமான ஊர் வாரைப் முட்டி என்பது அதன் பெயர். வானரம்பட்டி என்பது மக்களின் வழக்கு.

வானரம்பட்டியில் ஒரு மருத்துவர். பரம்பரை வைத்தியர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் பெயர் ராமலிங்கம்பிள்ளை.

வைத்தியர் ஐயா என்று சொன்னால் போதும் சுற்று வட்டாரம் முழுவதும் கோவில்பட்டி, கழுகுமலையில் கூட அத்தனை பேர் கண்முன்னும் ராமலிங்கம் பிள்ளை ஒருவரே வந்து நிற்பார்.

ராமலிங்கம்பிள்ளை நல்ல உயரம். உயரத்துக்கு ஏற்றகனம். நிறம் கருப்புத்தான். ஆனாலும் லட்சணமாக

இருப்பார். ராமலிங்கம் பிள்ளை. முகம் அப்படி எப்பொழுதும் சிரித்தமுகம்.

நாலு முழுவேட்டி, மூன்று முழத்துண்டு. துண்டால் மார்பு, முதுகு, வயிறு வரை போர்த்திக் கொள்வார். வேட்டி மடியில் ஒரு சிறுபெட்டி. அது அறை அறையா (கண்கண்ணாக) இருக்கும். ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு டப்பிகள். தகரத்தில் செய்த குமிழ்போன்ற டப்பிகள். அவற்றில் சூரணம், பஷ்பம், செந்தூரம், வீரம், பூரம் முதலிய சகல மருந்துகளும் அடக்கம்.

இந்த உலகத்தில் எத்தனை எத்தனை நோய்கள் உண்டோ, அத்தனையையும் கட்டுப்படுத்திக் குணப்படுத்தி விடும். அந்த மருந்துகள். சம்புடத்தில் (டப்பாக்களில்) உள்ள மருந்தைத் தனியாகவும் கொடுப்பார். இரண்டு மூன்று மருந்துகளைக் கலந்தும் கொடுப்பார். நோயின் அதிகாரம், வேகம் இவைகளை மனதில் கொண்டு கலவையும் அளவும் அமையும்.

பேச்சு மூச்சற்ற மூடு ஜன்னி ஆனாலும் சரி, தொண்டைக் குழியில் கிடந்து மூச்சு திக்கு முக்காடினாலும் சரி, கண்விழி நிலைக்குத்தி பரக்கப் பரக்க விழிக்கிற அந்திம நிலை ஏற்பட்டாலும் சரி வைத்தியர் பார்வையில் நோயாளி விழுந்தால போதும். அவர் மடியைத் திறந்து மருந்தை எடுத்து வெற்றிலையில் வைப்பார். ஒரு சிட்டிகை அளவுதான் இருக்கும். அதில் கொஞ்சம் தேனைவிட்டுக் குழப்புவார்.

நோயாளியின் வாயைப் பிளக்கும்படி ஒரு ஆளுக்குக் கட்டளையிடுவார். வாயை விரித்தவுடன் வெற்றிலையில் உள்ள மருந்தை ஆள் காட்டி விரலால் எடுத்து நோயாளியின் நாக்கில் கடவுவார். அவ்வளவுதான். எமன் மல்லுக்கட்டிப் பிடுங்கிக் கொண்டிருக்கிற உயிரானாலும் சரி, வைத்தியரின்

மருந்து வாடை பட்டவுடன் நிமிர்ந்து நிற்கும். மார்க் கண்டனுக்காக எமனையே சிவபெருமான் மிதித்துத் தள்ளி யதைப் போல வைத்தியர் மருந்து எமனை அடித்து விரட்டிவிடும்.

இப்படிப்பல ஊர்களில் வைத்தியர்கள் இருந்தார்கள். ஊர் ஊருக்கு நடந்து போயே வைத்தியம் செய்துவந்தார்கள்.

மருந்துகள் எல்லாம் நாட்டில் விளைகிற சரக்குள்தான். ஜப்பானிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், சுவிட்சர்லாந்தி லிருந்தும் விமானத்தில் வந்து இறங்குகிற சரக்குகள் இல்லை. சாதாரணமாக க் குப்பை மேட்டிலும், வரப்பிலும் விளைகிற சரக்குகள் அமிர்தமாகச் செயல்பட்டன.

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், இலவங்கம் முதலியவற்றின் பொடிகளும், நெருஞ்சிவேர், கண்டங்கத்திரி வேர், வேம்புப்பட்டை, அறுகம்புல், வாழைத் தண்டு, துளசி இலை, ஆடாதோடை, தூதுவளை, பொன்னாங்கண்ணி, வல்லாரை இவைகளின் சாறு, பொடி முதலியவைகளுமே பெரும்பாலான மருந்துகள்.

ஒரு சமயம் ஒருவன் குளிர் காய்ச்சலில் நடுங்கினான். எத்தனை போர்வைகளைப் போட்டு மூடினாலும் குளிரை அடக்க முடியவில்லை. தூக்கித் தூக்கி எறிந்தது காய்ச்சலும் குளிரும் அவனை. வைத்தியரை வரவழைத்தார்கள். நோயாளியைப் பார்த்தார் வைத்தியர்.

வேப்ப எண்ணை இருக்கிறதா என்று வீட்டிலுள்ளவர்களிடம் கேட்டார் வைத்தியர். இரண்டு மூன்று கரண்டி (ஸ்பூன்) வேப்ப எண்ணெயைக் காய்ச்சும்படிச் சொன்னார் வைத்தியர். பிறகு ஆறவைக்கும்படி சொன்னார். ஆறிவரும் நிலையில் பக்குவமான இளம் சூட்டில்

எண்ணெயை எடுத்து காய்ச்சல் காரனின் மார்பு, முதுகு, கழுத்து, பிடரி, கை, உள்ளங்கால், மூட்டு, இவைகளில் விட்டு நன்றாக அரக்கித் தேய்க்கும்படி சொன்னார். அவ்வளவுதான் அரைமணி நேரத்தில் வேர்த்துக் கொட்டியது. காய்ச்சல் காரனுக்கு • ''பசி கண்ணைப்பிடுங்குகிறது. ஏதாவது கொடுங்கள் சாப்பிட'' என்று சொல்லிவிட்டான் குளிர் காய்ச்சல்காரன்.

இது அதிசயம் இல்லையா? இன்னொரு அதிசயம்! கொஞ்சம் வசதியானவன் ஒருவன். ஆனால் குடிகாரன் குடிக்கிற பொழுது அவனுக்குக் கண்ணு, மூக்குத் தெரியாது. ஊற்றி ஊற்றி உள்ளே தள்ளிக் கொண்டே இருப்பான். அப்படி ஒரு மிடாக் குடிகாரன் குட்டிப்பண்ணையார்.

சாராயம் போக இடைஇடையே அபினையும் உபயோகிப்பான். ஒரு தடவை யாரோ ஒரு பண்டாரம் கொடுத்தார் என்று கஞ்சாவைச் சுண்டி இழுத்துவிட்டான்.

அவ்வளவுதான். கண்முழி பிதுங்கிவிட்டது. புலன்கள் ஒடுங்கிவிட்டன. உணர்வற்ற நிலையில் ஒரு தெருவில் செத்த சலம் போல விழுந்து படுத்து விட்டான். ஆள் போய் வைத்தியர் ராமலிங்கம்பிள்ளையைக் கையோடு அழைத்துவந்தார்கள். பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிற குடிகாரனின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தார் வைத்தியர். பிறகு கையைப் பிடித்துப் பார்த்தார்.

பக்கத்தில் இருந்தவர்களிடம் இங்கு வாழைத்தண்டு கிடைக்குமா' என்று கேட்டார். உடனடியாக வந்தது தண்டு. அதை முறுக்கிப் பிழியச் சொன்னார். ஒரு சிரங்கை சாறுதான் வந்தது. அதை அப்படியே குடிகாரனின் வாய்க்குள் விட்டார்.

என்ன அதிசயம்! அரை நாழிகை நேரம் கூட ஆகவில்லை. ஒப்பேறாத கேஸ் என்று கைவிடப்பட்ட குடிகாரன் மண்டையை ஒரு உலுப்பு உலுப்பினான். கண்ணைக் கசக்கியபடி எழுந்து உட்கார்ந்தான்.

என்ன ஒரே கூட்டம்? என்று விசாரிக்கவும் ஆரம்பித்துவிட்டான்.

இப்படி எத்தனை எத்தனயோ சித்து விளையாடல்களை நடத்தினார் வைத்தியர் ராமலிங்கம்பிள்ளை. வயறு பொருமிய பானை அளவுவிம்மிவிடும் ஒருவனுக்கு. அப்பாடி அம்மாடி என்று திணறிக் கொண்டிருப்பான். இரண்டு வெள்ளைப்பூடு பல், நான்கு வெற்றிலைக் காம்பு, கொஞ்சம் இஞ்சி இவ்வளவையும் போட்டுக் கசக்குவார். (பெருங்) காயத்தை வறுத்துப் பொடி பண்ணிக்கொண்டுவரச் சொல்லுவார். அவ்வளவையும் சேர்த்து அவனிடம் கொடுப்பார். ஒருதம்ளர் மோரையும் குடி என்பார். அரை மணி நேரத்தில் வயிறு தன் வயிறு ஆகிவிடும்.

மண்டையடியில் துடிக்கிறவனைப் பார்த்தால் தண்ணீரைக் கொதிக்கவைக்கச் சொல்வார். அதில் நொச்சி, ஆடாதோடை முதலிய இலைகளில் ஒன்றைப் போடச் சொல்வார். மண்டையடிக்காரனை நன்றாகத் துப்பட்டியையோ சேலையையோ போட்டு மூடி ஆவி பிடிக்கச் சொல்வார். அரை மணி நேரத்தில் வேர்த்துக் கொட்டும். மண்டையடி ஓடிவிடும்.

(நல்ல) பாம்பு இருக்கிற இடத்தில் வெள்ளைப் பூண்டைக் கசக்கிப் போட்டால் அந்த இடத்தைவிட்டுப் பாம்பு ஓடிவிடும் என்பார். விஷத்தை குறிக்கிற சக்தி வெள்ளைப் பூண்டிடம் நிறைந்து கிடக்கிறது என்பார்.

துருப்பிடித்து-கறையான் புற்று வைக்கிற கத்தியை வாழைத்தண்டுக்குள் சொருகி எடுத்தால் போதும் பளபள என்று அது வெள்ளிபோல ஜொலிக்கும் என்பார்.

''வாழைத்தண்டு சாறை வைத்து குடிபோதை மயக்கத்தையே இறக்கிவிடுகிறீர்களே! அது எப்படி'' என்று கேட்டால் மெள்ளச் சிரிப்பார். சிரித்துக் கொண்டே, பசிமயக்கத்திலோ, வெயில் கொடுமையிலோ, நோய் காரணமாகவோ, தாங்க முடியாத துயர் காரணமாகவோ ஒருவன் மூர்ச்சை ஆகிவிழுந்து விடுகிறான். பேச்சில்லை, பார்வை இல்லை, அசைவில்லை விறகுக் கட்டையாய்க் கிடக்கிறான்.

அப்பொழுது உள்ளங்கை நிறையத் தண்ணீர் விட்டு சப் சப் என்று அவன் முகத்தில் இரண்டு தடவை வீசி எறிந்தால் போதும். கண்ணை விழிக்கிறான். எழுந்து உட்காருகிறான் பேசவும் செய்கிறான்.

இதுஎப்படி முடிந்தது என்று கேட்க முடியுமா? பதுங்கிக்கிடந்த ஒன்று ஏன் பாய்ந்தது என்பதற்கு யாருக்காவது காரணம் தெரியுமா?

அதேபோல்தான் பாயும் புலிப்பாய்ச்சலில் பாய்ந்த கொடிய நோய்களைக் கூட சாதாரணப்பச்சிலைகளும் வேர்களும் பட்டைகளும் வித்துகளும் சாறுகளும் விரட்டி அடித்துவிடுகின்றன.

இதற்கும் நமக்குக் காரணம் தெரியாது! இப்படிச் சொல்லி மௌனமாகச் சிரிப்பார் வைத்தியர்.

எத்தனை கொடிய நோயாக இருந்தாலும் சரி அந்தந்த இடங்களில் விளைகிற நாட்டுச் சரக்குகள் தாம் அவருக்கு மருந்து. அந்த நாட்டுச் சரக்குகளைக் கொண்டு பாடம்

பண்ணிய பொடி, லேகியம் முதலியவற்றையும் சில சமயம் மருந்தாகக் கொடுப்பார்.

எப்படியானாலும் சரி மருந்துக்கும் வைத்தியத்துக்கும் சேர்த்து நான்கு அணாத்தான் வாங்குவார்.

இதுநான் சிறுவனாக இருந்த பொழுது கண்ட காட்சி. என்னுடைய வாலிபப் பருவம் முடிகிற வரை இந்தக் காட்சிதான். நாடு முழுவதும் இந்த அற்புதக் காட்சிதான்.

இத்தகைய அற்புதத்தை இப்பொழுது உள்ளவர்களிடம் சொன்னால் ''அப்படியா என்று அதிசயப்படக்கூட ஒருவராலும் முடியவில்லை. பிறகு எப்படி அதை நம்ப முடியும்? உடம்போடு ஒட்டவே மாட்டேன் என்கிறது உண்மை. பிறகு உணர்ச்சியோடு எங்கே ஒட்டும்?

சாதாரணக் காய்ச்சல் என்றால் கூட (டாக்டர்) மருத்துவரிடந்தான் போக வேண்டி இருக்கிறது. அவருக்கு நோயே பணமாகத்தான் தெரிகிறது. நோயாளியோ பணம் காய்க்கும் மரமாகவே தெரிகிறான்

வழிமறித்து மடக்கிய மானை பதினாறடி வேங்கை என்னபாடுபடுத்தும். வந்த நோயாளியை அதைவிடக் கொடுமைப்படுத்துகிறார்கள் மருத்துவர்கள். பணம் பணம் என்று தட்டிப் பறிக்கிறார்கள். வயற்றுவலி என்றாலும் சரி, மேல் கால் வலி என்றாலும் சரி உடனே ரத்தசோதனை, சளி சோதனை, சிறுநீர் சோதனை, எக்ஸ்ரே, ஸ்கேன், மாறி மாறி மருந்து, ஊசி, இப்படி தீவட்டிக் கொள்ளை அடிக்கிறது வைத்திய உலகம்.

ஒருவனுக்கு கொஞ்சம் சளித்தொந்தரவு என்றால் போதும். அவனை நாயா அலையவைத்து பத்தாயிரம் பதினையாயிரம் என்று உருவிவிடுகிறது மருத்துவமனை.

சுகப்பிரசவம் என்றாலும் மூன்று நாட்களில் பிரசவமனைப் பட்டியல் (பில்) பத்தாயிரம் இருபதினாயிரந்தான்!

சுகப்பிரசவம் ஆக யார் விடுவார்கள்? காலகண்டன் உருவில் மருத்துவச்சி, தாதி, எடுபிடி எல்லாம் சேர்ந்து ஆயுதம் எடுக்கிற நிலைக்கு உருவாக்கிவிடும்.

பிறகு குளுகோஸ் பிராணவாயு, ரத்தம் செலுத்தல் என்று மாறி மாறி வரும். செலவு தொகையில் மீட்டர் ஏறிக்கொண்டே போகும். பையைவிட்டுப் பணம் இறங்கிக் கொண்டே வரும்.

வருஷத்துக்கு இரண்டு தடவை மருத்துவமனை ஏறி இறங்கினால் போதும் எப்பேர்ப்பட்டவனுக்கும் பயித்தியம் பிடித்து விடும். பணத்தை வாரி இறைக்கிறவன் நிலை அப்படி இருக்கட்டும். இப்படிக் கொள்ளை அடிக்கிறோமே, வழிப்பறி பறிக்கிறோமே இது நாம் கற்ற கல்விக்கும் செய்யும் தொழிலுக்கும் ஏற்றதுதானா என்று ஒரு மருத்துவராவது யோசித்தது உண்டா? இல்லை.

உற்றார், உறவினருக்குக் கூட ஒரு வேளைச் சாப்பாடு போட நம்புத்தி இடம் கொடுக்க மாட்டேன் என்கிறதே, அப்படி இருக்க எங்கோ கிடக்கிற சம்பந்தமே இல்லாத வைத்தியரிடம் இப்படி நோட்டு நோட்டாகக் கொட்டி அழுகிறோமே! இது ஏன் என்று ஒரு நோயாளியாவது யோசித்தது உண்டா?

ஆடம்பரமும் டாம்பீகமும் சேர்ந்து உணர்ச்சி மயமான மனுசத்தோலை எப்படியோ செத்த எருமை மாட்டுத் தோலாக மாற்றிவிட்டது.

இந்தப் பரிதாபமான உலகில் ஏழை எளியவர்கள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியவர்களின் வருமானத்துக்கு எமனாக இருப்பவை பள்ளிக் கூடமும் மருத்துவமனையுமே.

கருணைக் கடவுள் கொலுவிருக்கும் அருள் கோவிலாக விளங்க வேண்டிய பள்ளிக் கூடங்களும் மருத்துவமனைகளும் பழிபாவத்துக்கு அஞ்சாத வழிப்பறிப் பேட்டைகளாக மாறிவிட்டால் பிறகு எப்படி நாடு நாடாக இருக்கும்.

''நிழலருமை வெய்யிலிலே'' என்பது ஆன்றோர் வாக்கு. தற்கால மருத்துவம் என்னும் கொதிக்கும் பாலைவன அனலில் அகப்பட்டவர்கள் முந்திய தலைமுறை மருத்துவத்தைப் பார்க்க வேண்டும். பார்க்கப் பார்க்கப் ரோட்டுக் கடை வைத்தியரும் வாளமுட்டி ராமலிங்கம் பிள்ளை (வைத்தியரும்)யும் தெய்வமாய் ஜொலிப்பார்கள்.

துவைத்துக் காயப்போட்ட வேட்டியும் துண்டுமாய், பழைய குடையைப் பிடித்துக் கொண்டும், தேய்ந்த செருப்பைப் போட்டுக் கொண்டும் ஊர் ஊருக்கு நடந்து போய் அவர்கள் வைத்தியம் பண்ணினார்கள். கொடிய நோய்களைக் குணப்படுத்தினார்கள். போகும் உயிர்களை போகவிடாமல் தடுத்துவாழ்வளித்தார்கள்.

நாலணாவுக்கும் இரண்டணாவுக்கும் அவர்கள் வைத்தியம் செய்தார்கள். சோதனை சோதனை என்று அவர்கள் பணத்தை உருவவில்லை. மருந்து, மாத்திரை, ஊசி என்று கொள்ளை அடிக்கவில்லை. இடவாடகை, பணிவிடை என்று கைவைக்க வில்லை பணத்தை.

சமுதாயத்தையே அப்படிக்கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்தார்கள் பழைய வைத்தியர்கள்.

இப்படிப்பட்ட நாட்டு வைத்தியர்கள்-வைத்தியர் உருவில் நடமாடிய உத்தமர்கள் பல இடங்களில் இருந்தார்கள்.

எல்லாம் வல்ல இறைவனைத் தஞ்சம் அடைந்தால் போதும். கொடிய பாவிகளைக் கூடத்தன்வயம் ஆக்கிவிடுவார் பெருமான்.

கடலோடு கலக்கும் ஆறு எப்படிச்சேறு, வண்டல், இவைகளை முகத்துவாரத்தில் போட்டுவிட்டு வெறும் தண்ணீர் மயத்தோடு மட்டும் சேருமோ, அப்படியே சரணடைந்த அடியார் கூட்டமும் தாங்கள் செய்த குற்றம் குறைகளை எல்லாம் இங்கேயே போட்டுவிட்டு இறைவனுடன் கலந்து விடுவார்கள்.

அப்படி என்றால் கடவுளை நம்பித் தங்களை அவனிடம் ஒப்படைத்தவர்களுக்கு பிறவித் தொல்லை இல்லை.

கடவுளுடைய கட்டுப்பாட்டையும் மீறிச் சிலரோ பலரோ பூமியில் பிறந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் உண்மையான நாட்டு வைத்தியரிடம் தங்களை ஒப்படைத்துவிட்டு நீங்கள்தான் தஞ்சம் என்று இருந்தால் போதும். அந்த உயிர்களுக்கு மரணமே ஏற்படா வண்ணம் பாதுகாப்பார் வைத்தியர். கொடிய நோய்களை எல்லாம் வேரறக்களைந்து அவற்றை மண்ணோடு மண்ணாய்த் தேய்த்தெறிந்து விடுவார் வைத்தியார். பிறகு மரணமிலாப் பெருவாழ்வுதான்.

அப்படியானால் எல்லாம் வல்ல சிவபெருமானை விட நாட்டு வைத்தியர் உயர்ந்தவர்தான்.

இதுசம்பந்தமாக ஒரு பாடல்

*மதுரையில் சொக்கலிங்கம்பிள்ளை என்று ஒரு நாட்டு வைத்தியர் இருந்தார். அவருடைய தந்தை வீரபத்திரபிள்ளை. அவரும் வைத்தியர்தான். பரம்பரை வைத்தியர் குடும்பம்.*

*மதுரையில் கோயில் கொண்டிருக்கும் பெருமானும் சொக்கலிங்கம் (சொக்கர்)தான். வீரபத்திரபிள்ளையின் சுதன்(மக)னும் சொக்கர்தான்.*

*இதில் எந்தச் சொக்கர் உசத்தி! பாடலைப் பாருங்கள் தெரியும்.* வெண்பா

**மிக்கமது ரைச்சிவனும்,**
**வீரபத்திரன் சுதனும்,**
**சொக்கர் இருவர்எனத்**
**தோன்றினார் - அக்கோன்**
**பிறவாமல் காப்பான்,**
**பிறந்தாரை மண்மேல்**
**இறவாமல் காப்பான்**
**இவன்**

*(மிக்க மதுரை-புகழ்மிக்க மதுரை மாநகர். அக்கோன்-சொக்கலிங்கப் பெருமான். இவன் - மருத்துவர் சொக்கலிங்கம்பிள்ளை)*

*அற்புதமானபாட்டு பாடப்பாட நோய் ஓடிவிடும். உடல்நோய் மட்டும் அல்ல. மனநோயும் ஓடிவிடும்.*

*மருந்து என்னும் சொல் எப்படி உண்டாகியது என்று நமக்குத் தெரியாது. ஆனால் மருத்துவம், மருத்துவர் மருத்துவச்சி என்னும் சொற்களுக்கு மூலம் மருந்து என்னும் சொல்தான்.*

கடவுளையே மருந்து என்று சொல்லிப் புளகாங்கிதம் அடைகிறார்கள் பக்தர்கள். மருந்தீஸ்வரர், வைத்தியநாதன் என்றெல்லாம் சொல்லி அழைக்கிறார்கள்.

தெய்வத்துக்குத் தெய்வமாக விளங்குகிறது குழந்தை. அந்த அருமைக்கு குழந்தையை அருமருந்து அன்ன பிள்ளை (அருமாந்தபிள்ளை) என்று வாய் குளிர மனம் குளிரச்சொல்லி மகிழ்கிறார்கள்.

இப்பொழுதெல்லாம் நம்மவர்களுக்கு மருந்து என்றால் புரியாது. மெடிசன் என்றுதான் சொல்ல வேண்டும். மருத்துவர் என்றால் விளங்காது. டாக்டர் என்றுதான் சொல்லவேண்டும். மருத்துவக் கல்லூரி என்றால் விளங்கவே விளங்காது. மெடிக்கல் காலேஜ் என்று சுரபேதத்தோடு நீட்டி முழக்கிச் சொல்ல வேண்டும்.

அப்படி அமிர்தமாய் இருக்கிறது மருந்து. உண்மையான மருந்து அதாவது உண்மையான அமிர்தம் உணவுதான். இல்லை என்றால் சாவா மருந்து என்று (சுவைமிக்க) உணவைக் குறிப்பிடுவாரா குறளாசிரியர்?

உணவுதான் உடம்பாகி (ஊனாகி)றது. உயிரும் அதுதான். உணர்வும் அதுதான். இப்படி உயிருக்கு உயிராக இருக்கிற உணவை முறையோடு கையாள வேண்டும். பக்தியோடு பார்க்கவேண்டும். பயபக்தியோடு உபயோகிக்க வேண்டும். உணவிடம் அலட்சியமாக நடந்து கொண்டால் அதைத் தாறுமாறாகக் கையாண்டால் உணவே நஞ்சாகி (நோயாகி)விடும்.

உலகில் பல பகுதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான சூழ்நிலை, தட்பவெட்ப நிலைகள், அந்தந்த சூழ்நிலைகளுக்கு ஏற்பப் பயிர் பச்சைகள்

உண்டாகின்றன. அவையே அங்கங்குள்ள உயிரினங்களுக்கு ஏற்ற உணவாகின்றன.

குளிர்ப்பிரதேசத்தில் உள்ளவனுக்கு இசைந்த உணவாகக் கோதுமை விளைகிறது கோடைப் பிரதேசத்தில் உள்ளவனுக்கு ஏறற உணவாக அரிசி விளைகிறது. இப்படி அமைவது அதிசயந்தான். இதைவிட அதிசயம் அந்தந்த இடங்களைச் சேர்ந்த பச்சிலை, வேர், பட்டை, பருப்பு, தவசம் முதலியவைகளே அந்தந்தப் பகுதி மக்களின் நோயை விரட்டும் மருந்தாகவும் விளைகின்றன.

உலகில் ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் அந்தந்த இடங்களில் உள்ளவர்களின் நோய்களுக்கு மட்டுமல்ல. உலகம் முழுவதும் உள்ள மக்களின் சகல விதமான நோய்களுக்கும் மருந்தாக செடி கொடிகள் உண்டாகின்றன.

இந்தப் புண்ணிய பாரத பூமி அப்படி ஒரு மருத்துவப் பண்ணை. அதிலும் தமிழகம் மூலிகைக் களஞ்சியமாக விளங்குகிறது.

தமிழகத்திலுள்ள செடி, கொடிகள், பயிர் பச்சைகள், புல் பூண்டுகள், தவசங்கள், வித்துகள்தாம் உலகம் முழுவதுக்கும் மருந்துகள் செய்ய ஆதாரமாக உள்ளன.

இல்லை என்றால் இறைவனைப் பார்த்து,

''மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆனாய்'' என்று அப்பர் சுவாமிகள் சொல்வாரா?

நம்முடைய உணவு உடம்புமட்டுமல்ல. உயிரும், உணர்வும் மட்டுமல்ல நோய்களை வேரறக்களையும் மருந்தாகவும் இருக்கிறது.

இனி, சங்க காலத் தொகை நூல்களில் ஒன்றாகிய புறநானூற்றில்

'உண்டி முதற்றே உணவின் பண்டம்' என்று சொல்லி இருக்கிறது. (உண்டி-உணவு. உணவின் பிண்டம்-உடம்பு) அதுமட்டுமா.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்று அதைத் தெளிவுபடுத்தியும் காட்டுகிறது பாடல்.

சாப்பாட்டை வைத்துத்தான் தேகம். தேகத்தை வைத்துத்தான் புத்தி, புத்தியை வைத்துத்தான் காதல், வீரம், பக்தி, கருணை, நீதி முதலிய அத்தனையும். வாழ்க்கை என்றால் இத்தனையும் சேர்ந்ததுதானே? நமது வாழ்வுக்கும் வாழ்க்கைக் கும் அடிப்படையான மூலதத்துவம் சாப்பாடுதான் என்பது விளங்கவேண்டும்.

அப்படி விளங்கினவனுக்குத்தான் அன்னத்தின் ஒவ்வொரு துளியும் - ஒவ்வொரு பருக்கையும் தெய்வ சொரூபமாகத் தெரியும். அப்படிப் பக்தியோடு புசிப்பவனுக்குத்தான் அன்னத்தில் நிறைந்திருக்கும் உன்னதம் (ருசி) வெளிப்படும். வெளிப்பட்டு ரத்தத்தோடு ரத்தமாகக் கலக்கும்.

ருசித்து அனுபவித்து, மதித்துச் சாப்பிடுகிறவன் நிறையச் சாப்பிடமாட்டான். குறையவே சாப்பிடுவான். குறையச் சாப்பிட்டாலும் அவன் திருப்தியாக இருப்பான். நோய் நொடி அவனை எட்டிப் பார்க்காது.

மரியாதை இல்லாமல் அனுபவிக்காமல், ருசிதட்டாமல் சாப்பிடுகிறவன் பெருந்தீனிக்காரன், நெய்யை ஊற்ற ஊற்ற தீயின் நாக்கு மேலே மேலே தாவிப் பாயும். அதுபோல இவன்

வயிற்றுனுள்தாள்ளத் தள்ள பசிபெருகும். ஆறவே ஆறாது பசி. அப்படியானால் நோய் விளையும் இடமே இவன் வயிறுதான் உடம்புதான்.

மேற்குவங்க மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த டாக்டர், பி.சி.ராய் ஒரு உன்னதமான மருத்துவ நிபுணர். ஜவஹர்லால் நேருவிடம் கீழ்க்கண்டபடி ஒரு சமயம் டாக்டர் ராய் சொன்னார்.

''அரை குறைச் சாப்பாட்டுக்காரர்களைவிடப் பெருந்தீனிக்காரர்கள் தாம் தீராத நோயாளிகளாக இருக்கிறார்கள்'' என்று

''வறுமை கொடியதுததான். அதைவிடக் கொடியது அளவுக்கு மேலாகப் பணம் நடமாடுவது. நெறிமுறை இல்லாத பெருந்தீவனம் மட்டுமல்ல, குடிப்பான், கூத்தடிப்பான், உடலுழைப்பு இல்லாத காரணத்தால் புத்தியும் அவனுக்குக் கோணல் மாணலாகவே போகும்'' பிறகு எப்படி உருப்படுவான் அவன். நோய்க்கிருமிகள் வளரும் சாக்கடை ஆக்கிவிடுவான் தன் உடம்பை. நாட்டையே ரணகளம் ஆக்கி மருத்துவ நிலையம் ஆக்கிவிடுகிறது பணக்காரக் கூட்டம்.

எதை எதையோ படிக்கிறான் மனிதன். ஆனால் தன் உடம்பைப் பற்றிப் படிக்கறானா? ஆயிரம் ஆயிரம் தத்துவங்கள் ஒரு தன்மைத்தாய் நின்று அணுவளவு பிசகு இல்லாமல் இயங்குகிறதே உடம்பில்-அதில் ஒன்றையாவது பார்க்கிறானா? பார்த்து அதிசயப்படுகிறானா?

உடம்பின் அற்புதம் தெரிந்தால் அல்லவா உடம்புக்குத் தேவை என்ன என்பது தெரியும். பிறகு அது எவ்வளவு வேண்டும் என்னும் அளவு தெரியும்.

தேவையான பண்டங்களை மட்டும் தேவையான அளவுக்குச் சாப்பிடுகிற புத்தி அப்பொழுதுதான் மனிதனுக்கு வரும். எதை எதைச் சாப்பிட வேண்டும், எவ்வளவு எவ்வளவு சாப்பிடவேண்டும் என்கிற யோசனை பொதுவாக மனிதர்களிடம் இல்லை.

தேகத்தைப் பற்றியும் உணவைப் பற்றியும் மனிதனிடம் ஞானம் இல்லை. அவற்றின் மேல் பக்தியும் இல்லை.

''உண்ணும் சோறும் பருகும் நீரும்
தின்னும் வெற்றிலையும் எல்லாம் எம் கண்ணன்''
என்று பரவசப்படுகிறார் நம்மாழ்வார்.

நம்மாழ்வார் போலப் பக்திப் பரவசத்தோடு ஒருவன் காயைப் பார்க்கிறான். கனியைப் பார்க்கிறான், நெய்யைப் பார்க்கிறான், சோற்றைப் பார்க்கிறான் என்றால் பிறகு அவற்றைக் கன்னாபின்னா என்று கையாள்வானா? தாறுமாறாக உபயோகிப்பானா?

ஒரு பெண்ணானவள் மல்லிகை மாலையை எப்படிப் பண்போடு வாங்குவாள்? எப்படி அருமையோடு சூடுவாள்? உணவை உண்பதில் அப்படி ஒரு பண்பும் அருமையும் இருக்கவேண்டும்.

சித்தர்களிலேயே உன்னதமான சித்தர் திருமூலர்தான் என்று சொல்வார்கள். அவர் எங்கும் நிறைந்த பரம்பொருளைப் பற்றிச் சொல்கிறார். உள்ளங்கையில் வைத்து இதோ பார் என்று காட்டுவது போல அத்தனை துல்லியமாகச் சொல்கிறார்.

''எங்கும் இருக்கிறான் இறைவன். ஓர் உடம்பின் ஒவ்வொரு அணுவும் அவன்தான். உணர்ச்சியும் அவன்தான். அவன்தான் சகலமும் என்பதைத் தெரிந்தால் போதும். நாம் என்பதே அவன்தான் என்பது விளங்கிவிடும்.''

*'உன்னும் அளவில் உணரும் ஒருவனை'*

*எங்கும் நிறைந்த பரம்பொருளை எங்கே எங்கே என்று தேடி அலைகின்றன சித்தம், புத்தி, விகாரம் என்கிற மனக்கூறுபாடுகள். அறிவிலிருந்து விளைந்த சாத்திரங்களும் தோத்திரங்களும் அப்படியே தேடி அலைகின்றன.*

*''பன்னும் மறைகள் பயிலும் பரமனை''*

*ஆனால் அவன் இல்லாத இடமே இல்லை. எங்கும் அவன்தான். நானும் அவன்தான். ஒவ்வொரு அணுவிலும் கோடி சூரியப் பிரகாசமாய்ச் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறான் இறைவன்.*

*''என்னுள் இருக்கும் இளையா விளைக்கினை''*

*எங்கும் நிறைந்த இறைவன் எல்லோருடைய பார்வைக்கும் எப்படி இருக்கிறான்?*

*இனிப்பாடலின் முழு உருவம்*

**உன்னும் அளவில்**
**உணரும் ஒருவனை**
**பன்னும் மறைகள்**
**பயிலும் பரமனை**
**என்னுள் இருக்கும்**
**இளையா விளக்கினை**
**அன்ன மயம் என்(று)**
**அறிந்துகொண்டேனே!**

*உன்னும் அளவில்-நினைத்த உடனேயே உணரும் ஒருவன். இதோ இருக்கிறேன் என்று உணர்த்தும் பெருமான் மறை-வேதம் பயிலும்-தேடும் அன்னமயம், ஆகாரமயம்.*

உண்மையை உண்மையாகவே தெரிந்து கொண்டதில் திருமூலருக்கு ஒரே எக்களிப்பு. அந்த எக்களிப்பு 'அறிந்துகொண்டேனே' என்று தாளத்தில் விழுந்து ஒரு துள்ளுத் துள்ளி ஆட்டமே போட்டுவிடுகிறது.

இனி அல்லும் பகலும் உடம்போடு உடம்பாய் ஒட்டிக் கிடக்கிறான் மனிதன். உடம்பை வைத்துத்தான் இவன் ஆட்டமும் பாட்டமும். அதுமட்டும் இல்லை என்றால் இவன் வெறும் சைபர்தான்.

அப்படி இருந்துமே அந்தப் பொன்னான உடம்பைப் பற்றி இவன் ஒன்றுமே தெரியவில்லை. உடம்புக்கு உடம்புக்கு என்று பொய் சொல்லி தன் வெறியைத் தணிப்பதற்காக சதா உள்ளே தள்ளிக் கொண்டிருக்கிறானே உணவு இதைப்பற்றியும் இவனுக்கு ஒன்றும் தெரியாது!

உணவைப் பற்றியும் உடம்பைப் பற்றியுமே தெரியாத ஒருவன் மருந்து பற்றியும், வைத்தியம் பற்றியும் அனுபவபூர்வமாக எழுந்த கவியைப் பற்றி என்னத்தைத் தெரிந்துகொள்வான்.

பாவம்! வேண்டாததை எல்லாம் வண்டி வண்டியாய்ப் படித்துவிட்டான். வேண்டியதைப் படிக்காமலே விட்டு விட்டான். அதனால் அறிஞர், பேரறிஞர், மேதாவி என்றெல் லாம் பட்டம் வாங்கிவிட்டான். பிறகு எப்படி அவனுக்கு இது வசனம், இது கவிதை என்னும் வேறுபாடு தெரியும். ஏட்டுப்படிப்புக்கும் அனுபவத்தில் தெளிந்த மெய் யுணர்வுக்கும் வேறுபாடு தெரிய முடியுமா அவனால்?

பிறகு எப்படி அவனுக்குத் தாய் மொழி விளங்கும்? தாய் மொழி விளங்கி இருந்தால் தமிழில் ஒன்றுமே இல்லை சார் என்று வாய் கூசாமல் சொல்லுவானா?'' எதை எடுத்தாலும் காதல், வீரம் இவை தாம் தமிழ்ப்பாட்டுகளில். இல்லை

என்றால் ''அம்மையே அப்பா' என்கிற பக்தி. வேறென்ன இருக்கிறது தமிழில்? விஞ்ஞானம் இருக்கிறதா, சரித்திரம் இருக்கிறதா என்று கேட்பானா?

பொய்க்கும் பகட்டுக்கும் அப்படி அடிமை ஆகிவிட்டான் மெத்தப் படித்தவன்.

அடிமையில் எல்லாம் மிக மட்டமான அடிமை பொய்மைக்குக் கட்டுப்பட்ட அடிமை.

''சரியான அடிமையடா நீ! உனக்குத் தாய்மொழி விளங்கவா செய்யும்? போ, என் எதிரில் நில்லாதே? ஓடிவிடு! என்று விரட்டுகிறார் பாரதியார்.

> ''வேறு வேறு பாஷைகள்
> கற்பாய் நீ
> வீட்டு வார்த்தை கற்கிலாய்
> போ போ போ!''

பொய்க்குக் கட்டுப்பட்டு அதன் ஏவலுக்கு ஏற்றபடி எல்லாம் செயல்பட்ட காரணத்தால்தான் ''மிக்க மதுரைச் சிவனும்'' என்னும் பாடலை இவன் படிக்கவில்லை. படித்தாலும் இவனுக்கு அதுவிளங்க வில்லை. இவனால் அதை அனுபவிக்க முடியவில்லை. படித்து அனுபவித்தவன் அடடா! விஞ்ஞானம் என்றால் இது வல்லவா விஞ்ஞானம்? வைத்தியரைப் பற்றியும், வைத்தியத்தைப் பற்றியும் எப்படி அனுபவித்துச் சொல்கிறது. தமிழ் என்று உருகுவான். வைத்தியரையும், வைத்தியத்தையும் பாடல் மூலம் அனுபவிக்க அனுபவிக்க அவனுக்கு உடம்பைப் பற்றி அறிய வேண்டும் என்னும் ஆர்வம் சுரக்கும். உணவைப் பற்றித் தெரியவேண்டும் என்கிற ஆவல் முளைக்கும்.

ஆவலையும் ஆர்வத்தையும் தூண்டுவதுதானே விஞ்ஞானம்.

கொதிக்கும் வெந்நீரில் சுக்குப்பொடி, கருப்பட்டி, துளிசி இலை, கருடக் கொடி, நறுக்கு மூலம் கருஞ்சீரகம் இவற்றைப் போட்டு சாறாக இறக்கி அருந்தினால் காய்ச்சல் விலகும். மேல் கால் வலி நீங்கும் என்று சொல்லிவிட்டால் அது விஞ்ஞானம் ஆகிவிடாது. அது அனுபவம். பழக்கத்திலும் வழக்கத்திலும் திருந்தித் திருந்தி வந்த உண்மை அனுபவம். அந்த உண்மை அனுபவம் கலையாக-கவியாக உருவெடுப்பதுதான் ஞானம். அது விஞ்ஞானமாகவும் இருக்கலாம், மெய்ஞ்ஞானமாகவும் இருக்கலாம்.

ஞானம் இருந்தால் போதும். அவனுக்கு ''மிக்க மதுரைச் சிவனும்'' என்கிற பாடலும் விளங்கும்'' ''உன்னும் அளவில் உணரும் ஒருவனை'' என்கிற பாடலும் விளங்கும். நன்றாக அனுபவிப்பான் பாடல்களை.

இந்தப் பாடல்களை அனுபவிப்பது போலவே

''ஆற்றுக்குள் இருந்து அரகராப் போட்டாலும்

சோற்றுக்குள் இருக்கிறான் சொக்க நாதன்'' என்னும் பழமொழியையும் அனுபவிப்பான்.

ஞானம் இல்லாதவனால் முடியுமா?

மகான் மகான் என்று போற்றப்பட்ட ஞானி ஒருவர் இருந்தார். அவர், ''வயிறு முட்டச் சாப்பிடக் கூடாது. குறையவே சாப்பிட வேண்டும். சாப்பாட்டைச் சுருக்கச்சுருக்க ரத்தம் ஊறும், பலம் கூடும். நலம் பெருகும்... இப்படிச் சொல்லிவிட்டு டக்கென்று பேச்சை நிறுத்துவார். சுற்றும் முற்றும் பார்ப்பார். பிறகு, ஆனால் அதில் ஒரு ஆபத்து

உண்டு,'' என்று சொல்லிக் கொண்டே கண்ணை ஒரு சிமிட்டுச் சிமிட்டுவார்!

சில விநாடிகள் இடைவெளிவிட்டு ''சாப்பாட்டை சுருக்கினவனுக்கு நோய் நொடி வராது. கடைசியில் எமன் வந்து மல்லுக் கட்டுகிற பொழுதும் அவன் உயிர் சட்டென்று போகாது. எமனோடு முண்டாக் கொடுக்கும் உயிர்'' என்று முத்தாய்ப்பு வைப்பார். கடைசியாக, ''உண்டி சுருங்கின் உயிரார் வலுப்படும்,'' என்னும் திருமூவரின் பாடல் பகுதியை சொல்லி விஷயத்துக்கு பொன்முடி சூட்டுவார்

இனி, மனிதன் மட்டும் இல்லை. உயிர்வர்க்கம் முழுவதுக்குமே சாப்பாடுதான் உயிர். அதனால்தான் அதனிடம் நாம் எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

தற்கால வைத்திய முறையில் மனிதனை ஆட்டிப் படைக்கும் மூலஸ்தானம் - உடம்பின் பகுதி இதயம் ஒன்றே என்கிறார்கள். நுரையீரல், மூச்சுப்பை, அது சுருங்கி விரிதல் எல்லாமே இதய அறையை வைத்துத்தான் என்கிறார்கள்.

காரணம் ரத்த ஓட்டம், ரத்த உசுத்தி ஆகிய செயல்கள் இந்த இதயத்துடிப்பின் மூலம் நடைபெறுகின்றன.

இனி, வேறு சிலர் மூளைதான் உடம்பு முழுவதுக்கும் நாயகம் என்கிறார்கள். உடம்பின் ஒவ்வொரு அம்சத்தையும் நெறிமுறைப்படுத்துவது மூளைதான் என்று விளக்கம் கொடுக்கிறார்கள்.

யோசித்துப் பார்த்தால் மூளை, இதயம் இந்த இரண்டுக்கும் இல்லாத அற்புத சக்தி வயிற்றில்தான் இருக்கிறது. உடம்பு முழுவதும் உடம்பில் உள்ள ஆயிரம் ஆயிரம் தத்துவங்களும் வயிற்றை வைத்தே இயங்குகின்றன என்பது தெரிய வரும்.

மூளை, இதயம் இந்த இரண்டையும் குறைத்து மதிப்பிடவில்லை நாம். மிக மிக முக்கியமானவைதாம் அவை. ஆனால் மூளை, இதயம் இரண்டுமே வயிற்றுக்கு கட்டுப்பட்டவைதாம்.

வயிற்றுக்குள்தான் கல்லீரல், மண்ணீரல், குடல், பித்தநீர், எண்ணிறந்த ஜீரண நீர்ச்சுரப்பிகள், மூலக்கனல், கழிவறைகள் எல்லாம் இருக்கின்றன.

உயிருக்கும், உணர்வுக்கும் மூலதாரம் இரத்தம். இரத்தம் எதிலிருந்து வருகிறது? சாப்பாட்டிலிருந்து. சாப்பாடு ரத்தமாக மாறும் ரசாயன கூடம் எது? வயிறுதான். அப்படியானால் வயிறுதான் உடம்பின் மூலஸ்தானம். மற்றவை எல்லாம் உள்பிரகாரம், வெளிப்பிரகாரமேதான். ஆயிரக்கால் மண்டபம், கோபுரம், கோபுரவாசல் என்றும் உடம்பில் இடங்கள் உண்டுதான். ஆனால் கருவறை வயிறு ஒன்றுதான்.

இனி, மனித உடம்பில் உயிர்நிலை (ஆதார) இடங்கள் ஆறு என்று கணக்கிட்டிருக்கிறார்கள். நெற்றியிலிருந்து அடிவயிறு வரை ஒவ்வொரு சாண் இடமும் ஒவ்வொரு ஆதார நிலைகள். அப்படிப் பார்த்தால் நெஞ்சுக் கூட்டுக்கு கீழே உள்ள வயிற்றுப் பகுதியில் மட்டும் மூன்று ஆதாரங்கள் பொருந்தி நிற்கின்றன.

வயிறுதான் உடம்பின் பொன்னம்பலம் என்பதற்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

ஒரு கோழி முட்டையை எடுத்துக் கொண்டால் அதனுள் திரவப் பொருளாக இருக்கிறது கூடு. அந்த கூடுதான் குஞ்சாக வருகிறது. குஞ்சாக பொரிகிறவரை அந்த கருவுக்கு ஆகாரம் வேண்டுமே? அந்த ஆகாரம் அந்தக் கருவுக்கு மத்தியில் (நடுப்பகுதியில்) வைக்கப்பட்டுள்ளது.

அதுபோலவே பிரமாண்டமான தென்னைமரத்தை சுருட்டி மடக்கி வைத்திருக்கும் தேங்காய் பருப்புக்கும் அது முளைத்து வெளி வருகிற வரை ஆகாரம் வேண்டுமே, அந்த ஆகாரமும், பருப்புக்கு உளளே நடுநாயகமாக பொதிந்து வைக்கப்பட்டுள்ளது.

தேங்காயைப் போலவே அத்தனை வித்துகளுக்குள்ளும் அவற்றுக்கு தேவையான ஆகாரத்தை மூட்டைக் கட்டி முடிச்சுப் போட்டு உள்ளே வைத்திருக்கிறது. உயிருள்ள எந்த பொருளை எடுத்துக் கொண்டாலும் சரி, உணவும், வயிறும் அதனதன் நடுவில்தான் இருக்கும். மனிதனுக்கும், வயிறு நடுவில் - எண்சாண் உடம்பின் நட்ட நடுப்பகுதியில்தான் இருக்கிறது.

தொண்டையில்தான் ஆகாரக்குழல் தொடங்குகிறது. தொண்டை வழியாகத்தானே உணவு உள்ளே போகிறது. உணவுக்குழலில் கடுகளவு பின்னம் ஏற்பட்டாலும் சரி அது சிரசில் போய் அடிக்கும். கண்விழி பிதுங்கும். மூக்கிலிருந்தும், கண்களிலிருந்தும் நீர் பெருகும்.

பருகும் தண்ணீர் முறை மாறினாலும் சரி, காரமோ, புளிப்போ கூடினாலும் சரி, தொல்லைதான்.

ஆறு ஆதாரங்களுக்கும் உணவு மண்டலந்தான் மூலநாடி.

இந்த உண்மை தெரிய வேண்டும். தெரிந்து கொண்டால் போதும். அளவோடு சாப்பிட முடியும். அளவுக்கு அதிகமாக சாப்பிட மாட்டான் மனிதன்.

தேவைக்கு அதிகமாக சாப்பிடச் சாப்பிட உண்ட உணவு விஷமாகிவிடும். அமிர்தத்தன்மையை இழந்துவிடும். உள்ளே கிடக்கிற நஞ்சு சும்மா இருக்குமா? நோயாக விளையும். அது போனால் இது, இது போனால் அது என்னும் புதுப்புது

நோயாக விளைந்து கொண்டே இருக்கும் அந்த நஞ்சு. அதாவது மடத்தீவனம்

இதை எவ்வளவு பக்குவமாக எடுத்துக் கொடுக்கிறது வள்ளுவப் பெருமானுடைய தமிழ் என்று பாருங்கள்.

'வயிறு புடைக்க உண்ணாமல் குறையவே சாப்பிடுகிறவனிடம் ஆரோக்கியம் பொங்கும். ஆனந்தம் பெருகும். எதுபோல என்றால், வெடித்துவிடும் என்று சொல்கிற அளவுக்கு வயிற்றுக்குள் போட்டு உணவை அமுக்குகிறானே, அவனிடம் நோயும் துன்பமும் மண்டிக் கிடக்கும். அதுபோல குறைய சாப்பிடுகிறவனிடம் இன்பம் கொலுவிருக்கும்.

இனிப் பாடல்

இழிவறிந்(து) உண்டான்கண்
இன்பம் போல் நிற்கும்,
கழிபேர் இரையான்கண்
நோய்

குறளாசிரியரைத் தவிர வேறு யாரால் இப்படி வெட்டொன்று துண்டிரண்டு என்று சொல்ல முடியும்? மேலும் சொல்கிறார்.

சௌகர்யமாக வாழ வேண்டும். நிம்மதியாக இருக்க வேண்டும் என்றால் வயிற்றை சுத்தமாக - துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

நாவுக்கு (வாய்க்கு - ருசிக்கு, அடிமை ஆகிவிடக் கூடாது. அடிமை ஆகிவிட்டால் ஒவ்வொரு பண்டத்திலும் அறுசுவையையும் தேடிக் கொண்டிருப்பான். அது மட்டுமா,

ஒவ்வொரு சுவையிலும் விதவிதமான பல பண்டங்களை குவிப்பான். இனிப்பு என்று எடுத்துக் கொண்டால் அல்வா, ஜிலேபி, லட்டு, அதிரசம் சுலியம் இவ்வளவையும் சேர்த்து வைப்பான். சாப்பிடுவான். பிறகு அதற்கு மாற்று என்று சொல்லிக் கொண்டு ஆமை வடை, உளுந்த வடை, பஜ்ஜி, போண்டா என்று விதவிதமாக உள்ளே தள்ளுவான்.

இப்படி வேளாவேளைக்கு பல சுவைகளிலும் விதவிதமான பண்டங்களை உள்ளே தள்ளினால் வயிறு நோகாதா? குடல் திணறாதா? ஜீரண மண்டலம் தேய்ந்து சிதறாமல் என்ன செய்யும்?

அதற்கு இது மாற்று இதற்கு அது மாற்று என்று உணவை பெருக்கக் கூடாது. ருசிபேதத்துக்கு அடிமைப்படாமல் தேவையான அளவுக்கு கொஞ்சம் குறையவே உட்கொள்ள வேண்டும் உணவை.

இன்னும் கொஞ்சம் சாப்பிடலாம் என்கிற நிலையிலேயே போதும் என்று நிறுத்திக் கொள்ள வேண்டும் சாப்பாட்டை.

அப்படி ஒருமனப்பட்ட உணவை கொஞ்சம் தேவைப்படுகிற அளவுக்கு குறைத்தே சாப்பிட்டு வந்தால் போதும். மருந்து வேண்டாம். வைத்தியர் வேண்டாம். ''இன்பமே அல்லாது துன்பம் இல்லை,'' என்கிற வாக்குக்கு இணங்க ஆனந்தமாக இருக்கலாம்.

இந்த உண்மை குறளில் எப்படி எழுந்து வருகிறது என்று பாருங்கள்.

மாறுபா(டு) இல்லாத
உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா(டு) இல்லை
உயிர்க்கு

மாறுபாடு இல்லாத உண்டி இனிப்பு வகை, கார வகை என்கிற தனித்தனிப் பிரிவுகளில்லாத ஒருவகைப்பட்ட உணவு. மறுத்து அதையும் போதும் போதும் என்று குறைத்து, ஊறுபாடு இல்லை - துன்பம் இல்லை. உயிர்க்கு என்றால் புத்தியுள்ள மனிதனுக்கு இதுதான் தேவை என்பது பொருள்.

மருத்துவத்தை இதைவிட வேறு என்ன சொல்ல இருக்கிறது? ஆயிரம் பக்கம் இரண்டாயிரம் பக்கம் என்று எழுதினாலும் விஷயம் இதுதான். இவ்வளவேதான்.

உடம்போடு தானே ஒட்டிப் பிறந்தோம் என்கிற புத்தியே மனிதனிடம் இல்லை. தான் தோன்றித்தனமாக அலைகிறான். உடம்பைப் பற்றி அவன் யோசிக்கிறதும் இல்லை. கவலைப்படுகிறதும் இல்லை.

மனிதனுடைய அறியாமை உடம்புக்கு தெரிந்து விட்டது. அதனால் உடம்பானது தானாகவே பல வழிகளிலும் தன்னை பாதுகாத்துக் கொள்கிறது. பெரும்பாலான நோய்களை அதாகவே விரட்டியடிக்கப் பழகிக் கொண்டுவிட்டது.

ஆனாலும் உயிருக்கு உயிராக இருக்கிற மனிதனே சாப்பாடு, சாப்பாடு என்று உள்ளே திணித்தால் என்ன செய்ய? உனக்கும் எனக்கும் ஒட்டும், இல்லை, உறவும் இல்லை என்று பிரிந்துவிட முடியுமா உடம்பால்?

அஜீரணம், வாந்தி, பேதி என்று ஒவ்வாமையை காட்ட வேண்டியதுதான். அதை வைத்து அவனல்லவா தெளிய வேண்டும்?

ஜீரணிக்கிற அளவுக்கு ஏற்றபடி கட்டுப்பாட்டோடு உண்டு வந்தால்- மனிதனிடம் அப்படி ஒரு வரையறை இருந்தால் போதும். வைரக்கட்டியாக இருக்கும் உடம்பு.

பிறகு எமனுக்கு பயந்து வைத்தியனை தாஜா பண்ண வேண்டியதில்லை.

இனிக் குறள்

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்திய(து) அற்றது போற்றி உணின்.**

அருந்தியது - உண்ட உணவு அற்றது போற்றி உணின் - ஜீரணம் ஆனது எவ்வளவு? ஆகாதது எவ்வளவு என்பதைத் தெரிந்து அதை வைத்தே உடம்புக்கு தேவை எவ்வளவு என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். உணின் - அப்படி ஒருவரை யறைக்கு இணங்கி அளவோடு உண்பவனுடைய யாக்கைக்கு - உடம்புக்கு மருந்து எனவேண்டா - மருந்தோ மருந்துவமோ தேவைப்படாது. காரணம் என்ன? சாப்பாட்டில் ஒழுங்கும், கட்டுப்பாடும் இருந்தால் நோய்க்கு இடமே இல்லை.

# 15

# நோயாவது மருத்துவமாவது

உண்ட உணவில் ஜீரணம் ஆனது எவ்வளவு, ஜீரணமாகி உடம்போடு சேர்ந்து உயிர்ச் சத்தாய்ப் பரிமளிப்பது எவ்வளவு என்பதைத் தெரியவேண்டும். ஒவ்வொருவருக்கும் இது முக்கியம்.

உடம்பையும் வைத்துக் கொண்டு அதனுள் வேளா வேளைக்கு உணவையும் தள்ளிக் கொண்டிருப்பவர், தள்ளின உணவு என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ள வேண்டாமா?

இதைக் கூடத் தெரியவில்லை என்றால் அவன் என்ன படிப்பாளி, என்ன அறிவாளி? அவனை எப்படி மனிதன் என்று அங்கீகரிப்பது?

ஒரு யந்திரம் சதா ஓடிக் கொண்டே இருக்கிறது. அப்படியானால் அதில் உள்ள கோளாறு இன்னதென்று தெரிய வருமா? கண்டுபிடிப்பது கஷ்டம்.

அதன் ஓட்டத்தை நிறுத்தி பகுதி பகுதியாகப் பார்த்தால்தான் கோளாறு என்ன என்று தெரியும்.

நமது உடம்பும் ஒரு யந்திரந்தான். இணை இல்லாத யந்திரம். உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒவ்வொரு அணுவும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன.

இந்த ஓட்டத்தில் கோளாறு இன்னதென்று தெரிய முடியாது. தெரியவேண்டுமானால் ஓட்டத்தை நிறுத்த வேண்டும். அதற்கு முதல் படியாக ஒரு நாளைக்கோ இரு நாளைக்கோ உணவை (உண்ணாமல்) நிறுத்திவிட வேண்டும். பேச்சையும் நிறுத்திவிட வேண்டும். வெளிப்பிரவர்த்தி (வேலை)யையும் நிறுத்திவிட வேண்டும். உள் பிரவர்த்தியை (அது இது என்று யோசிக்கிறதை)யும் நிறுத்திவிட வேண்டும்.

யோசனையை அடியோடு யாராலும் நிறுத்த முடியாது. அதனால் யோசனையைக் கண்டபடி ஓடவிடாமல் ஒருமுகப்படுத்தி உள்பக்கமாகச் செலுத்தி உடலுக்குள் நடக்கிற காரியங்களை உற்று உணரவேண்டும்.

ஆரவாரமோ பரபரப்போ இல்லாமல் அமைதியாக மனசைப் புரட்டிப் போட்டுப் பார்க்கவேண்டும்.

சாப்பாட்டை நிறுத்தினால் போதும். பேச்சு ஒடுங்கும். ஓட்ட சாட்டமும் ஒடுங்கவே உடம்பின் நிலை - ஒவ்வொரு பகுதியின் நிலையும் தெரியும். உள்ளே போட்ட உணவின் கதியும் தெரியும்.

பிறகு உடம்புக்கு எது தேவை? எவ்வளவு தேவை என்பதுதான் விளங்கிவிடுமே!

ஆனால் ஒரு வேளை பட்டினி கிடக்கச் சம்மதிப்பானா மனிதன்? இவன் பட்டினி கிடந்தால் அது காரணமாக உலகமே வெடித்துச் சிதறிவிடுவது போலப் பாவலாப் பண்ணுவான். பயப்படுவான் மனிதன்!

அடிக்கடி பட்டினி கிடந்து பழகுகிறவனுக்குத்தான் குறையச் சாப்பிட வேண்டும் என்கிற புத்தி வரும்.

நோய் என்று தனியாக ஒன்று இல்லை. அது எங்கிருந்தோ வருவதும் இல்லை. மனிதனுடைய

பொறுப்பின்மைதான் - ஆடம்பரமும் கொழுப்புந்தான் நோயாக விளைகிறது.

பிறகு மருந்து, மருத்துவம், மருத்துவர் என்றெல்லாம் தொடர்கின்றன.

சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, அலோபதி என்றெல்லாம் காரணங்கள் வேறு.

இதை அவர் கண்டுபிடித்தார், அதை இவர் கண்டுபிடித்தார் என்று முடி சூட்டு விழாக்கள் வேறு.

எந்த மருந்தையும் யாரோ ஒரு தனிப்பட்ட நபர் கண்டுபிடித்து விடவில்லை. அதே போலத்தான் எந்த ஒரு மருத்துவமுறையையும் அவரோ இவரோ (ஒருவர் மட்டும்) கண்டுபிடித்து விடவில்லை.

மருந்துகளுக்கும், அதன் பக்குவங்களுக்கும், மருத்துவத்துக்கும் அதிகாரிகள் மக்கள்தான்.

நீண்ட நெடுங்காலமாக மக்கள் பார்த்துப் பார்த்துத் தெரிந்து கொண்ட முறைகள்தாம் மருந்துகள். கையாண்டு கையாண்டு உறவாடிய அனுபவங்கள் தாம் மருத்துவ முறைகளும் பக்குவங்களும்.

பல்வேறு வகைப்பட்ட அனுபவங்களை - பல்வேறு காலங்களில் பல்வேறு மக்கள் கையாண்ட அனுபவங்களை தொகுத்தும் வகுத்தும் அறிஞர்கள் செய்திருக்கிறார்கள்.

சேர்க்க வேண்டியதைச் சேர்த்தும் கழிக்க வேண்டியதைக் கழித்தும் சீர் செய்திருக்கிறார்கள்.

அப்படிச் சீர் செய்த பெரியவர்களையே கண்டு பிடித்தவர்கள் என்கிறோம். பெற்றெடுத்தவர் என்கிறோம்.

அகத்தியர், வாகடர், நாகார்ச்சனர் எல்லோருமே இப்படி இப்படித்தான்.

அதாவது மக்களின் (சமுதாயத்தின்) அனுபவ உண்மைக்கு நிலையான வடிவம் கொடுத்தவர்கள் இவர்கள்.

தமிழ்மொழிக்கு அதிகாரிகள் யார் என்றால் அன்று தொட்டு இன்று வரையுள்ள பலகோடி மக்கள்தான். அகத்தியரோ, தொல்காப்பியரோ அல்லர்.

மக்களின் சொத்தாகிய தமிழ் மொழிக்கு இவர்கள் வேலி கட்டியிருக்கலாம், நீர்பாய்ச்சி இருக்கலாம், களை பறித்திருக்கலாம், காவல்கூடக் காத்திருக்கலாம். அதனால் இவர்கள்தான் பெற்றெடுத்தார்கள் என்று சொல்ல முடியுமா தமிழை?

ஆனாலும் ஒரு உபசாரத்துக்காக, மரியாதைக்காக அகத்தியர் தமிழ் தொல்காப்பியர் தந்த தமிழ் என்றெல்லாம் சொல்லிப் பாராட்டுகிறோம்.

தமிழ்ர்கள் கண்ட மருத்துவத்துக்குச் சித்த வைத்தியம் என்று பெயர். இந்தப் பெயர் எப்பொழுதிருந்து வருகிறது என்பது நமக்குத் தெரியாது.

ஆனால் சித்தர்கள் பிறப்பதற்குப் பல பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நோய்களைப் பற்றியும் நோய்களை விரட்டி அடிக்கும் மருந்துகளைப் பற்றியும் நம்மவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள்.

நமது பாட்டிமார்களும் தாய் மார்களுந்தான் நமது மருத்துவக் கலைக்கு அதிதேவதைகள்.

குப்பை மேட்டிலும் கொல்லைப் புறத்திலம் முளைத்த பச்சிலைகளும் வேர்களுமே மருந்தாயின!

மெள்ள மெள்ள பட்டைகள், காய்கள், கனிகள், புஷ்பங்கள் கொட்டைகள், எண்ணெய் வகைகள் இவைகளில் உள்ள மருத்துவப் பண்புகளை அனுபவத்தில் கண்டார்கள்.

உலகில் பல்வேறு மருத்துவ முறைகள் உள்ளன. சீனமுறை, அரபுகள் முறை, ஆங்கிலேயர் முறை, ஆயுர்வேத முறை இப்படிப் பல பல வித மருத்துவ முறைகள்.

இவ்வளவிலும் முக்கியமான மூலப் பொருள் தாவர வகைகளே.

மருத்துவத்துக்கு உதவும் தாவரங்களில் - பச்சிலைகளில் பெரும்பாலானவை தமிழ்நாட்டைச் சேர்ந்தவையே.

இதை வைத்து ஒன்று சொல்லலாம். உலகின் பல்வேறு வகைப்பட்ட மருத்துவ முறைகளுக்கும் தமிழக மருத்துவ முறை உதவி இருக்கிறது என்பதுதான் அது.

அதற்காக தமிழக மருத்துவத்தில் இருந்துதான் ஏனைய மருத்துவங்கள் பிறந்தன என்று சொல்லிவிடக் கூடாது.

அங்கங்கு உள்ளவர்கள் அவரவர்களுக்குக் கிடைத்தவற்றை வைத்து உணவாக்கி இருக்கிறார்கள். மருந்தும் ஆக்கி இருக்கிறார்கள்.

ஒன்றுக்கு ஒன்று கொடுக்கல் வாங்கல் முறையும் உண்டு. தமிழகத்தைப் பொறுத்தவரை வாங்கியதைவிட கொடுத்ததுதான் அதிகம்.

நல்லபாம்பைக் கண்டால் கீரிப்பிள்ளைக்கு ஆவேசம் வந்துவிடும். வெறியே வந்தவிடும். நல்ல பாம்பைத் தும்பு தும்பாகக் கிழித்தெறிந்துவிடும் கீரிப்பிள்ளை.

நல்லப்பாம்பும் எதிர்த்துப் போராடித் தானே இருக்கும். அப்பொழுது பாம்பின் விஷம் கீரிப்பிள்ளையின் மேல் படும்.

அந்த விஷத்தை முறித்தெறிய உடனே கீரிப்பிள்ளை அறுகம் புல்லின் மேல் விழுந்து புரளும்.

கொடிய நஞ்சையே முறித்தெரியக் கூடிய சக்தி அறுகம் புல்லுக்கு இருக்கிறது. ஆனாலும் கீரிப்பிள்ளைக்குத்தான் அறுகம் புல்லானது நேருக்கு நேராக உதவும். மற்றப் பிராணிகளுக்கு உடனுக்குடன் - நேருக்கு நேர் என்று அறுகம் புல்லால் உதவ முடியாது.

இந்த அற்புதத்தை முன்னோர்கள் எப்படியோ தெரிந்திருக்கிறார்கள். அதனால் அறுகம்புல்லைத் தொடர்பு படுத்தி சடங்குகளில் உறவு கொண்டாடுகிறார்கள்.

சமய வழிபாட்டிலும் அறுகம் புல்லுக்குத் தனித்த இடம் கொடுக்கிறார்கள்.

இனி, சோகை என்று ஒரு நோய். உயிர்ச் சத்து வறண்டு ரத்தமானது நீர்த்துப் போனால் உடம்பு வெளிறிவிடும். பசி இருக்காது. தூக்கம் வராது. நடக்கக்கூட முடியாது. சீவனற்ற நிலைதான்.

இந்த நிலையை மாற்ற வெள்ளாட்டின் பால் உதவுகிறது. பனை மரத்தில் ஊறும் பனம் பாலும் (பதநீருக்கு முந்திய நிலை) உதவுகிறது. இன்னும் பல உபாயங்கள் இருக்கலாம்.

ஆனாலும் அனுபவத்திலிருந்து ஒன்றிரண்டு சொல்கிறேன்.

**1946**ம் வருடம் என்று நினைக்கிறேன். சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானகிராமணிதேகம் இளைத்து வெளிறிப் போயிருந்தார். அவருடைய கண் இமைகள் தாமாகவே

அடிக்கடி 'பட் பட்' என்று மூடித் திறக்கும். அவ்வளவு பலஹீனம் அவருக்கு.

ரசிகமணி டி.கே.சி அவரைத் திருக்குற்றாலத்துக்கு அழைத்து வந்தார்கள். மைக்குறுவை அரிசியை அறைத்து அதில் வல்லாரை இலையைப் போட்டு அடைபோல தோசை சுட்டுக் கொடுத்தார்கள். சாதத்திலும் வல்லாரை இலைப் பொடியை சேர்த்துக் கொடுத்தார்கள். காரத்தைக் குறைத்தார்கள். பருப்பு, நெய் இவற்றை விலக்கினார்கள். இட்லி தோசை என்றால் அவற்றுடன் தேன், தயிர் இவற்றையே சேர்த்துக் கொடுத்தார்கள்.

ரசிகமணி கொடுத்த பக்குவ உணவை ஒருவாரம் உண்டுவந்தார் கிராமணி. என்ன அதிசயம்? தேகத்தில் ரத்தம் ஊறியது. கண் படபடப்பு நின்றுவிட்டது. பசி வந்துவிட்டது தூக்கமும் வந்தது. திடகாத்திரமான உடம்பே வந்துவிட்டது கிராமணியாருக்கு.

ஊருக்கு விடைபெற்றுப் போகும்போது எனக்குப் புதுப் பிறவிகொடுத்துவிட்டீர்கள் என்று டி.கே.சியை சிவஞானகி ராமணி பாராட்டி விட்டுப் போனார்.

இனி, பி.ஸ்ரீ.ஆச்சார்யா என்பவர்கள் தமிழில் நல்ல புலமை மிக்கவர்கள். கலை அனுபவம் நிரம்பியவர்கள். அவர்களும் தேகம் இளைத்து துரும்பாய் மெலிந்து விட்டார்கள்.

அவர்களையும் ஒரு சமயம் அழைத்து வந்தார்கள் டி.கே.சி. ஆனால் அவர்களுக்குக் கொடுத்த பக்குவம் வேறு.

மணத்தக்காளி வற்றலை நெய் விட்டு வறுத்து பொடி பண்ணினார்கள். அதைச் சாதத்தில் போட்டு நெய்விட்டுப்

பிசைந்து சாப்பிட வைத்தார்கள் பி.ஸ்ரீயை. அத்துடன் பிரண்டைத் துவையலையும் வேளா வேளைக்கு கொடுத்தார்கள்.

சுரக்காய், தடியங்காய், பூசணிக்காய், பீர்க்கங்காய், புடலங்காய் முதலிய நீர்ச்சுரப்பான காய்களையே கூட்டு வைத்து சாப்பிடச் சொல்லிக் கொடுத்தார்கள்.

மோர், தண்ணீர் இவற்றை மாறி மாறி நிறையச்சாப்பிடச் சொன்னார்கள். பி.ஸ்ரீ அவர்களும் சொன்னபடி கேட்டுச் சாப்பிட்டு வந்தார்கள். அவ்வளதுதான் இரண்டு வாரத்தில் பைல்வான் மாதிரி துடிப்போடும் விறைப்போடும் நடக்க ஆரம்பித்துவிட்டார் பி.ஸ்ரீ.ஆச்சாரியார்.

இனி எனக்கும் ஒரு சமயம் மிக்க சோர்வாக இருந்தது. அதையும் ஒரு சோகை என்றே சொல்லலாம்.

என்னைப் பார்த்த உடனேயே என் உடல்நிலை ரசிகமணிக்குத் தெரிந்துவிட்டது. அவ்வளவுதான். ''நான் சொல்கிறபடி கேட்பீர்களா'' என்றார்கள். கேட்கிறேன் என்றேன் நான்.

ஆறின வெந்நீரோ, தண்ணீரோ அடிக்கடி சாப்பிட வேண்டும். மோர், எலுமிச்சம் பழச்சாறு தேன் இவற்றையும் சேர்க்க வேண்டும். பத்து நாட்களுக்கு காலையில் இட்லி தோசை கிடையாது. பிழிந்து வைத்த பழைய சாதம், அதில் சுண்டக் கறியைப் போட்டுப் பிசைய வேண்டும். இரண்டு கரண்டி நல்லெண்ணெயை அதில் விட்டுக் கொஞ்சம் உப்பையும் போட்டுப் பிசைந்து சாப்பிட வேண்டும்.

மத்தியானச் சாப்பாடும் அதுதான். இரவில் பழமும் பாலும் போதும். இதுமுடியுமா? என்றார்கள். முடியும்

என்றேன். பத்து நாட்களுக்கும் அப்படியே நான் சாப்பிட்டு வந்தேன். சோர்வு, படபடப்பு, அசதி எல்லாம் என்னை விட்டு ஓடிவிட்டன. தெம்பும் உத்சாகமும் உண்டாகிவிட்டன. இதைப் பார்த்த டி.கே.சி சொன்னார்கள். ''பழையதை மோரும் உப்பும் போட்டுப் பிசைய வேண்டும். உரித்த உள்ளியை (வெங்காயத்தை) வைத்துச் சாப்பிட வேண்டும். அது இதைவிடத் தெம்பூட்டும்'' என்று மேலும் தொடர்ந்து சொன்னார்கள். உழவுத்தொழிலில் ஈடுபட்ட ஏழை எளிய மக்கள் எவ்வளவு திடகாத்திரமாக இருக்கிறார்கள் பாருங்கள்? காரணம் கஞ்சி நீராகாரம், உள்ளி, கருப்பட்டி இவைதான் அவர்கள் உணவு.

ஆகாரமானது திரவப் பொருளாக இருந்தால்தான் உடலில் உறுதி வரும் என்று சொன்னார்கள்.

எதை எடுத்தாலும் தண்ணீர் தண்ணீர் என்று சொல்கிறீர்களே தண்ணீரில் என்ன அப்படி உயர்வு என்று ஒரு தடவை டி.கே.சியிடம் நான் கேட்டேன்.

அப்படி ஒரு கேள்வியைப் போட்டதால் அவர்களுக்கு ஆனந்தம் வந்துவிட்டது. உற்சாகமாக வந்தது பதில்.

''நம் உடம்பு முழுவதும் காற்று நிறைந்திருக்கிறது. காற்று நிறைந்திருப்பது போலவே வெப்பமும் நிறைந்திருக்கிறது. இந்த வெப்பம் (அக்கினி) செய்கிற உதவிகள் பல. அவற்றில் ஒன்று உண்ட உணவைச் சத்தாக மாற்றிக் கொடுத்தல். சத்தாக மாற்றிக் கொடுப்பதற்கு உணவு மட்டும் இருந்தால் போதாது உணவோடு தண்ணீரும் இருக்கவேண்டும். தண்ணீர் இல்லை என்றால் எப்படி வெந்துகுழையும் உணவு?'' என்று சொன்னார்கள். உடனே நான் கேட்டேன் ''காற்றும் அக்கினியும் உடம்பில் நிறைந்திருப்பது போல நீரும் நிறைந்திருக்கத்தானே செய்கிறது

உடம்பில்?'' என்று அதற்கு வந்த பதில் ''உடம்பில் பெரும் பகுதி நீர்தான். அந்த நீர்தான் அக்கினியை ஒரு நிலையில் வைத்துக் காக்கிறது. அதுகுறையக் கூடாது. அதனால் உலைப்பானைக்கு நீர் ஊற்றுவது போல நாம் உடம்புக்கு நீர் ஊற்ற வேண்டும். நாம் ஊற்றுகிற நீர் உண்ட உணவை வேகவைப்பதற்கு!

ரசிகமணி சொல்லியது உண்மை. உணர உணரத்தான் அந்த உண்மையின் நயம் தெரியும். எண்ணற்ற அம்சங்களால் ஆகியது உடம்பு. சுருங்கிய முறையில் எளிதாக 'பஞ்ச பூதங்களின் சேர்க்கை இவ்உடம்பு' என்பார்கள்.

நீர், நெருப்பு, காற்று மூன்றும் உடம்பில் நிறைந்துள்ளன. மேலே குறிப்பிட்ட மூன்றும் இயங்க இடம் உண்டு பண்ணிக் கொடுக்கிறது வான். இந்த நான்கும் சேர்ந்த உருவம் நிலம்.

இப்படியாக ஐம்பூதங்களின் கலவை உடம்பு என்பது தெரியும்.

நெருப்பும் காற்றும் தேவையான அளவு இருக்க வேணடும். எதிர்பாராத விதத்தில் குறைந்தால் வெளியிலிருந்து நெருப்பும் காற்றும் உடம்புக்குள் வந்து ஈடுகொடுக்கும். ஆனால் நீர் என்பது அப்படித்தானாக வந்து ஈடுகொடுக்காது. மனிதன் பருகுகிற நீர் தவிர வெளிநீர் உள்ளே புக வாய்ப்பில்லை. அதனால் உடம்பினுள் இருக்கிற நீர் உலை(ப்பானை)த் தண்ணீராக மாறக் கூடாது.

பஞ்சபூதங்களால் ஆகிய இந்த உடம்புக்கு பஞ்ச பூதங்களே உண்மையான ஆகாரம்.

நல்ல எண்ணம் (ஆகாயம்) நல்ல காற்று (இயற்கைக் காற்று) நல்ல அக்னி (சூர்யவெப்பம்) நல்ல தண்ணீர்

(சுத்தமான நீர்) நல்ல நிலம் (தூய இடம், தூய உணவு, தூய பழக்க வழக்கம்) ஆக ஐந்தும் முக்கியம்.

சூரிய வெப்பத்திலிருந்தும், காற்றிலிருந்தும், நீரிலிருந்தும் தமக்கு வேண்டிய உணவை, உரத்தை எடுத்துக் கொள்கின்றன பயிர் பச்சைகள். மகான்களும் காற்று, வெயில், நீர் இவற்றிலிருந்து உடம்புக்குத் தேவையான உணவை எடுத்துக் கொள்வார்கள். தூய சிந்தனையும் அவர்களுக்கு ஒரு வகை ஆகாரந்தான். அதேபோல பொது நலத்துக் (உலக நன்மைக்)காக செயலாற்றிக் கொண்டே இருப்பார்கள். சோம்பலுக்கு ஆளாகிச் சும்மா இருக்க மாட்டார்கள். அந்த முயற்சியும் அவர்களுக்கு ஒரு உன்னதமான உணவு (அமிழ்தம்)தான். அது மட்டுமா? அந்த முயற்சிதான் அவர்களுக்கு ஓய்வு. அதாவது ரெஸ்ட். இப்படி எல்லாம் உடம்பு பற்றயும், உணவு பற்றியும், தேவை, அளவு இவை பற்றியும் புதிய புதிய விபரங்கள் வருகின்றன. அவற்றை மக்களிடத்திலும் அவர்கள் வாழ்க்கையினிடத்திலுமே பார்க்க வேண்டும்.

தேரையாரிடமோ அகத்தியரிடமோ தேடிப் பார்க்கக் கூடாது.

நெய் உருக்குகிறவர்கள் அதில் முருங்கை இலையைப் போடுவார்கள். முருங்கை இலை கிடைக்கவில்லை என்றால் வெற்றிலைக் காம்பைப் போடுவார்கள். பக்குவமாக நெய் உருகும். நெய்யை வடித்தெடுத்தபின் முருங்கை இலையை - வெற்றிலைக் காம்பைச் சாப்பிட்டால் கமகம என்று மணக்கும், ருசிக்கும்.

புளிய இலையையோ மாஇலையையோ போட முடியுமா? தாளிதத்தில் கடுகுடன் உளுத்தம் பருப்பைத்தானே சேர்க்கிறோம். துவரம் பருப்பைச் சேர்த்தால் ஒத்துவருமா? அதே போல தாளிதத்தில் கறிவேப்பிலையைத்தான்

சேர்ப்போம். வேறு இலைகள் சரிப்பட்டு வராது.

கறிவேப்பிலையை வைத்துத் துவையல் அறைத்துச் சாப்பிட வேண்டும். மல்லி இலையையும் வைத்துத் துவையல் அரைக்கலாம். கறிவேப்பிலை, மல்லி இலை இரண்டையும் சேர்த்து வைத்தும் துவையல் அரைக்கலாம்.

சாப்பிடச் சாப்பிடக் கொண்டுவா, கொண்டுவா என்று கேட்கும் துவையல். உடம்புக்கு நல்லது. கால்சியம் சத்து பெருகும். அதனால் நன்மைகள் பல உண்டு தேகத்துக்கு.

இஞ்சி மிக மிக உயர்ந்தது. பித்தத்தைத் தணித்துவிடும். வயிற்றுப் பொருமல், மண்டையடி, குளிர், மேல்வலி முதலியவற்றைக் குணப்படுத்தும். ஆனால் இஞ்சியைப் பக்குவமாகக் கையாள வேண்டும். இஞ்சிச் சாற்றுடன் எலுமிச்சப் பழச் சாற்றைச் சேர்க்க வேண்டும். அதற்கும் மேலே தேனை ஊற்றிக் கலக்க வேண்டும். சர்க்கரையும் சேர்க்கவேண்டும்.

இஞ்சி பெற்றெடுத்த பிள்ளைதான் சுக்கு. சுக்கை நீர் ஊற்றி வேகவைக்க வேண்டும். சிறிது உப்பைச் சுக்கோடு சேர்த்து விட்டால் பூவாய்க் குழைந்துவிடும் சுக்கு. சாறு முழுவதும் இறங்கிவிடும். கருப்பட்டி (பனை வெல்லம்) தான் சுக்கு நீருக்கு உகந்தது. அடிக்கடி சாப்பிடவேண்டும் சுக்கு நீர். வயிற்றில் உள்ள மந்தம், புளிப்பு, கசப்பு எல்லாம் ஓடிவிடும். மல்லியும் சிறிது அதனுடன் சேர்க்கலாம். பால் சேர்த்தும் பருகலாம். பால் சேர்க்காமலும் பருகலாம். பருகப்பருகத் தேன்தான் கொம்புத்தேனேதான்.

இனி எண்ணெய்களில் உடம்பின் வெளிப்புறத்துக்கு உகந்தது தேய்காய் எண்ணெய். உடம்பின் உள்புறத்துக்கு நல்லது நல்லெண்ணெய்.

தேங்காய் எண்ணெய் உடம்பைப் பளபள என்று மெருகிட்டு வைக்கும். புண்களை ஆற்றும். வெற்றிலை போடுகிறவர்களுக்குச் சுண்ணாம்பால் வாய்புண் வரும். அவர்கள் தேங்காய்ச் சில்லை வாயில் போட்டு மென்றால் புண் ஆறும். தேங்காய் எண்ணெயையும் வாயில் விட்டு அலம்பிக் கொப்பளிக்கலாம். அதைவிட நல்லது சுண்ணாம்புடன் மஞ்சள் பொடி, தேங்காய் எண்ணெய் இவற்றைச் சேர்த்துக் கொள்வது சிலர் தேங்காய் எண்ணெய்க்குப் பதில் வெண்ணெயையே சுண்ணாம்புடன் சேர்த்துக் குழைத்து வைத்துக் கொள்ளவார்கள்.

வெண்ணெய் மிக மிக நல்லது. நெய்யில் கூட கொஞ்சம் தில்லுமுல்லு உண்டு. வெண்ணெய் பரிசுத்தமானது. கண்ணபிரான் வெண்ணெயை உண்டுதானே அப்படிக் கொழுகொழு என்றிருந்தார்.

வெண்ணெயை உடம்பில் தேய்த்துக் குளிக்கவேண்டும். அப்படிக் குளிக்க வசதி உள்ளவர்கள் சிறு பயற்றுப்பொடி, காணப்(குதிரைக்கு உணவாகும் கொள் என்னும் தானியம்) பொடி, செம்பருத்தம் பூப்பொடி, ஆவாரம்பூப் பொடி இவைகளைப் புண்ணாக்குப் பொடியுடன் கலந்து தேய்த்துக் குளிக்க வேண்டும்.

குளிக்கக் குளிக்க தேகம் தங்கக் கட்டியாக ஒளிரும். குஜராத்திகளில் பெரும்பாலோர் வெண்ணெய் தேய்த்துக் குளிப்பபார்கள். சிந்திகளோ பாதாம் பருப்புத் தைலத்தை (எண்ணெயை)த் தேய்த்துக் குளிப்பார்கள். அதுவும் நல்லதுதான்.

நல்லெண்ணெயில் மிளகு வற்றல், இஞ்சித்துண்டு, பூண்டுப்பல், சீரகம், மிளகு இவைகளைப் போட்டு நன்றாகக் காய்ச்ச வேண்டும். எண்ணெய் ஆற ஆற உச்சியில் வைத்து

அப்பளம் தட்டித் தேய்க்க வேண்டும். உடம்பு முழுவதும் அரக்கித் தேய்க்க வேண்டும்.

தேய்த்த எண்ணையோடு உடம்பு சேர்ந்து ஊறவேண்டும். பிறகு புண்ணாக்குப் பொடி போட்டுத் தேய்த்துக் குளித்தால் உடம்பு கலகல என்றிருக்கும்.

கேரளம், கர்நாடகம், இங்கெல்லாம் அதிக உபயோகம் தேங்காய் எண்ணெய்தான். தமிழகமும் ஆந்திரமும் நல்லெண்ணெயை அதிகமாக உபயோகிக்கும் பிரதேசங்கள் இஞ்சித் துண்டு ஒன்றை வாயில் போட்டு மென்றால் போதும். அதன் எரிப்பு மண்டையைப் பிய்க்கும். வெள்ளைப் பூண்டு உடைத்து அதன் துண்டு (பல்) ஒன்றை வாயில் போட்டால் குடல் எல்லாம் குமட்டும். அத்தனை நெடி வாடை பூண்டை, மிளகு வற்றலின் காரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை.

மேலே குறிப்பிட்டவைகளை நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சினால் அவற்றின் எரிப்பு, நெடி, காரம் எல்லாம் ஓடிவிடுகின்றன. ருசியாகவும் இருக்கின்றன.

நல்லெண்ணெய்க்கு அப்படி ஒரு அற்புத சக்தி. நாட்டு மருத்துவர்கள் மருந்துகள் செய்ய மூலிகைகளையும் பச்சிலைகளையும் நல்லெண்ணெயில் போட்டுத்தான் காய்ச்சுவார்கள்.

சில பேருக்குத் தலையில் பேன் பற்றினால் விடவே விடாது. தலைமுடியே பேன் கூடு மாதிரி ஆகிவிடும். மொட்டையடித்தாலும் ஒழியாது. முடிவளர வளர வந்துவிடும். அப்புறம் பேன் கட்டுகிற கூடுதான் தலைமுடி.

பேனின் தொல்லை தாங்க முடியாது. மற்றவர்களுக்கும் அதனால் தொல்லை அதிகம்.

குப்பை மேனி இலை, செந்தட்டி இலை இவற்றிலிருந்து சாறு இறக்கி நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி தலையில் தேய்த்துக் குளித்தால் பேன் ஓடிவிடும். மறுபடி அந்த இடத்தை எட்டிப் பார்க்காது பேன்.

தற்பொழுது இந்தப் பக்குவம் மக்களிடம் இல்லை. அதனால் அந்த மருந்து இந்த மருந்து என்று வாங்கி உபயோகிதது சிரமப்படுகிறார்கள்.

சிரமம் ஒழிய வேண்டும் என்றால் மண்எண்ணெயைத் தலையில் தேய்த்துக் குளிக்க வேண்டும். இனி, பேன் தொல்லை போலத்தான் கொசுவின் தொல்லையும். கடியால் வேதனை மட்டுமல்ல பல கொடிய நோய்களுக்கும் கொசுக்கடித்தன மூலம். கொசுவிலிருந்து விடுபடவும் மண்எண்ணெயே சிறந்த வழி.

இரவில் படுக்கப் போகுமுன் மேல் கால் முழுவதும் மண்எண்ணெயால் தேய்த்து அறக்கிவிட்டால் கொசு பக்கத்தில் வராது. சரி மண்எண்ணெய் நாற்றம் போக என்ன வழி என்று கேட்கலாம். அதற்கு ஒரே வழி நல்ணெணெய்தான். குளிப்பதற்குமுன் தலையிலும் மேல் கால்களிலும் நல்லெண்ணெயைத் தேய்த்துக் குளித்துவிட வேண்டியது.

ஏழை எளிய மக்களுக்கு இதுதான் ஏற்றது. வருமானம் மிக்கவர்கள் போல் அவர்களால் அது இது என்று வாங்கி பேனை வரட்டவோ, கொசுவைத் துரத்தவோ முடியாது.

இனி பேறுகாலம் (பிரசவம்) என்பது பெண்களுக்குத் தாய்மை நிலை. இறைவனுடைய திருவருள் பேறு என்றால் தாய்மை நிலைதான்.

கருவுள்ள பெண்களை வயதான பாட்டிமார்களும் தாயும் கண்ணுக்குக் கண்ணாகக் கவனித்து வருவார்கள்.

கருஉயிர்த்த பெண்ணின் உடம்புக்குப் பச்சை உடம்பு என்று பெயர். அது உலைந்து போயிருக்கும். அங்கங்கே புண்பட்டும் இருக்கும்.

உலைந்து போன பச்சை உடம்பைப் பழையபடி கட்டுமானத்துக்குக் கொண்டுவர வேண்டும். புண்கள் ஆறவேண்டும். அதற்காக உணவில் சில விசேஷமான மருந்துச் சரக்குகளைச் சேர்த்துக் கொடுப்பார்கள்.

சுக்குக்களி, ஓமக்களி, (வெள்ளைப்) பூண்டுக்களி, வெந்தயக் களி என்று மாற்றி மாற்றி செய்து கொடுப்பார்கள்.

சுக்கு, ஓமம், பூண்டு, வெந்தியம் இவைகள் எப்படிக் களிக்கு ஆதாரமோ அப்படியே பனை வெல்லமும், நல்லெண்ணையும் ஆதாரம்.

நல்லெண்ணெய், கருப்பட்டி இரண்டும் போட்டுக் கிண்டக் கிண்டத்தான் களிவரும். உடம்பை வலுப்படுத்துவது மட்டுமல்ல அமிர்தமயமான தாய்ப்பால் ஊறுவதற்கும் இவை துணை புரிகின்றன.

மேலே சொன்ன களிகளுடன் மிளகுக் குளம்பு, பூண்டுக் குழம்பு, வெந்தயக் குழம்பும் சாப்பாட்டோடு சேரும்.

மழை அல்லது குளிர்காலமாக இருந்தால் வெந்தயத்தை விலக்கிவிடுவார்கள்.

உணவுக்கும் பண்டத்துக்கும் மட்டும் நல்லெண்ணெய் உயிர் கொடுக்கவில்லை. மருந்துகளுக்கு உயிர் கொடுப்பதும் நல்லெண்ணெய் தான்.

உடம்பினுள் ஓடுகிற ரத்தத்தில் கசிகிற அழுக்கு, களிம்பு, நஞ்சு முதலியவற்றை முறித்தெறிந்து விடும் நல்லெண்ணெய். அப்படி ஒரு அமிர்தப் பண்பு நல்லெண்ணையில் இருக்கிறது.

ஆனால் அந்த அமிர்தப் பண்போடு முரட்டுத் தனமான தடிக்குணமும் நல்லெண்ணெயில் சேர்ந்தே கிடக்கிறது. அந்தத் தடிக்குணத்தை வடித்தெடுக்கக் கூடிய சரக்குகளை நல்லெண்ணெய்யுடன் சேர்த்து உபயோகிக்க வேண்டும்.

இந்த உபயோக முறை தொன்று தொட்டு தமிழகத்தில் இருந்து வருகிறது. பொதுவாக எல்லாப் பொருள்களிலுமே நல்லதும் கெட்டதும் சேர்ந்தே கிடக்கின்றன. கெட்டதை வளைத்து மடக்கி நல்லது மட்டும் செயல்படும் வண்ணம் அவற்றுக்குத் துணைப் பொருட்களைக் கொடுத்துச் சேர்க்க வேண்டும்.

இந்தச் சேர்மானத்துக்குத்தான் பக்குவம் என்று பெயர். மருத்துவர்களுக்கு இந்தப் பக்குவ உணர்வு மிக மிக முக்கியம். அதுமட்டுமல்ல அளவும் மிக மிக முக்கியம்.

எளிய உணவை ஒழுங்காக உண்டு வருபவர்கள், உழைப் பாளர்கள் இவர்களுக்கு நோய் வர ஞாயம் இல்லை. மீறி வருகிறது என்றால் அது ஒன்று பரம்பரை நோயாக இருக்க வேண்டும். இல்லை என்றால் காற்று, தண்ணீர் முதலியவை சூழ்நிலை மாறுபாட்டால் உருமாறி நோய்க் கிருமிகளை உண்டாக்கிப் பரப்ப வேண்டும். இந்த மாற்றத்தை எதிர்த்துத் தாக்குப் பிடிக்க முடியாதவர்கள் நோய்க்கு ஆளாவார்கள்.

விபத்துகள் மூலம் வரும் நோய்களும் உண்டு. நடவடிக்கைக் கோளாறுகளால் ஏற்படுகிற நோய்களும் உண்டு.

மருத்துவனின் பெருமை இது எந்த வகை நோய் என்று தெரிவதில் இருக்கிறது. பிறகு இதற்கு மூலம் (ஆதாரம்) என்ன என்பதைக் கண்டு கொள்வதில் இருக்கிறது.

மூன்றாவது முக்கிய நிலை இவற்றின் அதிகாரத்துக்கும் வேகத்துக்கும் ஏற்ப மருந்தை அளவோடு கொடுப்பது. அது கூடுவதும் தவறு, குறைவதும் தவறு.

இதைத்தான் தெய்வப் புலவர்

"நோய்நாடி நோயின்
முதல்நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச்
செயல்"

என்கிறார்.

நோய் முதல் - மூலகாரணம். அது தணிக்கும் வாய்-நோயின் பிடியை விலக்குவதற்கு ஏற்ப மருந்தின் அளவு.

சில மருந்துவர்கள் பெயருக்குத்தான் மருத்தவர்கள். அனுபவமோ பக்குவமோ அவர்களிடம் இருக்காது. வரன்முறை இல்லாமல் செயல்படுவர். அதனால் எதிர்பாராத சிக்கல்கள் நேர்ந்துவிடும்.

பயிர் என்று ஒன்று முளைத்தால் களையும் கூட முளைத்து வரும். வெளிச்சம் என்று ஒன்று இருந்தால் நிழலும் விழவே செய்யும். உண்மையின் நிலையும் அப்படித்தான். அதைக் குறிவைத்தே போலியும் முளைத்துவிடும். புற்றீசல் போலவே முளைத்துவிடும்.

மருந்து, மருத்துவம், மருத்துவர் எல்லாவற்றிலும் உண்மையும் உண்டு, போலியும் உண்டு.

போலி வைத்தியர்கள் அந்தக் காலத்திலும் உண்டு. கொஞ்சம் அதிகமாகவே உண்டு.

இதுசம்பந்தமாக ஒரு பாடல்.

பிரபு ஒருவர் கிட்டத்தட்ட ஜமீன்தார் மாதிரிதான். புலவர் சொந்தத்தில் மருத்துவரும் சொந்தத்தில், அவர்களுக்குச் சமஷ்தானப் புலவர் - வைத்தியர் என்கிற தோரணை உண்டு.

புலவர் ஒரு சமயம் அயலூர் போயிருந்தார். திரும்ப மூன்று வாரம் ஆகிவிட்டது. புலவர் திரும்பி வருவதற்கு முதல் நாள் பிரபு காலமாகிவிட்டார். நெஞ்சுவலி மாதிரி ஏதோ திடுதிப்பென்று வந்தது. அவ்வளவுதான் கதை முடிந்துவிட்டது.

திரும்பி வந்த புலவரின் தலையில் இடி விழுந்துதது போல இருந்தது இந்தத் துயரம்.

வைத்தியரிடம் என்ன மருந்து கொடுத்தீர் என்றார் புலவர். ''மருந்து கொடுக்கவே நேரம் இல்லையே! ஐயாவுக்கு நெஞ்சுவலி என்று ஆள் வந்தது. நான் போவதற்குள் ஐயா போய்விட்டார்! பிறகு யாருக்குக் கொடுக்க மருந்தை'' என்று புலம்பினார் மருத்துவர்.

அப்படியா என்று திகைத்தார் புலவர்! இனி யார் இருக்கிறார்கள் நம்மை ஆதரிக்க என்னும் எண்ணம் வந்து அழுத்தியது. விம்மிவிம்மி ஏங்கினார் புலவர்.

புலவர் பெருமானின் துயர வெறி குத்தலும் பக்க வெட்டும் நிறைந்த ஏளனமாக வருகிறது. எப்படி என்று பாருங்கள். ''ஐயா வைத்தியரே! சொற்களின் மணத்தையும் குணத்தையும் சுவைத்துச் சுவைத்து உணரும் பெரும் புலவன்யான். நான் வாழ்த்திப் பாடினால் ஏதாவது நடக்கும்''

''அப்படி ஒன்றும் நான் பாடவில்லையே! நீரும் மருந்து கொடுக்க வில்லை என்கிறீரே! அப்படியானால் மரணம் எப்படி நேரும்!!''

இனிப்பாடல் - வெண்பா

சொல்லாண்ட பாவின்
　　சுவைதெரிந்த பாவலன்யான்
பல்லாண்டு வாழ்க எனப்
　　பாடவில்லை - வல்லோய்! நின்
ஒப்பிடற்(கு) ஒண்ணா
　　மருந்தும் உதவவில்லை;
எப்படிச் செத்தான்
　　இவன்.

*ஒருவன் மண்டையை உதற (சாக) வேண்டும் என்றால் ஒன்று நான் வழ்த்திப் பாடவேண்டும். இல்லை நீர் மருந்து கொடுத்து மருத்துவம் பண்ணவேண்டும்.*

*வேறு எதனால் இன்னொருவன் உயிரை வாங்க முடியும் என்று சிரிக்கிறார் புலவர். ஆறாத கொதிப்பிலிருந்து வருகிற அடங்காத வெறிச்சிரிப்பு அது.*

*போலி மருந்துவம் என்பது இன்று நேற்று உண்டானதில்லை. அநாதி காலம் தொட்டு அதுவும் மருத்துவத்தோடு மருத்துவமாய்க் கலந்தே கிடக்கிறது.*

*இனி, உயிர்க் குலத்தைக் காப்பாற்றுவது தாய்ப்பால்தான். அது ஒப்பற்ற கருணைப்பால். அதனால்தான் தாய்ப்பாலை அமிர்தம் என்று சொன்னார்கள்.*

*தாய்மார்களிடம் பால் ஊறவேண்டும் என்றால் வற்றாமல் தொடர்ந்து ஊறவேண்டும் என்றால் சிறு பயறு, பெரும் பயறு, மொச்சை, முதலியவற்றை அடிக்கடி சாப்பிட வேண்டும். இவைகள் காய்களாக இருக்கும் போதே பறித்துப் பச்சையாக உண்பது மிக மிக நல்லது.*

*பயறுகளில் புரதச் சத்து மட்டுமல்ல, அமிர்தத்தை ஊறவைக்கும் அற்புதச் சத்தே நிறைந்திருக்கிறது.*

இனி, எண்ணெயின் சிறப்புப் பற்றி முன்னமே பார்த்தோம். எண்ணெய்க்கு மூலம் எள். எள்ளிலும் அதி அற்புதமான சக்தி உண்டு எள்ளையும் கருப்பட்டியையும் சேர்த்து இடித்துச் சாப்பிட்டு வந்தால் அது உடம்பை வயிரமாக்கும்.

எள்ளுக்கு அடுத்தது வேர்க்கடலை. வேர்க்கடலைப் பருப்பும் கருப்பட்டியும் சேர்ந்தால் அமிர்தந்தான். அடுத்தது தேங்காய், இதனோடு அவல், பொரிகடலை, வெல்லம் இவைகளில் ஒன்றோ இரண்டோ சேர்ந்தால் கேட்கவா வேண்டும். உடல் நலம் அப்படிப் பெருகும். ருசிக்கு ருசி நலத்துக்கு நலம்.

ஆஜானுபாகுவான பிள்ளையார் (விநாயகப்) பெருமானுக்கு அவல், கடலை, தேங்காய், வெல்லம் என்றால் ஒரே கொண்டாட்டம்.

மத்தகத்தையும் தும்பிக்கையையும் ஆட்டி ஆட்டிச் சாப்பிடுவார் பிள்ளையார்.

வித்து (பயறு) வகைகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று நெய் கொடுப்பன. இரண்டு நெய் இல்லாதவை. நெய் கொடுக்கும் எள், வேர்க்கடலை, தேங்காய், பாதாம் பருப்பு, முந்திரிப் பருப்பு, மொச்சை, பருத்தி விதை முதலியவற்றுக்கு ஒரு தனித்த பண்பு. நெய் கொடுக்க வழி இல்லாத சிறு பயறு, பெரும் பயறு, துவரை, கடலை உளுந்து முதலியவற்றுக்கு வேறொரு தனிச்சிறப்பு.

இவற்றுள் உளுந்து அற்புதத்திலும் அற்புதம். மற்றவை அமிர்தம் என்றால் உளுந்து தேவாமிர்தமேதான். அதுபற்றி பின்னர் பார்ப்போம்.

நெய் கொடுக்கும் வித்துக்களில் வேப்ப முத்து, முழுக்க முழுக்க மருந்துப் பொருள். ஆமணக்கு வித்து மருந்தாகவும் பயன்படும். எரிபொருளாகவும் பயன்படும்.

புன்னை, இலுப்பை முழுக்க முழுக்க எரிபொருள்தான்.

உணவு வகைப் பருப்புகளில் கடலைப் பருப்பு பல வகைப் பண்டங்கள் செய்யப் பயன்படுகின்றது. லட்டு, பூந்தி போன்ற இனிப்புப் பண்டங்களுக்கும், பக்கடா, பஜ்ஜி, ஆமவடை, ஓமப்பொடி, சேவு முதலிய கார வகைகளுக்கும் கடலை மாவுதான் உயிர்.

பலவகைப்பட்ட கூட்டு பொரியல்களில் கடலைப் பருப்பு சேரும். பொரிகடலை இல்லை என்றால் சட்ணி நன்றாயிருக்காது. பூம் பருப்புச் சுண்டல் என்பது நைவேத்யங்களில் பிரதானம்.

இனி உளுந்தை எடுத்துக் கொள்வோம். உளுந்துமாவு, பனைவெல்லம், நல்லெண்ணெய் மூன்றையும் சேர்த்து நீர்விட்டுக் கொதிக்கவைத்துக் கிண்டிக் கிளறினால் உளுத்தங்களி வரும். (கோதுமை மாவில் கிண்டுகிற களிக்கு அல்வா என்று பெயர். இதற்கு நெய் முக்கியம். கேழ்வரகில் கிண்டுகிற களிக்குக் கேப்பைக்களி என்று பெயர். சிறைச்சாலைக் கைதிகளுக்குக் கேப்பைக்களிதான் உணவு). உளுத்தங்களி உடம்பைப் பலப்படுத்தும். மூட்டுவலி மேல்கால்வலி, தலைச்சுற்று, வயிற்றுக் கோளாறு முதலியவற்றை நீக்கும்.

பூப்பெய்திய பெண்களின் உடல்நிலை குழலாடிப் போயிருக்கும். அப்படி இற்றுப் போன அவர்களின் நிலையை உறுதிப்படுத்த உளுத்தங்களி முக்கிய ஆகாரம். அதுமட்டுமல்ல, இன்னும் சில வருடங்களில் அவர்கள்

திருமணப் பெண் ஆகவேண்டும். அதன் பின் குழந்தைகளுக்குத் தாயாக வேண்டும். அப்படி என்றால் உடம்பு நன்றாகவும் காத்திரமாகவும் இருக்கவேண்டும் அல்லவா? அதற்காக அடிக்கடி பெண்களுக்கு உளுத்தங்களி செய்து கொடுப்பார்கள். உளுத்தம் பருப்புச் சேர்த்த சாதத்துக்குப் பருப்புச் சோறு என்று பெயர். அந்தப் பரப்புச் சோறையும் அடிக்கடி பொங்கி பெண்களுக்குக் கொடுப்பார்கள்.

பூப்பெய்திய பெண்களின் நீராட்டு விழாவில் விருந்தினர்களுக்கு உளுத்தங்களியும், பருப்புப் சோறும் கொடுத்து விருந்துபசாரம் நடத்தினர் முன்னோர். இந்த விபரம் சங்க நூல்களுள் ஒன்றாகிய அகநானூற்றில் சொல்லப்பட்டுள்ளது.

உளுத்தம் பருப்புச் சோற்றுக்கு எள்ளுத் துவையலும் நல்லெண்ணெயும் பொருத்தம். வற்றல், வடகம் துணைக்கு இருந்தால் போதும். ஜாம் ஜாம் என்று உள்ளே இறங்கும் சாப்பாடு.

உளுந்து வடை மாதிரி ஒரு பண்டம் உண்டா? தின்னத் தின்ன ருசி. உடலுக்கு உரமும் கூட. முன் காலத்தில் புதுமாப்பிள்ளைக்கு பெண் வீட்டார் அடிக்கடி வடை சுட்டுப் போடுவார்கள். ஒன்று இரண்டு என்ற குறுங்கணக்கில் அல்ல. இருபது முப்பது என்று பெரிய பெரிய உளுந்து வடையை உள்ளே தள்ளுவார் மாப்பிள்ளை. அவ்வளவும் செரித்துவிடும் புதுமாப்பிள்ளைக்கு.

இனிப்பு வகைகளில் ஜிலேபி என்று ஒன்று. இதற்கு உளுந்துமா, ஜீனி இரண்டும் பிரதானம். உடம்புக்கு மிகவும் நல்லது ஜிலேபி.

வடநாட்டார் - அதுவும் உத்திரப்பிரதேச மக்கள் ஜிலேபியை தொடர்ந்து சாப்பிடுவார்கள். இருபது இருபத்து ஐந்து என்றுகூட ஜிலேபியைச் சாப்பிட்டு விடுவார்கள்.

உளுந்தமாவுக்கும் ஜீனிக்கும் அப்படி ஒரு பொருத்தம் கரும்புச் சாறுதானே ஜீனி ஆகிறது. கரும்புச் சாறு உயர்ந்த மருத்துவப் பண்பு உடையது. தாய்ப்பாலுக்குச் சமம்.

தெய்வப் புலவரின் திருக்குறளை முப்பால் என்று போற்றுகிறோம். முப்பால் என்றால் என்ன? கரும்புச் சாறு, தேன், தாய்ப்பால் ஆகிய மூன்றுந்தான்.

கரும்புச்சாறு, இளநீர், நுங்கு, பதனீர், வெள்ளரிப் பிஞ்சு இவைகளைச் சாப்பிட்டு வந்தால் போதும். மஞ்சள் காமாலை போன்ற கொடி நோய்கள் பக்கத்தில் வராது.

இனி, நீரழிவு என்னும் நோய் படுபயங்கரமான கொடிய வியாதி அதைப் பூரணமாகக் குணப்படுத்த இன்னமும் வழிபிறக்கவில்லை. உலகமே ஒன்று திரண்டு அதனோடு போராடிப்பார்க்கிறது. நோயின் அடிவாரத்தைத் தகர்க்க முடியவில்லை.

இன்சுலின் (ஊசி) மருந்துகள் அப்போதைக்கு அப்போது கொடுக்கிற நிவாரணந்தான். இனி மேலே குறிப்பிட்ட கரும்புச்சாறு, இளநீர் முதலியவைகளுடன் உளுந்தையும் தொடர்ந்து உபயோகப்படுத்தி வந்திருந்தால் நீரழிவு என்னும் கொடிய நோய் மனித உடம்பைத் தொடுவதற்கு வாய்ப்பே இல்லை.

இட்லி, தோசை இரண்டுக்கும் உளுந்தமா இல்லை என்றால் ஒன்றும் நடக்காது. இனி, தனி உளுந்தமாவில் இட்லி அவிக்கலாம், தோசையும் சுடலாம். இந்த இட்லி தோசையை புளிக்காத தயிர்விட்டுப் பிசைந்து தொடர்ந்து சாப்பிட வேண்டும். நீரழிவு நோய்கட்டுப்பாட்டில் இருக்கும் திமிறாது.

சர்க்கரைக் கொல்லி என்னும் மூலிகை, வேப்பிலைக் கொழுந்து, பாகல்காய், நாவல்பழக் கொட்டைப் பொடி என்று எதை எதையோ உபயோகித்துப் பார்க்கிறார்கள். ஆனால் உளுந்துக்குத்தான் சொன்னபடி கேட்கிறது நீரழிவு.

பல ஆண்டுகளுக்கு முன் நாட்டு வைத்தியர் ஒருவர் கொடிய சயரோக நோயாளிக்கு மருததுவம் பண்ணினார். சிறுபருப்புக் கூழ் தேங்காய்ப்பால், பருத்திக் கொட்டைப் பால் மூன்றும் கலந்த கஞ்சி. உளுத்தம் பருப்புக் கஞ்சி இவற்றை மாற்றி மாற்றிச் சாப்பிடச் சொன்னார். உணவும் இவைதாம். மருந்தும் இவைதாம். என்ன ஆச்சரியம்? நாற்பது நாட்களுக்குள் குணமாகிவிட்டது சயரோகம்.

அப்படியானால் உளுந்தைத் தேவாமிர்தம் என்று சொல்வது பொருத்தம்தானே.

இனி, சீடை, மறுக்கு, தேன் குழல், தட்டை முதலிய பண்டங்களுக்கும் உளுந்தமா தான் முக்கியம். பெண்டுகள் தாளிக்கும் தாளிதத்தில் உளுத்தம் பருப்பைத்தான் போடுவார் கள். கடலைப் பருப்பையோ, துவரம் பருப்பையோ போட மாட்டார்கள்.

இனி நாம் உண்ணும் சாதத்தோடு வெந்து குழைந்த துவரம் பருப்போடு நறுமணம் கமழும் பசுவின் நெய்யும் சேர்ந்தால் அதற்கென்று ஒருமணம். அதற்கென்று ஒரு தனி ருசி.

மேலே குறிப்பிட்ட மூன்றையும் சேர்த்துச் சாபப்ட்டால் ஒவ்வொரு பிடி அன்னத்துக்கும் ஒவ்வொரு சிரங்கை ரத்தம் ஊறும் என்று யாழ்ப்பாணம் மகாவித்வான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்கள் அலங்காரமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனால் இதில் ஒரு உண்மை என்னவென்றால், துவரம் பருப்பில் நாவின் ருசிதான் பிரதானம், சத்து ஓரளவு உண்டு. ஆரோக்கியம் குறைவு. துவரம் பருப்பைவிடச் சத்து நிறைந்தது உளுத்தம் பருப்பு. ஆரோக்கியமும் உளுத்தம் பருப்பில்தான். சாதத்தோடு வெந்து குழைந்த உளுத்தம் பருப்பைப் போட்டுச் சாப்பிட்டால் தேகத்தில் வல்லமை ஏறும். பூர்வகாலத்தில் இந்தப் பழக்கம் இருந்தது. இப்பொழுது மாறிவிட்டது. துவரம் பருப்பு, சிறுபருப்பு என்று போய்விட்டது பழக்கம்.

இந்தக் காலத்திலும் ராஜபாளையத்தைச் சேர்ந்த ராஜுக்கள் உளுத்தம் பருப்பை உபயோகிக்கிற வழக்கம் இருக்கிறது. பொதுவாக தெலுங்கர்கள் உளுந்து, நல்லெண்ணெய், புளி, மிளகுவற்றல், மா, கடுகு இவற்றைத் தாராளமாக உபயோகிப்பார்கள். ஆண்கள், பெண்கள், வயோதிகர்கள் கூட ஓங்குதாங்காகவே இருப்பார்கள். கன்னடர்கள், ஒரியர்கள், மராட்டியர்கள், இவர்களிடமும் இந்தப் பழக்கம் அதிகந்தான். சிலர் மிளகுவற்றலுக்குப் பதில் மிளகை அதிகம் உபயோகிப்பார்கள்.

அகில உலக உணவு முறை விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் என்று ஒன்று. அதில் நிபுணர் பலர் சேர்ந்து ஆராய்கிறார்கள். பல முடிவுகளும் கண்டிருக்கிறார்கள்.

அதில் ஒரு முக்கியமான முடிவு தென்னிந்தியர்கள் - அதிலும் தமிழர்களின் உணவு முறைதான் உலகிலேயே சிறந்தது என்கிற தீர்ப்பு.

''பசியை ஆற்றுவது மட்டுமல்ல, உடல், மனம், செயல் எல்லாவற்றையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும் மருத்துவப் பண்பும் தமிழர்களின் உணவோடு சேர்ந்து கிடக்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

அனுபவம் மிக்க இந்தப் பக்குவ நிலைக்கு வர பலபல நூற்றாண்டுகள் ஆர்வத்தோடு உழைத்துக் கண்டுபிடித்திருக்க வேண்டும். (தமிழ் மக்கள் )என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அரிசிதான் நமது ஆகாரம். நெல்லைப் பக்குவமாக அவித்து புழுங்கவைத்துக் காயப் போடுவார்கள். பிறகு குற்றி அரிசி ஆக்குவார்கள். இப்படி வரும் அரிசிக்குப் புழுங்கல் அரிசி என்று பெயர்.

நெல்லை அவிப்பதிலும் காயவைப்பதிலும் ஒரு அற்புதம் எப்படியோ உண்டாகிறது. உயிர்ச்சத்துக்கு மூலமான தாது அதோடு சேர்கிறது. பல நோய்களை எதிர்த்து விரட்டும் வல்லமை புழுங்கல் அரிசிக்கு வந்துவிடுகிறது. அவித்துக் குற்றாத பச்சரியில் இந்த அற்புதம் இல்லை. முன் காலத்தில் கைக் குத்தல் அரிசிதான். தவிடு முழுதும் நீங்காமல் அரிசியோடு சேர்ந்திருக்கும். இந்தத் தவிட்டில் உடலுக்கு உரம் கொடுக்கும் ஆரோக்கியப் பண்பும், மேனிக்கு ஒளி ஊட்டும் தைலச் சத்தும் நிறைந்துள்ளன. ஆனால் நாகரீகம் என்ற பெயரால் அவித்துக் காய்ந்த நெல்லை பெரிய பெரிய யந்திரங்களில் கொட்டி தவிட்டை அறவே பிரித்து எடுத்துவிடுகிறார்கள். வைக்கோல் போன்ற சக்கையான வெறும் அரிசிதான் மிச்சம்.

அதுவும் உடம்புக்கு ஓரளவு உரம் கொடுக்கிறது. எலும்பு, நரம்பு இவைகள் கொதித்துப் போகாமல் இருக்க அரிசி உதவுகிறது. பச்சரிசியில் இதுகூட இல்லை .இருந்தாலும் ஓரளவுதான்.

ஆனாலும் பச்சரிசி மாவாகத் திரிக்கப்பட்டு பல பண்டங்களுக்கு உபயோகப்படுகின்றது. புழுங்கல் அரிசிமா, உளுத்தமா தேவை என்றாலும் பல பண்டங்களுக்குப் பச்சரிசிமாதான் கதாநாயகன்.

# 16

## எளிமையில் இருக்கிறது இன்பம்

ஒரு மொழியிலேயே பேசினால் மக்கள் வசியப்படமாட்டார்கள். இடை இடையே வேறொரு மொழியிலிருந்தும் வார்த்தைகளை எடுத்துப் போடவேண்டும். கட்டுண்டுவிடுவார்கள் மக்கள்'' என்று சாணக்கியர் சொல்லி இருக்கிறார்.

காளையை நந்தி என்றால் ஒரு வியப்பு. புல்லை தர்ப்பை என்றால் ஒரு மயக்கம். அதேபோலத்தான் பசு என்பதைக் காமதேனு என்றால் என்னதோ ஏதோ என்று ஒரு அதிசயம் வருகிறது. திகைத்துப் பார்க்கிறான் மனிதன்.

பனைமரம் என்றால் சாதாரணமாகப்படுகிறது மனிதனுக்கு. அதையே கற்பக விருட்சம் என்றால் வாயைப் பிளக்கிறான். பனை மட்டுமல்ல, தென்னையும் கற்பக விருட்சந்தான்.

பனை, தென்னை இரண்டையும் விட மேலான கற்பக விருட்சம் ஒன்று உண்டென்றால் அது வாழைதான்.

வாழை மரத்தில் உள்ள ஒவ்வொரு அம்சமும் மனிதனின் உயிருக்கு உயிர். வாழைப் பூக்கறி இருக்கிறதே அது வயிற்றுப் புண்களை ஆற்றிவிடும். வாழைத் தண்டுக் கறியோ குடலுள் விழுந்து சண்டித்தனம் பண்ணுகின்ற கற்களை எல்லாம்-உறுதியான மணல் துண்டுகளை எல்லாம் கரைத்து வெளியேற்றிவிடும். வாழைக்காய்க் கறியைப் பற்றிச் சொல்லவே வேண்டும்.

உடம்புக்கு உகந்தது வாழைக்காய். இனி வாழைப்பழம் இருக்கிறதே அது தெய்வமாக்கனிதான். ஆப்பிள் ஆப்பிள் என்று குதிக்கிறோமே அந்த ஆப்பிளில்கூட வாழைப் பழத்தில் இருக்கிற நயமும் பண்பும் இல்லை.

வீரியமான மருந்துகள் உண்டவர்களுக்கு இறுக்கம் ஏற்படும். நீர்ச்சத்து வற்றும். ஏதோ ஒன்று உடம்பை முறுக்கி நெறிக்கும். விக்கல்வரும். இவை எல்லாம் வராமலிருக்க வாழைப்பழம் சாப்பிட வேண்டும். மருந்தின் வீர்யத்தை ஒதுக்கி மருந்தையே வேலை செய்யவைக்கும் வாழைப்பழம்.

வாழைப்பூப் பொரியல், வாழைத் தண்டுக் கூட்டு, வாழைக்காய் துவரம், ஆகியவற்றைத் தொடர்ந்து உணவாக உண்டுவந்தால் புற்று நோய் வராது. புற்று நோய்க்கு எமன் வாழை.

மேலே சொல்லிய பொரியல், கூட்டுகளுடன் கீரைகளில் ஒன்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். சாதத்தில் பிசைந்து சாப்பிடவோ வற்றல் (காரக்) குழம்பு வேண்டும். சுண்டவற்றல், கண்டங்கத்தரி வற்றல், மணத்தக்காளி வற்றல், முதுக்க வத்தல், பூண்டு, மாங்கொட்டை, உள்ளி, மிளகு, வெந்தயம் ஆகியவை சேர்ந்த புளிக்குழம்பும் கீரையும், வாழையும் முறைப்படி உடலோடு சேர்ந்து வந்தால் மேனி பொன் மேனிதான். ''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த

மாநிலத்தே'' என்னும் ஆனந்தத்தையே கொடுக்கும் மேலே சொன்ன உணவு.

அரச மரத்தைச் சுற்றிவந்ததும் அடிவயிற்றைத் தடவிப் பார்க்கிற முறை தப்பு. எந்த அமிர்தமான உணவானாலும் சரி. அது இளமையிலிருந்தே உடம்புடன் ஒட்டி இருக்கவேண்டும். அப்போதுதான் தேவை அற்றன உள்ளே போய் வயிற்றைக் கெடுக்காமல் இருக்கும்.

கண்டதுகழியதுகளை உண்டு களித்துக் கொண்டாடித் தீர்த்தபின் நாள் வாழைத் தண்டைச் சாப்பிடுகிறேன். வாழைப் பூவை உண்கிறேன் என்றால் அதில் அவ்வளவு புண்ணியம் இல்லை.

நோயை உரசவிடாமல் வாழ்வதுதான் வாழ்வு. நோய்க்கு வசப்பட்டு பிறகு அதை விரட்டப் போராடுவதெல்லாம் தாழ்வுதான்.

பழம் என்றால் வாழைப்பழம் தான். அதற்கு அடுத்தது மதுரமான மாங்கனி. அதற்கும் அடுத்தது பலாப்பழம். இவற்றுக்கு நிகரான கனிவகை உலகில் இல்லை. அரபு நாடுகளில் விளையும் பேரீச்சம்பழத்தை வேண்டுமானால் வாழை முதலிய கனிகளுக்கு நிகராகச் சொல்லலாம்.

விளாம்பழம், மாதுளம் பழம், நாவல், இலந்தை இவை ஓரளவு உடலுக்கு உகந்தவை, அத்திப்பழமும் அப்படியே. இவற்றில் உள்ள மருத்துவ குணத்தை அங்கீகரித்து உணவு வகைகளில் முன்னோர்கள் சேர்த்தனர்.

''அத்திப் பழமும் அரக்கீரை நல்வித்தும்
கொத்தத் திருத்தி கூழட்டு வைத்தனர்.''

என்பது திருமந்திரப் பகுதி.

நெல்லிக்காய் ஒரு உன்னதமான மருத்துவப் பண்புமிக்க உணவுப் பொருள். அதிலும் நேப்பாள நெல்லி மிக மிக மேலானது.

எலுமிச்சம் பழத்தை ராஜகனி என்பார்கள். பலவகை நோயகளை எலுமிச்சை குணப்படுத்தும். எலுமிச்சம் பழத்திலிருந்து பொடி ஒன்று செய்கிறார்கள். இந்தப் பொடியை வெந்நீரிலோ தண்ணீரிலோ போட்டுக் குடித்தால் போதும் தளர்ச்சி சோர்வு ஓடிவிடும். வயிற்றோட்டத்தையே கட்டுப்படுத்திவிடும். இந்த எலுமிச்சப் பொடி நான்கு ஐந்து வேளை பருகினால் போதும் தெம்பும் வலுவும் வந்துவிடும். எலுமிச்சம் பழம் முழுக்க முழுக்க சஞ்சீவி. சாறு, தோடு, விதை அவ்வளவும் அமிர்தந்தான்.

எலுமிச்சைக்கும் நாரத்தைக்கும் நெருங்கிய உறவு. நரந்தை என்னும் நாரத்தையிலிருந்துதான் ஆரஞ்சுப் பழவகைகள் வந்தன.

நாரத்தை இலையில் அற்புதமான மூலிகைப் பண்பு உண்டு. நாரத்தங்காய் ஊறுகாய்க்கு உகந்தது.

நமது உணவில் சாதம், குழம்பு, காய், கனி இவைகளுக்குள்ள அத்தனை பெருமையும் மோருக்கு உண்டு. மோர், தயிர் இவற்றை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக குடிக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆயுள் விருத்தி.

நெய்யைச் சுருக்க வேண்டும். மோரைப் பெருக்க வேண்டும்.

"நீர்கருக்கி மோர் பெருக்கி
நெய்சுருக்கி உண்டக்கால்
பேர்பெருக்கி வாழ்வார்
பெரிது"

*என்பது ஒரு பழம் பாடல்.*

*கறிவேப்பிலை, பெருங்காயப்பொடி இஞ்சித்துண்டு இவற்றைப் போட்டு ஊற வைத்த மோரைக் குடிக்கக் குடிக்க அமுதம் சுரக்கும் உடம்பில்.*

*தமிழர்கள் மோர்ச்சாதம் என்று கட்டாயம் சேர்த்துக் கொள்வார்கள். தயிர்ச்சாதம் என்பது அதன் பட்டப்பெயர். வழிநடைப் போக்குக்கு தாளித்துக் கொட்டிய தயிர்ச்சாதந்தான் உற்றதுணை . கட்டமுது என்று அதற்குப் பெயர்.*

*மோர்ச்சாதத்துக்கு துவையலோ, ஊறுகாயோ வேண்டும். நம்மவர்கள் ஊறுகாய்களிலும் துவையல்களிலும் விதவிதமாகச் செய்து ஆனந்த விளையாட்டே விளையாண் டிருக்கிறார்கள்.*

> "வரகரிச் சோறும்
> வழுதுணங்காய் மொட்டும்
> மொரமொர னவேபுளித்த
> மோரும்..."

*அடடா, நினைக்க நினைக்க வாயில் தேனூற வைக்கிறதே என்று ஔவைப் பிராட்டியார் அதிசயப்படுகிறார்.*

*பொதுவாக திட பதார்த்தமாகிய சோறு, பருப்பு, காய் இவைகளை விட கஞ்சி நல்லது. கஞ்சிக்கு கூழ் என்று பெயர். முன் காலத்தில் கூழ் என்னும் சொல்தான் உண்ணும் உணவுக்கு வழங்கி வந்த பெயர். செல்வத்தையும் கூழ் என்னும் சொல்லே உணர்த்தியது.*

*கஞ்சி உடம்புக்கு சத்து மட்டுமல்ல. உடம்பினுள் இருக்கும் அட்டு அசடு (யூரியா போன்றவை) முதலியவற்றை*

கழிவி வெளியில் கொட்டிவிடுகிறது. கிட்னி என்னும் சிற்றோடை மூலம் வெளியேற்றி விடுகிறது அழுக்கை.

கஞ்சிக்கு அடுத்தது பழையது. ஒரு நாளைக்கு ஒரு வேளையாவது கஞ்சியோ, பழையதோ உணவாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உருப்படும் உடம்பு.

கஞ்சிக்கோ பழையதுக்கோ தடபுடலாக ஒன்றும் வேண்டியதில்லை. சாதாரண ஊறுகாய், துவையல், உள்ளி, வற்றல் இவற்றில் ஒன்று இருந்தால் போதும்.

இப்பொழுதும் கேரள மக்கள் கஞ்சியை அவசியம் உணவாக உண்டு வருகின்றனர். கஞ்சித் தண்ணீர், கஞ்சிக் கலையம், கூழ்ப்பானை, கூழ் வார்த்தல் என்னும் சொற்கள் இதன் அருமையையும் பெருமையையும் பறைசாற்றுகின்றன.

ஆடம்பரமான உணவை விட எளிய உணவு எவ்வளவோ நல்லது. இது உலகம் கண்ட உண்மை.

பாலையும் நெய்யையும் மோரையும் கொடுத்து உலகம் முழுவதையும் அன்னை போல் பாதுகாக்கும் பசுவும் ஆடும் வெறும் பசும்புல்லைத் தின்றுதானே செழிக்கின்றன. கம்பீரமும் வல்லமையும் மிக்க குன்று போன்ற பிரமாண்டமானது யானை. அது உண்பது தென்னைமட்டை, மூங்கில் இலை போன்ற தழை குழைகளே.

மாமிச உணவில்தான் சத்து இருக்கிறது. சைவ உணவில் சத்து இல்லை என்பது அறியாமை. உண்மையான பலமும் உடல்நலமும் சைவ உணவில்தான் இருக்கின்றன.

கம்யூனிச தத்துவத்தின் மூலநாயகன் காரல்மார்க்ஸ். அவருடைய உற்றதுணை பிரடெரிக் ஏங்கல்ஸ். பிரங்டரிக் ஏங்கல்ஸ் தாம் எழுதிய சமுதாய நிலையும் வளர்ச்சியும்

என்னும் புகழ்மிக்க நூலில் சொல்கிறார். ''மாமிச உணவில் உயிர்ச்சத்து மிக மிகக் குறைவு. சைவ உணவில்தான் அது நிறைந்துள்ளது'' என்று.

சைவ உணவிலும் இலை, தழை, குழை முதலிய கீரை வகைகளிலும், பழையது, கஞ்சி முதலிய கூழ் வகைகளிலும், தண்ணீர், மோர், தேன் போன்ற திரவ வகைகளிலும், வாழைப்பழம் போன்ற எளிய கனி வகைகளிலுமே சத்து நிறைந்துள்ளது.

ஆனால் ஆடம்பரமும் அகம்பாவமும் நமது உணவு முறையை மாற்றி எங்கோ நெடுந்தூரத்துக்கு அப்பால் கொண்டு போய்விட்டுவிட்டது நம்மை. கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருக்கிறது நமது உணவின் இன்றைய பரிதாபநிலை.

உடம்புக்கு தேவை குறைவுதான். ஆனால் நாம் உபயோகிப்பதோ மிக மிக அதிகம். நோய்க்கு மூலகாரணமே கழிபேர் இரைதான்.

மனிதக்குடல் பட்டுப் போன்ற மிருதுவனான ஒரு தங்கக் கோவில். ஒட்டகத்தைப் போல அடக்கி வைத்துச் செரிக்க வைக்கவோ, பாம்பைப் போல எலும்போடும் தோலோடும் விழுங்கியதை அறைத்துக் கூழாக்கவோ மனிதக் குடலால் முடியாது. மாடு போல வைக்கோலை அறைத்து அமிர்தம் இறக்கவும் முடியாது.

மனிதக் குடலில் இருப்பு என்பது கூடவே கூடாது. அது கொடிய நஞ்சு. உடனுக்குடன் சாறு வேனறு சக்கை வேறு என்று பிரிய வேண்டும். ஒட்ட வேண்டியது ஒட்ட வேண்டும். பிரிந்து வெளியேற வேண்டியது வெளியேறிவிட வேண்டும். வாய்தாவும் கெடுவும் பத்து மணிநேரம்தான். அதற்கு மேல் பட்டால் குடல் முழுவதும் புழுவும் பூச்சியுந்தான்!

நல்ல முறையில் உண்ட உணவு வெந்து குழைய தண்ணீர் முக்கியம். காற்று முக்கியம், உடலுழைப்பும் முக்கியம். எல்லாவற்றையும் விட உணவில் அடக்கமும் மரியாதையும் மிக மிக முக்கியம்.

தண்ணீரானது உயிருக்கு உற்றதுணைவன். அம்மைக் கட்டு போன்ற கொடிய நோய்களை கூட தண்ணீர் (ஒத்தடம்) வைத்தியம் குணப்படுத்திவிடும். ஈரத்துணியால் களிமண்ணைக் கட்டி அடிவயிற்றோடு வைத்து படுத்த பின் கொடிய விஷக்காய்ச்சலே பறந்து ஓடிவிட்டது என்று மகாத்மா காந்தி எழுதி இருக்கிறார்.

வெப்பை அள்ளி வீசுகிற காய்ச்சலின் ஆங்கார வெறியை பச்சைத் தண்ணீர் மூலம் மடக்கிய விந்தையை ரசிகமணி டி.கே.சி நிரூபித்துக் காட்டி உள்ளார்கள்.

கொல்லனுடைய உலையில் இரும்பைப் பழுக்கக் காய்ச்சுவார்கள். பிறகு அதை எடுத்து அடிகல்லில் வைப்பார்கள். சம்மட்டியால் ஓங்கி ஓங்கி அதை அடித்துத் துவைப்பார்கள். அப்பொழுது அதில் தண்ணீர் விட்டு நனைய நனைய குளுப்பாட்டியே அடிப்பார்கள். இப்படியாக நீரும் நெருப்பும் இணைய இணையத்தான் இரும்புக்கு உறுதியும், விறைப்பும் (டெம்போ) கூடுகின்றன'' என்று சொல்வார்கள் டி.கே.சி.

இரும்பையே உறுதிப்படுத்தும் சாதனம் தண்ணீர் என்றால் மனித உடம்புக்கு கேட்கவா வேண்டும்.

தண்ணீர், வெயில், உடலுழைப்பு, எளிய உணவு, இனிய சிந்தனை இவை எல்லாம் மனிதனுக்கு கடவுள் கொடுத்த வரப்பிரசாதங்கள். இவற்றை வைத்துக் கொண்டு கன்றுக்குட்டி மாதிரி துள்ளித் திரியலாம். உல்லாசமாக வாழலாம். செக்கில்

போட்டு அறைப்பதுபோல உயிரையே அறைக்கிக் கசக்கும் கொடிய நோயின் வாடையே இல்லாமல் வாழலாம்.

ஆனால் இவ்வளவு கிடைத்தும் பலன் பெற முடியவடில்லை மனிதனால். சொகுசு, களிப்பு என்கிற பெயரில் எதை எதையோ உள்ளே தள்ளுகிறான். பிறகு அவற்றை எரித்து சாம்பலாக்க எதை எதையோ உள்ளே ஊற்றுகிறான்.

பிறகு எப்படி உருப்படுவான் மனிதன்.

உணர்ச்சிமயமான ஒளியானது தவமிருந்து தவமிருந்து உயிராகியது. அந்த உயிரே தவமிருந்து தவமிருந்து உடம்பாக விளைந்தது.

நவரத்ன கசிதமாகிய வயிரக்குன்றுதான் உடம்பு. அந்த குன்றையே தட்டி நொறுக்கிப் பொடிப் பொடியாக்கிவிடுகிறானே மனிதன் என்று நொந்து குமுறுகிறார் ஒரு ஞானி.

**நந்த வனத்திலோர் ஆண்டி - அவன்**
**நால்ஆறு மாதமாய்க் குயவனை - வேண்டி,**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதைக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!**

அடடா, தெய்வாம்சம் மிக்க மனிதன் இப்படி கூத்தாடி பயலாகப் போய்விட்டானே என்று துடிக்கிறது தமிழ்.

கூத்தாடிப் பயலிடம் எதைப் பற்றிய பொறுப்பும் இருக்காது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பதுதான் கூத்தாடியின் குணம்.

நெறிமுறை பிறழப் பிறழத்தான் நோய் வந்தது. நோயை அடக்க மருந்து, மருந்துக்கு துணை வைனத்தியம்! விளை

நோய்ப் பெருக பெருக மருந்து விளைய வடிளைய வைத்தியம் பிழைப்பாய் போய்விட்டது. கொள்ளைக்காரப் பிழைப்பாகவே போய்விட்டது.

துட்டைப் பிடுங்குவதில்தான் மருத்துவர்கள் குறியாய் இருக்கிறார்கள். அரண்மனை போல அவர்கள் கட்டுகிற - கட்டிக் கொண்டே இருக்கிற மருத்துவ நிலையங்கள் போதாதா சாட்சியத்துக்கு.

ரத்தம், சளி, மூச்சு, சிறுநீர், மலம், எடை, ரத்த ஓட்டம், அடைப்பு, தடை, புண் ஒவ்வொன்றையும் கண்டுபிடிக்கத் தனித்தனி கருவிகள். நிபுணர்கள் வேறு.

ஏழை எளியவன் உள்ளே போக முடியுமா மருத்துவமனைக்குள்? தப்பித் தவறி நுழைந்தவன் உயிரோடு திரும்புவானா? ஏன் இந்த பரிதாபம்.

யாரும் இதுபற்றி யோசிப்பதாக இல்லை.

யோசிக்கிற புத்தி வந்தால் மருத்துவமனைகளை வளர்க்கமாட்டார்கள். ஆரோக்கியத்தையே-தூய்மை, எளிமை, நலம், முதலிய பண்புகளையே பெருக்குவார்கள்.

“வருமுன்னர் காவாதான்
வாழ்க்கை - எரிமுன்னர்
வைத்தூறு போலக்
கெடும்”

என்றார் தெய்வப்புலவர்.

(எரி-தீ, வை-வைக்கோல், தூறு-படப்பு)

நோய்க்கு இடம் கொடேல் என்பது மூதுரை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது ஞான ஒளி.

நோய்க்கு இடம்கொடுக்காத வாழ்வுதான் வாழ்வு. தெய்வமும் மனிதனும் கையோடு கை கோர்த்துக் கொஞ்சி விளையாடும் வாழ்க்கை எது என்றால் அது நோயற்ற வாழ்வுதான்.

நோயோடு கிடந்து மல்லுக் கட்டுகிறவன் காரியம் நரக வேதனை. அவனுக்கு வாழ்வும் இல்லை. வாழ்க்கையும் இல்லை.

இனி, எதிர்பாராத விபத்துப் போல சூழ்நிலை கோளாறால் நோய் வந்து ஒருவனை தாக்குவது உண்டு. அட்டூழியம் செய்தால் அதற்குரிய பலனை உடனுக்குடன் காட்டாது உடம்பு .ரத்தத்துக்குள் மட்டுமல்ல எலும்புக்குள்ளும் நரம்புக்குள்ளும், மனிதன் செய்த போக்கிரித்தனங்களை பத்திரப்படுத்தி வைத்திருக்கும் உடம்பு.

நாளாக நாளாக இவன் தளரத்தானே செய்வான். அந்த நேரம் பார்த்து புலிப்பாய்ச்சலில் வந்து அடிக்கும் பதுங்கிக் கிடந்த இழிசெயல். அதாவது கொடுநோய்.

அப்பொழுது மருத்துவர் வேண்டியதுதான். மருந்தும் வேண்டியதுதான். மருத்துவமும் வேண்டியதுதான்.

வேண்டாம் என்றால் விதியானது கவ்வி இழுத்துக் கொண்டு போய்விடும் உயிரை.

இவன் போகிறது பெரிதில்லை. போகிறதுக்குள் உற்றார் உறவினரை எல்லாம் அழ அழ வைத்துவிடுவான். அவ்வளவு தொல்லை.

மற்றவர்களுக்கு இந்தப் பாடு என்றால் இவன் அழுந்துகிறதைப் பற்றிச் சொல்லவா வேண்டும்.

இந்த விசித்திர நோயாளிகளை நோயிலிருந்து விடுவிக்கும் மருத்துவர்கள் பரிவோடு பார்க்க வேண்டியவை மூன்று.

*முதலாவது பார்க்க வேண்டியது இந்த நோய் காரணமாக இவனுடைய உடம்பு எவ்வளவு தரம் கெட்டிருக்கிறது (உற்றான் அளவு) என்பதை. இரண்டாவது இந்த நோய்க்கு மூலம் என்ன? அது எவ்வளவு நாட்களாக இவனுக்குள் கூடுகட்டி இருந்திருக்கும் என்னும் (பிணி அளவு) கால அளவு. கடைசியாகத் தீர்மானிக்க வேண்டியது உடம்பின் கட்டுக் கோப்பு சேதப்படக் கூடாது. அதே நேரத்தில் நோயும் இவனை விட்டு ஒழிய வேண்டும். அதற்கு ஏற்ற பக்குவமான மருந்தின் அளவு. அதைக் கால தேச வர்த்தமான முறைப்படி கையாள வேண்டும்.*

*இந்த மூன்றையும் வெறும் அறிவுக் கண் கொண்டு மட்டும் பார்க்கக் கூடாது. கருணையும் பரிவும் நிறைந்த அன்போடு வைத்து மருத்துவம் பண்ண வேண்டும்.*

*இதுபற்றி வள்ளுவப் பெருமான் சொல்கிறார்.*

"உற்றான் அளவும்,
பிணி அளவும், காலமும்
கற்றான் அறிந்து
செயல்.

*உற்றான் - உடம்பு, பிணி -நோயின் மூலம் - காலம் - நேரத் பொருத்தம் - அதாவது நோயாளியின் வயது, தாங்கும் சக்தி பற்றிய நுண்ணறிவு.*

*இனி, எங்கும் நிறைந்த பேருண்மை ஒன்று.*

*எத்தனை பக்குவம் இருந்தாலும் சரி, எத்தனை மருத்துவர் திரண்டு நின்று போராடினாலும் சரி. மரணத்தை யாராலும் வெல்ல முடியாது.*

# 17

# தமிழும் மருத்துவமும்

''பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்'' இதுதான் உண்மை.

உண்மையில் பிறப்பும் இறப்பும் தோற்றந்தான். சேர்ந்து கூடி நடிப்பதும், பிறகு தனித்தனியாக பிரிந்து ஓடுவதும் இயற்கையின் விளையாட்டு. தீராத விளையாட்டு.

இந்த விளையாட்டுத்தான் இறைவனுடைய ஆனந்த நடனம். திருவிளையாடல்.

ஆனால் சேர்ந்து சிரிக்க வந்த பிறவியின் குறிக்கோள் ஆனந்தம். அந்த ஆனந்தத்தை பறிகொடுத்து நோயின் பிடியில் சிக்கி உழல்வது பேதைமை.

வாதம், பித்தம், சிலேஷ்மம் என மூன்று நாடிகள் மனித உடம்பில் உண்டு. மூன்றும் அது அதற்கு என்று ஏற்பட்ட அளவோடு இருக்க வேண்டும். அளவு கூடுவதும் தவறு, குறைவதும் தவறு.

மேலே குறிப்பிட்ட சிலேட்டும வகையை சேர்ந்தது சளி. அது அளவு கூட இடம்கொடுத்துவிட்டால் பிறகு அதை அடக்க

முடியாது. இழைப்பு வரும், மூச்சை முட்டும், ஆஸ்துமா, சயம் என்று விதவிதமாக வந்து உயிரை வாங்கும்.

எந்த வைத்தியத்துக்கும் கட்டுப்படாத நோய்கள் என்று மருத்துவத்தில் ஒரு பட்டியல் உண்டு. அளவுக்கு மீறிய சளிப்பிடிப்பு அந்த பட்டியலில் இடம்பெற்றது.

சளி கூடக் கூடக் கட்டியாக உறையும். பிறகு கல்லாக இறுகும். இழை இழையாக திரித்திரியாக பிரிந்து அங்கங்கே உள்ள நரம்புகள், ரத்த நாளங்களை இறுக்கும். எலும்பைக் கூட சுற்றி வளைத்துப் பின்னும் சளி.

அப்படிப் பின்னி முறுக்குகிற சளி சும்மா இருக்காது. எலும்பு, நரம்பு, ரத்த நாளம் இவை ஒவ்வொன்றையும் கொஞ்சம் கொஞ்சமாக அரித்து தேய்க்கும். மூச்சுக்குழலை வந்து மறிக்கும். அதனால் பிராணவாயுவும், ரத்த ஓட்டமும் தடைப்படும். அவை தடைப்பட்டால் என்ன ஆகும்? உடம்பின் உள்ளே இருக்கிற ஆயிரம் ஆயிரம் தாதுக்களும் புண்பட்டு, செயலிழந்து, சீழ் கொட்ட ஆரம்பித்துவிடும்.

கொடிய எமனாகிய சளிப் பெருக்குக்கு காரணங்கள் பல இருக்கலாம். முக்கியமான காரணம் உடலுறவில் நிதானமில்லாத வெறிதான்.

சளிக்கட்டு அதிகம் உள்ளவனுக்கு காமவெறி அதிகம். காமவெறி அதிகரிக்க அதிகரிக்க சளிக்கு ஒரே கொண்டாட்டம். அப்படி ஒரு அதிசய இணைப்பு.

சிறுகுழந்தைக்கு சளியும் கோழையும் கட்டி கட்டியாக உற்பத்தி ஆகிறதே - அதற்கும் மோகவெறிக்கும் சம்பந்தம் இல்லையே என்று கேட்கலாம்.

குழந்தை என்ன செய்யும். குழந்தைக்கு இந்தச் சளியையும் பாவத்தையும் வைத்தது அதனுடைய பெற்றோர்கள்.

சளி உபத்திரவம் ஒரு பரம்பரை நோய் சளி முற்றிவிட்டால் அது பல நோய்களை இழுத்து துணைக்கு வைத்துக் கொள்ளும். மண்டையடி, காய்ச்சல், மேல்கால் வலி, பல் வலி, வயிற்று வலி இப்படி மாறி மாறி ஏதாவது ஒன்று பிடித்து ஆட்டிக் கொண்டே இருக்கும்.

அடிக்கடி (சளித் தொந்தரவால்) நோய் வந்து, நோயோடு உடம்பு பழகிவிட்டால் பிறகு தனித்து நிற்க முடியாது உடம்பால். ஏதாவது ஒரு நோயை வலிய இழுத்துத் துணைக்கு வைத்துக் கொள்ளும் உடம்பு.

இளமையிலிருந்தே உணவில் வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடும், நடவடிக்கைகளில் ஒழுங்கும் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் பரம்பரை பாத்யதைக்கு ஆளான சளி நோயாளியும் தப்பித்துவிடுவான். பால், மோர், தயிர், நெய் இவை சளிக்கு உரம் கொடுக்கும். தூதுவளை, கண்டங்கத்தரி, மணத்தக்காளி, நெரிஞ்சி, கொழுஞ்சி இவற்றின் சாறுடன் பருத்திக் கொட்டைப்பால், உளுத்தம்பருப்புக் கஞ்சி, சீரகம், மிளகு, பூண்டு இவைகளையும் சேர்த்து வளமாக சாப்பிட வேண்டும். கபம் உடையும். துண்டு துண்டாய் கட்டி கட்டியாய் கோழை (சளி) வெளியில் வந்துவிடும்.

அதைப் பார்த்தால்தான் அடகடவுளே, இவ்வளவும் இந்த உடம்புக்குள் எப்படி அடைபட்டுக் கிடந்தது என்னும் புத்தி வரும் மனிதனுக்கு.

சளியை வடித்தெடுக்க மேல்நாட்டு முறையில் வீரியமான மருந்துகள் பல உள்ளன. அவை சளியையும் ஒடுக்கும். உடம்பையும் கெடுக்கும்.

*கபம் உடை படாமல் நெஞ்சுக்கூட்டில் கூடு கட்டிவிட்டால் மேல் மூச்சு கீழ் மூச்சு வ.ங்கும். கண் விழி பிதுங்கும். அறிவு செயலிழந்து விடும். பிறகு மருந்து வைத்தியம் ஒன்றும் எடுபடாது.*

*சளிக்கு கோழை என்று ஒரு பெயர். ஐ என்று இன்னொரு பெயரும் உண்டு.*

*அதன் அட்டகாசத்தைப் பற்றி பட்டிணத்தார் சொல்கிறார் பாருங்கள்.*

ஐயும் தொடர்ந்து
விழியும் சொருகி
அறிவழிந்(து) என்
மெய்யும் பொய்யாகி
விழும்

*(ஐ-சளி, விழி-கண், மெய்-உடம்பு, பொய்யாகி-செத்த சவமாகி)*

*இறைவனிடம் வேண்டுகிறார் பட்டிணத்தார். பெருமானே சளியின் பிடியில் சிக்கி நான் திணறும்போது இடைக்கால நிவாரணமாக சில நிமிடங்களுக்கேனும் எனக்கு புத்தியைக் கொடும். அந்த நேரத்துக்குள், விபூதியை குழைத்து நெற்றியிலும் மேனியிலும் இட்டுக் கொள்கிறேன். கைகளை கூப்பியபடி வைத்துக் கொள்கிறேன். பஞ்சாட்சர மந்திரத்தை ஓதிக் கொள்கிறேன். அந்த நினைப்போடு நினைப்பாக என் உயிர் போகட்டும்.*

*இனிப் பாடலின் முழு உருவம்.*

ஐயும் தொடர்ந்து
விழியும் சொருகி,
அறிவழிந் தென்
மெய்யும் பொய் யாகி
விழுகின்ற காலத்து
வேண்டுவன் யாண்ட,
செய்யும் திருஒற்றி
ஊருடை யீர்! திரு
நீரும் இட்டு
கையும் தொழப் பண்ணி,
ஐந்தெழுத்(து) ஓதவும்
கற்பியு மே!''

*சளியின் பேய்ப்பிடியிலிருந்து என்னை காப்பாற்றும் என்று பட்டிணத்தார் கேட்கவில்லை. அதை ஒத்துக் கொள்ளமாட்டார் பெருமான் என்பது பட்டிணத்தார் அறிந்தது போலும். அதனால் ''நான் மீள முடியாது. சளி என்னை விடாது. ஆகவே இதையாவது செய்யும் என்று வேண்டுகிறார் பட்டிணத்தார்.*

*அன்றாடம் நாம் சமையலில் உபயோகிக்கும் மிளகு, சீரகம், பூண்டு, உளுந்து ஆகியவற்றில் கபத்தை முறிக்கும் வீரிய சக்தி இருக்கிறது.*

*நெருஞ்சி, கொழுஞ்சி, கண்டங்கத்திரி முதலிய செடிகளிலும் அப்படி ஒரு மருத்துவம் இருக்கிறது. அவற்றின் இலை, காய்களை விட அவற்றின் வேர்களில் வீரியம் அதிகம்.*

*சங்ககால நீதி நூல்களுக்கே, சிறு பஞ்சமூலம், திரிகடுகம் என்று மருந்துப் பெயர்களை தானே சூட்டியிருக்கிறார்கள்.*

*மிளகை உபயோகித்து ஆரோக்கியமாக இருந்த நம்மை அன்னிய நாட்டான் ஏமாற்றிவிட்டான்.*

*தென் அமெரிக்காவில் விளைந்த (சிலிநாட்டில்) கொடிய (மிளகு) வற்றலை நம்மிடம் கொடுத்துவிட்டு, மிளகைத் தட்டிப் பறித்துக் கொண்டு போய்விட்டான்.*

*நூற்றைம்பது வருடங்களுக்குள் ஏற்பட்ட விபரீதந்தான் (மிளகு) வற்றலோடு நமக்குள்ள உறவு.*

*தென் அமெரிக்காவைச் சேர்ந்த பல பொருட்கள் நம்மை வந்து ஒட்டிக் கொண்டுவிட்டன. அவற்றுள் சில, கொய்யா (ப்பழம்) புகையிலை, உருளைக்கிழங்கு, காபி முதலியன. இவற்றில் நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு.*

*கொய்யாப்பழம் மிக நல்லது. உருளைக்கிழங்கு ஓரளவு நல்லது. காபி கெட்டது. மிளகு வற்றல் கொடியது. புகையிலை மிக மிகக் கொடியது.*

*இனி, ஓயாத மண்டையடிக்கு ஒரு மருந்தும் பக்குவமும் சங்ககாலத்திலேயே சொல்லப்பட்டுள்ளது.*

*சீந்திக் கொடி, கண்டங்கத்தரி இவற்றை நறுக்கி வெந்நீரில் கொதிக்க வைக்க வேண்டும். அதில் கொஞ்சம் சுக்குப்பொடியையும் போட வேண்டும். தேனையும் சிறிது ஊற்ற வேண்டும். பிறகு அதன் ஆவியை பிடித்தால் அதன் வாசனைப்பட்ட உடனேயே மண்டையடி ஓடிவிடும்.*

சீந்திநீர்க் கண்டம்
    தெறிசுக்கு தேனளாய்
மோந்தபின் யார்க்கும்
    தலைக்குத்(து) இல்;-

*சீத்தலைச்சாத்தனார் என்று ஒரு கவிஞர். போலிப் பாடல்களைப் பார்த்தால் அவருக்கு எரிச்சல் வந்துவிடும். எரிச்சலில் எழுத்தாணியைக் கொண்டு தலையில் குத்திக் கொள்வார். அதனால் மண்டை புண்பட்டு எப்பொழுதும் தீராத வலி.*

*இந்த நிலையில் திருவள்ளுவரின் முப்பாலை (திருக்குறளை) படிக்க நேர்ந்தது. படிக்கப் படிக்க தேனாய் இருந்தது.*

*போலிப் புலவர்களின் போலிப் பாடல்களைப் பார்ப்பதற்கே அவருக்கு நேரம் இல்லை. பிறகு குத்தும் இல்லை. வெட்டும் இல்லை. வலியும் இல்லை.*

*இனிப்பாடலின் முழு உருவம்.*

சீந்திநீர்க் கண்டம்,
தெறிசுக்குத் தேனளாய்
மோந்திபின் யார்க்கும்
தலைக்குத்தில்; காந்தி
மலைக்குத்து மால்யானை
வள்ளுவர்முப் பாலால்
கூலைக்குத்து தீர்வுசாத்
தற்கு.”

*திருக்குறளுக்கு நிகராக இருக்கிறது சீந்திக்கொடி, கண்டங்கத்தரி முதலியன.*

*இனி, பண்டம், பலகாரம் சுடுகிறவர்கள் எண்ணெயை அடுப்பில் வைத்து காய்ச்சுவார்கள்.*

எண்ணெயில் ஏதாவது தடித்தனம் இருந்தால் தரதரவென்று கொதிக்கும். நுங்கும் நுரையுமாக பொங்கும். பொங்கி வழிந்தோடவும் செய்யும்.

எண்ணெயின் வெறியை அடக்குவதற்காக கொய்யா இலையை கசக்கி அதில் போடுவார்கள். இருநூறு வருடங்களுக்கு முன் கொய்யா (இலை) நம் நாட்டில் இல்லை.

புளியை உருண்டையாக உருட்டி உப்பில் பிரட்டி அதை எண்ணெயில் போடுவார்கள். அவ்வவுதான் பொங்கி வழியும் எண்ணெயின் அட்டகாசம் அடங்கிவிடும்.

கொதித்துப் பொங்கும் எண்ணெயையே வசப்படுத்தி விடுகிறது புளி. அப்படியானால் புளியிடம் ஒரு அற்புத சக்தி நிச்சயம் இருக்க வேண்டும்.

அறுசுவைகளில் புளிப்பு என்னும் சுவை மிக முக்கியமானது. நாவில் நீர் ஊற வைக்கும் சுவை அது. புளிப்பில் ஒரு மர்மமான ஊட்டச்சத்து இருக்கிறது. தோசைமா புளித்தால்தானே இட்லியும், தோசையும் நன்றாக இருக்கும். மோரும் அப்படித்தான். தயிரும் அப்படித்தான். பழையது என்னும் உணவில் சத்து நிறைந்திருக்கிறது என்றால் அதில் புளிப்பு ஏறி அமர்ந்ததுதான். சுத்தமான கள்ளிலும் புளிப்பு உண்டு.

கடும் உழைப்பாளிகள் அலுப்பு தீர கள் குடிப்பார்கள். கள்ளானது அலுப்பையும் நீக்கும். பசியையும் போக்கிவிடும்.

நாடு விடுதலை பெற்ற சமயம் கடுமையான உணவு பஞ்சம். அங்கங்கே பட்டிணிச் சாவுகள் கூட ஏற்பட்டன. அப்பொழுது சென்னை மாநிலம் முழுவதும் மதுவிலக்கு அமுலில் இருந்தது.

தலைசிறந்த மருத்துவ மேதை டாக்டர் ஏ.லட்சுமணசாமி முதலியார் போன்ற அறிஞர்கள் உணவுப் பஞ்சம் ஒழிய வேண்டும் என்றால் கள்ளுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்க வேண்டும் (மதுவிலக்கிலிருந்து) என்று எடுத்துச் சொன்னார்கள்.

பசியைப் போக்கி தெம்பைக் கொடுக்கக்கூடிய சக்தி கள்ளில் இருக்கிறது என்றால் அதில் ஊறிய புளிப்புத்தான் காரணம். கள்ளில் ஊட்டச்சத்து இருக்கிறது. சாராயம், பிராந்தி போன்றவற்றில் இருப்பதோ குடலையும் ஈரலையும் பொசுக்கும் எரிசக்தி.

புளியம்பழத்தில் (புளியில்) புளிப்புச் சுவை ஒரு தனித்த பக்குவத்தில் சேர்ந்து நிற்கிறது. நெல்லிக்காயில் ஒருவித புளிப்பு. மாங்காயில் ஒரு விதப் புளிப்பு, எலுமிச்சையில் ஒரு விதம். தயிரில் ஒருவிதம், பழையதில் ஒருவிதம் இப்படி ஒவ்வொரு பொருளில் புளிப்பு ஒவ்வொரு தினுசு. புளியில் இருக்கிற புளிப்போ தனிச்சிறப்பு வாய்ந்தது.

மனித உடம்புக்கு புளியில் உள்ள புளிப்பு ச் சுவை மிக மிக முக்கியம். அந்நிய நாட்டுக்காரன் புளியில் ஒன்றுமே இல்லை. அது கெடுதல் என்று சொல்லித் தொலைத்தான். நம்மவர்களில் பலர் அந்நிய நாட்டினர் சொல்லை வேதவாக்காக எடுத்தனர். புளியை ஒதுக்கிப் பார்த்தனர். ரத்த சோகைதான் மிச்சம். பிறகு புளியை நோக்கி வந்தனர்.

ஆனால் புளியை நன்றாக உபயோகித்துக் கொண்டே புளிகெடுதலானது என்று இன்னமும் சொல்லிக் கொண்டே திரிகிறார்கள் பலர். அது ஒரு பேன்ஸியாகவே போய்விட்டது.

நல்லது என்பதற்காக அளவுக்கு மீறக்கூடாது. வேண்டாத நேரங்களில் உபயோகிக்கவும் கூடாது.

இனி, நெல் முதலிய தானியங்களில் ஒரு வகைப் பூச்சிவிழும். இதை அந்து என்று சொல்வார்கள். அந்து விழுந்த தவசங்களில் உள்ளீடு (சத்து) வற்றிவிடும். வறண்டு போகும் தவசம்.

அந்து விழாமல் இருக்க பல பல முறைகளை கையாளுவார்கள். ஈரப்பசை அறவே வற்றி உலரும் அளவுக்கு தானியங்களை வெயிலில் காயப் போடுவது ஒருமுறை. தானியங்களில் மிளகு வற்றல் உப்பு முதலியவற்றை போடுவது ஒருமுறை. இனி புள்கம் இலையைக் கொண்டு போடுவது ஒருவகை.

இந்த உபாயங்கள் எல்லாம் ஓரளவுக்குத்தான் பலன் தருகின்றன. நீண்ட நெடுங்காலத்துக்குப் பலன் தரவேண்டுமானால் அந்து முதலிய பூச்சியோ வண்டோ விழாமல் இருக்க வேண்டுமானால் மஞ்சள் பொடியைத் தூவ வேண்டும். ரத்த சுத்தி பண்ணும். உள் புண், வெளிப்புண் எல்லாவற்றையும் ஆற்றும். புற்றுநோயைக் கூட குணப்படுத்தும். மஞ்சள் பொலிவை கொடுக்கும். தெய்வீகப் பண்பு நிறைந்தது மஞ்சள்.

நம் முன்னோர்கள் அதன் அருமை பெருமைகளை உணர்ந்து உணவு வகைகளில் சேர்த்திருக்கிறார்கள். அன்றாட உபயோகப் பொருளாக மஞ்சளை அமைத்திருக்கிறார்கள். மங்களமான புனிதமான பொருள் மஞ்சள் என்றும் மதித்திருக்கிறார்கள்.

இதைவிட வேறு என்ன அற்புதம் வேண்டும்.

இனி, பசுவினுடைய கோமயம், சாணம் இரண்டும் கிருமி நாசினிகள். பசுவினுடைய பால், தயிர், நெய் மூன்றில் மட்டுமல்ல; கோமயம், சாணம் இரண்டையும் சேர்த்து ஐந்து

அம்சங்களிலும் சிவபெருமான் திருமஞ்சனம் ஆடுகிறாள் என்று சொல்லி இருக்கிறது.

"ஆன் என்பது தரும் ஐந்தையும்
ஆடும் பெருமானை" என்பது
பரஞ்சோதி முனிவரின் திருவாக்கு.

அன்றாடம் வீட்டையும் முற்றத்தையும் தொழிக்கவும், மெழுகவும் நம்மவர்கள் கோமயத்தையும் சாணத்தையும் உபயோகித்திருக்கிறார்கள். சமயச் சடங்குகள், வழிபாட்டு முறைகளிலும் கோமயத்துக்கும் சாணத்துக்கும் பிரதானம் கொடுத்திருக்கிறார்கள்.

புதுச்செருப்புக்கும் காலுக்கும் கொஞ்சம் தகராறு என்றால் காலில் புண் வரும். அந்தப் புண்ணை செருப்புக்கடி என்பார்கள்.

கோமயத்தில் மஞ்சள்பொடியை போட்டு கலக்கி குழப்ப வேண்டும். பிறகு ஒரு துணியில் வைத்து புண்ணில் கட்டிவிட வேண்டும். அப்படியே வற்றி உலர்ந்து விடும் புண்.

கோமயத்துக்குப் பதில் விளக்கெண்ணையில் சாணத்தைப் போட்டு குழப்பி மஞ்சள்பொடி சேர்த்தும் கட்டலாம்.

செருப்புக்கடிக்கு உகந்த மருத்துவம் இதுதான்.

மஞ்சள், கோமயம், சாணம் இவைகளில் என்னென்னவோ மருத்துவப் பண்புகள் இன்னும் இருக்கலாம். அவற்றை அறிஞர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இனி, கள்ளி, கற்றாழை முதலியவற்றை மட்டமான தாவரங்கள் என்று நாம் ஒதுக்குவோம். ஆனால் அவைகளில்

அற்புதமான மருத்துவ அம்சங்கள் நிறைந்துள்ளன. ஏன் தரம் குறைந்த காய்கள் என்று நாம் நினைக்கிற பூசணிக்காய், தடியன்காய், சுரக்காய் முதலியவற்றில் உயிர் காக்கும் உயர்ந்த மருத்துவப் பண்புகள் உள்ளன என்று தற்கால ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

ஆஷ்துமா என்னும் கொடிய நோயைக் கட்டுப்பாட்டில் வைக்கக்கூடிய வல்லமை சுரக்காய்க்கு உண்டு.

மாடுகளுக்கு மூச்சடைப்பு என்று ஒரு நோய் வரும். அதற்கு கானை என்று பெயர். அது நீங்குவதற்கு மூங்கில் இலையை ஆகாரத்தோடு சேர்த்து மாட்டுக்குக் கொடுப்பார்கள். மூச்சடைப்பு ஓடிவிடும்.

கருவேலம், உடை என்று முள் மரங்கள். இவற்றை அவ்வளவாக நாம் மதிப்பதில்லை. ஆனால் கருவேலமரம், உடைமரம் இவற்றின் இலைகளும், முட்களும் நிலத்துக்கு நல்ல உரம் கொடுக்கின்றன. உடன் (உடை) காட்டில் போட்ட கத்திரி போன்ற காய்கள் மிக சுவையாக இருக்கும். அந்த காட்டினுள் இருக்கும் பனைமரம் கொடுக்கிற பதனீருக்கு ஒரு தனி ருசி. பனைவெல்லத்திற்கு தனி ஒரு சிறப்பு.

தூத்துக்குடி போன்ற கடலை ஒட்டிய பகுதிகளில் நிலத்தடிநீர் மிக்க செறிவுள்ளது. கனத்தது. உப்புச்சுவை நிறைந்தது. இந்த பகுதியில் உடை, பனை, வேம்பு, முருங்கை போன்ற தாவரங்கள் செழித்து வளரும். மற்றவை தாக்குப் பிடிக்க முடியாமல் திணறும்.

அதனால் உடை, கருவை, வேம்பு, ப்னை, முருங்கை போன்றவைகளுக்கு எதிர்ப்பு சக்தி அதிகம் என்று தெரிகிறது. இவைகளிடம் உள்ள எதிர்ப்பு சக்தியை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவற்றை எந்தெந்த வகை ஆரோக்கியத்துக்குப்

பயன்படுத்தலாம் என்றும் தெளிந்து? காணவேண்டும். இது விஞ்ஞான புலவர்களின் கடமை.

உயிர்வாக்கம் முழுவதுக்கும் வேண்டிய உணவு முழவதும் இந்த மண்ணில் தான் விளைகிறது. மனிதர்களை பொறுத்தவரையில் உணவும் மட்டுமல்ல. உடையையும் இந்த மண்தான் கொடுக்கிறது. உணவும் உடையும் மட்டுந்தானா? மருந்தாக மாறும் சகல மூலிகைகளுக்கும் தாயாக இருந்து அமிர்தப்பால் கொடுப்பதும் இந்த மண்தான்.

நீர், காற்று, வெப்பம் இவை நிலத்துக்கு உதவியாக இருக்கின்றன.

(சூரிய) வெப்பத்தினுள் நன்மைகளை, சக்திகளை ஓரளவு ஆராய்ந்து அறிஞர்கள் சொல்லி இருக்கிறார்கள். நீரிலுள்ள உயிர் காக்கும் சக்தியைப் பற்றியும் ஓரளவு அறிந்து தெரிவித்துள்ளனர். காற்றிலுள்ளவற்றையும் அப்படியே பார்த்துக் கூறியுள்ளார்.

ஆனால் மண்ணைப் பற்றி இந்த அளவு கூட ஆராய்ந்து சொல்லவில்லை.

எல்லாவற்றுக்கும் உயிர்ச்சத்து கொடுத்து வளர்க்கும் மண்ணில் கிடக்கும் சக்திகளை ஆராய்ந்து பார்த்து அறிஞர்கள் சொல்ல வேண்டும். அந்த சக்திகளை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் விஞ்ஞான நிபுணர்கள் மக்களுக்கு சொல்லி உதவவேண்டும்.

தோண்டத் தோண்ட வெள்ளிப் பொக்கிஷமாய், தங்கச் சுரங்கமாய், வயிரவைடூர்யக் களஞ்சியமாய் இருந்து உதவும் இந்த மண். பூமாதேவி என்று போற்றப்படுகிற தெய்வீக மண்!

முன்காலத்துக்கும் தற்காலத்துக்கும் எவ்வளவோ மாற்றம். உணவு, உடை, நடவடிக்கை, மனஇயலில் கூட

எத்தனையோ மாற்றங்கள். அதனால் மக்களிடம் பழைய உடம்பு இப்பொழுது இல்லை. உடம்பின் புதுமைக்கு ஏற்றபடி நோய்களும் புதிதாய் உற்பத்தியாகின்றன.

அதனால் ஒரு நோய்க்கு எத்தனையே மருந்துகள், எத்தனையோ பக்குவ நெறிகள். இவ்வளவையும் புத்தகத்தில் பார்க்க முடியாது. அனுபவத்தில்தான் கண்டு கண்டு தெளிய வேண்டும்.

அந்தக் காலத்திலும் மருத்துவ சம்பந்தமான நூல்கள் பல பல இருந்தன. வசனத்தில் எழுதினாலே மருத்துவ சம்பந்தமான விபரங்கள் பிடிபடுவது சிரமம். இந்த லட்சணத்தில் விருத்தம், சந்தக் குழிப்பு போன்ற பாடல்கள் மூலம் மருந்துகளையும் முறைகளையும் பாடித் தொலைத்தால் யாருக்கு என்ன விளங்கும். தேரையார், போகர், கருவூரார், அகத்தியர், திருமூலர் என்னும் சித்தர் பெயர்களில் வைனத்தியத் திரட்டு என்னும் நூல்களுக்குப் பஞ்சம் இல்லை. ஆனால் இவற்றில் உள்ள பாடல்கள் திருகுமுருகானவை. எளிதில் விளங்காது. தப்பித் தவறி ஒன்றிரண்டு புரியலாம். புரிந்துவிட்டதே என்று அதைப் பின்பற்றி செயலில் இறங்கிவிடக் கூடாது. துணிந்து இறங்கினால் இறங்கினவர் களின் உடல், பொருள், ஆவிக்கு யாரும் பொறுப் பேற்கமாட்டார்கள்.

காரணம் தமக்கு தெரிந்த பரிபாஷை (குழூஉக்குறி) சொற்களை மற்றவர்கள் பார்த்து வியப்படைய வேண்டும். அதற்கு ஏற்றது வைத்திய முறை. இப்படி ஒரு குருட்டுக் கணக்குப் போட்டு அந்தச் சித்தர், இந்த சித்தர் என்ற பெயரில் பாடித் தொலைத்திருக்கிறார்கள். சிலேடைகளும், சொல் மயக்குகளுமே பாடல்களில் விளையாடுகின்றன. வைத்திய மோ பக்குவமோ பூஷ்யம்.

அதனால் வைத்திய சம்பந்தமான திரட்டுகளில் பாடல்களும் ஒட்டை உடைசல்கள். மருத்துவமோ பொத்தலிலும் பொத்தல்.

உண்மையான தமிழ் மருத்துவம், அதாவது நாட்டு வைத்தியம் சித்த மருத்துவம் தெரிய வேண்டும் என்றால் நமது தாய்மார்கள், பாட்டிமார்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். வைத்தியத் திரட்டுகளில் ஒன்றுமே இல்லை.

ஆயிரம் பாடல்களை அலசிப் புடைத்தால் ஒரு பாடலோ, அல்லது ஒன்றிரண்டு வரிகளோ கிடைக்கலாம்.

பல பல ஆண்டுகளாகத் தேடித் தேடி பார்த்ததில் என் சிற்றறிவுக்கு எட்டிய வைத்தியப் பாடல்கள் இரண்டு. அவற் றில் உண்மையான மருத்துவம் இருக்கிறது. அந்த மருத்துவத்தை தெளிவாகவும் சொல்லி இருக்கிறது. அதனால் பாட்டும் உருப்படியாக இருக்கிறது. வைத்தியமும் சுத்தமாக தெரிகிறது.

முதல்பாட்டு சேற்றுப் புண்-பித்த விரிவு முதலிய கால்நோய் பற்றியது. அதற்குரிய மருந்தையும் முறையையும் கீழ்க்காணும் விருத்தம் எப்படிக் கையில் எடுத்துக் கொடுக்கிறது என்று பாருங்கள்.

நன்றாக நீற்றி வடிக்கப்பட்ட சுண்ணாம்பில் கொஞ்சம் உப்பைப் போட வேண்டும். பிறகு ஆலம்பாலை ஓரளவு அதில் விட வேண்டும். வெண்ணெயையும் அதில் சேர்த்துக் கடைய வேண்டும்.

அதன்பின் பித்த விரிவில் அதை எடுத்து தடவ வேண்டும். புண் ஆறிவிடும். செந்தாமரைப் புஷ்பத்தின் இதழ்களாக மிளிரும் புண் ஆறிய கால்கள் என்கிறார் தேரையார்.

*இனிப் பாடல்*

கீற்றுக் கால்கொடு
கிந்தித் திரிவீர்காள்!
வேற்றுக் கால்இலை
மேலும் உமக்குத்தான்;
நீற்றுப் பால்நறு
நெய்யிட வல்லிரேல்
சேற்றுத் தாமரை
செவ்விதழ் வுக்குமே.

*(கீற்றுக்கால்கொடு - பித்த விரிவுடன் கிந்தித் திரிவீர்கள். நொண்டியடித்துக் கிந்திக் கிந்தி நடக்கிற மனிதர்களே! நீறு உப்பு, ஆல், நறுநெய் இடவல்லிநேல் - சுண்ணாம்பு, உப்பு, ஆலம்பால், வெண்ணெய் நான்கையும் சேர்த்துக் குழைத்து உடனே தடவுங்கள். இல்லை என்றால் நாளாக நாளாக கால் பழுதுபட்டுவிடும். அப்படி பழுதுபட்டுவிட்டால் வேறு கால் இ(ல்)லை உமக்கு - இன்னொரு காலை விலைக்கு வாங்க முடியுமா உங்களால். சொன்ன பக்குவப்படி நடந்தால் சேற்றுத் தாமரைச் செவ்விதழ் ஒக்கும் - செந்தாமரை மலர் இதழ் போலும் உங்கள் கால் மிளிரும்.*

*இனி, கண்களில் கோளாறுகள் ஏற்படலாம். கோளாறு காரணமாக பார்வை மங்கலாம். கெடவும் செய்யலாம். இந்த கொடிய நோய் ஒழியவேண்டும் என்றால், பன்றியின் (தந்தம்) பல், கோழியின் நெஞ்செலும்பு, வெள்ளி (உலோகம்) புலியின் நகம் இந்நான்கையும் இடித்துப் பொடியாக்க வேண்டும். தேன் விட்டு அப்பொடியை குழைக்க வேண்டும். குழைத்த குழம்பைக் கண்ணில் விட வேண்டும். பார்வை வந்துவிடும்.*

*இனிப் பாடல்*

ஏனத்தின் கொம்பும்,

இரவறிவான் நெஞ்செலும்பும்,

வானத்து மீனும்,

மலையரையன் தன்நகமும்

கானக் குறத்தி

முலைப்பாலும் கண்ணில் விட

ஊனக் குருடர்க்கும்

உத்தரமீன் தோன்றிடுமே

*(ஏனம் - பன்றி, கொம்பு - பல், இரவு அறிவான் - கோழி. வானத்து மீன் - ஆகாயத்தில் பூக்கும் நட்சத்திரம், அதற்கு வெள்ளி என்று பெயர். இங்கே அந்தப் பெயருடைய வெள்ளிக்கட்டி, மலையயன் - புலி, கானக்குறத்தி - தேன்கூடு, முலைப்பால் - தேன், ஊனக்குருடர்க்கும் - கண்பார்வை போனவர்களுக்கும் உத்தரமீன் தோன்றும் - வடகோடியில் உள்ள நட்சத்திரங் கூடத் தெளவாக தெரியும் பார்வை வந்துவிடும்.)*

*கோழி, வெள்ளிக்கட்டி, புலி, தேன் இவற்றை அடையாளச் சொற்களால் காட்டுகிறது பாட்டு.*

*ஏதோ தனக்கு தெரிந்த அடையாளச் சொற்களை காட்டி, நான் யார் தெரியுமா? என்று ஜம்பம் பண்ணவில்லை தேரையார்.*

*கண் பார்வையின் சிறப்பையும், அதைக் காப்பாற்றும் மருந்துகளையும் மதித்து உபசரிக்க சாதனமாக வந்துவிழுகின்றன அடையாளச் சொற்கள். அதனால் பொருளோடு பொதிந்த உணர்ச்சிமயமான பாடல் தமிழோடு தமிழாய் சேர்ந்து வந்துவிட்டன.*

இரண்டு பாடல்களும் அருமையான பாடல்கள், விஷயம், உணர்ச்சி, தமிழ் எல்லாம் சேர்ந்து விளைந்த பாடல்கள்.

இப்படி ஒன்றிரண்டு பாடல்கள்தான் தமிழாக இருக்கும். மற்றவை எல்லாம் கண்ணைக் கட்டிக் காட்டில் விடுகிற மோசடிதான்!

இனி, உணவைக் குறைத்துக் கொள்வது நல்லது. அதைவிட குறைந்த உணவையும் மெள்ள-நிதானமாக அறைத்துச் சுவைத்து, ரசித்து சாப்பிடுவது.

சீனர்களுக்கு ஒரு கிண்ணம் சாதம் போதும், இரண்டு குச்சிகளை வைத்துக் கொண்டு ஒவ்வொரு பருக்கையாக எடுத்துச் சாப்பிடுவார்கள். அவசரப்படமாட்டார்கள்.

ஜப்பானியர்களோ சாளரங்களைத் திறந்து வைத்துக் கொண்டு, நிலாவின் அருமையை அனுபவித்தவர்களாய், ரசமான அனுபவங்களை பற்றி உரையாடிக் கொண்டே சாப்பிடுவார்கள். நிலா இல்லை என்றால், வானம், நட்சத்திரம், இருள் இவற்றைக் கூட அனுபவிப்பார்கள்.

சாதம் அரைக்கிண்ணமாக இருந்தாலும் ஒரு மணிநேரம் ஆகும் அவர்கள் சாப்பிட்டு முடிக்க.

நாமோ குவித்து வைத்த சாதத்தை குழம்பை விட்டு பிசைகிறோம். திரளை திரளையாக உருட்டுகிறோம். லபக் லபக் என்று எடுத்து உள்ளே தள்ளிவிடுகிறோம். இவற்றோடு அவியல் என்ன, பொரியல் என்ன, பச்சடி என்ன, கூட்டென்ன, அப்பளம் என்ன, ஊறுகாய் என்ன, துவையல் என்ன, மோரென்ன, அவ்வளவும் சர்க்கஸ் வித்தையில் வந்து போவது போல் மாயமாய் மறைந்து நம் வயிற்றுள் போய் விழுந்து விடுகின்றன.

இதில், 'பந்திக்கு முந்து' என்கிற பழமொழி வேற! உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு என்கிற சமாதானம் வேற! இப்படி சாப்பிடுகிறவனுக்கு மயக்கம் வராமல் தெளிவா வரும்? முண்டியடித்து இடம் பிடிக்கிற வெறிதானே அவனிடம் இருக்கும்.

மூர்க்கத்தனமான அவசரமோ, வேகமோ, வெறியோ சாப்பாட்டில் கூடாது.

சாப்பாட்டு விடுதிகளில் பார்த்தால் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறவன் எச்சி ல் இலைக்கு முன் இருபது நிமிடம் வரை நிற்கிறான். சாப்பிட வருகிறவன் இடம் கிடைத்தவுடன் மூன்று நிமிடங்களில் அவ்வளவு பதார்த்தங்களையும் அள்ளி அள்ளி உள்ளே கொட்டிவிடுகிறான்!

என்ன பரிதாபம் இது?

நமக்கு உயிரையும் கொடுத்து உணர்ச்சியையும் கொடுக்கிற தெய்வாம்சம் மிக்க உணவை மதிக்கிற காரியமா இது?

மதித்துச் சாப்பிடுவதென்றால் அவசரப்படாமல் மென்று நீர் ஊற நீர் ஊற ரசித்து ருசித்துப் புசிக்க வேண்டும். அப்படி புசிக்கிறவன் குறையச் சாப்பிட்டால் போதும். அவ்வளவும் ரத்தந்தான். ரத்தமயமேதான். இது சம்பந்தமாக திருமூல நாயனார்.

வேட்கை உடையீர்!

விரைந்தொல்லை உண்ணன்மின்'' என்கிறார்.

வெறிபிடித்த பிசாசுகளே அவசரம் அவசரமாக உணவை அள்ளிப் போடாதீர்கள் என்பது கருத்து.

இதுபோன்ற உடல்நலம் சம்பந்தப்பட்ட துண்டுகள், துக்காணிகள் அங்கங்கே உண்டு. இவற்றை வைத்துக் கொண்டு வைத்தியம் பண்ண முடியுமா? வேண்டுமானால் கட்டுரை எழுதலாம். பிரசங்கம் பண்ணலாம். அவ்வளவுதான்!

இனி, எத்தனை உபசாரங்கள் செய்தாலும், வர்ணம் அடித்துச் சாந்து பூசி மினுக்கினாலும் சரி, வயதாக வயதாக உடம்பின் கட்டுக்கோப்பும் உறுதியும் குலையத்தான் செய்யும்.

இதை உணர வேண்டும். அலட்டிக் கொள்ளக் கூடுவது, ஏனென்றால், அலட்டிக் கொள்வதே ஒரு நோயாகிவிடும்.

''ஏன், என்னைக் கேட்காமல் என்மேல் தொற்றி, ஏறிக் கொண்டே போகிறாய்? இறங்கு கீழே!'' என்று அரட்டி மிரட்ட முடியுமா வயதை!?

வயதாக வயதாக வாழ்க்கைக்கு (உடம்புக்கு) அவலநிலைதான். இளமையில் செய்த சூரத்தனங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். நாடகத்தை பார்த்து ரசிப்பது போல அதை ரசிக்க வேண்டும். அவலம் நீங்க இது ஒன்றுதான் வழி. வேறு வழி இல்லை.

இது சம்பந்தமாக ஒரு பாடல்.

**வயதான** ஒருவர் முதுமையில் தள்ளாடுகிறார். துணைக்கு ஊன்றுகோல் இல்லாமல் காலூன்றி நிற்க முடியவில்லை. இரண்டு வார்த்தை பேசுவதற்குள் நாலு தடவை தொண்டை புகைகிறது. கண் விழி பிதுங்க இருமுகிறார். கைகால் நடுங்குகின்றன அவருக்கு. கண்ணீர் கோத்து நிற்கிறது கண்களில்.

பெருமூச்சு விடுகிறார். ''இந்தக்கதி வந்துவிட்டதே? எப்படி இருந்த உடம்பு இந்த உடம்பு. அந்த முறுக்கும்,

விறைப்பும் எங்கு போய்த் தொலைந்தன. நினைக்க நினைக்க அழுகை அழுகையாய் வருகிறது,'' என்று கலங்குகிறார்.

தொடித்தலை விழுத்தண்(டு)
    ஊன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த
    சில சொல்
பெருமூ தாளரேம்
    ஆகிய எமக்கே
அளிதோ தானே
    யாண்டீண்டு கொல்லோ?
இனி நினைந்(து) இரக்கம்
    ஆகின்று...''

தொடித்தலை விழுத்தண்டு - டாணாக்கம்பு. தொடி - வளைவு, இரும் - இருமல், மூதாளர் ஆகிய எமக்கு - முதுமைக்கு ஆளான என்னிடம், அளிதோ தானே - அந்த இளமை ஞாபகம் என்னென்ன சுகங்களை தருகின்றன. மறக்க முடியுமா அந்த ஞாபகத்தை. ஈண்டு யாண்டு கொல் - இப்பொழுது அந்த இளமை எங்கு போய் ஒளிந்து கொண்டது. இனி நினைந்து இரக்கம் ஆகின்றது - அதை நினைக்க நினைக்க வருத்தமாக இருக்கிறது.

மேலும் சொல்லுகிறார் முதியவர்.

''நான் இளைஞனாக இருக்கும்பொழுது என்போன்ற இளவட்டங்களோடு சேர்ந்து கரையிலிருந்து தண்ணீருக்குள் அம்புபோல் பாய்வேன். பாய்ச்சலின் வேகத்தில் பொய்கை யின் நீரே பதறிச் சிதறும். கரையில் உள்ளவர்கள் திகைப்பார் கள். தாழ்ந்து நீரோடு உரசும் மருத மரத்துக் கொப்பு வழி ஏறுவேன். பழைய படி குதிப்பேன். அடி ஆழம் வரை போய் கையில் தரைமண் எடுத்து வருவேன்.

*என்னொத்த இளம்பெண்கள் அதிசயப்படுவார்கள். அவர்கள் கையை பிடித்தபடியே தண்ணீரில் முங்குவேன், நீந்துவேன். ஒரே பாய்ச்சலில் படிக்கு வந்து ஏறுவேன்.*

*இத்தனை துள்ளலும் பாய்ச்சலும் எங்கே போயின;*

*இனிப் பாடலின் முழு உருவம்*

இனி நினைந்(து) இரக்கம்
ஆகின்று; திணிமணல்
செய்வுறு பாவைக்குக்
கொய்பூத் தை இத்,
தண்கயம் ஆடும்
மகளிரொடுகை பிணைந்து,
தழுவுவழித் தழீஇ
தூங்குவழித் தூங்கி,
மறையெனல் அறியா
மாயம்இல் ஆயமொடு
உயர்சினை மருதத்(து)
உறைஉறத் தாழ்ந்து,
நீர்நணிப் படிகோ(டு)
ஏறிச், சீர்மிகக்
கரையவர் மருளத்
திரையகம் பிதிர,
நெடுநீர்க் குட்டத்துத்
துடும் எனப் பாய்ந்து,
குளித்து மணல் கொண்ட
கல்லா இளமை
அளிதோ தானே
யாண்டஉண்டு கொல்லோ!

தொடித்தலை விழுத்தண்(டு)
ஊன்றி, நடுக்குற்று
இருமிடை மிடைந்த
சிலசொல்
பெருமூ தாளரேம்
ஆகிய எமக்கே!

*(திணிமணல் செய்வுறுபாலைக்கு கொய்பூதைஇ - இளம் மகளிர் மணலைக் குவித்து தெய்வப்பாலை என்று அதை பாவிப்பார்கள். மலர்களை கொய்து வந்து அதன்மேல் சார்த்தி வழிபடுவார்கள். தைஇ - சார்த்தி, தண்கயம் ஆடும் மகளிரொடு - அப்படி வழிபட்டுவிட்டு பொய்கையில் வந்து நீராடுவார்கள் அம்மகளிர். கை பிணைந்து - அவர்கள் கையை என் கையோடு சேர்த்து, தழுவு வழி தழீஇ - தழுவிக் கொள்வது போலவும். தூங்கு வழித் தூங்கி - நயந்து கெஞ்சுவது போலவும் அவர்களுடன் சேர்ந்து நீரில் விளையாடுவேன். பிறகு, மறை எனல் அறியா மாயம் இல் ஆயமொடு - ஒளிவு மறைவு இல்லாத கள்ளம் கபடமற்ற சேக்காளிகளுடன் சேர்ந்து - உயர் சினை மருதத்து உறையுறத்தாழ்ந்து - ஓங்கி வளர்ந்த மரத மரத்தின் கொப்பைப் பிடித்து அதில் ஏறி அதன் உச்சிக்கே போய். நெடுநீர் குட்டத்து துடும் எனப் பாய்ந்து - ஆழமான குளத்தில் அதிகவேகமாக குதிப்பேன். கரைய வர்மருள திரையகம் பிதுர - கரையில் நிற்பவர் திகைக்க தண்ணீர் பதறக் குதிப்பேன். குளித்து மணல் கொண்ட கல்லா இளமை - அப்படி குதித்து தரை மண் எடுத்து வந்த அந்த வளமான வாலிபப் பொலிவு. ஈண்டு யாண்டு - இப்பொழுது எங்கு போய் ஒளிந்து கொண்டதோ தெரியவில்லையே!*

*அற்புதமான பாடல். பாடலை அனுபவித்தால் போதும். சோர்வு ஓடிவிடும். வீரியம் வந்துவிடும்.*

வயதாக வயதாக பழைய நிகழ்ச்சிகள் வரும். நிகழ்ச்சிகளை நாடகம் பார்ப்பது போல் பார்க்க வேண்டும். ஐயையோ அது என்னை விட்டுப்போய் விட்டதே என்று அழுது புலம்பக்கூடாது.

புறநானூற்றுப் பாடல் அழுது புலம்பவில்லை நாடக பாணியில், அது எங்கு போய் மறைந்து நிற்கிறது? என்னிடத்தில் கண்ணாம்பூச்சி விளையாடு கிறதே! என்று சிரிப்பும் கும்மாளியுமாக உல்லாசம் பண்ணுகிறது.

இனி, தளகர்த்தர் மாண்ட்கோமரியிடம் வின்ஸ்டன் சர்ச்சில் இடக்கோடும் துடுக்கோடும் சொன்ன பதிலை ஆரம்பத்தில் பார்த்தோம். சர்ச்சிலின் பதில் அலங்காரமான சௌடால்தனமே தவிர, அதில் அடிப்படையான உண்மை இல்லை.

குடி, கூத்தி, புகை பிடித்தல் முதலிய அடாவடித் தனங்கள், ரத்தத்தில் சேர்ந்தே முதலில் சும்மா இருக்கும். ஆனால் வட்டியும் முதலுமாக குட்டி போட்டுக் கொண்டு உடம்புக்கு உள்ளேயே இருக்கும். எலும்பு, நரம்பு, இரத்தம் எல்லாவற்றோடும் ஊடுருவிக் கலந்து அப்பாவி போல் நடிக்கும். உடம்பின் திமர் ஒடுங்க ஒடுங்க அவை ஒத்துப் பேசி எழுந்து நிற்கும். வாலைச்சுழற்றும். வாயை அகலப் பிளக்கும். பாய்ந்து பாய்ந்து தாக்கும். அணு அணுவாக உடம்பை சித்திரவதைக்கு உள்ளாக்கும்.

இவனை மட்டுமல்ல; இவன் பெண்டாட்டி, பிள்ளைகள் அத்தனை பேரையும் குடுமியைப் பிடித்து ஆட்டு ஆட்டென்று ஆட்டும். இந்த ஜென்மத்தில் அவனுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்துவிடும். முடியாமல் பாக்கி வைத்தால் அதை விட்டு விடாது. அடுத்த ஜன்மத்திலும் அவனைப் பிரட்டிப் பிரட்டி எடுக்கும்.

*இது சம்பந்தமாக ஒரு பாடல்.*

*செழிப்போடும் மகிழ்ச்சியோடும் வாழ்கின்ற காலத்தில் தாறு மாறாய் நடந்து கொள்ளக் கூடாது. தொந்தரவு இல்லாமல் வாழ்வதற்கு வழி என்ன என்று தேடிப் பிடித்து அதன்படி வாழ வேண்டும்.*

*அப்படி வாழத் தெரியாதவன் - தாறுமாறாய் நடந்தவன் படாத பாடு படுவான். வாலிபப் பருவத்திலேயே தடுமாறுவான். தூக்கமில்லை, பசி இல்லை, ஞாபகசக்தி போய்விட்டதே என்று கலங்குவான்.*

*எல்லாம் நான் செய்த பாவம் என்று தவிப்பான். நோயால் சுற்றி வளைக்கப்பட்ட (சூழ்ந்த) நாற்றம் பிடித்த உடம்பு தீயில் வேக இவன் இழிவான ஜென்மங்களை எடுத்து உழல்வான்.*

*என்ன செய்ய? எல்லாம் அவன் தேடிச் சேர்த்த விதி!*

*இனிப் பாடல்*

தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார்தா மும்,
மூழ்ந்த பிணி நலிய முன்செய்த
வினைஎன்றே முனிவார்தா மும்,
சூழ்ந்த இளியாக்கை அழல்எரிய
நாற்கதியில் சுழல்வார்தா மும்,;
வாழ்ந்த பொழுதினே வான் எய்தும்
நெறிமுன்னி முயலாதா ரே!

*தாழ்ந்த உணர்வினராய் - அறிவு தடுமாறியவர்களாய், தாள் உடைந்து - செயலற்று. மூழ்ந்த பிணி நலிய - பம்மிக்*

கிடந்த நோய்கள் தாக்க, முனிவார் - சீறிவிழுகிறவர் - சூழ்ந்த இளியாக்கை - நோயால் வசப்படுத்தப்பட்டு நொந்து போன தேகம் - அழல் - தீ, நாற்கதி - பன்றி, பாம்பு முதலிய பிறவிகளில், வான் எய்தும் நெறி முன்னி முயலாதார் - அமைதியாக ஆனந்தமாக இருக்க வழி என்ன என்று தேடாதவன். அதைப் பற்றிய நினைப்பே இல்லாமல் வெறி பிடித்த வாழ்க்கையில் மிதந்தவன்!

'மேலே எறிந்த கல் கீழே விழும்' இது இயற்கையின் நியதி. அயோக்கியத்தனமான செயல்களில் ஈடுபட்டவனை அவன் செய்த கொடுமை அவனை அடித்துத் துவைக்கவே செய்யும்.

சர்ச்சிலானாலும் சரி, சர்ச்சிலுக்கு பாட்டன் ஆனாலும் சரி, தப்பவே முடியாது.

இனி, விஞ்ஞானிகளுக்கெல்லாம் விஞ்ஞானியாய் மெய்ஞ்ஞானியாக ஒருவர் வாழ்ந்தார். (பேராசிரியர்) ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் என்பது அவர் பெயர். அவர் கண்டுபிடித்து எழுதிய விஞ்ஞானம் நமக்கு விளங்காது. விஞ்ஞான நிபுணர்களே சிரமப்பட்டுத் தேடினால்தான் அதன் நுட்பங்கள், மர்மங்கள் புரியும் என்பார்கள்.

அப்படி என்றால் நமக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்.

ஆனாலும் வாழ்க்கை பற்றியும், அறப்பண்புகள் பற்றியும், உலக இயல் பற்றியும், கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும் தம் தெள்ளத் தெளிந்த அனுபவங்களை அங்கங்கே சொல்லி இருக்கிறார். சுருக்கமாகத்தான் சொல்வார் ஐன்ஸ்டைன். ஆனால் ஒவ்வொரு சொல்லும் சாகாவரம் பெற்றவை. அதனால் அவருடைய கருத்து, நோக்கம் எல்லாம் நமக்கு விளங்கும்.

''நான் நம்புகிறேன்'' என்று அவர் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். அதில் அவர் சொல்கிற விஷயம் இதோ,

''இந்த உலகத்துக்கு ஐன்ஸ்டைனாகிய நான் அது இது என்று பல உதவிகள் செய்திருப்பதாக பலர் என்னைப் பாராட்டுகிறார்கள். உலகம் எனக்கு செய்த உபகாரம் கடல் அளவு என்றால் நான் உலகுக்கு செய்த உபகாரம் ஒரு துளி அளவு கூட இிருக்காது.

''என் உடம்பு வளர்வதற்கும், வாழ்வதற்கும் நானா காரணம்? யார் யாரோ எங்கெங்கோ இருந்து உற்பத்தி செய்கிற கோதுமையும், காய்களும், கனிகளும் அல்லவா காரணம்? அப்படியே நான் உடுப்பதற்கும் எனக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? எத்தனையோ புத்தகங்கதைளப் படித்து எத்தனை எத்தனையோ விஷயங்களை அனுபவிக்கிறேன். ஆனந்தம் அடைகிறேன். அத்தனை நூல்களையும் நானா எழுதினேன்.

என் உடல், பொருள், ஆவி எல்லாமே உலகம் எனக்கு கொடுத்த நன்கொடை. கொடுத்துக் கொடுத்து உலகம் உருவாக்கிய இரவல் பொம்மைதான் இந்த ஐன்ஸ்டீனாகிய நான்.

அப்படி இருக்க என்னுடைய செயல் சாதாரணம். அது உலகத்துக்கு நான் செய்த உபகாரம் ஆக முடியுமா அது.

ஐன்ஸ்டீனுடைய மெய்யுரையை படிக்கப் படிக்க உள்ளம் உருகும். அழுக்கெல்லாம் கரைந்து ஓடும். சுத்த வயிரமாக விளைந்துவிடும் ஊனும் உள்ளமும்.

நம்முடைய உடம்பு இந்த உலகம் முழுவதும் சேர்த்து கட்டி முடித்த ஞானக்கோயில். அது நம் அடைக்கலப் பொருள். கண்ணீர் சிந்தி அது கதறி அழும்படி நடந்து கொள்ளக்கூடாது.

பாதுகாக்க வேண்டியது நம் பொறுப்பு.

# 18

## தாவர உலகம்

கோதுமைப்பாலையும், சர்க்கரைப் பாகையும் கொதிக்க வைக்க வேண்டும். நெருப்பு எரிய எரிய இரண்டையும் மாறி மாறிக் கிண்டிக் கொடுக்க வேண்டும். இரண்டும் சேர்ந்து ஊற்றிய நெய்யை வயிறு முட்டக் குடிக்கும். பிறகு அதிகமாகச் சாப்பிட்ட நெய்யைக் கக்கும்.

அந்நேரந்தான் அல்வாவுக்குப் பருவமான நேரம். அந்நேரம் பார்த்து அடுப்பிலிருந்து இறக்க வைத்துவிட வேண்டும் அல்வாச் சட்டியை.

பருவம் பார்த்துச் செயல்பட பட்டால்தான் அல்வாவுக்கு மணம், ருசி இழுக்க இழுக்கத் தங்கக் கம்பி போல் வந்து கொண்டிருக்கும் அல்வா. ஆனால் கையில் ஒட்டாது. இப்படிப் பருவம் பார்த்துச் செயல்படுவதுதான் பக்குவம்.

இனி, நாம் வாழும் உலகமும் ஒரு பக்குவமான நிலையில் உருவானதுதான்.

எத்தனையோ கோடி வருடங்களுக்கு முன் சூரியனிடமிருந்து ஒரு சிறுபொறி(பகுதி) வெடித்துச் சிதறியது.

அந்த வேகத்தில் சூரியனைவிட்டு ஒன்பது கோடி மைல்களைக் கடந்து வந்தது. அதன்பின் ஒரு குறிபிட்ட தூரம் வந்ததும் தடுத்து நிறுத்திவிட்டது சூரியனின் சக்தி.

அப்படியே சுழலவும் சுற்றவும் ஆரம்பித்துவிட்டது தெறிந்து வந்த பொறி - அதாவது நெருப்புக்கோளம்.

இன்னும் சில லட்சம் மைல்கள் ஓடி இருந்தாலும் சரி, இதற்கு முன் சில லட்சம் மைல்கள் தூரத்தில் நின்றிருந்தாலும் சரி அந்த நெருப்புத் துண்டு.

பூமியாக மாறி இருக்காது.

ஒரு சரியான வாய்ப்பான எல்லையில் நின்றுவிட்டது பூமி. அதுதான் பக்குவமான வாய்ப்பு.

அப்படி ஒரு பக்குவம் அதிர்ஷ்ட்டவசமாக வாய்த்தது. அதனால்தான் அந்த நெருப்புத்துண்டைச் சுற்றி முப்பது நாற்பது மைல்களவுக்குக் காற்று மண்டலம் உண்டானது.

காற்று மண்டலம் காரணமாக மழை கொட்டியது. அதனால் நெருப்புஆறியது. பிறகு பாறையாக இருந்தது. மறைவெள்ளம் அறுத்த நித்து மணலாகவும் மண்ணாகவும் ஒரு பக்கம் பரப்பியது. இன்னொரு பக்கம் சமுத்திரங்களாய்ப் பொங்கியது.

இப்படியாகச் சூடு ஆறி ஒரு இதமான சூடு வந்தது. அந்த இதமான சூடும், குளிரும் சேர்ந்த பக்குவத்தில் உயிர் என்று ஒன்று முளைத்தது.

உயிரானது ஆதியில் எடுத்த வடிவம் மனிதன் இல்லை. விலங்கோ பறவையோ இல்லை. மரம்செடி கூட இல்லை. நீரில் மிதந்த பாசிதான் ஆதி உயிர். **அதாவது உயிர்** முதல் முதல் எடுத்த தோற்றம்

*நாமும் - நம்மை ஒத்த எல்லா மனிதர்களும் ஆதியில் வெறும் (நீர்வாழ்) பாசியாகவே இருந்தோம். உயிரினம் எல்லாமே அப்படித்தான். அதாவது தாவரமயந்தான் முதலில்.*

*இந்த உண்மையை மாணிக்கவாசகப் பெருமான்*

புல்லாகிப் பூண்டாய்
புழுவாய் மரமாகி
பல்விருகம் ஆகிப்
பறவையாய்ப் பாம்பாகி
கல்லா மனிதராய்ப்
பேயாய்க் கணக்களாய்
செல்லாஅ நின்றஇத்
தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்
பிறந்திளைத்தேன் - எம்பெருமான்!

*என்று சிவபெருமானிடமே சொல்லி விண்ணப் பிக்கிறார். செல்லாசு நின்ற - முடிவில்லாமல் ஓடிக் கொண்டே இருக்கிற. இத்தாவர சங்கமத்துள் - இந்தப் பரிணாம வளர்ச்சியில்*

*அப்படியானால் நமது முப்பாட்டனுக்கு முப்பாட்ட னுக்கு முப்பாட்டன் பாசியும் பசலையுந்தான்.*

*தாவரந்தான் நமது குல தெய்வம் என்று தெரிந்து கொண்டவர்கள் நமது முன்னோர். ஆனால் ஒவ்வொரு மரத்தையும் தெய்வமாக மதித்து வழிபட்டார்கள்.*

*செடிகளையும், மலர்களையும் கடவுளாக நினைந்து வழிபட்டார்கள்*

ஆதியில் - அதாவது முதல் முதலில் நமது கோவில்கள் மரங்கள்தாம். பிறகுதான் மரங்களுக்கு அடியில் பீடம் அமைத்தார்கள். சிலை வைத்து வழிபட்டார்கள். மரத்தைச் சுற்றி வந்து செடிகளில் பூத்தமலர்களை எடுத்து அர்ச்சனை பண்ணினார்கள். சாணத்தை உருண்டையாகப் பிடித்துவைத்து அதன் உச்சியில் அறுகம்புல்லைச் சொருகியே வழிபட்டார்கள்.

இன்றைக்கும் வானளாவிய கோபுரங்களுடனும், மலை போன்ற மதிற்சுவர்களுடனும் கூடிய பிரமாண்டமான கோவில் களில் கூட தல விருட்சம் ஒன்று உண்டு. மூர்த்திக்கு நடக்கிற படியே தலவிருட்சங்களுக்கும் சிறப்பும் பூசனையும் உண்டு.

மதுரையில் கடம்பு, திருவரங்கத்தில் புன்னை, நெல்லையில் மூங்கில், குற்றாலத்தில் பலா, சிதம்பரத்தில் வில்வம், திருப்பெருந்துறையில் குருந்து, சங்கரன் கோவில் களா, திருவிடைமருதூரில் மருதமரம். இப்படி ஒவ்வொரு கோவிலிலும் ஒவ்வொரு தல விருட்சம்.

தலம்(கோயில்) என்றாலே ஆதியில் விருட்சம் (மரம்) தான். இனி, கோவில்தோறும் கொடி மரம் என்றும் ஒன்று உண்டு.

மரங்கள்தாம் வழிபடும் கோவில்களாகவும் தெய்வங் களாகவும் இருந்தன என்பதற்கு இதைவிட என்ன சாட்சியம் வேண்டும்?

வயதாகி முதிர்ந்து பொந்து விழுந்த மருதமரத்தை மாணிக்கவாசகர் எப்படிக் கைகூப்பி, காலில் விழுந்து, பக்தி பரவசத்தோடு வழிபாடுகிறார் என்று பாருங்கள்.

"அந்த இடைமருதின்
ஆனந்தத் தேன்சொரியும்
பொந்தைப் பருகிநாம்
பூவல்லி கொய்யாமோ"

*சின்னஞ்சிறிய புல் ஒன்று போதும். அதனுள் நடக்கிற காரியங்களைப் பார்த்தாலே போதும். நம் ஆணவம் ஒடுங்கிவிடும். கடவுளாவது கத்தரிக்காயாவது ஒன்று மோனையில் வைத்து முழங்குகிற தமிழ்த்தனம் எல்லாம் சிதறி ஓடிவிடும். புல் முதலிய தாவரங்கள்தான் தெய்வங்களுக்குப் படைக்கலன் என்கிறார் பக்தர் ஒருவர்.*

*"புன் தலைய பூதப் பொருபடையாய்"*

*புன் தலையட புல் முதலாய தாவரங்களே, பூ தப் பொருபடை வலுவான ஆயுதங்கள். அப்படி ஒரு விசித்திரமான படைக்கலன் வைத்திருக்கும் பெருமானே என்று முருகக் கடவுளை அழைக்கிறார் பக்தர்.*

*இலைகளைப் பார்த்தாலே போதும். பச்சையில் எத்தனை, சிவப்பில் எத்தனை, மஞ்சளில் எத்தனை, நீலத்தில் எத்தனை.*

*இந்த ஆயிரம் ஆயிரம் வண்ணங்களை எந்த மனிதனால்தான் உண்டாக்க முடியும்? ஊழிஊழி காலமாக அவற்றை நிலைத்து நிற்க வைக்கத்தான் முடியுமா?*

*அப்படியானால் இறைவனுடைய கொலுமண்டபமே காடு (தாவரங்)கள்தான். சாத்திரமோ வியாக்யானமோ அல்ல!*

"மறைகளை மறைத்துப்போய்
வனத்துள் வைகுவான்"

*என்கிறார் கம்பர்.*

கூர்மையான நுண்ணிய அறிவை ஆங்கிலத்தில் கத்திமுனை அறிவு ஏர்பார்கள். வடமொழியில் குஷாக்கிரபுத்தி என்பார்கள். காஞ்சி புராணம் பாடிய மாதவச் சிவஞான முனிவரோ

"தருப்பையின் நுனிஎனக்
கூர்த்த மதியினர்"

என்கிறார்

இனி, அதிவீர ராமபாண்டியர் என்னும் கவிஞர் பெருமான் திருக்கூருவைத் தலத்தில் எழுந்தருளிய பெருமானை நீக்கமற நிறைந்த பெரும் சோதிமயம் என்கிறார். பெருமானைக் கண்குளிரப் பார்க்க வேண்டும் என்றால் ஒரே ஒருவழிதான் என்கிறார்.

தலவிருட்ச மாகிய களாமரத்தை மூன்று சுற்றுச் சுற்றிக் கும்பிட வேண்டும். பிறகு அதையே பார்த்துப் பார்த்துப் பரவசப்பட வேண்டும்.

பெருமான் நேருக்கு நேராகக் கண்முன் வந்து நிற்பான்.

எல்லாம் வல்ல இறைவனை நான் அப்படித்தான் கண்டு தெளிந்தேன் என்கிறார் அதிவீரராம பாண்டியர்.

இனி அவர் பாடிய பாடல்.

ஆண்ட குரவன்
ஆவா னை—
அல்லல் பிறவி
அறுப்பா னை,

வேண்டும் பதவி
தருவா னை,
வெளிவீட் டின்பம்
அளிப்பா னை,

தூண்டல் செய்யா
மணிவிளக் கைத்
தொழில்மூன்(று) இயற்றும்
தொல்லோ னை

காண்டற்(கு) அரிய
பேரொளி யை
களாவின் நிழற்கீழ்
கண்டே னே!

*அற்புதமான பாடல். வேத வேதாங்களில் பார்க்க முடியாத பரம் பொருள் (களா) மரத்தில் - தாவரத்தில் அமர்ந்து காட்சி கொடுக்கிறார்.*

*இனி, அன்னை உமாதேவியை வேடர்கள் எப்படி வழிபட்டார்கள் என்பது குறித்து ஒரு பழம் பாட்டு.*

*சிறிய காடு. அதில் ஒரு இடத்தை வளைத்துக் கொண்டார்கள். அதில் ஒரு கல்பீடம். அதில் தேவியை எழுந்தருளச் செய்திருக்கிறது. பீடத்தைச் சுற்றி பலவகைப் பட்ட மரங்கள். புன்னை (நாகம்) நாரத்தை (நாரந்தை) மரம், கருங்காலி (ஆ-அல்லது ஆச்சா) மரம், சந்தன மரம் எல்லாம் ஓங்கி வளர்ந்து ஒய்யாரமாய் நிற்கின்றன.*

*பசுவும் காளையும் பீடத்தை ஒட்டி வருகின்றன. போகின்றன. வேடர்கள் பய பக்தியோடு வழிபடுகிறார்கள் பராசக்தியை.*

*இனிப்பாடல்*

நாகம் நாறும்
நரந்தை நிரந்தன;
ஆவும் ஆரமும்
ஓங்கின எங்கணும்;
சேவும் ஆவும்
செறிந்தன - கண்ணுதல்
பாகம் ஆளுடை
யாள்பலி முன்றிலே.

*நாறும் நரந்தை - மணக்கும் நாரத்தை. ஆ-கருங்காள மரம். ஆரம் - சந்தனமரம். சே - காளை. ஆ.பசு. கண்நுதல் - நெற்றிக் கண்ணோடு கூடிய சிவபெருமான். பாகம் ஆளுடையாள் - பெருமானுடைய வலப்பாகத்தை இடமாகக் கொண்ட சக்தி. மூன்றில் பராசக்தியின் கோயில் முற்றம் முழுதும்.*

*மிகமிகப் பழமையான இந்தப் பாடல் சிலப்பதி காரத்தில் வேட்டுவ வரி என்னும் பகுதியில் கிடக்கிறது.*

*தாவரங்கள்தான் உயிருக்கு உயிராய் தெய்வத்துக்குத் தெய்வமாய் இருக்கின்றன. உயிர்வர்க்கம் அத்தனைக்கும் தாவரந்தான் வாழ்வு கொடுக்கிறது. தாவரம் இல்லை என்றால் ஒன்றுமே இல்லை.*

*தாவரங்களை வைத்துத்தான் மழை, மழை இல்லை என்றால் எந்த உயிர் வாழ முடியும்? காடுகளும்,மரங்களும் எங்கே இருக்கின்றனவோ அங்கே மேகங்கள் ஆவலோடு தேடிவரும். ஒரு பெண்ணுக்குத் தாய்வீடு மாதிரி மேகங்களுக்குக் காடுகள்.*

இனி உயிரினங்கள் அவ்வளவும் பிராண வாயுவை உட் கொள்ளுகின்றன. கரியமில வாயுவை வெளியேற்றுகின்றன. இந்த நிகழ்ச்சித்தான் வாழ்வு. இதுதடைப்பட்டால் மரணந்தான்.

ஆனால் உயிர் வர்க்கம் முழுவதும் சதா வெளிப்படுத்துகின்ற கரியமல வாயு சேர்ந்துவிட்டால் உலகமே நஞ்சாகிவிடும். பிறகு எப்படி உயிரினம் வாழ முடியும்?

தாவரந்தான் இந்த முடிச்சை அவிழ்த்து உலகைக் காப்பாற்றுகிறது. நாம் வெளியிடுகிற கரியமல வாயுவை தாவரம் உட்கொள்கிறது. இதை ஒரு அற்புதமான முறையில் ஆகாரமாகவே ஆக்கிக் கொள்கிறது. பதிலுக்குப் பிராண வாயுவை வெளியிடுகிறது.

இந்த அற்புதம் தாவரம் ஒன்றில்தான். காடுகளையும், மரங்களையும் நிறைய உண்டாக்கினால் போதும். ரசாயன கூடங்கள், தொழில் சாலைகள், வாகனங்கள் வெளியிடுகிற நஞ்சு அவ்வளவையும் கபளீகரம் பண்ணி விடும் தாவரம்.

நஞ்சை எடுத்துக் கொண்டு அமிர்தத்தைத் தேவர் களுக்குக் கொடுத்த இறைவன் போல விஷப்புகைகளை எல்லாம் தன்னுள் வாங்கி அடக்கி உயிர்க்காற்றை வெளியிடு கிறது தாவரம்.

சுற்றுப்புறத் தூய்மை - பாதுகாப்பு என்பதெல்லாம் தாவரத்தை வைத்துத்தான்.

இனி உயிரினங்களின் யாக்கை (உடம்பு) எண்ணிறந்த கண்ணறை (செல்)களைக் கொண்டதாகும். இந்தக் கண்ணறைகள் கரி, நீரகம், உயிரியம், அனலம், கந்தகம், கனலம் முதலிய தாதுக்களால் பிடித்து வைத்த பிண்டமாகும்.

உயிருள்ள கண்ணறைகளால்தான் புதிது புதிதாக உருவாக்க முடியும் கண்ணறைகளை.

அரிசி, பருப்பு, காய்கனி முதலிய தாவரங்களைப் புசித்தோ, அல்லது இறைச்சி வகைகளைப் புசித்தோ புதிய கண்ணறைகள் உருவாக்கப்படுகின்றன.

இறைச்சியும், புல் பூண்டு முதலிய தாவரத்திலிருந்து வந்ததுதானே?

ஆகவே, எல்லா உயிரினங்களுக்கும் உயிர் நிலைகளாகிய கண்ணறைகள் உண்டாகத் தாவரங்கள்தான் ஆதாரம்.

ஆனால் தாவரங்களோ தன் கண்ணறைகளை ஏனைய உயிரினங்கள் போல மற்றவை மூலம் பெறுவதில்லை. கந்தகம், அமிலம் முதலிய தாதுக்களை நேரடியாகவே பெறுகின்றன. மண்ணிலிருந்தும் வானிலிருந்தும் காற்றிலிருந்தும் பெறும் தாதுக்களை சூரிய ஒளிச் சேர்க்கையின் வேகத்தால் புதிய புதிய கண்ணறைகளாக உண்டாக்கிக் கொள்கின்றன தாவரம். இதுவும் ஒரு அற்புதந்தான்.

இனி உயிரினங்களுக்கெல்லாம் உணவும், தாவரந்தான். உடையும் தாவரந்தான். சிங்கம், புலி முதலிய விலங்குகள் எங்கே தாவரத்தை உண்கின்றன என்று கேட்கலாம். மனிதர்களிலும் பலர் இறைச்சியையே உண்கிறார்களே என்றும் கேட்கலாம்.

இறைச்சியைக் கொடுக்கும் மான், முயல், ஆடு, மாடு, கோழி, குதிரை எல்லாமே புல் பூண்டுகளை உண்டு தானே வாழ்கின்றன. அந்தத் தாவரத்தில் வந்ததுதானே இறைச்சி!

ஆகவே உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத உணவும், மானத்தோடு வாழும் வாழ்க்கைக்கு அமைந்த உடையும் தாவரமயம். தாவரமயமேதான்.

அது மட்டுமா? உணவு, உடைபோல இருப்பிடம், கல்வி, மருத்துவம் ஆகியவையும் வாழ்க்கையோடு ஒட்டியே கிடக்கின்றன. இவற்றில் இருப்பிடத்தை எடுத்துக் கொண்டால் சின்னஞ்சிறிய குடிசைகளிலிருந்து மாட மாளிகைகள் வரை அவ்வளவுக்கும் கட்டுமானத்தில் மரம் (தாவரம்) முக்கியம்.

கல்வி என்றாலோ அன்றைக்கு ஓடு (பனை ஓலை) இன்றைக்கு புத்தகம், நோட்டு. பனை ஓலையும் தாவரந்தான். புத்தகம் நோட்டுகளும் தாவரந்தான்.

மரக்கூழ் மூலமே பேப்பர் தயாராகிறது. பேப்பரை வைத்துத்தான் புத்தகங்களும், நோட்டுகளும். இனி, மருத்துவத்தில் பல முறைகள் உண்டு. ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி, அலோபதி என்று பலவகை உண்டு. அத்தனை வகைகளிலம் மருந்து தயாரிக்க முக்கிய மூலப் பொருள் மூலிகை (தாவரங்)களே. அந்த மூலிகைகள் தாவரங்கள்தான்.

இனி, தைலங்கள், எண்ணெய் வகைகள், நெய் வகைகள் என்று பார்த்தால் அத்தனையும் தாவரத்திலிருந்துதான் வருகின்றன.

காபி, டீ, கொக்கோ முதலியவைகளும் சரி, கள், சாராயம், கஞ்சா, அபின் முதலிய கொடிய போதைப் பொருள்களும் சரி; எல்லாவற்றுக்கும் மூலம் தாவரமே.

சர்க்கரையும் தாவரந்தான். தேனும் தாவரந்தான். இனி முன் காலத்தில் மாட்டு வண்டிதான் வாகனம். அதுவும் மரத்தால் உண்டானதுதான். இந்தக்காலத்து வாகனங்களாகிய கப்பல், ரயில் போன்றவைகளுக்கும் மரம் தான் உயிர்நாடி.

ஏன்? விமானம், மோட்டார், சைக்கிள்கள் கூட தாவரம் இல்லை என்றால் இல்லை.

மோட்டார் முதலியவற்றில் உள்ள டயர்களும், டியூப்களும் எதிலிருந்து வருகின்றனர். ரப்பர் மரத்துப்பால்தான் மூலம். ரப்பர் மரம் தாவரந்தானே?

உழுவதற்குரிய மேழி, கலப்பை எல்லாமே மரத்தாலனதுதான்.

நிலக்கரி இல்லை என்றால் இன்றைய உலகம் இருளடைந்துவிடும். அந்த நிலக்கரிக்கு மூலமே தாவரந்தான்.

தார் எண்ணையிலிருந்து பளபளக்கும் வயிரம்வரை, மருந்துகள் என்ன? வாசனைத் திரவியங்கள் என்ன பலபல பொருள்களுக்கு நிலக்கரியே ஆதாரம்.

உயிரினங்களைப் பெற்றெடுத்த தாயாகிய தாவரம் தந்தையாக இருந்து காப்பாற்றுகிறது. அப்படி அம்மையப் பனாக இருக்கிறது தாவரம்.

தாவரத்தின் சிறப்பை நன்குணர்ந்த நம்முன்னோர் தங்கள் குழந்தைகளுக்குத் தாவரத்தின் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

தாமரைக்கண்ணி, மல்லிகா, குமுதம், பிச்சம்மா, செண்பகம், கற்பகம், மாதவி, செண்பக வல்லி, செண்பக ராமன், வஞ்சி, மருதையா, வேம்பு இப்படி எத்தனையோ பெயர்கள்.

பெண்களைப் பூவையர் என்று சொல்வது வழக்கு. அதை ஒட்டிப் பூங்கொடி, பூங்கொம்பு ஒன்று சொல்வதும் உண்டு.

சீனதேசத்து அறிஞர் லின்-யு-டங் பெண்களைப் ''பேசும் மலர்கள் என்பார். புஷ்பங்களையோ, பேசாமடந்தையர் என்பார் ''

இனி ஊர்களுக்கும் நம் முன்னோர்கள் தாவரப் பெயர்களைச் சூட்டி அலங்கரித்திருக்கிறார்கள்.

கடம்பூர், பூந்தமல்லி, திருவல்லிக்கேணி, அத்திபூத்து, ஆலங்குளம், திருவாலங்காடு, திருவிடைமருதூர், குற்றாலம், பனையூர், மாவடிக்கால், நெல்வேலி, புளியங்குடி, புன்னைக்காயல், நெல்லூர், அரசூர், திருக்குவளை, பூந்தோட்டம், அவரைக்காடு, புல்லுக்காடு, மாவேலிக்கரை, சந்தனத்தோப்பு, காஞ்சிபுரம், இலுப்பைபூரணி, வாகைக்குளம், உடன்குடி, நாகல்குளம், வேலூர், வரகூர், நாவலூர், மாங்காடு, திருவேற்காடு, உளுந்தூர், திருமறைக்காடு, தாமரைக்குளம், கடம்பவனம், மூங்கில்வனம், காளாள்பட்டி, துவரங்குறிச்சி, வேப்பலோசடை.

இப்படி எத்தனை எத்தனையோ ஊர்கள்.

முதல் சங்க காலத்தில் கடல் கொண்ட தமிழகத்தில் ஏழ்பனை நாடு, ஏழ்தெங்கு நாடு எனச் சில பகுதிகள் இருந்தாகச் சொல்லப்பட்டுள்ளது. தொண்டைநாடு என்றும் சொல்லி இருக்கிறது. பிற்காலத்தில், ஊர்களுக்கும் நாடுகளுக்கும் மட்டுமல்ல, புண்ணிய பாரத பூமியாகிய இந்தியாவுக்கே நாவலந்தீவு என்றும் தாவரப் பெயர்தான் பூர்வீக நாமம்.

குழந்தைகளுக்கும் ஊர்களுக்கும் தாவரப் பெயரை வைத்து மகிழ்ந்தது மட்டுமல்ல, தங்கள் பழக்க வழங்கங்களுக்கும் தாவரப் பெயரையே நம் முன்னோர் சூட்டி மகிழ்ந்துள்ளார்கள். பண்பாட்டுத் துறைக்கும், வழிபாட்டுத் துறைக்கும் தாவரங்களே பெயராகி மணம் ஊட்டுகின்றன.

ஒரு பெண் பருவமடைந்தால் அதைப் பூப்பெய்தினாள் என்கிறோம். கல்யாணத்தை (திரு) மணம் என்கிறோம். கேலி பேசுவதை வம்பு(மணம்) என்கிறோம்.

சுற்றத்தைக் 'கிளை' என்கிறோம்.

இனி ஒரு பெண் கருக் கொள்வதற்கும் சினை என்று பெயர். ஒரு கொம்பில் தளிரும் பூவும் வர வெடித்துச் சிதறும் சிறு கிளைகளுக்கும் சினை என்று பெயர்.

எல்லாம் தாவரமயமே.

ஒரு மாதம் எட்டு மாதத்தில் பிறந்த குழந்தை பிழைக்காது இருந்துவிடுவதுண்டு. அதைக் காழ்விழுதல் என்பார்கள்.

முற்றி விளைந்த குழந்தைக்குக் கனி என்று பெயர்.

இனி, பூமாதேவியின் மேனியைக் கிண்டிக்கிளறிக் கொடுக்கிறது. கொழு, பச்சைப் பசேல் என்று பயிர்கள் மூலம் பொற்கிரணங்களாய்ப் பிரகாசிக்கிறாள் அன்னை பூமாதேவி.

மணமகளை அப்படி உச்சரிக்கிறான் கணவன். அதனால் அவனுக்குப் பெயர் கொழுநன்.

கொழு என்பது உழவுக் கருவி. உழவு என்பது தாவரத்தோடு ஒட்டியதுதான்.

இனி, செடிக்கு உயிர்மலர், மலருக்கு உயிர் மணம் (கொங்கு) பெண்களுக்கு அழகு மார்பின் வளப்பு. மார்பின் வளப்புக்குக் கொங்கை என்று பெயர். கொங்கிலிருந்து வந்த சொல் கொங்கை. இனி, கலப்பையும் கொழுவும் கண்டுபிடிப்பதற்கு முன் வேல் முதலிய போர்க் கருவிகளை வைத்தே நிலத்தைக் கீறி உழுதார்கள். அவர்களுக்கு வேலாளர் என்று பெயர். கலப்பை, ஏர் என்றெல்லாம் வந்து விவசாயம் விருத்தி ஆகியது. வேலாளர் ஏர்னும் சொல்லும் வேளாளர் ஏர்னு விருத்தியாகி வந்துவிட்டது.

வேல் என்றால் அதற்கு நிச்சயம் வலுவான கம்பு வேண்டும். தாவரத்திலிருந்து வந்ததுதான் கம்பு. இனி, கம்பின், உச்சியில் பளபளஎன்று ஜொலிக்கும் உலோகத்தை - சாணை பிடித்துத் தீட்டிய உலோகத்த கட்டை சொருகி இருக்கும்.

அந்தத் தகடோ, பூவடிவமாக இருக்கும். அதுவும் தாவரமயந்தான். இனி, ஒரு காரியம் வெற்றியா தோல்வியா என்பதைக் ''காயா பழமா'' என்று விசாரித்து அறிகிறோம்.

அதிகப் பிரசங்கித்தனமாக ஒரு சிறுவன் பேசினால் பிஞ்சில் பழுத்த பயல் என்கிறோம்.

வயது முதிர்ந்தவர்களைப் பழுத்த பழம் என்கிறோம். தயாள குணமுடைய வள்ளலைக் கற்பக விருட்சம் என்கிறோம். நெஞ்சில் ஈரம் இல்லாதவனை காய்ந்த மட்டை என்கிறோம்.

கல்லாது வளர்ந்த மூடத்தை நெட்டப்பனை என்கிறோம். இனி, எங்கும் நிறைந்த இறைவனுடைய திருவருளை அவனுடைய திருவடிகளாகச் சொல்வது மரபு. தவிப்பை நீக்கி ஆறுதல் கொடுக்கும் அத்திருப்பாதங்களை நிழல் என்று சொல்வார்கள். நீழல் என்றும் அருமையாகச் சொல்வார்கள்.

''ஈகா எந்தை இணையடி நீழலே'' என்பது அப்பர் சுவாமிகளின் வாக்கு. ''கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே தரு ழலே நிழ்கனிந்த கனியே''

என்பது இராமலிங்க வள்ளலாரின் விளக்கம்.

இனி மொட்டாக இருக்கிற வரை பூவுக்கு மணம் இல்லை. மலராக விரிய விரியத்தான் வாசனை. காதலும்

அப்படியே. ஒரு இளைஞனும் யுவதியும் பழகுகிறார்கள் என்றால் அது மறைவாக இருக்கும் வரை அதற்கு வேகம் இல்லை.

அதற்குக் கண் வைத்து, மூக்கு வைத்து, செவி வைத்து நாலுபேர் நாலு விதமாக அளந்து பேசப்பேசத்தான் காதலுக்கு வேகம் ஏறும்

மற்றவர்கள் இப்படித் தங்கள் சொந்த விஷயம் பற்றி ஜாடைமாடையாகப் பேசுவதை அலர்மொழிதல் என்பார்கள். அலர் என்றால் பூ என்பது பொருள்.

இனி தாவரங்களின் பெயர்களை எடுத்துக் கொண்டால் அவற்றைச் சொல்ல எளிதாக இருக்கும். இனிதாக இருக்கும். சொல்லச் சொல்ல நாவுக்குச் சுவை ஊட்டும் தாவரப் பெயர்கள்.

காரணம் என்ன?

தாவரப் பெயர்கள் சின்னச் சின்னச் சொற்களாக இருக்கும். இன்னோசை தரும். இ, ஐ, உ, ஆ, ம், ல், ள், ழ் என்னும் விகுதிகளைக் கொண்டே பெரும்பாலும் வரும் தாவரப் பெயர்கள். வண்டு முரளும் இன்னோசைபோல இருக்கும். ஒவ்வொரு மரத்தின் பெயரும், செடியின் பெயரரும், மலரின் பெயரும்.

கருத்த ஒலியோ, முரட்டு ஒலியோ வராது. உதாரணத்துக்குச் சில

உகா, மா, பலா, களா, விளா, காஞ்சி, அத்தி, இத்தி, குறிஞ்சி, அல்லி, பிச்சி, வெட்சி, கள்ளி, வஞ்சி, நொச்சி, கடுகு, மிளகு, கரும்பு, அசோகு, வேம்பு, கோங்கு, தேக்கு, மருது, கமுகு, அரசு, புன்கு, உளுந்து, தெங்கு, தென்னை, பனை,

புன்னை, வாளை, தாழை, இலுப்பை, வேங்கை, கரந்தை, தும்பை, கருணை, வாகை, உடை, வழிஞை, ஓமை, அவரை, துவரை, ஆவிரை, தாமரை, குவளை, முல்லை, மல்லிகை, பாலை, கழை, தழை, ஆரம், நாகம் (புன்னை) நரந்தம் (நாரத்தை) ஆல், வேல், மஞ்சள், காந்தள், மகிழ் என வரும்.

இனி வேர், தளிர், பூ, பிஞ்சு, காய், பழம், தூர், கிளை, கொம்பு, காம்பு, இலை, கொழுந்து முதலிய சொற்களும் அப்படியே.

மட்டை, பட்டை என்று ஒன்றிரண்டு சொற்கள்தான் வறட்டுத் தனமாக இருக்கும். மற்றவை எல்லாம் மதுரம்மிக்க இசை மயந்தான்.

பூப்பதால் பூ என்றும், மலர்வதால் மலர் என்றும், விரிவதால் வீ என்றும், வாடுவதால் அலர் என்றும் பெயர் பெறுகிறது பூ.

அதேபோல மரத்திலிருக்கும் போதும் பறித்த உடனும் இலை. அதுவே தோரணமாகக் கட்டப்பட்டதும் குழை என்று பெயர் பெறுகிறது. இனி, அதே இலையை வயலில் போட்டு உரமாக மிதித்தால் தழை ஒன்று பெயர் பெறுகிறது. வாடின பிறகு இலைக்குக் கிடைத்த பெயர்கள் கண்டு, இல்லை என்றால் சருகு.

குழந்தையாக இருக்கும் போது இலைக்கு தளிர் என்று பெயர். அது எக்களிப்போடும் உல்லாசதோடும் அட்டகாசம் பண்ணும். அந்த நிலையில் அதற்கு கொழுந்து என்று பெயர்.

கணவன் கூடப் பிறந்த கணவனின் தம்பியைக் கொழுந்தன் என்று மனப் பெண் முறை வைத்துச் சொல்வது நூற்றுக்கு நூறு பொருத்தம்.

இனி, தமிழ் நாட்டை முன்னோர்கள் ஐந்து முறைகளில் பிரிவுபண்ணிப் பார்த்திருக்கிறார்கள்.

ஒன்று மழைப் பகுதி, இரண்டு காட்டுப் பகுதி, மூன்று வயல் பகுதி, நான்கு கடல் பகுதி, ஐந்து வறண்ட பகுதி.

மேலே குறிப்பிட்ட ஐந்து பகுதிகளும் அங்கங்கே இயற்கையாக உண்டாகிற மலர்களை நம்மவர்கள் பார்த்திருக்கிறார்கள்.அந்த மலர்களில் உயர்ந்த மலர்களை வைத்து அந்தந்தப் பகுதிகளுக்குப் பெயர் சூட்டி இருக்கிறார்கள்.

மலைப் பகுதியில் வளமாகவும், சிறப்பாகவும் உண்டாகிற மலர் குறிஞ்சிமலர். அது கொண்டே மலைப் பகுதியைக் குறிஞ்சி (நிலம்) என்று குறிப்பிட்டார்கள்.

அதுபோலவே காட்டுப் பகுதியில் முல்லை மலர், வயல் பகுதியில் மருதமலர், கடல் பகுதியில் நெய்தல் மலர், வறண்ட பகுதியில் பாலை (மஞ்சணத்தி) மலர் இயல்பாக உண்டு.

அதனால் முறையே முல்லை நிலம், மருத நிலம், நெய்தல் நிலம், பாலை நிலம் எனப் பெயர் பெற்று விட்டன.

இனி, நிலப்பகுதிகளுக்கும் மட்டுமல்ல தாவரப் (பூவின்) பெயர், மனிதவாழ்க்கைக்கும், வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் தாவரப் பெயரையே சூட்டி உள்ளனர்.

உண்மையான பொருள் என்றால் வாழ்க்கைதான். குடும்ப வாழ்க்கை, தோரணை வாழ்க்கை என இரண்டு வகைப்படும். இவற்றையே அகப்பொருள், புறப்பொருள் என்று இலக்கண நூலார் சொல்கிறார்கள்.

அகப்பொருளாகிய குடும்ப வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் அம்சங்கள் உண்டு. அவ்வளவையும் தொகுத்து ஐந்து நிலைகளாக வகுத்துவைத்துள்ளனர்.

ஒன்று கூடல், இரண்டு பொறுத்தல் (சகித்துக் கொள்ளல்), மூன்று ஊடல், நான்கு பிரிதல், ஐந்து இரங்கல்.

இந்த ஐந்துக்கும் முன்சொன்ன குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்கிற மலர்களை வைத்தே பெயர் சூட்டி இருக்கிறார்கள்.

குறிஞ்சித் திணை, முல்லைத் திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத் திணை என்று பெயர். வாழ்க்கையின் தனித்தனி முறைகளுக்குத் திணை என்று பெயர்.

இனி தோரணை வாழ்க்கைதான் புறப்பொருள் என்று குறிப்பிட்டிருந்தோம். தோரணை என்றால், முயற்சி, வெற்றி, கொடை, புகழ், கலை, அனுபவம், விழா எடுத்தல் ஒன்றும் அம்சங்கள் கொண்டதாகும்

முன்காலத்தில் முக்கியமான அம்சங்களை அரசர்களின் காரியத்தை உரை கல்லாக வைத்தே விளக்குவார்கள். அந்த வகையில் முயற்சி என்பதற்குப் பதில் போர் - சண்டை என்று வந்து விட்டது.

சண்டை என்றால் வெற்றியும் உண்டு. தோல்வியும் உண்டு.

வெற்றியடைந்தவனைப் பற்றித் தான் இலக்கியம் வரும்.

ஆரம்பத்திலிருந்து முடிந்தவரை சண்டையில் பலபல நிலைகள் உண்டு. அவற்றைத் தொகுத்து ஏழு நிலைகள் என்று சொல்லி இருக்கிறது.

கைப்பற்றுதல், மீட்டல், சண்டைக்குப் புறப்படுதல், எதிர்த்தல், பாதுகாத்தல்,முற்றுகை இடல், சண்டை போட்டு வெற்றி அடைதல் இப்படி ஏழுநிலைகள்.

இந்த ஏழுக்கும் செடி, கொடி மலர் இவ்றின் பெயரையே சூட்டி உள்ளனர். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, ஊழிஞை, வாகை. ஓர் நெல் செடிகளின் பெயரும் மலர்களின் பெயருந்தான்.

நிலப்பகுதிகள், வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றிலும் தாவரப் பெயர்கள்தாம்.

இனி தேவகானம் என்று போற்றப்படும் இசை தமிழிகைதான்.

உந்தியிலிருந்து மட்டுமல்ல உணர்ச்சியிலிருந்தே பூத்து வருகின்ற ஒலியும் அதன் நெளிவும் குழைவும் ஒருமுகப்பட்டு உண்டானது. இசை - தமிழிசை.

ஒரு பாடலைப் பார்த்த மாத்திரத்திலேயே - பார்த்து அனுபவிக்கும் மாத்திரத்திலேயே அந்தப் பாடலைப் பாடுவதற்குரிய இசை - ஒலியானது மனம் என்னும் தடாகத்தில் உதிக்கும்.

அப்படி உதிக்கும் ஒலியின் குழைவு நெளிவுகளை உள்ளுக்குள்ளேயே ஒருமுகமாகச் செம்மைப்படுத்துவதுதான் பண்.

பண்ணில் ஐந்து நிலைகள். இந்த ஐந்து நிலைகளிலிருந்துதான் இராகங்கள் பல உண்டாகின்றன.

பண்ணின் ஐந்து வகைகளையும், குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தல்பண், பாலைப்பண்

என்று மலர்களில் பெயர் வைத்தே மகிழ்ந்திருக்கிறார்கள் முன்னோர்கள்.

இனி, நெல், கோதுமை, உளுந்து, அவரை, மா, வாழை முதலிய தாவரப் பொருள்களில் பருத்திக்கு மட்டும் ஒரு தனித்த பண்பு உண்டு.

ஒரு உலோகத்தைப் பழுக்கக் காய்ச்சி, அடிக்க அடிக்க - துவைச்சல் கொடுக்குந்தோறும் வலு ஏறும். பிறகு அது கம்பியாக நீளும். தகடாக விரியும்.

பருத்தியும் அப்படியே. நூல் என்று கம்பியாக நீள்கிறது. வேட்டி, சேலை என்று தகடு தகடாக விரிகிறது.

இனி, கற்றறிந்த சான்றோர்கள் அனுபவங்களைத் தொகுத்து எழுதி வைத்ததற்கும் நூல் என்று பெயர்.

பஞ்சிலிருந்து வந்த நூலின் பெயரையே ஞான அனுபவத்துக்கும் சூட்டி இருக்கிறார்கள்.

**பஞ்சிதன் சொல்லாப்;**
**பறுவல் இலையாக,**
**செஞ்சொல் புலவனே**
**சேயிழையா - எஞ்சா**
**கையேவா யாகக்**
**கதிரே மதியாக**
**மையிலா நூல் முடியும்**
**ஆறு: (நன்னூல் பாயிரம்)**

இளை - பஞ்சின் திறள். சேயிழை - (நூற்கும்) பெண். எஞ்சா - குறைவில்லாத. மை இலா - குற்றம் இல்லா பனுவல் - பாடல்.

ஞானமும் தாவரந்தான். ஞானத்துக்கு அதிதேவதை யாகிய கலைமகள் வீற்றிருப்பதும் வெண் தாமரை என்னும் தாமரை மலரில்தான்.

படைப்புக் கடவுளாகிய பிரமனும் அதில்தான் வீற்றிருக்கிறான். திருமகளோ செந்தாமரை மலரில் வீற்றிருக்கிறாள்.

புத்தர் ஞானம் பெற்றது போதிய மர நிழலில். அருகக் கடவுளுக்கு உகந்தமரம் அசோகமரம்.

சிவபெருமானுக்குக் கொன்றை மலர் மாலை, திருமானுக்குத் துளபமாலை.

இப்படி எல்லாமே தாவரமயம்.

நாம் வாழும் இந்தப் பெரிய பூமிக்கே பூ(உலகு) என்று தாவரப் பெயர்தானே தொனிக்கிறது.

வாழ்க்கை, பண்பாடு, உணர்ச்சி, ஞானம், எல்லாவற் றிலும் ஊடுருவித் திளைக்கும் தாவரம், தமிழோடு எப்படிக் கலந்து மருவுகிறது என்று பார்ப்போம்.

நீலநிறமான தடாகம். அதில் வெள்ளை வெளேர் என்று வெண் தாமரைப் பூ. பார்க்கப் பார்க்கப் பரவசப் படுத்துகிறது புஷ்பம்.

மனிதப் பிறவி என்றால் எத்தனையோ தொல்லை கள், எத்தனை எத்தனையோ கவலைகள். அத்தனையும் மனதை அழுத்தி அழுத்தித் தேய்க்கின்றன.

புண்பட்டுக் கிடக்கிறது மனம்.

*ஆனால் வெண்தாமரைப் புஷ்பத்தைப் பார்க்கப் பார்க்க கவலைகள் ஓடிவிடுகன்றன. பாரமே இல்லை மனதுக்கு. ஆனந்த பரவசம் (மோட்சம் - வீடு) தான். தாய்வீடு போல இருக்கிறது தாமரை.*

*இனிப்பாடல்*

**சேயகம் ஆம்வீடு**
**புக்கிடு தற்குத்**
**திறந்துவைத் த**
**வாயகம் ஆவதும்;**
**துன்பக் கடல்பட்ட**
**மன்பதைக் குத்**
**தாயகம் ஆவதும்;**
**பூதலம் பூத்த**
**தனகமலர்க் குள்**
**நாயகம் ஆவதும்**
**கோதில் தவள**
**நளினம தே!**

**(சரசுவதி அந்தாதி)**

சேயகம் ஆம்வீடு - எட்டாத தூரத்தில் இருக்கிறது மோட்சம். புக்கிடுதற்கு - போக, வாயகம் - அதற்குரிய வாசல் *இது (தாமரை)தான். மன்பதை - மனிதக் கூட்டம். தாயகம் - தாய்வீடு போல இருக்கிறது தாமரை. பூமியில் எத்தனை மலர்கள் பூத்தாலும் இந்த வெண்தாமரைக்கு நிகராகாது.* கோதுஇல் - குற்றம் இல்லாத. தவள நளினம் - வெண் தாமரைப் புஷ்பம்.

☐ ☐ ☐

குறிப்புகளுக்காக...

குறிப்புகளுக்காக...